அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
CENTUM Optima Mortgages Inc.
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com

தாய் வீடு
THAIVEEDU நவம்பர் 2008 HOME & LIVING

வீடு வாங்க, விற்க மற்றும் income tax, mortgage சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
HOMELIFE Higher Standards
T: 905.201.9977
C: 416.568.4301
SELVA VETTYVEL
Broker of Record
HomeLife Future Realty Inc. Brokerage
205 Eastvale Drive, Markham, ON L3S 4N8



# புதிய விடியல் -ஒபாமா

அமெரிக்காவின் முதலாவது ஆபிரிக்க அமெரிக்க அதிபராக பராக் ஹுசைன் ஒபாமா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

விரிவான செய்தி 3ம் பக்கம்

RAMAN APPLIANCES
Air Conditioning & Heating
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces • Garage Door Openers
• Security Alarm
Tel: 416.332.1989
Cell: 647.893.4414
Raman Chelliah
President
3021 Markham Rd., Unit 51,
Scarborough, ON - M1X 1L8

THE LAW OFFICE OF
GaryAnandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying - Selling - Investing PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000
PMCI Mortgage Canada Inc.

Insuring your life. Ensuring your trust.
Siva Kandiah
Managing General Agent, RBC
416-992-1259
ROYAL BROKERS Corporation
80 Nashdene Ave., Unit B26 Toronto ON M1V 5E4
Tel: 416-298-4722 Fax: 416-298-4664

PMCI Property Mortgage Canada Inc.
Buying - Selling - Investing PROPERTY MAX Realty Inc. Brokerage
One Source For Many Type of Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலத்திற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Markham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002

வீடு வாங்க, விற்க, வீட்டுக்கான பெறுமதியை(Appraisal) சட்டபூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ள தாமதிக்காது உடனே அழையுங்கள்.
www.chainc.ca
E-mail: chai@chainc.ca
Bus: 905-201-0929
Fax: 905-201-8482
CHAI Canadian Home Appraisals Inc.
Century 21 Affiliate Realty Inc.
Bus: 416-290-1200
S.K. Bales, CRA, CAR, MVA, FRI, CRES.
416.801.3219 (Cell)


R&S AUTO SALES
HONDA - TOYOTA - GM MINI VANS ON THE SPOT FINANCING
சிறந்த சேவைக்கான பல விருதுகளைப் பெற்ற வாகன விற்பனை முகவர்
Tel: 416.412.3838
Fax: 416.412.1174
Radha


Tel: 416-836-1946, 416-423-5057
40 Crockford Blvd., Scarborough, ON, M1R 3C3
24 hrs Service
SAM
Mobile Mechanic
K.S.TRUCK & CAR TRAILER REPAIR
All Automotive Repairs
Specializing in Mechanical, Body, Electrical Repairs & Wheel Spring


416.200.5470
ELECTRICAL - PLUMBING & DRAINAGE SERVICES
SANTHA
www.santha.ca
416-200-5470


Kantha Property Management Group Inc.
Personal and Business Loans
Line of Credits
Business Setup Consultancy
1st and 2nd Mortgages
Residential and Commercial Leasing
Investment Properties
Property Management Services
Bad Credit Solutions
Bankruptcy
Consumer Proposals
KPM Group Inc.
T: 416-214-6161
F: 416-465-3535
3015 Kennedy Road, Suite 205, Toronto, ON M1V 1E7
www.KPMInvestment.com, kantha@KPMInvestment.com


வீடு வியாபார ஸ்தாபனம்
வாங்க விற்க
Your #1 Choice
Logan Manikavasagar
Broker
Direct : 416.708.9903
Century 21
Percy Fulton Ltd. Brokerage*
Email : sales@loganhotproperties.com
Kalai Logan
Sales Representative
Direct : 416.697.9903
Buy or Sell Your Properties? Real Estate is My Job...Worry Free for you...


HIGHPOINT LASER
100 IRONSIDE CRESCENT, UNIT #10, TORONTO, ONT M1X 1M9
Toll Free: 1.877.281-9997 • Fax: 416-297-6113
www.HighPointLaser.ca • email: Sales@HighPointLaser.ca
Brand Name Toner Cartridges for
Copy Machines
Laser Printers
Fax Machines.
1. TN 350 - $45
2. Q7551X - $70
3. Q6000 - $50
4. E250 Toner - $60
5. FX-10-104 - $45
6. QU6511A - $60
WE RECYCLE
Lower Cost - 100% Guaranteed - Call For Delivery - 416-297-9994

தாய் வீடு
THAIVEEDU HOME & LIVING

## இலகு காத்த கிளிகளா நாங்கள்?

தமிழகத்தின் பட்டி தொட்டிகளில் எல்லாம் ஈழத்தமிழர்களுக்கான கண்ணீர் குரல் கேட்கின்றது. அரசியல் தலைவர்கள் அறிக்கை மீது, அறிக்கை விடுகின்றார்கள். தமிழ் சினிமா நட்சத்திரங்கள் குமுறுகின்றனர். பத்திரிகைகள், சஞ்சிகைகள், வியாபாரிகள் சங்கம் என்று இலங்கைத் தமிழர்களுக்கு ஆரவான குரல் முன் எப்போதும் இல்லாத வகையில் ஒலிக்கின்றது.

'இந்திய மத்திய அரசு, இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகவும், இலங்கை இனவாத அரசுக்கு எதிராகவும் இதோ நடவடிக்கை எடுக்கப் போகின்றது' என்ற நம்பிக்கை தமிழக மக்களுக்கும், இலங்கைத் தமிழர்களுக்கும் துளிர்த்து விட்டது போல் உள்ளது.

தமிழகம் என்றால் அது நமது உறவுகள். நமது இரத்தங்கள். அதற்கு மேல், மனிதர்கள் கொல்லப்படுவதை, மனிதர்கள் இனத்தின் பெயரால், மதத்தின் பெயரால் ஒடுக்கப்படுவதை எதிர்க்கும் ஒரு புண்ணிய பூமி. அவர்கள் தமது மத்திய அரசை நம்புவது அவர்களுடை நம்பிக்கை. அதை நாம் குறை சொல்ல முடியாது. காலம் அவர்களுக்கு உண்மை எது என்பதை உணர்த்தும். அது வரைக்கும் நாம் உணர்சி வசப்பட்ட அறிக்கைகள், வார்த்தைகள் இலங்கைத் தமிழர் தரப்பில் இருந்து வருவது நமது தொப்பிள் கொடி உறவான தமிழகத்தை இழந்து விடுவதற்கே வழி வகுக்கும்.

ஆனால் இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு உண்மை தெரிந்திருக்க வேண்டும். 'எந்தக் காலத்திலும், எந்த சூழ்நிலையிலும் இந்து சமுத்திரத்தின் பிராந்திய வல்லராசான இந்தியா இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக செயல்படாது'.

இந்திய மத்திய அரசு இலங்கை அரசை பாதுகாக்கவே செயல்பட்டு வந்தது, செயல் படுகின்றது, இன்னமும் செயல் படும்.

எண்பதுகளில் தமிழ் இயக்கங்களுக்கு பயிற்சி வழங்கி தாம் இலங்கை தமிழர்களுக்கு ஆதரவானவர்கள் என்று காட்டி, இலங்கையை படிய வைக்க இந்தியா போட்ட வேடம் அது. இலங்கை, இந்தியாவுக்கு பயந்து கீழ் படிந்த போது, தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத் தலைவர்களை மிரட்டி பலனற்ற தீர்வான 'பதின் மூன்றாவது திருத்த சட்டத்திற்கு' ஒப்புக் கொண்டு கையெழுத்திடும் படி மிரட்டியதும் இந்திய மத்திய அரசுதான்.

சமாதானப்படையாக வந்து இலங்கைத் தமிழர்களை கொன்றதும், இலங்கை இராணுவத் திற்கும் மேலாக பாலியல் வன்முறை செய்து மிகப் பெரிய மனித உரிமை மீறல்களை செய்ததும் இந்த இந்தியாதான். இதற்காக இந்தியா ஒரு போதும் வருந்தியது கிடையாது.

ஆனால் நமது இரத்த உறவுகளான தமிழகம் அதற்காக கொந்தளித்தது. இந்திய இராணுவத்தினர் இலங்கையில் இருந்து திரும்பி மீண்டும் இந்தியாவுக்கு வந்த போது தமிழக தலைவர் கலைஞர், அவர்களை வரவேற்க மறுத்துவிட்டது அன்று பெரும் பரபரப்பாக இருந்தது.

இதுவரை ஆயுதம் வாங்குவதற்காக வட்டியில்லா கடனாக இரண்டாயிரம் கோடி ரூபாய் களை இந்திய அரசு வழங்கியுள்ளது. காலத்திற்கு காலம் பயிற்சியும், ஆலோசனையும் வழங்கி வருகின்றது. இந்திய இராணுவப் பொறியியல் ஆளர்கள், தொழில் நுட்பவியலாளர்கள் இலங்கை மண்ணில் நிலைகொண்டு இலங்கை இராணுவத்திற்கு உதவி செய்து வருகின்றனர். இது மட்டுமல்ல இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக ஐ.நா உட்பட எங்கும் தீர்மானம் நிறைவேற்றப் பட முடியாமல் மிக இரகசியமாக செயல் புரிவதும் இந்தியா தான்.

இலங்கைத் தமிழர்கள் தமது உரிமைக்காக முப்பது வருடங்களுக்கு மேலாக சமாதான முறையில் போராடி முடியாமல் போய், வேறு வழி இன்றி, தவிர்க்க முடியாமல் ஆயுதம் ஏந்தியுள்ளனர். கனடாவில் சிறுபான்மை இனமான பிரேஞ்சு மக்களுக்கு கிடைத்தது போல ஒரு நியாயமான தீர்வு இலங்கைத் தமிழர்களுக்கு கிடைக்கும் என்றால் இந்த ஆயுதப் போராட்டத்தை தமிழர்கள் கைவிடுவார்கள் என்பது உறுதி.

ஆக மொத்தத்தில் இலங்கைத் தமிழர்களே! இந்தியாவை நம்பி இருக்காமல், இந்தியாவை மீறிய சக்திகள் இலங்கைத் தமிழர்களிடம் எதை எதிர்பார்க்கின்றனர் என்பது பற்றி சிந்தியுங்கள். அவர்களது ஆலோசனைகள் பற்றி பரிசீலனை செய்யுங்கள். அவர்களுடன் ஆன உறவை வலுவாக பற்றிக் கொள்ளுங்கள். இதுதான் நமது உரிமைகளை நாம் வென்று எடுப்பதற்கான வழியாக இருக்கும்.

மாறாக இலகு காத்த கிளியாக இந்தியாவை நம்பி இருக்காதீர்கள்.

III

# நூறாண்டுகளின் அடிமைத்தளை துடைக்கப்பட்டது

### ஒபாமா அமெரிக்க அதிபரானார்

அமெரிக்க அதிபராக பராக் ஒபாமா தேர்தலில் வெற்றிபெற்றுள்ளார். சனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட்டு 349 இடங்களைப் பெற்று அவர் வரலாற்றில் கால் பதித்துள்ளார். ஓர் கறுப்பினத்தவர் அமெரிக்காவில் அதிபராக ஆகியிருப்பது பெரிய மாற்றங்களுக்கான எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. இவரை எதிர்த்துப் போட்டியிட்ட யோன் மக்கெயின் 169 இடங்களைப் பெற்றுள்ளார்.

இன்னும் இரு மாகாணங்களின் முடிவு வெளிவரவில்லை. இரண்டு இடத்திலும் சேர்த்து 26 இருக்கைகள் உள்ளன. ஆனால் இரண்டு இடங்களிலும் போட்டியாளர் இருவரும் 49 விழுக்காடு வாக்குகளைப் பெற்றுள்ளனர். நூற்றுக் கணக்கான வாக்குகளில் வேறுபாடு இருப்பதால் இங்கு முடிவுகள் வெளியாவது தாமதமாகிறது. இருப்பினும் ஒபாமாவின் வெற்றி உறுதியாகிவிட்டது.

அமெரிக்காவின் 51 மாகாணங்களிலும் மொத்தம் 538 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும். இதில் யாருக்கு 270 உறுப்பினர்கள் கிடைக்கிறார்களோ, அவர்கள் அதிபராக வெற்றி பெறுவார்கள். தற்போதைய அதிபரின் பதவிக்காலம் யனவரி 20ஆம் திகதி முடி வடைகிறது. அன்றுதான் பராக் ஒபாமா அமெரிகாவின் 44 ஆவது அதிபராக பதவி ஏற்பார்.

21 மாதமாக நடந்த தேர்தல் பிரச்சாரத்தின் முடிவில் ஒபாமாவுக்கு இந்த வெற்றி கிடைத்துள்ளது. ஒபாமாவுடன் துணை அதிபராக ஜோ பைடன் பதவியேற்கிறார். வழக்கமாக குடியரசுக் கட்சிக் கோட்டையாக இருக்கும் நான்கு மாநிலங்கள் ஒபாமாவின் கட்சியான சனநாயகக் கட்சிக்கு இந்தத் தேர்தலில் வந்துள்ளன.

கடந்த 40 ஆண்டுகளில் மிகவும் அதிகமான வாக்குகள் இந்தத் தேர்தலில் பதிவாகியுள்ளன எனப்படுகிறது. 64.1 வீதம் வாக்குகள் பதிவாகியுள்ளது. ஒரு வாக்குச் சாவடிக் கண்காணிப்பாளர் அதிகாலை 4.30 மணிக்குச் செல்கையில் அங்கு 20 பேர் வரிசையில் காத்திருந்தார்களாம்.

மொன்றியலில் மக்கில் பல்கலைக்கழகத்தில் எந்திரவியல் துறையில் படிக்கும் மாணவரே நியூ ஹெமிஸ்பியர் மாகாணத்தின் முதலாவது வாக்காளர். இவர் தனது பகுதியில் 100 வீதம் வாக்குப் பதிவை ஊக்கப்படுத்தியுள்ளார். இவரைப்போல் முதல் தடவை வாக்குரிமைபெற்ற இளையோர் பலரும் ஒபாமாவுக்கு ஆதரவாக களத்தில் இறங்கியே வெற்றியைத் தேடிக் கொடுத்துள்ளனர்.

அமெரிக்காவில் பலவாறும் அடிமைகளாக இருந்த நிலையின் துயரத்தை மனதில் சுமந்தபடியேதான் கறுப்பின மக்கள் எப்போதும் இருந்து வந்தனர். தற்போதைய வெற்றியினால் இந்த ஆழ்மனத்தின் துயர் இனி வரும் சந்ததிக்கும் துடைத்தெறியப் பட்டுவிட்டது. இப்படியொரு நிலை இருந்தது என்ற குற்ற உணர்வில் இருந்த அனைத்துப் பிரிவைச் சேர்ந்த அமெரிக்காவின் இளைய சந்ததியும் இதனால் அமைதியடைந்திருக்கிறது.

■ ■ ■

Publisher & Editor : P.J. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், மாமூலன், கருணா, பொன்னையா விவேகானந்தன், ரதன், சுந்தர் சின்னத்தம்பி.

தட்டச்சு : கௌரி, கௌசலா, ஜீவா, பிரியதர்சினி, மஞ்சுளா ராஜலிங்கம்.

ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி. மஞ்சுளா ராஜலிங்கம்.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)

தொடர்புகள் - For More Info : Editor
P.O.Box #63581
Woodside Squarew
1571 Sandhurast Circ.
Toronto, ON. M1V 1V0

Montréal விநியோகம் : சுகுமாரன் சின்னையா
1-514-299-3186

Ottawa விநியோகம் : அலெக்ஸ் சிவசம்பு
1-613 -276-7253

Tel : 416-646-3422, 416.400.6406
Fax : 416.849.0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரிபிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

#1 TEAM @ PROPERTY/MAX REALTY INC.



PROPERTY MAX®
Realty Inc. Realtor
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

New Mortgage, Commercial Mortgage
New Immigrans, Ist, 2nd Mortgage
Re-Financing, New Home Buyers

Search More Properties @
www.realestatebrokerofrecord.info

WE BRING CANADA'S LEASING LENDER'S TO YOU
PMCI
PROPERTY MORTGAGE CANADA INC.

PLEASE MENTION PROPERTY/MAX WHEN ENQUIRING ABOURT PROPERTIES!

# இந்திய ஆணைக்குள் இலங்கையை மீண்டும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியுமா?

**இந்திய ஆணைக்குள் கட்டுப்படாத இன்றைய இலங்கையை மீண்டும் ஒரு முறை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இந்தியாவால் முடியுமா?**

**இந்தியாவே உணவுப் பொதி வேண்டாம் தீர்வுப்பொதி வேண்டும் இதுதான் கடந்த 22 வருடங்களாகக் கேட்டுக்கொண்டதும் ஈழத் தமிழர்களின் கனவாகவும் இருந்து வருகிறது.**

**இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் 1.5ன் படி தமிழர்களின் சமத்தவம் பாதுகாப்பு சமாதான வாழ்வு அவர்களின் விருப்பத்தினைப்பூர்த்தி செய்தல் ஆகியவற்றுக்கு இந்தியா பொறுப்பாக இருந்தாலும் அன்றைய கொள்கை வகுப்பாளர்களும் ஆலோசகர்களும் விடுதலைப்புலிகளை மட்டும் ஒடுக்கு வதற்காக அந்த ஒப்பந்தத்தைப் பயன்படுத்தி வந்தார்கள் மற்றொரு சரத்தில் தெளிவாக எழுதப்பட்டிருந்த முற்று முழுதாக விடுதலைப் புலிகளையும் தமிழர்களையும் காக்கின்ற பொறுப்பு இந்தியாவிடமிருந்ததை நடைமுறைப் படுத்தத் தவறியமை தான் இலங்கை அரசின் போர்வெறியாட்டத்துக்கும் தமிழர் இன அழிப்புக்கும் காரணமாகியது.**

- அ. கணபதிப்பிள்ளை -
kanapathipillai@thaiveedu.com

இந்திய இலங்கை ஒப்பந்தம் இலங்கைக் குச் சாதகமாகவே இருக்கின்றது என்ற எண்ணம் இலங்கையிடம் நீண்டகாலமாகவே இருந்து வருகிறது. இந்தியாவின் இலங்கை தொடர்பான ஒவ்வொரு அணுகுமுறையும் இலங்கைக்குச் சாதகமாகவும் அதற்கேற்ப மென்போக்கைக் கொண்டதாகவும் இருந்து வந்தது. அன்றைய இந்தியாவுக்கு விடுதலைப் புலிகள் தனது சொற்கேளாப் பிள்ளையாகவே இருந்தது. இந்தியா தன்னால் உருவாக்கப் படும் இயக்கங்கள் மூலம் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என்றும் அதன்மூலம் ஒன்றுபட்ட இலங்கைக் குள் பிரச்சினைத்தீர்வுக்குத் தனது அதிகார அழுத்தத்தை கொடுத்துவிட முடியும் என்றும் நம்பியிருந்தது.

விடுதலைப் புலிகளின் விரைவான வளர்ச்சி யும் அது மேற்கொண்ட இராணுவ நடவடிக்-கைகளும் குடாநாட்டில் இருந்த அரச இராணுவத்துக்குக் கொடுக்கப்பட்ட கரும்-புலித் தாக்குதல்கள் இராணுவத்தின் முன்னேற்றம் கலந்ததொரு போர்ச்சூழலில் இந்திய விமானங்கள் குடாநாட்டில் உணவுப் பொதிகளுடன் வந்துசேர்ந்து இருபத்தொரு ஆண்டுகள் மறைந்துவிட்டன.

மீண்டும் பல தடவைகள் அரச விடுதலைப் புலிகளின் போர் உச்சமடைந்திருந்த பொழு திலும் இந்தியா தன் பிரதேச கட்டுக்கோப்-புக்குக் குந்தகம் விளைவிக்கப்படவில்லை என்ற நிலைமையை முன்வைத்து இலங்கை யைக் கட்டுப்படுத்தும் நிலைமைக்குப் போக வில்லை. இலங்கையின் இன்றைய அதிகார வர்க்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையில் ஏற்பட்டு வரும் மாற்றம் இந்திய கேந்திர முக்கியத்துவத்திற்கு சவாலாகலாம் என்ற உண்மை வெளித்தெரியும் பொழுது இலங்கை மீது இந்தியாவின் கட்டுப்பாடு அவசிய மாகிறது.

இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்ட சூழலில் இலங்கை இருகூறாகப் பிரிந்துவிடக்கூடும் என்ற நிலை ஒருபுறம் அதன் மூலம் புதிய அரசானது இந்தியாவுக்கு எதிரான வெளி நாட்டுக் கொள்கையினை முன்வைக்கக் கூடும் என்ற பயம் மறுபுறமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் விடுதலை இயக்கங்கள் எழுச்சி பெறுகின்ற பொழுதிலேயே தமிழர் களுக்குத் தீக்கப்பட வேண்டிய பிரச்சினை ஒன்று இருப்பதாக மட்டும் இந்தியா எண்ணி இலங்கையில் தனது கரிசனையைச் செலுத்த வில்லை. அத்தகைய இயக்கங்களின் எழுச்சியானது இந்துசமுத்திரத்தின் கேந்திர முக்கியத்துவத்தை இரண்டாகப் பிரித்துவிடும் என்பதால் அதற்கு அடிப்படையான தமிழர்க ளின் பிரச்சினையைத் தீர்க்கும்படியான இந்திய ஆணையானது இலங்கையின் மீது போடப்பட்டது.

தமிழர்களது அடிப்படைப் பிரச்சினைகளை இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையாகவே கருத்துக்கு எடுத்துக்கொண்டு அதனை இலங்கையே தீர்த்துவிடக்கூடிய தீர்வுத் திட டத்தினை முன்வைக்க வேண்டும் என்பது தான் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையாகின்றது.



இதற்காக இந்தியா இலங்கைக்குக் கொடுத்து வந்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களும் விடுதலைப் புலிகளினதும் பின்னடைவாகவே கொள்ளப் பட வேண்டியவையாகும். அதனால்தான் அத்தகைய ஏற்பாடுகளை விடுதலைப் புலிகள் மறுதலிக்கவேண்டியவர்களாகவும் இருந்தார்கள்.

இலங்கை அரசியலமைப்பில் ஏற்படுத்திய பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் மூலம் ஒற்றையாட்சியினுள் கூடிய அதிகாரம் கொண்ட மாகாண சபைகளை உருவாக்கும் உத்தியினை இலங்கை அரசு முன்வைத்தி-ருந்தது. மாவட்ட சபைகளைக்கூட ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்த மென்போக்குத் தமிழர்கள், மாகாண சபைகளை ஏற்றுக் கொள்வார்கள் என இலங்கை நம்பியிருந்தது. இந்நிலையில் ஒருங்கிணைந்த மாகாணசபை கள் என்ற கருத்தினை இந்தியா முன் வைத்தது. பேச்சளவில் இருமாகாணங்களை-யும் இணைத்து அதிகாரப்பரவலாக்கம் செய்ய முடியும் என இந்தியா நம்பியது. வடக்கையும் கிழக்கையும் இணைத்து தமிழர் தாயகத்தை உருவாக்க ஒப்பந்தத்தில் எழுதியது இதனை இலங்கை அரசு குழப்ப மறுபுறம் உறுதி பூண்டிருந்தது

நடைமுறையில் இருமாகண இணைப்புச் சாத்தியமாகவில்லை என்பது தெளிவுபடுத்தப் பட்டது. ஆனால், தனித்தனி மாகாண சபை கள் என்ற அதிகாரப் பரவலாக்கத்தினை சிங்கள மாகாணங்களில் செய்துகாட்டிய பொழுது இலங்கை எந்தவிதமான சிக்கல் களையும் எதிர்நோக்கவில்லை. அதனையே கிழக்கு மாகாணத்திலும் செய்துகாட்ட இலங்கை விரும்பியது. அதற்கு ஏற்றதான ஒரு சூழலைத் தோற்றுவிப்பதும் அதன் மூலம் தேர்தல்களை நடாத்துவதும் ஏனைய சிங்கள மாகாணங்களில் காணப்பட்டது போன்ற ஒரு செயற்பாட்டு வடிவத்தினை உருவாக்குவதும் என்ற ஒழுங்கு முறை தமிழர்களுக்கு இருக்கும் அடிப்படைப் பிரச்சினைகளை மறைக்கும் உபாயமாகவே மேற்கொள்ளப்பட்டது. இதனை இந்தியாவும் ஏற்றுக்கொண்டிருந்தது.

இதேபோன்றதொரு வடிவத்தினை வடக்கிலும் கொண்டுவரக்கூடிய சூழலை இலங்கை அரசாங்கம் உருவாக்குவதற்காகவே அண் மைக்கால உக்கிரப் போரை புலிகளுக்கு எதிராக முடுக்கிவிட்டிருந்தது. இலங்கை இப்போரின்மூலம் குறைந்தது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் அரைவாசிப் பகுதியினையாவது பிடித்துவிடுவதன் மூலம் வடமாகாணத்துக்கான தேர்தலை நடாத்திவிட முடியும் என்பதும் அதன்மூலம் விடுதலைப் புலிகளது முக்கியத்துவத்தை குறைத்து மாகாணசபை ஆட்சி முறையினை ஏற்படுத்தி விட முடியும் என்பதனையும் இலங்கை

5ம் பக்கம் பார்க்க...



# இந்திய ஆணைக்குள் இலங்...

25ம் பக்கத் தொடர்ச்சி...

அரசு நம்பியிருந்தது.

நிலத்தைக் கைப்பற்றுவதும் படிப்படியாக மக்களை உள் இழுத்துக்கொள்வது அல்லது புதிதாக வெளியிடங்களிலிருந்து மக்களைக் கொண்டுவருவது ஆகிய செயற்பாடுகள் தேர்தல் ஒன்றினை நடாத்துவதற்கு முன்னோடியான செயற்பாடுகளாக இருப்பனவாகும். இதனைக் கிழக்கு மாகாணத்தில் நடாத்தி வெற்றியும் கண்டிருந்தது.

இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகளுடனான வன்னிப் போரில் தமிழர்களை இடம் பெயரச் செய்யாது பிடித்த இடங்களில் மக்களை உள் இழுத்து கொண்டு போரிடும் உபாயத்தைக் கடைப்பிடிக்கவுமில்லை. அதற்கு ஏற்றமுறையில் போரை நீண்ட காலத்துக்கு மெதுவாக நடாத்திச்செல்லக் கூடிய கால அவகாசமும் ஆட்சியாளர்களிடம் இருக்கவுமில்லை.

அவசரப் போரின் மூலம் மக்களையோ உடைமைகளையோ கவனத்தில் எடுத்துக் கொள்ளாது நிலத்தினை மீட்க வேண்டும் என்ற நோக்கமும் விடுதலைப் புலிகளது ஆட்சிக் கட்டுக்கோப்பை சீர்குலைத்து விடுவதன் மூலம் நிர்வாகமற்ற விடுதலைப் புலிகளின் பிரதேசங்களாக அவற்றை மாற்றியமைக்கப்பட வேண்டும் எனவும் இலங்கை நம்புகிறது. இத்தகைய மனித அவலப் போரின் மூலம் மக்களிடமிருந்து விடுதலைப் புலிகளைப் பிரித்தெடுக்கக்கூடிய உபாயத்தை எதிர்பார்த்தது. உணவு மருந்து ஆகியவற்றின் வழங்கலை நிறுத்தியும் உதவி நிறுவனங்களை வெளியேற்றியும் அதனைத் தீவிரப்படுத்தியது

இவையாவும் எத்தகைய சாதகமான விளைவுகளையும் அரசாங்கத்துக்குக் கொடுக்கத் தவறியிருந்தன.

பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்றதன் மூலம் தமிழினத்துக்குப் பிரச்சினைகள் இருக்கின்றன என்பதனை மறைத்து விடுதலைப் புலிகளை அழித்துவிடுவதுதான் தனது முதல் திட்டமாக அரசு வெளிப்படுத்தத் தொடங்கியிருந்தது. அதன் எதிரொலியாகவே விடுதலைப் புலிகளை ஒடுக்கி விடுவதன் பின்னர் தான் தமிழர்களுக்கான தீர்வுத்திட்டம் என்ற அரசின் குரலை ஆட்சியாளர்கள் முன்வைத்தனர்.

இதன் மூலம் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்றிருந்த நிலையினை மாற்றலாம் என்பதுவும் அரச ஆதரவுக் குழுக்களுடைய ஆதரவுடன் தேர்தலில் வெற்றியடைய முடியும் என்பதும் சாத்தியமானவை என்பது அரச நம்பிக்கையாக இருந்தது.

இந்நிலையிலே தான் அமெரிக்க இந்தியக் கூட்டு நிலைமையினை அவதானிக்கத் தொடங்கியது. இராணுவத் தீர்வினை விடுத்து பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்த முயன்றன. போரில் விடுதலைப் புலிகளின் பிரதேச பலம் குறைவடைகின்ற பொழுதில் பேச்சுவார்த்தைக்கான அதிகாரமும் சக்தியும் குறைவடைந்துவிடும் அதில் ஏற்படுத்தப்படும் இடைவெளியானது தமிழர்களுக்குப் பாதகமான முடிவினைக் கொண்டுவருவதுடன் மீண்டும் போர் ஏற்படவும் இலங்கையில் அமைதியற்ற சூழலை தொடரவும் மனித உரிமை மீறல்கள் அதிகரிக்கவும் காரணமாக அமையும் என்பதனை தெளிவுபடுத்த ஆயத்தமாகியது.

அமெரிக்காவின் பார்வையில் இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதன்மூலம் அண்மைக்கால அகதிகள், இடம் பெயர்ந்தோர் பிரச்சினைக்குத் தீர்வாகவும் அவர்கள் இலங்கையில் எந்தப் பகுதிகளுக்கும் சென்று வாழலாம் என்றும் அதன் மூலம் புலிகள் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் என்ற கருத்தும் மாற்றமுறும் என்பதும் வெளியுலகத் தமிழர்களின் தலையீடு இலங்கையில் இருக்காது என்றும் எண்ணுகிறது.

அரசியல் தீர்வினை தமிழர்களிடத்தில் திணிக்க முடியுமா?, தமிழர்களால் ஏற்றுக் கொள்ள வைக்க வேண்டுமாயின் தமிழர்களுக்காக கொடுக்கப்படும் தீர்வுத்திட்டங்கள் நடைமுறைச்சாத்தியமாகவாவது இருக்க வேண்டும். தமிழுக்குச் சமவுரிமை என அரசியற் திருத்தச் சட்டத்தில் எழுதப்பட்டு இருந்த பொழுதிலும் அதனை ஏற்றுக்கொள்ளத்தக்க இறைமையுள்ள அதிகார அலகுகள் காணப்பட்டிருக்க வேண்டும். அல்லது இறுக்கமான சட்டத்தின் மூலம் எல்லோராலும் ஏற்றுக்கொள்ள வைத்திருக்க வேண்டும் தமிழுக்கே அது நடக்கவில்லை அத்தகைய உறுதிப்பாடில்லாத இனப்பிரச்சினைக்கான அரசியற் பிரதேசத் தீர்வுத்திட்டத்தை நோக்கியே இலங்கை செல்கிறது.

இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் அண்மைக்காலமாக ஏற்பட்டுவந்த மாற்றங்களும் அவற்றின் முடிவாக வன்னிப்போரும் இந்தியா இலங்கையில் அழுத்தத்தைக் கொடுக்கவேண்டிய தேவையினை ஏற்படுத்துகிறது.

அமெரிக்கா தென்னாசியா, மத்தியக்கிழக்குப் பகுதிகளிலிருந்து படைகளைப் பின்வாங்கும் பொழுது ஏற்படும் சூழ்நிலையினை இந்தியாவுக்கு எதிராக திருப்பிவிடக்கூடிய ஒரு சூழலை எதிர்வுகொள்வதில் இந்தியா தனது பாராமுகத்தினைப் பேணி வருமாயின் அது இந்திய ஆட்சிக்குப் பலவீனமாக மாறிவிடும்.

அமெரிக்காவின் ஆட்சி மாற்றம் இலங்கையில் ஐ.நா. வருகையினை ஏற்படுத்தும் நிலையினைத் தோற்றுவிக்குமானால் அது விடுதலைப் புலிகளின் பலம் அதிகரிக்கவே காரணமாகிவிடும். இந்நிலையில் பேச்சுவார்த்தையினைத் தொடரச் செய்வது புலிகளின் பேரம் பேசும் சக்தியினைக் கூட்டக்கூடும்.


இந்தியாவின் முயற்சியினால் மீண்டும் ஒரு போர் நிறுத்தம் ஏற்படுமாயின் அது பழைய புரிந்துணர்வு ஒப்பந்தமாகவே இருக்க வேண்டும் என்பதனை விடுதலைப் புலிகள் வலியுறுத்தக்கூடும். இதன்மூலம் வடக்கிலும் கிழக்கிலும் மீண்டும் விடுதலைப் புலிகளது செல்வாக்கு அதிகரிக்கும் என்பதனால் அதனை இலங்கை விரும்பப்போவதில்லை. இந்நிலையில் இந்தியா இலங்கையுடன் மீண்டும் ஒரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டிய தேவையும் அதன்மூலம் இலங்கையினைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவையும் இருக்கிறது.

முதலில் விடுதலைப் புலிகள் மீதான தடையினை இந்தியா எடுத்துவிடுமாயின், இந்தியா நேரடியாகவே பேச்சுவார்த்தையில் பங்கு பற்றவும் அதன்மூலம் தீர்வுத்திட்டத்தினை ஏற்றுக்கொள்ள வைப்பதுவும் சாத்தியமாகும். இல்லையேல் இந்தியா இணைந்த இலங்கை விடுதலைப் போரில் 21 வருடச் சுழற்சியின் ஆரம்பம் அடுத்த வருடமாக மாறுவதற்கான சூழ்நிலையே தோற்றம் பெறும்.

■ ■ ■

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*





**Justin William**
Broker
**Cell: 416.803.7344**



**Ravi Raveendran**
Broker
**Cell: 416.817.8479**



**Wilton Gnanapragasam**
Sales Representative
**Cell: 416.554.4747**

# For all your Real Estate Needs....






Busy Convenience Store, Prime Scarborough Location, Lotto Commission $2000/Month, Excellent Opportunity, Call Justin For Details.



**$ 299,000** — Staines & Morningside
- Beautifull Freehold T/House
- 3 Bedrooms & 2 Washrooms
- Finished Walk-Out Basement
- Do Not Miss This
- Call **Ravi** For Details....




**$ 294,900** — Chinguacousy & Drinkwater
- 3 Bedroom Detached House
- Finished Basement W/Entrance
- Laminated Floor Throughout
- Walk To Schools & Transit
- Call **Wilton** For Details....



**$ 459,900** — Morningside & Old Finch
- 4 Bedroom Detached House
- Hardwood Floor On Main Floor
- Nice Deck At Back Yard
- Professionally Finished Basement
- Call **Justin** For Details....




**$ 439,900** — Westney & Rossland
- 4 bedroom Detached House
- Shows Very Well
- Hardwood On Main Floor
- Convenient & Quiet Location
- Call **Justin** For Details...



**$ 449,000** — Mavis & Derry
- 4 Bedroom Clean House
- Great Location
- Finished Basement
- Harwood Floor On Main Floor
- Call **Wilton** For Details....



**$ 314,900** — Yonge & Lakeshore
- Luxury Condo In Downtown
- One Bedroom Plus Den
- All Appliances Are Included
- Walk To Lakeshore
- Call **Ravi** For Details....



**$ 166,900** — Neilson & McLevin
- Well Maintained Condominium
- 2 Bedrm W/Ensuite Washrm
- Larger Corner Unit
- Two Parking Spaces
- Call **Wilton** For Details....



**$ 249,900** — Markham & Mclevin
- Good Location
- Ideal family Neighbourhood
- Spacious 3 Bedrooms
- Finished Basement
- Call **Ravi** For Details....

**HomeLife GTA Realty Inc., Brokerage*** 1711 McCowan Rd, Suite 206, Scarborough, On. **Office: 416.321.6969**

This is not intend to solicit properties currently listed for sale

*Independently owned and operated




MORTGAGE ALLIANCE
RightBroker = RightMortgage

- No Money Down Programs
- Credit பிரச்சிளை உள்ளவர்கள் Credit இல்லாதவர்கள்
  Late Payment, Bankruptcy and R9's - No Problem
- புதிய குடிவரவாளர்களுக்கும், சுய தொழில் வாய்ப்புள்ளவர்களுக்கும் Mortgage ஒழுங்குகள் செய்து தரப்படும்
- New Mortgages, Refinances, Switches - (Switch for free) & Pre - Approval
- தமிழில் இலவச ஆலோசனைகள், கடைசி நிமிடக் கட்டணம் இல்லை
- Fast Approvals & Closings
- 45 வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டி வீதம் ஒழுங்கு செய்து தரப்படும்
- உங்களது வீட்டுக்கே வந்து Mortgage செய்து தரப்படும்
- உங்கள் திருப்தியே எங்கள் வெற்றி

# MORTGAGE
# MORTGAGE
# MORTGAGE

## ராம் கிருஷ்
## RAM KRISH

Senior Mortgage Consultant
The Mortgage Alliance company of Canada
Head Office: 2005 Sheppard Ave. E, Suite 200,
Toronto, ON M2J 5B4
Phone: 416.499.5454, Fax: 416.499.8366



**TEL: 416.526.4996**

NATIONAL BANK OF CANADA · BRIDGEWATER financial services ltd. · FirstLine MORTGAGES · Scotiabank · FIRST NATIONAL · TD · cervus · BMO

digi Media Creations - 416.467.4952

# உங்கள் வீட்டை சந்தைப்படுத்துவதற்கு முன்பு



மகேன் சிங்கராஜா
- வீடு விற்பனைப் பிரதிநிதி -
mahen@thaiveedu.com

நீங்கள் உங்களது வீட்டை விற்பதற்கு தயாராக இருந்தால் கீழே உள்ள ஆலோசனைகளை கடைப்பிடித்து உங்கள் வீட்டை விற்பதை இலகுவாக்கி அதிகளவு வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

உங்களது வீட்டில் மேலோட்டமான சில மாற்றங்களை செய்வது அதிக பணச் செலவை ஏற்படுத்தாது. அதே சமயம் உங்களது வீட்டை கூடிய அளவு விலைக்கு விற்கவும் முடியும். நீங்கள் உங்கள் வீட்டின் திருத்த வேலைகள் தொடர்பாக அதிக அளவு கவனம் செலுத்த வேண்டிய இரு இடங்கள்

சமையலறை, வெளிப்புறம் என்பவையாகும். சிறிதளவு பூச்சு மூலம் வீட்டின் பெரிய குறைபாடுகளை மூடி மறைக்கலாம் என்று நினைக்க வேண்டாம்.

பொதுவாக சகல வீடுகளும் விற்கப்படுவதற்கு முன்பாக வீட்டுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் என்பதனை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவும்.

### வீட்டை துப்பரவாக வைத்திருத்தல்

மிகவும் அழகான ஓர் வீடாக இருந்தாலும் அதன் உட்புறம் நன்கு சுத்திகரிக்கப்படாவிடில், வீட்டை வாங்குபவர்கள் சற்றுத் தாமதிக்கும் நிலை ஏற்படும். உங்கள் வீட்டில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டிய சில விடயங்கள் பின்வருமாறு.

### சிறிய விடயங்களில் கவனம் செலுத்துங்கள்

- பிணைச்சல்கள் இறுக்கமாக இருந்தால் அவற்றை இளகச் செய்வதற்கான எண்ணையை உபயோகியுங்கள்.
- Cabinetsகளின் திருப்பு குமிழ்களை இறுக்கமாக்கவும்,
- ஒழுகும் நீர் விநியோக குழாய்களை திருத்துங்கள்.
- Carpet Shampooவை பயன்படுத்தி நில விரிப்புக்களை சுத்தம் செய்யுங்கள்.
- உங்கள் குளியலறை மிக அழகாக வைக்கப்பட வேண்டும். குளியல் தொட்டியின் பழைய shower curtain அகற்றி புதிய curtain ஐ பொருத்த வேண்டும். Fixtures யாவற்றையும் மினுங்கக்கூடியதாக வைக்க வேண்டும்.
- வெப்பமூட்டும் வடிகட்டிகள், காற்றுப்பதனிடு செய்யும் வடிகட்டிகல் என்பன சுத்திகரிக்கப்பட வேண்டும். அல்லது புதிய வடிகட்டிகள் பொருத்தப்பட வேண்டும்.
- உங்கள் பிள்ளைகளது அறைகள் சுத்தமாக வைக்கப்படுவதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

### தேவையற்றவற்றை அகற்றுங்கள்

உங்களது வீட்டை பார்க்க விரும்புபவர் வீட்டினுள் உள்ள வதிவிடப் பகுதியின் அளவை மனதில் கற்பனை செய்ய நினைப்பது வழக்கம். எனவே நீங்கள் பின்வரும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது விரும்பத்தக்கது.

- உங்களது Garage, நிலக்கீழறை, முகடு, Closet ஆகியவற்றில் உள்ள பொருட்களை அகற்றுங்கள்.
- மேலதிக தளபாடங்கள் மற்றும் பொருட்களை வீட்டில் இருந்து அகற்றி, அவற்றை சேமித்து வைக்கும் மற்றும் பொருட்களை வீட்டில் இருந்து நிறுவனம் ஒன்றில் பாதுகாத்து வைக்கவும்.
- வீட்டினுள் வெளிச்சம் வரக்கூடியதாக யன்னல் திரைச் சீலைகளையும் Blinds களையும் திறந்து வையுங்கள்.



- உங்கள் வீட்டை விற்பதற்கு நீங்கள் ஓர் வீடு விற்பனை முகவரது சேவையை பயன்படுத்தினால் உங்கள் வீட்டில் செய்ய வேண்டிய திருத்த வேலைகளைப் பற்றி அவர் உங்களுக்கு ஆலோசனை வழங்குவார்.

### வீடு வாங்குபவரின் கண்களைக் கவருங்கள்

- புற்தரைகள், செடிகள் என்பவற்றை அழகாக கத்தரியுங்கள்.
- ஒருசில சிறிய பூ மரங்களை வைத்திருங்கள்
- வீட்டின் வாசல் பகுதி சுத்தமானதாகவும் வரவேற்கும் தன்மையானதாகவும் இருக்க வேண்டும்.
- வீட்டின் யன்னல் வெளிச் சட்டங்கள், Shutter, கதவுகள் என்பவற்றிற்கு வர்ணம் தீட்டவும்.
- குப்பை கழிவுகளை போடுகின்ற கொள்கலனை (Garbage Cans) கண்ணில் படாதவாறு வைக்க வேண்டும்.
- பீலிகள் (Gutters) சுரை நீர் காவி ஓடும் குழாய்கள் (Downspout) என்பவற்றை துப்பரவு செய்யவும்.

### உங்கள் வீட்டை விற்பதற்கு தயார் செய்தல்

உங்களது வீட்டை விற்பனை செய்தல் உங்கள் வாழ்க்கை காலத்தின் ஓர் மிகவும் உணர்வுபூர்வமான நிகழ்ச்சியாக அமையக் கூடும். அது உங்களது வழமையான வாழ்க்கை முறை, நீங்கள் வசிக்கும் இடம் நீங்கள் வாழுவதற்கான ஒழுங்குமுறைகள் என்பவற்றை மாற்றுவதற்குரிய வாய்ப்பாக அமையலாம்.

வீட்டை விற்பதற்கு முடிவு செய்த பின் ஓர் வீடு விற்பனை முகவரைத் தொடர்பு கொள்ளுவதற்கு முன்பு உங்கள் வீட்டை மேலும் சிறந்த முறையில் சந்தைப்படுத்துவது பற்றி நீங்கள் நன்கு சிந்திக்க வேண்டும். வீடு விற்பனை முகவர் உங்கள் வீட்டைப் பார்த்தவுடன் அவருக்கு ஏற்படும் முதல் மனப்பதிவு (First impression), உங்களுக்கு பயனை ஏற்படுத்தக்கூடும். உங்களது வீடு ஓர் சிறந்த பெறுமதியுடைய ஒரு தரமான ஆதனம் என்ற அபிப்பிராயம் அவருக்கு ஏற்பட்டால் உங்களது வீட்டை வாங்கக் கூடிய ஒருவரை கண்டு பிடிப்பதற்கு அவர் முழு முயற்சி எடுக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.

உங்களது வீட்டை கவர்ச்சிகரமான தன்மை உடையதாக மாற்றுவதற்கு 15 ஆலோசனைகள் தரப்படுகின்றன.

### அனாவசியமானவற்றை அகற்றுதல்

ஒவ்வொரு அறையிலும் இருந்து தேவையற்ற பொருட்களை அகற்றினால், உங்களது வீட்டை வாங்க விரும்புபவர் தனது சொந்த தளபாடங்களை உங்களது வீட்டில் வைத்து எவ்வாறு தனது வாழ்க்கை முறையை செயல்படுத்தலாம் என்று கற்பனை செய்ய வாய்ப்பு உண்டு. எனவே சிறிய அலங்கார பொருட்கள், சிலைகள் என்பவற்றை பெட்டிகளில் சேமித்து வைக்கவும்.

### வீட்டின் உட்புற அலங்காரத்தை எளிமையாக வைத்திருக்க வேண்டும்.

உங்களது வீட்டை ஓர் ஹோட்டல் என்று கருதுங்கள். மிகவும் அடிப்படையான தளபாடங்களையும் அவற்றுக்கு பொருத்தமான பொருட்களையும் வைத்திருங்கள். உங்களது தனிப்பட்ட வாழ்க்கை முறைக்கான பொருட்களை அகற்றி மெதுவாக அனைவருக்கும் ஏற்ற தன்மை கொண்டதாக மாற்றி உங்களது வீடு சுத்தமானதாக தோற்றமளிக்க ஏற்பாடு செய்யுங்கள்.

### முதலாவது மனப்பதிவை ஏற்படுத்துவதற்கு உங்களுக்கு இரண்டாவது வாய்ப்பு கிடைக்காது.

எனவே உங்கள் வீட்டின் முன் நுழைவாசலை மிகவும் அழகானதாக அமைந்திருத்தலை உறுதிப்படுத்துங்கள். முன்புறக் கதவிற்கு மீண்டும் வர்ணம் பூசவேண்டும் அல்லது தேவையானால் ஓர் புதிய கதவை பொருத்த வேண்டும். கதவின் இரும்பு கைப்பிடி கதவில் உள்ள குமிழ்கள் (Door Knobs) பூட்டு என்பவற்றை மினுக்கம் செய்து அதே சமயம் கதவில் உள்ள கண்ணாடியை பிரகாசமானதாக்க வேண்டும். அத்துடன் உங்கள் வீட்டின் முன் உள்ள புல்வெளி சீரான முறையில் கத்தரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

### உங்கள் வீடு முழுவதையும் நுணுக்கமாக சுற்றிப் பாருங்கள்.

உங்கள் வீட்டை வாங்குவதில் ஆர்வம் காட்டும் ஒருவரது ஆர்வம் இழக்கப்பட வாய்ப்பு வழங்க வேண்டாம். எனவே உங்கள் வீட்டில் சிறிய குறைபாடுகளையும் கவனமாக அவதானியுங்கள்.

### வீட்டை திருத்துவது பற்றி சிந்தியுங்கள்

ஓர் புதிய சமையலறை புதிய குளியலறை, புள்வெளி அலங்காரம் (landscaping) போன்றவை வீட்டின் பெறுமதியைக் கூட்டி

13ம் பக்கம் பார்க்க...

ROYAL SHUTTERS & BLINDS INC.
DIRECT FROM MANUFACTURER
Everything Factory Direct Prices
உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச் செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்



Sales - Service - Installations
Custom Made
Wood & Vinyl Shutters: California Style Shutters, Plantation Style Shutters, Traditional Style Shutters, Arches
(We Do Any Colour Of Paint & Stain)
Blinds: Vertical Blinds, Venetian Blinds, Wood Blinds, Bamboo Shades, Roller Shades, And More
Draperies: Swags, Sheers, Valance, Curtains, And More
Workmanship Guaranteed
Free Shop At Home
CALL FOR A FREE ESTIMATE:



தாஸ் Thaas Sivathason
13 Years of Experience in Shutter Business
Tel: (416) 562-0340
Full Satisfaction Guaranteed

**Gnani & Judy Real Estate**
All Your Real Estate Needs




ஞானேந்திரன் நரசிங்கம்
Sales Representative
CELL: 416.937.8090

ஜூடி ஞானேந்திரன்
Sales Representative
CELL: 416.629.9797

OFFICE: 416.321.6969

## Scarborough



- Golden Opportunity To Own Attractive Updated Medical / Prof Building.
- Ideal For User/Investor,Potential To Increase Income.
- Main Floor Has 5 Fully Equip Exam Rooms,1 Washroom,Reception Area And Waiting Room.
- Bsmt Has 4 Examination Rooms,3 Wrooms With Toilets And Urinals,Working Station And Waiting Area.
- 2nd Floor Has 7 Ex Rooms,2 Washrms And Office.
- Ideally Set Up For All Types Of Medical & Professional Practices.

**Brimley/Eglinton**
**2622 Eglinton Ave E**
**$529,000**

If you buy, sell or lease in any residential or commercial properties from us.

**CHANCE TO WIN**


A Trip to Cuba


**3 Brandnew Condo Available for Sale in Downtown**
Never Been Lived & Superb Location. Call for the Price.

**Scarborough**



**Mccowan & Ellesmere**
- New Luxurious 2 Br Unit & 2 Wr Unobstructed View.
- Good opportunity for investors. Property is rented.
- Low Maint. includes all utilities & facilities.
- Parking & Locker included & close to all amenities.

**$259,900**

**Caledon**



**Highway 9 & 50 Gas Station with Property**
- Esso Gas station in3.8 Acre lot
- Auto Repair & Autobody shop and Family Restaurant
- One Hour drive from Toronto

**$1,950,000**

**Oshawa**



**Multi Unit Apartment Park Rd. N./Bond St. W.**
- 11 Units. Solid Concrete Construction
- Building In Excellent Condition. Owner Has Managed The Building.
- Tenants Pay Their Own Hydro. Large Lot.

**$849,900**

**Scarborough**



**Kennedy & Finch**
- Nice Bungalow In An Excellent Location.
- Lot size is 60' x 125' with lots of trees.
- Newer Wrooms, kitchen, Furnace and laminate floor.

EXCLUSIVE

**$344, 900**

**Port Hope**

**Investment Property $1.1 Million**
- Motel in Port Hope, exit from HWY 401
- 42 Renovated rooms in 3.75 Acre Land
- Gross income of $250,000
- Motivated Vendor.

**$489,000**

**Gas Station For Sale**



- Self-Service Esso Gas Station With Convenience.
- Located In A High Traffic Junction.
- Volume 3 Million Litres, Store over $360,000 Per Year.

**$185,000**

**Oshawa**



**Sports Bar**
- Fully equiped with 295 seats
- $900,000/Year sales
- 4600 Sft with Patio
- Financial Available

**$325,000**

**Oshawa**



**Strip Plaza**
- Fully leased plaza
- Net income $180,000
- 35,000 sft land with 10,000 sft building.

**$2.2 Million**

வீடு வியாபார நிலையங்கள் வாங்க விற்க
HOMELIFE GTA REALTY INC., 1711 MCCOWAN RD. SUITE # 206, TORONTO, ON. M1S 3Y3
*EACH OFFICE IS INDEPENDENTLY OWNED AND OPERATED



# எமக்கென்று ஒரு தனிக்குடில்

சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்



**TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT**

**MAILVAGANAM (MIKE) AHILAN**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-220-1184**

**VINCE SINNADURAI**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-917-9462**

# 416.438.1688

Fax: 416.438.1612
2250 Midland Ave., #3
(South of Sheppard)
Unit 3, Scarborough, ON M1P 4R9

RBC Financial Group

# மார்பகப் புற்று நோய்
# (BREAST CANCER)



கந்தையா செந்தில்நாதன்
- Echo - Cardiogapher -
senthil@thaiveedu.com

பெண்களுக்கு ஏற்படும் புற்றுநோய்களில் பொதுவாகக் காணப்படுவது மார்புப்புற்று நோயாகும். கனடாவில் 2008ம் ஆண்டில் ஏறத்தாள 20,000 பெண்கள் வரை இதனால் பாதிப்படையலாம் என எதிர்வு கூறுகிறார்கள்.

மார்பகங்களில் உருவாகும் எல்லாவிதக் கட்டிகளும் புற்றுநோய்க்கட்டிகளாக இருப்பதில்லை. மார்பகங்களில் கட்டிகள் உருவாகும் பட்சத்தில் அவற்றை வைத்தியரிடம் காண்பித்து அவை எத்தகைய கட்டிகள் எனத் அறிதல் அவசியம். புற்றுநோய்கட்டிகளை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து விட்டால் சத்திர சிகிச்சை மூலம் மேலும் பரவாமல் அகற்றி விட முடியும்.

தற்பொழுது உள்ளது போன்று இரு தசாப்தங்களிற்கு முன்பு நல்ல வைத்திய வசதிகள் இருந்ததில்லை. புற்றுநோய் பற்றிய ஆய்வுகள் பலவிதமான கண்டுபிடிப்புக்களை உருவாக்கி அதன் மூலம் நேரகாலத்துடன் நோயைக் கண்டறியவும் தகுந்த நவீன சிகிச்சைகளை மேற்கொள்ளவும் வழி வகுத்துள்ளன.

மார்புப் புற்றுநோய் எல்லாப் பெண்களிடமும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஒவ்வொருவரையும் அது பாதிக்கும் விதம் வேறுபடும். முதலில் கட்டியானது சிறிதாகத் தோன்றி வளர்ந்து வரும். ஏற்கனவே குறிப்பிட்டது போல் எல்லாவிதக் கட்டிகளும் புற்று நோய்க் கட்டிகளாக இருப்பதில்லை. மார்பகங்களில் கொழுப்புப் படிவுள்ள கட்டிகள், நார்த்தன்மையான கட்டிகள், மார்பகத்தில் தொற்று ஏற்பட்டு ஏற்படும் கட்டிகள், காயத்தால் ஏற்படும் கட்டிகள், பாற்கலன்களில் ஏற்படும் கட்டிகள் என்று பல வகை உண்டு. இதில் புற்று நோய்கட்டிகள் மிகவும் ஆபத்தானவையாகையால் அதனைப் பிரித்து அறிவது அவசியமாகும். மார்புப் புற்றுநோய்க்குரிய எச்சரிக்கை அறிகுறிகள் பின்வருமாறு.

- மார்பகத்தில் வழமைக்கு மாறான விதத்தில் ஒருவித கனதி காணப்படுதல்.
- கட்டி அல்லது கட்டிகள் தென்படுதல்.
- மார்பகத்தின் தோற்றத்தில், உருவத்தில் மாற்றம் ஏற்படுதல்.
- மார்பகத் தோலில் நிறமாற்றம் காணப்படுதல்
- தோடம்பழத் தோலில் சிறு பள்ளங்கள் தெரிவது போல் மார்பகத்தின் தோலில் காணப்படுதல்.
- முலைக்காம்பிலிருந்து தெளிந்த அல்லது உதிரம் கலந்த சுரப்புக்கள் வெளி வருதல்.
- முலைக்காம்பு தனது வழமையான தோற்றத்தை விட உள்மடிந்தோ, சரிந்தோ அல்லது உருமாறியோ காணப்படலாம்.

மேற்கூறிய அறிகுறிகள் தென்படும் பட்சத்தில் குடும்ப வைத்தியரிடம் சென்று பரிசோதித்துக் கொள்ளுதல் வேண்டும்.

## மார்புப் புற்று வருவதற்குரிய காரணங்கள் என்ன?

- வயது ஏற ஏற மார்புப் புற்று நோய் ஏற்படும் அவகாசமும் கூடுகின்றது.
- பரம்பரையும் சிறுபங்கினை வகிக்கின்றது.
- இளவயதினரிடம் ஏற்படும் புற்றுநோய் மிகவும் ஆபத்தாக அமையலாம்.
- சில ஆண்களுக்கும் மார்பகப் புற்றுநோய் ஏற்படலாம்.




## கட்டிகளை விரல்களால் உணருதல்

மார்பகங்கள் இரண்டும் தசைகளால் ஆனவை. அவற்றின் நடுவே பாற்கலங்கள் பல உண்டு. இப்பாற்கலன்கள் ஒன்றாகக் குவிந்து தனித்தனியே முலைக்காம்பில் திறக்கின்றன. கட்டிகள் தசைகளிலே உருவாகும் பொழுது சிறிதாகக் காணப்படும். அவற்றை இரு விரல்களிற்கு இடையே அமுக்கி அவற்றின் கடினத்தன்மை மற்றும் நாற்புறமும் அசையும் தன்மையை நாலுதிசைகளிலும் அசைத்துப் பார்த்து அறிந்து கொள்ளலாம். கட்டி நாலு திசையிலும் அசையுமாயின் அவை வளர்ந்து உட்தசைகளில் ஒட்டிக் கொள்ளவில்லை என அறியலாம். அசையாமல் இருந்தால் நெஞ்சறைத் தசை வரை வளர்ந்து ஒட்டியுள்ளது என்பது அர்த்தம். கட்டியின் பருமனையும் உணர்ந்து அறிந்து கொள்ளலாம். மேலும் புற்றுநோய் பரவியிருந்தால் அவை மார்பகத்தைச் சுற்றியுள்ள நிணநீர்க்கட்டிகளுக்கும் பரவியிருக்கலாம். நிணநீர்க்கட்டிகளை வைத்தியரினால் உணர்ந்து பார்த்துக் கூற முடியும். அனுபவமுள்ள பொது மக்களும் இவற்றை உணர்ந்து பரீட்சையமாயிருப்பார்கள்.

## நோயின் தீவிர ‘நிலைகள்’ அறிந்து தீர்மானம் செய்வார்கள்.

- கட்டியின் பருமன்
- கட்டியின் தன்மை (மெதுமை, கடுமை, றபர் போன்று)
- அசையும் தன்மை (மார்புடன் ஒட்டியுள்ளதா)




- நிணநீர்க்கட்டிகள் வீங்கியுள்ளனவா?
- ஏனைய உறுப்புக்கள் பாதிக்கப்பட்டுள்ளனவா?

பல உடற் பரிசோதனைகளின் பின்பு நோயானது பின்வரும் நிலைகளில் எந்த வகையில் அடங்கியுள்ளது என்று தீர்மானிப்பார்கள்.

### நிலைகள்

**நிலை 0 :** புற்றுநோய் பரவாமல் அந்த இடத்திலேயே காணப்படுதல். பால் சுரக்கும் கலன்கள்.˙.கால்வாய்கள் என்பனவற்றிலும் புற்று நோய்க்கு அறிகுறியான கலங்கள் தென்படலாம்.

**நிலை 1 :** புற்றுநோய்க்கலங்கள் மார்பகத் தசையில் பரவியிருக்கும். ஆனால், புற்றுநோய்க்கலங்கள் நிணநீர்க்கட்டிகளிற்கும் உடலின் ஏனைய பகுதிகளுக்கும் பரவியிருக்க மாட்டாது.

## இதயம் மலர்கிறது - 7

**நிலை 2 :** கட்டியானது 2ச.மீ. விட்டம் அல்லது அதை விடக் குறைந்த பருமனாக இருக்கும். அத்துடன் ஒரு சில நிணநீர்க் கட்டிகளுக்கும் பரவியிருக்கும். அல்லது கட்டியானது 2 ச.மீ தொட்டு 5 ச.மீ விட்டம் வரை வளர்ந்திருக்கும். ஆனால், நிணநீர்க் கட்டிகளைத் தாக்கியிருக்க மாட்டாது.

**நிலை 3 :** கட்டியின் விட்டம் 5ச.மீ ஆக அல்லது 5ச.மீற்றறிலும் பார்க்க சற்றுக் குறைந்தோ, கூடியோ காணப்படலாம். கட்டாயமாக நிணநீர்க்கட்டிகளிற்குப் பரவி அவை ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் காணப்படலாம். அல்லது தசையுடன் ஒட்டிக் காணப்பம்.

**நிலை 4 :** புற்றுநோய்க்கட்டியில் உள்ள கலங்கள் நுரையீரல், ஈரல், மூளை, எலும்பு மற்றும் உடலின் ஏனைய பகுதிகளுக்கும் பரவிக் காணப்படும்.

## எப்படிக் கண்டுபிடிப்பது?

- மேற்கூறிய குணங்குறிகள்
- வைத்திய பரிசோதனைகள் (ULTRA SOUND, MRI, MAMOGRAM BIOPSY)

மேற்கூறிய பரிசோதனைகளின் பின்பு வைத்தியர்கள் குழுவினால் சிகிச்சைகள் பற்றித் தீர்மானிக்கப்படும்.

## சிகிச்சைகள் பின்வருமாறு

- கட்டியை மாத்திரம் அகற்றுதல்
- சிறு பகுதி மார்பகத்தைக் கட்டியுடன் அகற்றுதல்
- மார்பகத்தின் நாலிலொரு பகுதியை அகற்றுதல்
- மார்பகம் முழுவதும் அகற்றப்பட்டு அத்துடன் சம்பந்தப்பட்ட நிணநீர்க்கட்டிகளும் அகற்றப்படுதல்.
- முழு மார்பகம், நிணநீர்க்கட்டிகள், நெஞ்சறைத் தசைகள் என்பன அகற்றப்படுதல்.

புற்றுநோயானது கண்டறியப்படும் தருணத்தில் எந்த நிலையில் உள்ளது என்பதைப் பொறுத்து மேற்கூறிய சிகிச்சைகளின் நிலை அமையும். சத்திர சிகிச்சையுடன் மருந்து உட்கொள்ளுதல், கதிர் வீச்சுச் சிகிச்சை என்பனவும் நிலைமைகளுக்கு ஏற்ப தீர்மானிக்கப்படும்.

மேலும் சிகிச்சை முறைகள் ஒவ்வொரு பெண்ணிற்கும் தனித்துவமானதாக இருக்கலாம். சில பெண்கள் ஹோர்மோன் தொடர்புடைய சிகிச்சைக்கு ஒத்துப் போகக் கூடியவர்களாக இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு ஈஸ்றொஜன் ஒரு புற்றுநோய்த் தூண்டியாக இருக்கலாம். பெண்களில் ஈஸ்ரொஜன் என்ற சுரப்பு இயல்பாக உள்ளது. இது புற்றுநோய்க்கலங்களின் சுவரில் உள்ள வாங்கிகளில் செயற்படும் பொழுது சில பெண்களில் புற்றுநோய் அதிகரிக்கின்-

13ம் பக்கம் பார்க்க...

முதலுதவி கற்பதற்கும் ஆலோசனைகளிற்கும்
**Dr.Kandiah Senthilnathan**
(Registered Medical Officer - SLMC)
Echo-cardiographer - Canada,
First Aid & CPR Instructor
(Certified in Canada)
**647-801-9252, 416-502-9252.**

Century 21
King's Quay Real Estate Inc. Brokerage
905-940-3428
For All your Real Estate Needs
HomeExpertTeam.com
Tel: 416-496-2625 Fax: 905-940-0293










* 3 Bedroom Town Home
* Practical Layout
* Finished Basement
* Only $ 233,000
* Located at Finch and Pharmacy

AMIR RAMALINGAM, B.Sc.
Sales Representative

PRATHEEP BALASUBRAMANIAM
Broker


Buy & Sell Residential &
Commercial Properties
1st PRIZE
NEW CAR - 2008 BMW 3 Series
You can win!**
** Some terms and conditions apply
2nd PRIZE
WIN a TRIP for 2 to CUBA
3rd PRIZE
46" flat screen TV
Raj. A. Rasaratnam B.Com.
Sales Representative
416-726-8055
416-299-8570
HOMELIFE
HomeLife/ GTA Realty Inc.
Real Estate Brokerage*
*Independently own and operated
1711 McCowan Rd., Suite #206,
Scarborough, ON. M1S 3Y3
Bus: (416) 321-6969
Fax: (416) 321-6963
Buy or sell any property with my help and enter the draw!
Don't miss out on these wonderful prizes!
Mortgage arrangement, Business incorporation
and corporate tax preparation
416-726-8055


HOMELIFE FUTURE REALTY
Office: 416-264-0101
Fax: 416-261-1519
262 Markham Road
Toronto, Ontario
M1J 3C5
HOMELIFE
HIGHER STANDARDS
Dedicated to...
Making Your Dream Home
A Reality
LOKAN SUNDARAM
Broker
416-450-3984
lokan.homelife@gmail.com
Markham/Mjr. Mack
$474,900
- Commercial Unit
- 1243 Sq.Ft
- Fin.Unit w/Washrm & Office
- Mjr. Development in Progress
Weston/Mjr. Mack
$429,900
- 3 Bedrooms
- 3 Washrooms
- Hardwood Floors Throughout
- Brand New Appliances
Kennedy/Lawrence
SOLD FOR 102% OF ASKING PRICE
$294,000
- 2 + 1 Bedrooms
- 3 Washrooms
- Fin. Bsmnt w/Sep. Ent
- Close to all Amenities
Kennedy/Sheppard
SOLD
$234,900
- 1 + 1 Bedrooms
- 1 Washrooms
- New Appliances
- Fabulous Outdoor View
Don Mills/Sheppard
SOLD IN 2 WKS!!
$259,900
- 4 Bedrooms
- 2 Washrooms
- Close to all Amenities
Islington/Finch
SOLD
$133,900
- 2 Bedrooms
- 2 Washrooms
- Perfect for First Time Buyers

# சக்தி வீண்விரயமாவதனை தடுக்கும் சில முறைகள்



கருணா கோபாலபிள்ளை
- வீடு விற்பனை முகவர் -
karunagopal@thaiveedu.com

விடைகள் தெரிந்திருந்தும் கேள்விகளைத் தொடுப்பது இன்றைய எமது நிலை. அதாவது விடைகளுக்குள் கேள்வியினைத் தேடுவது என்பது. பொதுவாக அரசியல்வாதிகளுக்கே இது பொருந்தும். ஆனால், எம்மால் ஒதுங்கிப் போக முடியுமா என்று பார்த்தால், ஒரு நாட்டின் அரசியலில் நமக்கும் பங்கு உண்டு என்பதைச் சிந்தித்து மூக்கை நுழைப்பதும் பின் சற்று பின் நிற்பதும் என்று எமது நாளாந்தங்கள் நகர்கின்றது.

சரி நேயர்களே வழமைபோல் பல நேயர்களின் விடை காணாத கேள்விகளை பார்ப்பதே இச்சாரம். வாசிப்புத் திறன்களுக்காக நீங்கள் ஒதுக்கும் உங்கள் பொன்னான நிமிடங்கள் வீணே போகாவண்ணம் எமக்குக் கிடைத்தவற்றில் தரமான கேள்விகளுடன் அதற்கான பதில்களை சற்று அலசுவோம்.

**'Free hold town house'க்கும் Condo town houseக்கும் இடை யிலுள்ள வேறுபாடுகள் யாது.**

நான்சி.அ
*Scarborough*

எந்தவொரு நிறுவனத்தின் (Corporation) கட்டுப்பாடுகள் அற்று இயங்குவது Fee hold என அழைக்கப்படும். அதாவது அந்த வீடுகள் சார்பான திருத்த வேலைகள், கண்காணிப்புக்கள், சுற்றுவட்டாரப் பராமரிப்புக்கள் யாவும் ஒவ்வொரு வீட்டு உரிமையாளர்களாலும் மேற்கொள்ளப்படும். அரச சேவைகளான கழிவகற்றுதல் போன்ற செயற்பாடுகளும் தனித்தனியாகவே மேற்கொள்ளப்படும். மாறாக 'Cando' என்று கூறுகின்ற பட்சத்தில் இவ்வகைக் குடியிருப்புக்கள் ஒரு குழுவாகச் சேர்ந்து இயங்கும். இதற்காக தெரிவு செய்யப்படுகின்ற குழுக்கள் மாதாந்தம் ஓர் குறிப்பிட்ட தொகையை வீட்டு உரிமையாளர்களிடமிருந்து பெற்று கீழ்வரும் வேலைகளை வழங்குவார்கள்.

- சுற்றுப்புறப் பராமரிப்பு,
- வீடுகளின் வெளிப்புற திருத்த வேலைகள்,
- காப்புறுதி மற்றும் வாகனத் தரிப்பிடங்கள்

இவை அமைப்புகளுக்கு அமைப்பு வேறுபட்டும் காணப்படும். இதற்காக பெறப்படுகின்ற தொகையினை Maintenance fee என்று அழைப்பர்.

**0% முற்பணம் அதாவது, முற்பணமின்றி வீடு வாங்குவது பற்றி பல சந்தர்ப்பங்களில் பார்க்கிறோம். இதனால், ஏற்படும் தீமைகள் பற்றி சற்று விளக்க முடியுமா?**

காண்டீபன்.ப
*Ajax*

இதனால் நன்மையும் உண்டு தீமைகளும் உண்டு. அதாவது, பணத்தினை சேமிக்க முடியாத ஒருவர் ஒரு வீட்டினைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறையே நன்மை. அமெரிக்காவின் வீடு விலை வீழ்ச்சியின் பின்னர் நாம் அதிகம் எதிர்பார்த்தது கனடிய வீட்டு சந்தை வீழ்ச்சிதான். அவ்வாறு ஆகாமல் முதுகெலும்புள்ள வீட்டுச் சந்தையானது இன்னும் நிலைத்திருப்பதற்கு முக்கிய காரணம் நாம் வீடுகளில் கணிசமான அளவு முதலினை வைத்திருப்பதே என்கின்றனர் ஆய்வாளர்கள். 25% முற்பணம் இன்றி வீட்டினை வாங்க முடியாது என்று இருந்த கட்டுப்பாட்டினை காப்புறுதி முறை மூலம் 0% - 25% ஆக மாற்றி இன்று அனைவரையும் ஊக்கப்படுத்தியிருக்கிறது எமது அரசு. ஆனால் இவ்வகை 0% முற்பண முறையினால் ஒருவர் நாளடைவில் எவ்வளவு தொகையினை வங்கிகளுக்குச் செலுத்தப் போகிறார்கள் என்பதும் இதனைப் பெற்றுக் கொள்வதற்கான காப்புறுதித் தொகையினையும் கருத்தில் நோக்கின், சிறிதளவேனும் 5% முற்பணமிட்டு வாங்குவதே சிறந்தது எனக் கொள்ளலாம். அது மாத்திரமன்றி ஒரு சிறு தொகையினையேனும் சேமிக்க முடியாதவர்கள் பின்னர் ஏற்படும் எதிர்பாராத செலவீனங்களை எவ்வாறு கையாள்வார்கள் என்பதும் கையாலாகாத் தனத்தால் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுவதும் வருந்தத் தக்கது. எலி வளையேனும் தனிவளை வேண்டுமெனினும் விரலுக்குத் தக்க வீக்கம் அவசியம்.



**இன்றைய சந்தையில் CONDOMINIUM நிலை என்ன?**

ரமேஷ். மா
மார்க்கம்

ரொறான்றோ மையப் பகுதிகளில் நிர்மாணிக்கப்படும் கட்டிடங்கள் என்றுமே தமது விலை அதிகரிப்பினைக் கொண்டிருக்கும் என்பது நாம் அனுபவத்தில் கண்டது மாத்திரமன்றி நிபுணர்களின் கருத்தும் கூட. சுற்றுப்புறப் பகுதிகள் எனும் போது அமைவிடம் பெரும் பங்கு வகிக்கிறது. அதாவது அக்கட்டிடத்தினை ஒட்டிய சேவைகள் என்ன என்பதனைப் பொறுத்தே அதன் விலை வீழ்ச்சி வளர்ச்சியினை நாம் கூற முடியும். (சந்தை விலை தவிர்த்து) உதாரணமாக போக்குவரத்து வசதிகள் Shopping malls, பாடசாலை மற்றும் பல்கலைக்கழக வசதிகள் என்று கூறிக்கொண்டே போகலாம். நீங்கள் CONDOகளில் முதலீடு செய்ய விருப்பமுடையவராயின், DOWN TOWN அல்லது அது சார்பான சுற்றுப்புறங்களிலோ தெரிவு செய்வதே நன்று. மாறாக உங்களுக்கென ஓர் இடத்தினை தெரிவு செய்பவராயின் உங்கள் வேலை மட்டுமல்லாது பிள்ளைகளின், குடும்பத்தினரின் வசதிகளை கருத்திற் கொள்வதன் மூலம் நேரத்தினை மீதப் படுத்துவது மாத்திரமன்றி வாகன நெரிசலகளில் தினம் சிக்கித் தவிக்க வேண்டிய நிலை ஏற்படாமல் பார்த்துக்கொள்ளலாம்.

**நான் மாதாந்தக் கடன் அட்டைகளுக்காக செலுத்துகின்ற பணம் செலுத்த முடியாத நிலையில் உள்ளேன். எனது வீட்டின் பெயரிலுள்ள சொத்தில் ஓர் பகுதியினைப் பெற்று அக்கடன்களை அடைப்பது சிறந்த முறையாகுமா?**

குமார். பா
*VAUGHAN*

இன்று இது உங்கள் நிலை மட்டுமல்ல பலரது நிலைப்பாடு. எமது வருமானத்திற்கு அதிகமாக செலவிட்டு பின் அவஸ்தைக்குள்ளாகும் நிலை. பொதுவாக கடன் அட்டைகளிற்கான வட்டி விகிதத்துடன் ஒப்பிடும்போது வீட்டு கடனிற்கான வட்டி வீதம் குறைவே. இருப்பினும் நீங்கள் எவ்வகை மோட்கேஜ் இனை வைத்திருக்கின்றீர்கள் என்பதனையும் அதனை இடைநிறுத்தம் செய்வதற்காக செலவிடப்போகின்ற தொகையினையும் கருத்தில் கொள்ளுவது மிக அவசியம். எனது அனுபவத்தில் வருடா வருடம் Refinance செய்பவர்களையும் கண்டிருக்கின்றேன். அதேவேளை வீட்டுக்குள் இருக்கும் சொத்து நிலையானது என்பதில் அளவற்ற நம்பிக்கை கொண்டவர்களையும் பார்த்திருக்கின்றேன். இரண்டுமே தவறான போக்கு என்பது எனது அபிப்பிராயம். ஏனெனில் விட்டில் வீணே தேங்கி இருக்கும் பணத்தினை வேறு இடங்களில் செவ்வனே முதலீடு செய்வதன் மூலம் அதனை பன்மடங்காக மாற்றுவதற்கு பல வழிகளுண்டு அவ்வாறில்லாமல் சிறிதளவே வட்டி அறவிடப்படுகின்ற இக்கடன்களை அடைத்துவிட்டு நிம்மதிப் பெருமூச்சு விடுவதில் லாபமில்லை. மாறாக வீட்டுக்குள் இருக்கும் அனைத்து சொத்தினையும் செலவு செய்வதும் ஆபத்தானது. திடீர் செலவீனங்கள் மற்றும் சந்தை வீழ்ச்சிகளை சரி செய்வதற்கும் சமாளிப்பதற்கும் உங்கள் வீட்டுக்கடன் சிறிதளவேனும் குறைந்து காணப்படுவது நன்று.

**2000ஆம் ஆண்டு இடம்பெற்ற வேலையிழப்பினால் எனது மாதாந்த கட்டுப்பணங்களை சில கடன் நிறுவனங்களுக்கு கட்டத் தவறிவிட்டேன். அவர்களின் தொடர் துன்பங்களில் இருந்து மீள்வதற்காக தொலைபேசியினை துண்டித்தது மாத்திரமன்றி எனது முகவரியும் மாறிவிட்டது. இன்று சுமார் 7 வருடங்கள் கழிந்த நிலையில் பல கடன் வழங்கும் நிறுவனங்கள் எனக்கு கடன் அட்டைகள் வழங்கியுள்ளது மாத்திரமல்லாது எனது Creditஉம் வளர்ந்துள்ளது. சிறிது சிறிதாக சேமித்து வைத்த பணத்தினை இட்டு ஓர் வீடு வாங்கும் எண்ணம் உண்டு. இதனால் முன்னர் மீள் செலுத்தாமல் விட்ட கம்பனிகளின் இடையூறு ஏற்படுமா?**

சிவா. ம
ஸ்காபுரோ

இது ஓர் நல்ல கேள்வி மாத்திரமன்றி எம்மில் பலர் அறிந்திருக்க வேண்டியதுமாகும். நீங்கள் கடன் அட்டை வழங்கும் நிறுவனங்களுடன் ஒப்பமிட்டுக்கொள்கின்ற பத்திரங்களின்படி அவர்களின் கட்டுப்பாடுகளுக்கு பூரணமாக ஒத்துக்கொள்கின்றீர்கள். அந்த வகையில் நீங்கள் பெற்றுக்கொண்ட பணத்தினை வட்டியுடன் மீள் செலுத்தவேண்டியது உங்கள் கடமை. அவ்வாறு செலுத்த தவறுகின்ற பட்சத்தில் அந்நிறுவனங்கள் உங்களிடம் இருக்கின்ற அல்லது வரும் காலங்களில் நீங்கள் பெறப்போகின்ற சொத்துக்களில் இருந்து தமது பங்கினை சட்ட முறைகளுக்

13ம் பக்கம் பார்க்க...

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
☑ Virus Removal
☑ Internet Sharing
☑ Computer Tune Up
☑ Computer Repair
அனைத்து கணணி திருத்த வேலைகளும்
உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES

# FREE EVALUATION

FOR YOUR HOME!

Mortgage Arrangements

BUY / SELL HOME BUSINESSES AND INDUSTRIAL LAND PROPERTIES

*CALL KANAGA*



**Kanaga Sinnathamby**

*Real Estate Salesperson*

*Direct: 416-844-0565*

**HOMELIFE FUTURE REALTY**

Office: 416-264-0101

Fax: 416-261-1519

262 Markham Road

Toronto, Ontario

M1J 3C5

RENT LEASE RESIDENTIAL AND COMMERCIAL PROPERTIES

*CALL KANAGA*

# Want To Buy A Home In Your Budget?

**"Your Satisfaction Is My Success..."**




Pharmacy / McNicoll




Finch / Middlefield




Young / Park Home

Call:



**MANGA ARUNASALAM**

Real Estate Broker

**Commercial & Residential**

**HomeLife/Landmark Realty Inc. Brokerage**

Independently Owned & Operated

**5200 Finch Avenue East, Suite 206**

**Scarborough, ON M1S 4Z4**

Selling Commision From 1%

New & Powersale Homes Also Available

**CELL:** (416) 816 8775 **TEL:** (416) 293 5093

**RES:** (905) 944 9604 **FAX:** (416) 293 5237

# உங்கள் வீட்டை சந்தைப்...

7ம் பக்கத் தொடர்ச்சி...

அதன் விளைவாக கூடியளவு வருமானம் ஏற்பட வாய்ப்பு உண்டு. ஆனால், இவ்வா-றான திருத்த அல்லது திருத்தியமைக்கும் வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்பு உங்க எது வீட்டு முகவருடன் கலந்தாலோசியுங்கள்.

### வீட்டின் சுவர்களுக்கு வர்ணம் தீட்டுதல்

உங்களது வீட்டில் உள்ள அறைகளை தர முயர்த்துவதற்கு புதிய வர்ணப் பூச்சு போது மானது. ஆனால் சகல விதமான தளபா-டங்களுடனும் ஒத்துப்போகக் கூடிய இயற்கை-யான தொனியுடைய வர்ணங்களை தெரிவு செய்யுங்கள்.

### சிறிய திருத்த வேலைகள்

சொட்டு சொட்டாக நீர் ஒழுகும் வடிகுழாய் கள், Cupboardகளில் ஆடிக் கொண்டிருக்கும் கை பிடிகள், இறுக்கமாக உள்ள யன்னல்கள் போன்ற சிறிய குறைபாடுகளை திருத்திக் கொள்ளுங்கள்.

### அடியிலிருந்து நுனிவரை வீட்டை அழகு படுத்துங்கள்

கடந்த வருடங்களில் உங்கள் வீட்டின் முகடு, நிலக்கீழ் வதிவிடப் பகுதி ஆகியவற்றில் சேர்த்து வைத்துள்ள பல்வேறு வகைப் பொருட்களில் தேவையற்றவற்றை அகற்றி விட்டு எஞ்சியவற்றை ஒழுங்குபடுத்தி சேமித்து வைக்கவும்.

### உங்களது வீடு வரவேற்கும் தன்மையாக அமைய வேண்டும்

நல்ல மணம் வீசக்கூடிய மெழுகுவர்த்தி களை கொழுத்த வேண்டும். எல்லா மின் விளக்குகளும் எரியக்கூடியதாக உள்ளதா என்று உறுதி செய்யுங்கள். உங்கள் வீட்டின் தோற்றத்தில் கவனம் செலுத்துகின்றீர்களா என்று அனைவரும் அவதானிக்கும்படி செய் யுங்கள்.

### உங்கள் வீடு மினுமினுப்புடைய தாக இருக்க வேண்டும்

உங்கள் வீட்டின் குளியல் தொட்டி, குளி ரூட்டி என்பவற்றை சுத்தமாக வைத்திருப்ப துடன் வீட்டில் உள்ள சகல நில விரிப்புக்க ளும் நன்கு சுத்திகரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

### சகல உபகரணங்களும் செயற்படும் நிலையில் இருக்க வேண்டும்.

உங்கள் வீட்டின் Dishwasher, Oven ஆகிய வை செயற்படும் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

### வீட்டின் சகல பகுதிகளும் சுத்த மாக வைக்கப்பட வேண்டும்.

உங்கள் யன்னல் கண்ணாடிகளை உள்ளும் புறமும் அழுத்தி தேயுங்கள். சுவர்களில் உள்ள அழுக்கான அடையாளங்களை அகற்றுங்கள். உங்கள் வீட்டில் உள்ள Driveway பகுதியில் உள்ள வெடிப்புக்களை திருத்தியமையுங்கள்.

### வீட்டின் வெளிப்புறம் வீட்டின் உட்புறத்தைப் போன்றே கவரக் கூடியதாக வைத்திருங்கள்.

வீட்டின் வெளியே ஒரு சில பூச்செடிகளை நடுங்கள். புற்தரைகளுக்கு நீர் பாய்ச்சுங் கள். உங்களது தபால் பெட்டிக்கு வர்ணம் பூசுங்கள்.

வீட்டினுள் புதிய பூக்களை வைத்து அழகு செய்யுங்கள். அறைகளுக்கு பொருத்தமான Draperyகளை பயன்படுத்துங்கள்.

### சிறிய விடயங்களிலும் கவனம் செலுத்துங்கள்

வீட்டினுள் உள்ள தூசுபடிதல்களை அகற்ற வேண்டும். Closet பகுதிகளில் துவாய்கள் மடித்து வைக்கப்பட்டிருத்தல் வரவேற்கத்தக் கது. சுவர்களில் உள்ள குடும்ப படங்களில் பெரும்பாலானவற்றை அகற்றி பாதுகாப்பான இடத்தில் வையுங்கள்.

### வீட்டில் உள்ள வதிவிடப் பகுதி யை அதிகரித்து காட்டுங்கள்.

Closetகள் Cupboard போன்றவற்றில் உள்ள பொருட்களை சிறந்த முறையில் ஒழுங்கு செய்தால் வீட்டின் வதிவிடப் பகுதி பெரிய அளவுடையதாக தோற்றமளிக்கும்.

■ ■ ■

# மார்பகப் புற்று நோய்...

9ம் பக்கத் தொடர்ச்சி...

றது. சில மருந்துகளை உட்கொள்வதால் அவை முண்டியடித்துக்கொண்டு ஈஸ்ரொஜன் தொழிற்படும் வாங்கிகளில் ஒட்டிக்கொள்-கின்றன. இதனால் ஈஸ்ரொஜன் அந்த வாங்கிகளில் தொழிற்பட மாட்டாது தடுக்-கப்படுவதால் புற்றுநோய் மேலும் வளராது தடுக்கப்படுகின்றது.

இவர்களுக்கு TAMOXIFEN என்ற மருந்து கொடுக்கப்படுகின்றது. தற்சமயம் வேறு ஈஸ்ரொஜனின் அளவைக் குறைக்கக் கூடிய புது மருந்துகளும் வந்துள்ளன. மாதவிடாய் நின்றுவிட்ட பெண்களிலும் சிறிதளவு ஈஸ்ரொஜன் சுரக்கப்படுகின்றது. ஈஸ்ரொஜன் அளவை மேலும் குறைப்பதன் மூலம் மார்புப் புற்று நோய் மறுதலித்து வரும் ஆபத்தைக் குறைக்கக் கூடியதாக உள்ளது.

TAMOXIFEN என்ற மருந்து பலகாலமாகப் பாவிக்கப்பட்டு வரும் மருந்தாகும். அத்துடன் புது வகையானAROMATASE INHIBITORS என்ற மருந்து புற்றுநோயை ஏனைய இடங் களிற்குப் பரவாமல் தடுப்பதிலும் ஓரளவு பங்கு வகிக்கின்றது எனக் கண்டறியப்-பட்டுள்ளது. இம்மருந்துகள் தொடர்ச்சியாக 5வருடங்கள் வரை பாவிக்கப்படல் வேண்டும். AROMATASE INHIBITORS என்ற மருந்து தொடர்ந்து பாவிக்கும் பொழுது புற்றுநோய் மறுதலிப்பது மிகவும் குறைவாகக் காணப்-படுவதால் வைத்தியர் இதனைக் குறிப்பிட்ட காலம் தொடர்ந்து பாவிக்கும் படி கூறுவார்-கள்.

சிகிச்சையும், வைத்திய கண்காணிப்பும் நோயை மிகவும் கட்டுப்பாட்டில் வைத்திருப் பதற்கு அவசியம் என்பதை உணர்ந்து கொள்ளுவது நல்லது.

### உணவு வகைகள்

சமபல உணவு மிகவும் நல்லது. இதில் எமக்குத் தேவையான புரதம், கொழுப்பு, மாப்பொருள், விற்றமின்கள், கனிப்பொருட்கள், நீர் என்பன சரியான அளவில் காணப்படும். குளிர்காலங்களில் எமது உடலில் சூரிய ஒளி படுவது மிகவும் குறைவு. சூரிய ஒளி எமது தோலில் படும் பொழுது விற்றமின் “D” எமது தோலினால் இயல்பாகவே தயாரிக்கப்பட்டு உடலில் சேர்த்துக் கொள்-ளப்படுகின்றது. இந்த விற்றமின் “D” உணவில் உள்ள கல்சியம் சத்தை உறிஞ்-சுவதற்கும், எலும்புகள் நலமாகவும், பலமா கவும் இருப்பதற்கும் உதவுகின்றன. உணவில் மீனெண்ணை, பால், மீன் போன்றவற்றிலும் உண்டு. இந்த விற்றமின் “D” புற்றுநோய்கள் வராமல் தடுப்பதிலும் பங்கு வகிப்பதாக அண்மையில் கண்டு பிடித்துள்ளார்கள். விற்றமின்கள் நல்லன-வற்றைச் செய்தாலும் எமக்குத் தேவை யான அளவை மாத்திரம் உட்கொள்ளுதல் வேண்டும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்த-மும் நஞ்சு என்ற பழமொழியை நினைவு கூருங்கள். வைத்திய ஆலோசனைப்படி சரியான அளவை எடுக்கவும்.

நல்ல கீரை வகைகள், புறோக்கோலி, கொலிபுளவர் போன்ற மரக்கறிகளை அடிக் கடி உண்பவர்களிடையே புற்றுநோய் அரிதாக ஏற்படுவதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. மஞ்சள் தூள் எமது கறிகளில் அன்றாடம் சிறிதளவாவது சேர்த் துக் கொள்கிறோம். இதன் காரணத்தால் எம்மக்களிடையே ஏனையவர்களோடு ஒப்பி டும் பொழுது புற்றுநோய் குறைவாகக் காணப்படுகின்றது. எமது உணவுப் பழக்க வழக்கத்தில் சரக்குவகை ஒரு நல்ல பங்கை வகிக்கின்றது என்று கூறலாம்.

■ ■ ■

# சக்தி வீண்விரய...

11ம் பக்கத் தொடர்ச்சி...

கமைய பெற்றுக்கொள்ள வழிகமுண்டு. அது மாத்திரமன்றி நீங்கள் வேலை செய்யும் போதும் மாதாந்தம் ஒரு தொகையினையும் அவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுப்பட கூறின், உங்கள் பெயரில் சொத்துக்கள் பதிவு செய்யப்படாதவரை உங்களைப் பற்றிய தகவல்களை அறிந்து கொள்வது அவ்வளவு சுலபமல்ல. ஆனால், வருடங்கள் எத்தனை கழிந்தாலும் உங்கள் பெயரில் ஓர் சொத்து பதிவு செய்யப்பட்ட உடனேயே அவர்களால் இலகுவாக உங்க ளை இனம் கண்டுகொள்ள முடியும். (உங்கள் முகவரி, நீங்கள் தொழில்புரியும் இடம் போன்றவை).

உங்களிடம் இருக்கின்ற சொத்துமதிப்பின் பிரகாரம் நீங்கள் இவ்வளவு காலமும் மீள் செலுத்தாமல் விட்ட தொகையும் அதற்கான வட்டி மற்றும் குற்றப்பணம் போன்றவையும் சேர்த்து அறவிடப்படும். இதுபோன்ற இன் னல்களில் இருந்து விடுபடுவதற்கு முற்காப் பாக நீங்கள் பணம் மீள்செலத்தாத நிறு வனங்களுடன் தொடர்புகொண்டு அவர்களு டன் ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒரு தொகைப் பணத்தினை செலுத்தி முழுக் கடனையும் அடைத்து எழுத்துமூலம் பத்திரம் பெற்று வைத்திருத்தல் வேண்டும். (Settlement) அவ்வாறு செய்த பின்னர் உங்கள் பெயரில் சொத்துக்களைப் பெறுக் கொள்வது பாதுகாப்பான முறை. மாறாக வங்குரோத்து என்று சொல்லப்படுகின்ற (Bank Ruptcy) முறை மூலமும் நிவர்த்தி செய்யலாம். இவற்றிற்கான மேலதிக ஆலோசனைகளுக்கு உரியவர்களை நாடிய பின்னர் சொத்துக்கள் வாங்குவது நன்று.

### சுடுநீர் வளங்கிகளின் (Hot water Tank) பாவனை முறையில் எம் மாதிரியான முறைகள் மூலம் சக்தி வீண்விரயமாவதனை தடுக்கலாம்.

மதி. க
*Brampton*

இதற்கான செய்முறையினை இரு பிரிவாக பிரிக்கலாம். ஒன்று பாவனை முறை. மற் றையது பராமரிப்பு முறை. பராமரிப்பு முறைகளாவன சுடுநீர் தாங்கியின் சுற்றுப் புறங்களால் விரயமாகும் சக்தியினை தடுப் பதற்கு அவற்றிற்கு போர்வை முறை போன்று தடுப்புக்கள் (Insulation cover) போடலாம். ஓர் மிதமான வெப்பநிலையி-னை அதாவது ஒருவர் நேரடியாக பாவனைப் படுத்தக்கூடிய வெப்ப அளவினை பேணலாம். பாவனை முறை என்று பார்ப்போமாகில் நன்கு சூடாகிய வெந்நீரில் குளிர் நீரினை கலப்பது வீண் சக்தி இழப்பே. அதற்காக குளிக்கும் வேளைகளிலோ மற்றும் சமைய-லறை பாவனைகளுக்கோ தனியாக வெந்நீர் பாவிப்பது நன்று. அதன் பொருட்டு பாவ-னைக்குத் தகுந்த அளவில் ‘TEM-PERATURE CONTROL’இனை பேணுதல் வேண்டும். வீட்டில் விருந்தினர்கள் கூடும் வேளைகளில் இவ் அளவினை சற்று அதிக ரித்து வைக்கலாம். சமீப காலங்களில் அறிமுகப்படுத்தப்படும் ‘TANKLESS HOT WATER’ அல்லது ‘INSTANT HOTWA-TER’ முறைகளால் இயங்கவல்ல புது மாதிரியான தொழில்நுட்பங்களான வெந்நீர் வழங்கிகளை இணைத்துக் கொள்ளுவதும் ஓர் சக்தி சேமிப்பு முறையே.

நன்றி நேயர்களே, மீண்டும் மீண்டும் இத் தாய்வீடு சஞ்சிகை மூலம் இணைந்துகொள் வதில் மட்டற்ற மகிழ்ச்சியுடன், விரத காலங் களில் தொடங்கி நத்தார் புதுவரு விடு முறை காலங்களில் களித்திருக்க வாழ்த்தி நிற்கின்றேன்.

■ ■ ■




## வீடு வாங்க விற்க

உங்கள் வருமானத்திற்கேற்ப எவ்வகையான வீடு வாங்குவதென அறிந்து
கொள்ள முதல் முறை வீடு வாங்குபவர்களின் சலுகைகள் பற்றி
அறிந்துகொள்ள இன்றே எங்களுடன் தொடர்புகொள்ளுங்கள்



Prudential Properties Plus Brokerage
**Bus: 416.962.8113**
Fax: 416.962.4615, Res: 416 964 5955
552 Parliament Street, Toronto, ON, M4x 1P6

**Alfred Soosaipillai**
Broker

# இலங்கைத் தயாரிப்புகளில் மெலமைனின் நச்சுத்தன்மை



சிவாஜினி பாலராஜன்
sivajini@thaiveedu.com


இலங்கையில் தயாரிக்கப்படும் உணவுவகைகளில் பால்மா (Milk powder) இனிப்பு வகைகள் (chocolates), மஞ்சி பிஸ்கட்டுகள் உட்பட 60 விதமான தயாரிப்புகளில் மெலமைன் என்னும் உடல்நலத்திற்கு கேடு விளைவிக்கும் இரசாயனப் பொருள் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கனடா போன்ற முன்னேறிய நாடுகளில் உணவுப் பரிசோதனைத் திணைக்களங்களினால் உணவுகள் வெவ்வேறு பரிசோதனைகட்டு உட்படுத்தப்பட்டு போதிய கனிமங்கள் இருக்கின்றனவா சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படுகின்றனவா எனச் சோதிக்கப்படுகின்றன. இவ்வாறான சோதனைகள் இலங்கை போன்ற நாடுகளில் செய்யப்படுவது இல்லை. மேலும் இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் செல்வாக்கும் பணபலமும் இருந்தால் கட்டுப்பாடுகள் இருந்தாலும் கூட அவற்றை உடைத்து வெளிவரும் வசதி நிறையவே உண்டு. சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அல்லது அங்கு தயாரிக்கப்படும் பால்மா வகைகளிலும், பாலிலிருந்து தயாரித்த உணவுகளிலும் (Dairy products) மெலமைன் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக கடந்த ஆண்டு அமெரிக்காவிலும், இவ்வாண்டு கனடாவிலும் சீனாவின் உணவுத் தயாரிப்புகள் பல பாவனையிலிருந்து விலக்கப்பட்டதுடன் வியாபார நிலையங்களில் இருந்தும் அகற்றப்பட்டது. அதேசமயம் இவ் இரசாயனப் பொருளான மெலமைன் இலங்கையிலிருந்துவரும் பிஸ்கட்டுகளிலும் தாய்லாந்திலிருந்து வரும் பிஸ்கட்டுகளிலும் காணப்படுகின்றது என சுவிற்சலாந்தில் கண்டு பிடித்து தடைசெய்திருக்கிறார்கள்.


கடந்த செப்டெம்பர் மாதம் கிட்டத்தட்ட 54,000 குழந்தைகள் சீனாவில் நோயினால் பாதிக்கப்பட்டும் 4 குழந்தைகள் இறந்தும் போனது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். இவ்வாறு நோய் வாய்ப்பட்ட குழந்தைகளில் நூற்றி ஐம்பதுக்கும் அதிகமானோரின் சிறு நீரகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டு செயலிழந்த நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இதற்கான காரணம் என்ன? பால்மாவில் காணப்பட்ட மெலமைன்தான். இவ்வாறு மெலமைன் உள்ள இலங்கைத் தயாரிப்புகளான உணவு வகைகள் இன்னும் எவ்வளவு எங்கள் தமிழ் கடைகளில் நிரை நிரையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. கடைகளில் மட்டுமல்ல எத்தனையோ வீடுகளில் கூட இவை தாராளமாக சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. புலம் பெயர்ந்து வந்து நீண்ட காலமாகியும் எங்களில் பலர் இன்னமும் இலங்கையிலிருந்து வரும் பால்மாவைத்தான் பாவித்துக் கொண்டிருக்கிறோம். இதனால் எங்கள் குழந்தைகள் எத்தனைபேரின் உடல் நலம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது புரியாத ஒரு நிலயாக இருக்கின்றது.

## மெலமைன் தான் காரணம் என்பதற்கு ஆதாரம் என்ன?

2007ம் ஆண்டு வட அமெரிக்கர்கள் தங்களது வீட்டில் வளர்க்கும் செல்லப்பிராணிகளான நாய், பூனைகள் திடீரென நோய்வாய்ப்பட்டு இறப்பதாக செய்த குற்றச் சாட்டுகளின் அடிப்படையில் பலவிதமான ஆராய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு ஆராய்ந்த போது செல்லப்பிராணிகளின் உணவில் இருந்த மெலமைனும் சயனூரிக் அமிலமும் தான் அவைகள் நோய்வாய்ப்படுவதற்கு காரணம் எனவும் அவ்வுணவு வகைகள் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை எனவும் அறியப்பட்டது. இந் நிகழ்ச்சிகள் கனடாவிலும் ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தியதால் கனடிய சுகாதார திணைக்களத்தினால் கனடிய மீன்பண்ணையிலுள்ள மீன்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன. இப் பரிசோதனையின் போது மீன்களின் உடலில் மெலமைன் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு மீன்களுக்கு வழங்கிய உணவு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது மீன்களுக்கு வழங்கிய உணவில் மெலமைனின் செறிவு கூடுதலாக இருந்தது தெரிய வந்தது.







## மெலமைன் என்றால் என்ன?

மெலமைன் என்பது மிகவும் பிரயோசனமான ஒரு இரசாயனப் பொருள் என்பது மட்டுமல்ல பிளாஸ்ரிக்கின் மூலப் பொருள். இது ஒரு பளிங்குத்தன்மையுடைய வெண்ணிறத் தூள். நீரில் மிகவும் சிறிதளவாகத் தான் கரையும் ஏன் கரைய மாட்டாது என்றே சொல்லலாம்.

யூரியாவும் போமல்டிகைட்டும் மிகவும் உயர் வெப்பநிலையிலும் உயரமுக்கத்திலும் சேர்க்கப்படும் பொழுது மெலமைன் ரெசின் உண்டாகின்றது. இது சுலபமாக வளைக்கப்படக் கூடியதும் ஓரளவிற்கு வெப்பத்தை தாங்கக்கூடியது. (Moderate heat resistant). ஆனால் அதி உயர் வெப்பநிலையில் உருகக்கூடியது. அடுப்புகளிலோ நுண்கதிர் அடுப்புகளிலோ மெலமைனினாலான பொருளை பாவிக்க முடியாது.

மெலமைன் தன்னுடைய நிறையின் (mass) மூன்றில் இரண்டு பங்கு நைதரசனைக் கொண்டிருக்கிறது. பெருமளவிலான நைதரசனைக் கொண்டிருப்பினும் பயிர்களுக்கு பசளையாக இதனைப்பாவிக்க முடியாமல் இருப்பதன் காரணம் இதன் கரையாத் தன்மைதான். (Solubility) அதனால் தான் மெலமைனுடன் பார்க்கும் போது ஒப்பீட்டு அடைப்படையில் மிக மிகக் குறைவான நைதரசனைக் கொண்ட யூரியா பசளையாகப் பாவிக்கப்பட்டு வருகின்றது.

## நாளாந்த பாவனையில் "மெலமைன்"

நாளாந்த வாழ்வில் எங்கள் வீடுகளிலேயே இந்த மெலமைனின் ஆதிக்கம் அதிகம் உண்டு. மெலமைனினால் ஆன பலவகையான பொருட்களை அன்றாட வாழ்வில் உபயோகிக்கின்றோம். போமிக்கா, நிலத்திற்கு போடும் tiles, சாப்பாடு பரிமாறும் பாத்திரங்கள், கரண்டிகள், ஒட்டும் பசைகள் (Glue), வீட்டில் நிலத்திற்கு போடும் லமினேற் (Laminate) என்பவை இந்த மெலமைனை மூலப்பொருளைக் கொண்டுள்ளன. இவ்வாறான மெலமைன் எவ்வாறு உணவினுள் செல்கின்றது. தற்செயலாக உணவினுள் செல்லும் வாய்ப்பு இருக்கின்றதா? இந்தக் கேள்விக்கு இல்லை என்பதுதான் பதிலாகும். அவ்வாறாயின் எவ்வாறு உள்ளே சென்றிருக்கும் என்பதற்கு ஆராய்ச்சிகள் நடைபெற்றன. "தேவையே கண்டுபிடிப்பின் தாய்" என்பதற்கிணங்க மெலமைன் எவ்வாறு உணவுப் பொருளினுள் சென்றது எனத் தேடப்பட்டபோது சில உண்மைகள் வெளிக் கொணரப்பட்டன. மெலமைன் தவறுதலாக பால் மாவினுள் சேரவில்லை. அதிக இலாபம் தேடும் பால்மா உற்பத்தித் தொழிற்சாலைகளினால் சுய சிந்தனையுடனும் பணத்தின் மீது ஏற்பட்ட ஆசையினாலும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

## உணவில் சேர்க்கப்பட்ட காரணம்

இந்தக் கேள்விக்குப் பதில் தெரிவதற்கு முக்கியமாக உணவைப் பற்றிய சிறிய பல நல்ல விடயங்கள் நாங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். சாதாரண உணவு காபோவைதரேற்று, புரதம், கொழுப்பு என வகைப்படுத்தப்பட்டு உள்ளது. காபோவைதரேற்றிலும் சரி கொழுப்பிலும் சரி நைதரசன் என்னும் மூலப்பொருள் இல்லை. ஆனால் புரதத்தில் மட்டும் நைதரசன் உண்டு. புரதப் பொருட்கள் சங்கிலித் தொடர்போன்ற அமினோ அமிலங்களினால் ஆனவை. ஒவ்வொரு அமினோ அமிலமும் நைதரசன் மூலக் கூறுகளால் ஆனவை. இதனால் புரதம் அதிகம் உள்ள உணவில் நைதரசனின் எண்ணிக்கையும் அதிகம் காணப்படும். உணவில் எவ்வளவு புரதம் இருக்கின்றது என அறிவதற்கு சாதாரணமாக அவ்வுணவில் எவ்வளவு நைதரசன் அணுக்கள் உண்டு எனக் கண்டறிவது போதுமானதாகும்.

பால் வியாபாரிகள் பாலில் தண்ணீர் கலப்பது நாங்கள் அனைவரும் அறிந்த பொதுவான விடயம். அவ்வாறு தண்ணீர் கலக்கப்படுவதை பாலின் தடிப்பினை வைத்துத்தான் நாங்கள் கண்டுபிடிக்கலாம். அதேபோல் மிகப்பெரிய இலாபம் தேடும் சில வியாபாரிகள் அல்லது உணவுப்பொருள் தயாரிப்பாளர்கள் பொருளின் தரத்தைப் பற்றியோ பாவனையாளர்களின் உடல் நலத்தையோ கருத்திற் கொள்வதில்லை. கலப்படம் செய்வதாயின் உணவுத் திணைக்களக் கட்டுப்பாட்டாளர்களை ஏமாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில்


19ம் பக்கம் பார்க்க...


BALACHANDRAN LAW OFFICE

Balachandran Muthaiah LL.B.
Barrister, Solicitor & Notary Public

Raji Satkunasingam LL.B.
Attorney at Law (Sri Lanka)
Commissioner of Oaths

. Business Law
. Family Law
. Immigration Law
. Estate Law
. Real Estate (Commercial/Residential)
. Last Will, Power of Attorney, Affidavit, etc.



2401 Egllinton Avenue East, Suite 300
Scarborough, ON, M1K 2M5

Tel.: 416-755-5544 Fax: 416-755-5594
Email: balalawoffice@gmail.com

I'm here to get your mortgage smarter and faster.
உங்களுக்கு அதிக கடன் பளு இருந்தால் அனைத்தையும் குறைந்த ஒரு மாதக்கட்டணத்தில் கொண்டுவருவதுடன் உங்களுக்கு அதிக பணத்தையும் சேமிக்க உதவுவேன்.

- **Residential**
- **Industrial**
- **Commercial**

**1st, 2nd, 3rd Mortgages Upto 100%...**

வங்கி வட்டி வீதத்தை விட குறைந்தளவு வட்டி வீதம்

**NO FEE FOR RESIDENTIAL MORTGAGES**

- Rate discount up to 3%
- Give me a call for free consultation
- Mortgages without no down payment

**We do the best for you**

நீங்கள் வங்குரோத்துக்கு போயிருந்தாலும் நிராகரிக்கப் பட மாட்டீர்கள். யாருமே நிராகரிக்கப் படமாட்டார்கள் அனைவரும் தகுதியானவர்கள். குறைந்த வட்டி வீதத்தில் ஈட்டுக்கடன் பெற்றுக்கொள்ளவும், கடன்கள் குறித்த இலவச ஆலோசனைகளுக்கும் அனைவரதும் நம்பிக்கைக்கு பாத்திரமான அகிலா செந்திலை அழையுங்கள்

When it comes to finding the Right Mortgage Solution to meet your needs, Please call **ME** befor making any **Decision!!!**

**Our interest rates starts from 0%**

- First-time Buyers
- Renewal
- Refinancing
- Pre-Approval
- Self Employed
- Bankruptcies
- Poor Credit
- New Immigrants
- Debt. Consolidation
- Construction Loans

invis

**After Approval**

# Joy is yours
# Pride is ours





## அகிலா செந்தில்
## Akila Senthil, AMP

*Senior Mortgage Consultant,*
*Team Leader, Platinum Award Winner*
*A Challenging Prosperity Long Term Experienced Team Leader*

**Cell: 416.895.4321**

104-5770 Hurontario St., Mississauga, ON L5R 3G5
Fax: 905-283-3339, Web: www.mortgageprincess.ca, E-mail: akilasenthil@invis.ca
Head Office: Invis Inc., 100-480 University Ave., Toronto, ON M5G 1V2



# specialize in

**• Storage**
Free of charge for Loading & Unloading

**• Cross Docking**

**• Pallets**
Custom Pallets
New & Used Pallets
We also buy used Pallets

**• Moving**
Also Available
24 ft Truck Rentel With Driver $145
**Call Kiruba**
**416-300-6458**




**GTA Special Rates!!!**
**For Straight Truck.**
**Dock to Dock**
***Direct***
***Rush***
***Sameday***
***TailGate Orders***

**11 years in Business**

**CONTACT: MURALI**
**416.569.4065**
89 Thournmount Dr., Unit 11&12, Scarborough, ON M1B 5V4
Morningside/Sheppard - Next to Home Depot
1 min. from Hwy401
fax: 416.724.8417, e-mail: emk4u@hotmail.com

emk ENTERPRISES INC
LOGISTIC & TRANSPORTATION



வீடு வியாபார நிலையம் வாங்க விற்க...
வீடு வாங்க விற்க அல்லது
அது சம்பந்தமான
விபரங்களுக்கும் குறைந்த
வட்டி விகிதத்தில் மோட்கேஜ்
செய்யவும் நட்புடன்
அழையுங்கள்....
$179,900
Brimley / Finch
$189,000
Keele & Finch
3 Bedrooms 2 Washroom
$229,900
Birchmount & Ellesmere
2+1 Bedroom 2 Washroom
$279,900
Birchmount & 401
3+1 Bedrooms 2 Washroom
$299,900
Meadowvale & Shappard
3 Bedrooms 3 Washroom
Finished Basement
$305,000
Hurontario & Burnhathope
2 + 1 Bedrooms 2 Washroom
$305,000
Kennedy & Finch
3+2 Bedrooms 4 Washroom
Finished Basement
$325,000
McCowan & Kinston
3+1 Bedrooms 3 Washroom
$389,900
Manse / Lawrence
4+2 Bedrooms
3 Washroom
$529,900
Whites Rd & Kingston Rd
4 Bedrooms 3 Washroom
Sep Entrance to Basement
$229,900
Neilson &McLevin
3+1 Bedrooms 4 Washroom
Finished Basement
$349,900
Dundas Mavis
3 Bedrooms 3 Washroom
Finished Basement W / O
$514,900
Keele & Mcnaughton
3+1 Bedrooms 4 Washroom
Finished Basement W / O
Ravi Logarajah B.Sc
Tharsi Rajenthiram B.B.A
*Sales Representative
Call : 416-843-7474
HOME LIFE
HIGHER STANDARDS
HomeLife/Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
*Independently Owned and Operated, Realtor
BUS: 416-298-3200 / FAX: 416-298-3440


இயற்கை மூலிகையின் உதவியுடன் உங்கள் கேசத்தை பராமரியுங்கள்!
The ERVAMATIN™ HAIR LOTION
உங்கள் முடியுதிர்வை தடுக்கவும் மீண்டும் தலைமயிர் வளரவும் மிக உன்னதமாக தொழில் புரிகிறது எவமாட்டின் மூலிகை ஔடதம்! உலகெங்கும் பல்லாயிரக்கணக்கானவரின் பாராட்டுதலைப் பெற்ற மூலிகைத் தயாரிப்பு இப்போது எவமாட்டின் சாம்பூவும் கிடைக்கிறது.
Ervamatin POWER
Loção Capilar Natural
SHAMPOO
Ervamatin
OPIBRA
Dreamron HENNA
Treated Natural Henna
இப்போது
ஐரோப்பா எங்கும்
விற்பனையாகிறது!
இயற்கை மூலிகையிலான
தலை முடி மை
இயற்கை மூலிகையான மருதாண்டி கொண்டு செய்யப்படும் இவ் மை உங்கள் தலை முடியையும் நன்கு பராமரிக்கிறது.
The Ervamatin Hair Lotion
Provides effective and fast therapy for hair loss
And its treatment ensures excellent therapeutic results.
Recommended as a treatment for
Hair loss, hair regeneration, dandruff, alopecia,
Thin hair, baldness, fragile and dry hair.
Amazon Health Care
BBB ACCREDITED BUSINESS
SABONA & Gift
Tel: 416 264 8787
www.amazonhealthcare.ca
2602, Eglinton Ave East. (Midland/Eglinton)

# கழிவுப் பொருள் அகற்றலில் நடைமுறைக்கு வந்துள்ள புதிய மாற்றம்

**நவம்பர் 1ஆம் திகதியிலிருந்து கழிவுப் பொருள் அகற்றலில் புதிய மாற்றம் நடைமுறைக்கு வந்துள்ளது.**

கடந்த மாதக் கட்டுரையில் குறிப்பிட்டதற்கு அமைய நவம்பர் மாதம் 1ஆம் திகதியிலிருந்து ரொறொன்ரோ மாநகரத்தில் வசிக்கும் வீட்டுரிமையாளர்களுக்கான கழிவுப் பொருள்களை அகற்றும் நடைமுறையில் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது. அதாவது உத்தியோக பூர்வமாக நவம்பர் 1ஆந் திகதியில் இருந்து புதிய நடைமுறை அமுல் செய்யப்படவேண்டியிருந்த போதிலும் சிறு விதிவிலக்கு உள்ளடக்கப்பட்டிருக்கிறதென்பதைக் கவனத்தில் கொள்ளவும்.




திட்டமிட்டபடி ரொறொன்ரோ பெரும்பாக நகர சபையினரால் நவம்பர் 1ஆம் திகதிக்கு முதல் முழு வீட்டுரிமையாளர்களுக்கும் குறிப்பிட்ட கறுப்பு நிற கொள்கலன்களை விநியோகிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக மத்தியதர அளவான கொள்கலன்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு காரணமாக அவை சற்றுத் தாமதமாகவே விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. அது வரை குறிப்பிட்ட கொள்கலன்களைப் பெறாதவர்கள் புதியதொரு நடை முறையினைக் கையாளவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

**அதாவது ஊதா நிற நறுக்குகள் கொள்கலன்கள் விநியோகிக்கப்படாத வீட்டுரிமையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இத்தகையோர், இந்த நறுக்குகளை இணைத்த பைகளையே தற்காலிகமாக பயன்படுத்தல் வேண்டும். புதிய கொள்கலன்கள் விநியோகிக்கப் பட்டதும் இம் முறை கைவிடப்பட வேண்டும்.**

## Pink Tags:

மேலதிக கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான பைகளுக்குரிய 5 மஞ்சள் நிற நறுக்குகள் தபால்மூலம் கடந்த வாரம் சகல வீட்டுரிமையாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. நவம்பர் 1ஆம் திகதி முதல்

**வீடும் விடியலும் - 33**

2009 டிசம்பர் 31 காலப்பகுதியில் மேலதிக கழிவுப் பைகளை அகற்றுவதற்கு இவற்றைப் பயன்படுத்தலாம் என்பதனை கவனத்திற் கொள்ளவும்.

Yellow Tags:

**(மேலதிக தகவல்களுக்கு 416 392 2467)**

கடந்த மூன்று கட்டுரைகளிலும் பச்சைக் கொள்கலன்கள், நீலக் கொள்கலன்கள், கறுப்புக் கொள்கலன்கள் என்பன பற்றி ஆராயப்பட்டது. இத்தொடரில் இறுதி அங்கமாக ஒவ்வொருவரும் தெரிந்திருக்கவேண்டிய மேலதிக வழிமுறைகள் பற்றி குறிப்பிடுதல் பயனுடையதாக இருக்குமென நினைக்கிறேன்.


## கையளிக்கும் நிலையங்கள் - Drop off deport

சாதாரணமாக தெருவோரத்தில் வைத்து அகற்றப்படமுடியாத பொருட்களை அகற்றுவதற்கு பிற வழிகளை நாடவேண்டிய கட்டாய தேவை ஒன்று இருக்கிறது. ஆபத்தை உண்டுபண்ணக்கூடிய வீட்டுப் பாவனைக்குரிய கழிவுப் பொருட்களை தெருவோரத்தில் வைத்தல் ஆபத்தை விளைவிக்கக்கூடியதென வகைப்படுத்தப்பட்டுள்ளது. அமிலம், நச்சுத் தன்மை, தீப்பற்றக்கூடியவை போன்ற பொருட்களையும் மற்றும் ஆபத்துதரவல்ல கார் பற்றறி, ரயர் போன்றவற்றையும் அகற்றுவதற்கு சிறப்பான வழிமுறைகள் கையாளப்பட வேண்டும். பெரும்பாக மாநகர சபையினால் பல இடங்களிலும் இதற்குரிய நிலையங்கள் நிர்வகிக்கப்படுகின்றன. பலரது நன்மைகருதி அந்நிலையங்களின் தொழிற்பாடு சம்பந்தமான பட்டியல் ஆங்கிலத்தில் தரப்படுகின்றது.

## கம்பியூட்டர்களும் தொடர்புடைய உபகரணங்களும்:

கடந்த காலங்களில் தெருவோரங்களில் வைக்கப்பட்ட கம்பியூட்டர்களும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்களும் தெருவோரத்தில் வைத்து அகற்றப்படக்கூடிய ஒரு நிலை இருந்தது. ஆனால், அவற்றைச் சாதாரண கழிவுப் பொருட்களோடு அகற்றுவது நிறுத்தப்பட்டுவிட்டது. எனவே, இவற்றை அகற்ற நாங்களாகவே உரிய நிலையங்களுக்கு எடுத்துச் செல்லவேண்டியுள்ளது. ஒருவர் ஒரு தடவையில் 3 கம்பியூட்டர்களையும் அதனுடன் தொடர்புபட்ட உபகரணங்களையும் இலவசமாகக் கையளிக்கலாம் என மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

## விசேட சேகரிப்பு - Special pickup







தளபாடங்கள், பழைய குளிர்சாதனப் பெட்டி, அடுப்பு போன்ற பெரிய அளவிலான பொருட்களை அகற்றுவதற்கு அதற்குரிய தொலைபேசி இலக்கத்தை அழைத்து முன்கூட்டியே ஒழுங்குசெய்து, அதற்கு அமைய அவற்றை வெளியே வைத்தல் வேண்டும்.

**தொடர்பு இலக்கம் 416 392-5326**

## மீள் பாவனை

ஒருவருக்கு தேவையற்றதாக இருக்கும் அல்லது அநாவசியமாக இருக்கும் பல பொருட்கள் வேறு பலருக்கு மிகப் பயனுள்ளதாக இருக்கக்கூடிய வாய்ப்புக்கள் நிறையவே உள்ளன. குறிப்பாக மீள் பாவனைக்குகந்த நிலையில் உள்ள பாவித்த உடைகள், சப்பாத்து வகைகள், பாத்திரங்கள், தளபாடங்கள் போன்றவற்றைச் சேகரித்து வறிய மக்களுக்கு விநியோகிப்பதற்கு பல வகைத் தர்ம ஸ்தாபனங்கள் உள்ளன. அவற்றை அழைத்தால் அவர்கள் எங்கள் வீட்டு வாசலுக்கு வந்து அவற்றை எடுத்துச் சென்று தேவையுடையோருக்கு விநியோகிப் பார்கள். அத்தகைய ஸ்தாபனங்களின் விபரங்களை பின்வரும் இணையத் தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்:

**www.toronto.ca/reuse**

வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -
vela@thaiveedu.com



உதாரணமாக சில ஸ்தாபனங்கள் Goodwill, Salvation army, Canadian Diabetes Association, Clear Air Foundation

## சமூக சுற்றுச்சூழல் நாட்கள் (community environment days)

ஒவ்வொரு பிரதேசத்திற்குமுரிய city councillor மூலமாக பிரதேசவாரியான சமூகச் சுற்றுச் சூழல் நாட்கள் வருடாவருடம் ஒழுங்குசெய்யப்படுகின்றன. ஏப்ரல் முதல் அக்டோபர் மாதம் வரையான காலப்பகுதியில் இத்தகைய நாட்கள் ஒழுங்கு செய்யப்படுவது வழமை.

அவ்வப் பிரதேசத்தல் உள்ள மக்கள் மிகப் பயனுள்ள வகையில் இந்நிகழ்வினைப் பயன்படுத்த முடியும். தேவையற்ற பொருட்களைக் கையளித்தல், மீள்பாவனைக்குரிய பொருட்களை நன்கொடை செய்தல், தேவையான கொள்கலன்களைக் கொள்வனவு செய்தல் இலவசமாகப் பெறக்கூடிய compost போன்றவற்றைப் பெறுதல் போன்ற பல தேவைகள் யாவும் ஒரே இடத்தில் பூர்த்திசெய்யக்கூடிய விதத்தில் இத்தகைய நாட்கள் ஒழுங்குசெய்யப்பட்டிருக்கும். மேலதிக விபரங்களை அறிந்துகொள்ள www.toronto.ca/garbage/siteindex.htm என்ற இணையத் தளத்தை நாடவும். அல்லது உங்கள் பிரதேச city councillor உடன் தொடர்பு கொள்ளவும்.

**மேலதிக விபரங்களுக்கு 416 338 2010**

■ ■ ■



# வீடு வியாபார நிலையம் வாங்க விற்க



## புத்தம் புது வாகனத்தை வெல்லுங்கள்

WIN

$329.900



Kipling & Steeles
3 Bedrooms 3 Washroom

$429.000



Western & Rutherford
3 Bedrooms 3 Washroom
All Wood Floor

$319.888




Sheppard & Markham
3 Bedrooms 4 Washroom
Finised Basement



*Some conditions may apply

ULTRAMAR GAS STATION WITH 5 BEDROOM HOUSE & GARAGE
**$499.000**

GAS STATION WITH CONV. + LOTTO 649 + WAREHOUSE +GARAGE
WEST END OF TORONTO
**$845.000**

$159.900



Weston & Sheppard
2 Bedrooms 2 Washroom

$339.900




Torbram / Boviard
4 Bedrooms 3 Washroom
Hardwood Floor

GAS STATION
CAR WASH & CONV.
(in East End)
**$175.000**

நம்பிக்கை நேர்மை நட்பான சேவைக்கும் அழையுங்கள்

**Win a brand New TOYOTA - fj - CRUISER**

Century 21

Affiliate Realty Inc.
Brokerage
208 - 80 Corporate Drive, Toronto, Ontario M1H 3G5
Bus: 416-290-1200
Fax: 416-290-1900

## சத்தி மருதப்பா

Sales Representative

(முழுநேர வீடு விற்பனை முகவர்)

## 416-816-1500

"இளமையில் சோம்பேறி முதுமையில் வறுமை"

brightsun print - 416-845-6565



# நிம்மதியான வாழ்வுக்கு நிரந்தரத்தீர்வு காப்புறுதி ஒன்றே...

ஆமாம் உங்கள் நம்பிக்கைக்கு பாத்திரமான ஒரு காப்புறுதி நிறுவனத்தில் உங்கள் குடும்பத்திற்குரிய அனைத்துக் காப்புறுதி ஒப்பந்தங்களையும் ஒழுங்காக அமைத்துத் தருவதே எனது சேவை....

## சியாமளா ரட்ணசபாபதி

RBC

Manulife Financial

Canada Life™

COMMUNITY
FINANCIAL SERVICE GROUP INC.
2100 Ellesmere Road, Unit 105, Scarborough, Ontario M1H 3B7



# LIFE INSURANCE

## Shiamala Ratnasabapathy

Life Insurance Broker

## Dir : 416.414.2374

# இலங்கைத் தயாரிப்பு...

14ம் பக்கத் தொடர்ச்சி...

உணவுக்கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் செய்யப்படும் புரதப் பொருளுக்கான பரிசோதனைகளைப் பற்றி இவர்கள் தெரிந்தவர்களாதலால் நைதரசன் செறிவு கூடிய மெலமைனை உணவில் சேர்த்து விடுகின்றார்கள். முன்னர் தெரிவித்தது போல் உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் உணவில் புரதம் இருக்கின்றதா எனப் பரிசோதித்துப் பார்ப்பதில்லை. பதிலாக நைதரசன் அணுக்கள் எவ்வளவு இருக்கின்றன எனப் பரிசோதிக்கின்றது. இந்த சோதனையில் மெலமைனில் நைதரசன் கூடுதலாக இருப்பதால் அது தப்பித்துக் கொள்கின்றது. அதனால் தீங்கு விளைவிக்கக்கூடிய மெலமைன் உணவில் இருக்கிறது எனத் தெரியாமலேயே அவ் உணவு புரதச்சத்து நிறைந்த உணவாக ஏற்கப்படுகின்றது.

## மெலமைனினால் உடலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்

மெலமைன் சாதாரணமாக உணவுத்தொகுதியினால் உறிஞ்சப்படுவதில்லை. இது சிறுநீரகத்தினால் சிறுநீருடன் வெளியேற்றப்படும். அதேசமயம் சிறிய அளவிலான மெலமைன் உடலுக்குத் தீங்கு விளைவிக்காது. இருப்பினும் மெலமைனும் சயனோரிக் அமிலமும் (மெலமைன் தயாரிப்பில் சயனோசைட் பாவிக்கப்படுகிறது. இதனால் இங்கு சயனூரிக் அமிலம் தோன்றுகின்றது.) ஒன்றுசேரும்போது மிகவும் சுலபமாக பதங்கமாகக் கூடியவை. இவை உடலில் சேரும் போது மிகவும் சுலபமாக சிறுநீரகங்களிலும் சிறுநீர்ப்பைகளிலும் கற்களைத் தோற்றுவிக்கின்றன. அதாவது இவ்விடங்களில் இவை பதங்கமாகி இருப்பதால் இக்கற்கள் சிறுநீரகத்தின் வடிகட்டும் தன்மையினைப் பாதிக்கின்றது. இது மிக விரைவாக நடைபெறுவதால் சிறுநீரகம் தன் தொழிற்பாட்டை இழப்பதால் சிறுநீரகம் குருதியிலுள்ள யூரியா போன்ற தேவையற்ற பொருட்களை வடிகட்டத் தவறிவிடுகிறது. இச்சூழ்நிலையில் குருதியைச் சுத்தம் செய்வதற்கு செயற்கைமுறையில் டயாலிசிஸ் (dialysis)செய்யவேண்டி ஏற்படும். சில சமயம் இந் நோயாளிக்கு இவ்வாறு டயாலிசிஸ் செய்வது சில நிமிடங்களுக்கு போதுமானதாகி சிறுநீரகம் மறுபடி தனது தொழிற்பாட்டை ஆரம்பிக்கலாம். சில சமயம் சில மாதங்களாகலாம் அல்லது வாழ்நாள் முழுவதற்கும் கூட தொடரலாம். இவ்விதமாக சிறுநீரகம் பாதிக்கப்படுதல் Acute renal failure. எனப்படும். சிறுநீரகம் பெரிதாதல் (inflammation),சிறுநீரகம் (kidney) அல்லது சிறுநீர்ப்பையில் (bladder) புற்று நோய் போன்றவையும் ஏற்படலாம்.

சீனாவில் மட்டுமல்ல இலங்கையிலும் பல விதமான உணவுப் பொருட்களில் மெலமைன் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கூடுதலாக இவ் உணவுப் பொருட்கள் புரதச் சத்துக் அதிகம் உள்ள பொருட்கள். உதாரணமாக பால், பால் தயாரிப்புகளான வெண்ணெய், சோயா, புரதம், சாக்லேட் வகைகள் பிஸ்கட்டுகள் ஆகிய வையாகும். இங்கு கனடாவில் அனைத்து உணவுப் பொருட்களும் உணவுப் பரிசோதனத் திணைக்களங்கள் மூலம் சோதிக்கப்பட்டு விற்பனைக்கு விடப்படுகின்றன. அவ்வாறிருக்கும் போது எங்கள் மக்கள் இவ்வாறு சுகாதாரத் திணைக்களக் கட்டுப்பாடற்ற அல்லது கலப்படம் கூடிய நாடுகளான சீனா இலங்கை போன்ற இடங்களிலிருந்து இறக்குமதியாகும் உணவுப் பொருட்களைப் பாவித்து ஏன் எங்கள் உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்ள வேண்டும். எனவே சரியான உணவுப் பொருட்களைத் தெரிவு செய்து எங்கள் உடல்நலத்தைப் பாதுகாத்துக் கொள்வோம்.

■ ■ ■

## பாவித்த ஆடைகள் மற்றும் பொருட்களை தந்துதவுங்கள்

**இடப்பெயர்வுகளும், இன்னல்களும் எல்லைமீறிய துன்ப சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் எம் உறவுகள் தினம் தம்முயிர்களை இழந்த வண்ணம் உள்ளனர். இவ்வாறான இறுதி நெருக்கடிகளில் புலம்பெயர் தமிழர் நாம், நம் கடமைகளையுணர்ந்து எம்மாலானஉதவிகளை நாமாக முன்வந்து செய்ய வேண்டும். அவை பணமாகவோ, பொருளாகவோ அல்லது ஆடைகளாகவோ இருக்கலாம். எம்மவர் மத்தியில் பல சங்கங்கள் மற்றும் துயர் துடைப்பு, புனர் வாழ்வு மையங்கள் ஊடாகவோ அல்லது நேரடியாகவோ இவற்றினை மேற்கொள்ளலாம். அவை மட்டுமன்றி மாற்று சமூகத்தினற்குள் ஓர் முற்று முழுதான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு தனிப்பட்டஒவ்வொருவரும் செயலில் குதிக்க வேண்டிய ஓர் இறுக்கமான சூழல் இன்றைய நிலை. நாம் தேர்தல்களை அண்மித்துள்ள காலகட்டத்தில் இதுபோன்ற (VOICE OF TAMILS) காரியங்களை இலகுவாக செயற்படுத்தலாம்.**

**இது தொடர்பாக நீங்கள் பாவித்த ஆடைகள் மற்றும் பொருட்களை (நிறை குறைந்த) தந்துதவ விரும்பினால் கீழ்வரும் முகவரியில் அல்லது தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள். நாம் ஒவ்வொருவரும் நம்மால் முடிந்ததை செய்வோம்**

**CEYLINGO FINANCIAL GROUP**
**203-2929 Laurence Ace East**
**Toronto on MIP 258**

**416-430-0111**

## இம் மாதத்திற்குரிய முக்கிய குறிப்புக்கள்


நவம்பர் மாதக் குறிப்புகள்

- கார்த்திகை 11 Remembrance Day
- விடுமுறைக்கான வாழ்த்து மடல்களை வாங்குங்கள். இப்பொழுதே வாங்குவதனால் நிறைந்த தெரிவுகள் கிடைக்கக் கூடியதாக இருக்கும்.
- தபால்கள் அனுப்புவதற்கான உங்கள் தபால் பட்டியலை சரிபாருங்கள்.
- விடுமுறைக்கு பின்னர் நன்றி தெரிவித்து அனுப்பும் வாழ்த்து மடல்களை தேர்ந்தெடுத்து வாங்குங்கள்.
- விடுமுறைகாலத்திற்குரிய கையேடுகளையும் சஞ்சிகைகளையும் ஒழுங்குபடுத்துங்கள்.
- விடுமுறைகாலத்தில் கேக் போன்ற பலகாரங்களைச் செய்வதற்கான பாத்திரங்களையும், உபகரணங்களையும் சுத்திகரியுங்கள்.
- வீட்டின் உட்பகுதியில் இருக்கும் தாவரங்கள் மெலிந்த கிளைகளையும் மஞ்சள் இலைகளையும் கொண்டதாக ஆரோக்கியமற்றுக் காணப்பட்டால், போதிய சூரிய ஒளியைப் பெறுமுகமாக கிழற்கு அல்லது மேற்கை நோக்கிய யன்னல்களுக்கு அருகாமையில் இடம் மாற்றி வையுங்கள்.
- படுக்கையறைகளில் குளிர்காலத்திற்குரிய போர்வைகளை (Quilts & Comforters) பயன்படுத்துங்கள்.
- குளிர்காலத்திற்குரிய உடைகளை வெளியே எடுத்து ஆயத்தமாக்குங்கள்
- வெப்பகாலத்தில் மட்டுமே பயன்படுத்தக்கூடிய ஆடைகளை பாதுகாப்பாக சேமித்து வையுங்கள்.
- பூக்கும் தாவரங்கள் மற்றும் காய்கறி நடப்பட்ட இடங்களை சுத்திகரியுங்கள். பின்னர் அடுத்த வசந்த காலத்திற்கேற்ற விதமாக வளமாக்கிகள் இட்டு பண்படுத்தி வையுங்கள்.
- புல்வெட்டும் கருவிகளை உற்பத்தியாளரால் கூறப்பட்டபடி கூர்மையாக்கி, சுத்தப்படுத்தி எண்ணெயிட்டு பாதுகாப்பாக வையுங்கள்.
- கார்த்திகை ஆரம்பத்தில் பான்ஸி (Pansies) எனப்படும் ஊதாநிற பூக்கும் தாவரங்களை நாட்டுங்கள். இவை வசந்தகாலத்தில் பூப்பதற்கு தயாராகிவிடும்.
- மேலதிகமாக வளர்ந்த கொப்புகளையும் இவை கூரையைத் தொட்டு நிற்கின்றதா என்பதையும் அவதானித்து வெட்டி விடுங்கள்
- கூரைகள், நீர் கூரையிலிருந்து கீழே வருவதற்கான குழாய்கள், பீலிகள் போன்றவற்றில் கசிவுகள் காணப்படுகின்றதா என அவதானித்து சீர் செய்யுங்கள்.
- வீட்டைச் சுற்றி குளவிக்கூடுகள் காணப்படுகின்றதா என அவதானித்து இதனை அகற்றுவதில் நிபுணத்துவம் பெற்றவர்களைக் கொண்டு இவற்றை அகற்றி விடுங்கள்.
- கதவுவழிகள், யன்னலோரங்கள் மற்றும் நீர் வழிந்து செல்வதற்காக அமைக்கப்பட்டிருக்கும் வாய்க்கால்களில் இலைகள் அல்லது வேறு ஏதாவது கழிவுகள் காணப்படுகின்றதா என அவதானித்து அகற்றி விடுங்கள்.

தொகுப்பு: மகேன் சிங்கராசா


சகல சட்டத் தேவைகளுக்கும் கனேடிய தமிழ் வழக்கறிஞர்

➢ Real Estate
➢ Immigration Matters
➢ Translation Services
➢ Business Matters
➢ Personal Injury Claims
➢ All other legal services



el: 416 - 847 - 7077
416 - 847 - 7093 (Injury Claims)
ax: 416 - 847 - 7088
ww.maharajalaw.com

GTA SQUARE,
5215 Finch Ave. East, Unit 219,
Scarborough, ON M1S 0C2

Raphael Maharaja
Barrister, Solicitor & Notary Public

# முதியோர் துஷ்பிரயோகம் (Elder Abuse)

சென்றமாதத் தொடர்...

### வயதுமுதிர்ந்தோரின் நிலைமையும் வரலாறும் (The elder's condition and history)

அநேக காரணிகள் முதியவர் துஷ்பிரயோகம் செய்யப்படக் கூடிய ஆபத்தான நிலைமைகளில் இருக்கிறார் என்பதைத் தீர்மானிக்கக் கூடியதாக இருக்கும்.

- ஓர் முதியவரின் உடல் நலக் குறைவு அல்லது அவரின் அறிவு மழுங்குதல் (dementia)
- சமூகத்திலிருந்து விலகியிருத்தல், அதாவது முதியவரும் முதியவரைப் பராமரிப்பவரும் கூடுதலான நேரம் தனியாக இருத்தல்
- முன்பு முதியவர் ஓர் துஷ்பிரயோகம் செய்த பெற்றோராக (Parent), அல்லது வாழ்க்கைத் துணைவராக இருந்திருத்தல்
- குடும்ப வன்முறை வீட்டில் முன்பு நடைபெற்றிருந்திருத்தல்
- பொதுவாகவே வாய்மூலமாகவோ அல்லது உடலியல் ரீதியாகவோ முதியவரின் வீறாப்பு அதிகமாக இருத்தல்

### முதியோரை துஷ்பிரயோகம் செய்வதையும் பராமரிக்காது அலட்சியம் செய்வதையும் தவிர்த்தல் எவ்வாறு?

முதியோர் துஷ்பிரயோகத்தைக் குறைக்க நாம் அதிக முயற்சி எடுக்க வேண்டும். முதியவர் துஷ்பிரயோகத்தைத் தடுத்தல் எனும்போது அது 3 விடயங்களைச் செய்வதைக் கருதும்.

- முதியவர்களும் அவர்களது பராமரிப்பாளர்களும் கூறுவதைச் செவிமடுத்தல்
- முதியவர் துஷ்பிரயோகம் பற்றி சந்தேகித்தால் இவ் விடயத்தில் தலையிடுங்கள்
- முதியவர் துஷ்பிரயோகத்தை எவ்வாறு இனங்காண்தல் மற்றும் அறிவித்தல் தொடர்பாக மற்றவர்களுக்கு கல்வியறிவூட்டுங்கள்

### முதியோர் துஷ்பிரயோகத்தைத் தடுக்க ஓர் முதியோர் பராமரிப்பாளராக நீங்கள் இருந்தால் நீங்கள் எந்த வகையில் உதவலாம்?

ஓர் முதியவரை பராமரிக்கும்போது அதிக வேலைப்பளுவினால் நீங்கள் களைத்துப் போவீர்களாயின் பின்வருவனவற்றைச் செய்யுங்கள்

- நண்பர்கள், உறவினர் அல்லது உள்ளூர் பராமரிப்பு நிறுவனங்களிடமிருந்து உதவி கேளுங்கள். இதன்மூலம் ஓர் சில மணித்தியாலங்களாவது உங்களுக்கு இடைவேளை கிடைக்கும்.
- முதியவரைப் பகலில் பராமரிக்கும் திட்டங்கள் உங்கள் அயலில் இருக்கிறதா என கண்டறியுங்கள்
- ஆரோக்கியமாக இருப்பதுடன் தேவையானவிடத்து உங்களுக்கு மருத்துவ பராமரிப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள்
- மனஅழுத்தத்தை குறைக்கும் நடைமுறைகளைப் பின்பற்றுங்கள்
- மனஅழுத்தம் இருந்தால் அதற்காக ஆலோசனை பெறுங்கள், மனஅழுத்தமும் முதியோர் துஷ்பிரயோகத்திற்கு உங்களை இட்டுச் செல்லலாம்
- முதியவர்களை பராமரிப்பவர்களுக்கு உதவும் குழுக்களை கண்டறியுங்கள்
- போதைவஸ்து அல்லது மதுபானம் பாவிக்கும் பிரச்சனைகள் உங்களுக்கு இருந்தால் உதவி பெறுங்கள்

முதியோர் துஷ்பிரயோக சந்தர்ப்பங்களின் போது உதவும் அமைப்புகள் பராமரிப்பாளர்களுக்கும் உதவிகளை வழங்குகின்றன. நீங்கள் முதியோர் துஷ்பிரயோகம் செய்யக் கூடிய சந்தர்ப்பத்திற்கு தள்ளப்படும் நிர்ப்பந்தத்திற்கு உட்படுவீர்களாயின் இதற்கென உதவும் நிறுவனங்கட்கு தொலைபேசி மூலம் அழைத்து உதவி பெறுங்கள்.

### முதியவரின் நண்பர் அல்லது குடும்ப அங்கத்தவராக இருந்தால் முதியோர் துஷ்பிரயோகத்தைத் தடுக்க என்ன செய்யலாம்?

- முதியோர் துஷ்பிரயோகத்தை சந்தேகிக்கக் கூடிய எச்சரிக்கை அறிகுறிகளை கவனியுங்கள். துஷ்பிரயோகம் பற்றி சந்தேகித்தால் அது பற்றி அறிவியுங்கள்
- முதியவரின் மருந்துகளை கவனியுங்கள். எடுக்கப்படும் மருந்தின் அளவு சரியானதா எனவும் மருந்து காலாவதியானதா என்பதையும் அவதானியுங்கள்.
- நிதி தொடர்பாக துஷ்பிரயோகம் நடைபெறக் கூடிய நிலமைகளை அவதானியுங்கள். வங்கிக் கணக்குகளையும், கடன் அட்டைக் கூற்றுக்களையும் பார்த்து முறையற்ற பரிமாற்றங்கள் (Unauthorized transactions) நடைபெற்றிருக்கிறதா என நீங்கள் பார்க்கலாமா என்று முதியோரைக் கேளுங்கள்.



- முடிந்தவரை முதியவரை தொலைபேசி மூலம் அழைப்பதுடன் அவரைப் பார்க்கச் செல்லுங்கள். நீங்கள் நம்பத் தகுந்தவர் என முதியோர் கருதுவதற்கு உதவுங்கள்
- ஓர் ஒழுங்கான அடிப்படையில் உங்களால் முடிந்தால் முதியவருடன் சில மணி நேரம் இருப்பதற்கு முன்வாருங்கள். இதன் மூலம் பராமரிப்பாளருக்கு ஒரு இடைவேளை கிடைக்கும்.

### முதியோர் துஷ்பிரயோகம் பற்றி அறிவிப்பது (Reporting elder abuse)

நீங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படும் அல்லது போதியளவில் பராமரிக்கப்படாதிருக்கும் ஓர் முதியவர் என்றால் குறைந்தது ஒருவருக்காவது உங்கள் நிலைமையைப் பற்றிக் கூறுங்கள். உங்கள் வைத்தியருக்கு ஒரு நண்பருக்கு அல்லது நீங்கள் நம்பும் ஓர் குடும்ப அங்கத்தவருக்கு உங்களைப் பற்றிக் கூறுங்கள். ஏனைய மக்கள் உங்களில் அக்கறை கொண்டு உங்களுக்கு உதவுவார்கள்.

முதியவர் துஷ்பிரயோகம் பற்றி ஒவ்வொரு வருடமும் 500,000 இருந்து 1,000,000 வரையான அறிக்கைகள் உரிய அதிகாரிகளால் பதிவு செய்யப்படுகின்றன. ஆனால் இவை கடலுக்கடியில் இருக்கும் பனிமலையின் வெளியில் தெரியும் ஓர் நுனி போன்றதே. ஏராளமான துஷ்பிரயோகங்கள் அறிவிக்கப்படாமலேயே தொடர்ந்து நடைபெறுகின்றன. ஒவ்வொரு தடவை முதியவர் துஷ்பிரயோகம் பற்றி அறிவிக்கப்படும் போதும் 12 அல்லது 13 துஷ்பிரயோகங்கள் அறிவிக்கப்படாமலேயே போகின்றன.

ஒவ்வொரு மாகாணத்திலும் முதியவரைக் குறிவைத்து செய்யப்படும் உடலியல், பாலியல், நிதி தொடர்பான துஷ்பிரயோகங்கள் - துன்புறுத்தல், கற்பழிப்பு, களவு மற்றும் ஏனையன தண்டனைக்குரிய குற்றங்களாகும். சில வகையான உணர்வு பூர்வமான முதியோர் துஷ்பிரயோகங்கள் குற்றவியல் வழக்குத் தொடரலுக்கு வழிவகுப்பதுடன், குற்றம் புரிபவரின் நடத்தை, தீவிரம், பாதிக்கப்படுபவருக்கு ஏற்படும் விளைவுகளிலும் தண்டனைகள் தங்கியிருக்கும்.

யார் முதியோர் துஷ்பிரயோகம் பற்றி அறிவிக்கலாம் என்பதிலும் சில இடங்களில் வேறுபாடுகள் உண்டு. பொதுவாக மருத்துவ ரீதியில் தொடர்பு கொண்டவர்கள், பராமரிப்பு இல்ல ஊழியர்கள், சமாதான ஊழியர்கள், அவசர கால சேவையாற்றியவர்கள், பொது உத்தியோகத்தர்கள், சமூக வேலை செய்பவர்கள், ஆலோசகர்கள், மதகுருமார் ஆகியோர் கட்டாயமாக முதியோர் துஷ்பிரயோகம் பற்றி அறிவிக்க வேண்டுமெனக் கூறப்படுகின்றது. அத்துடன் இப் பொறுப்பு நிதி நிறுவனங்கட்கும் முதியோருடன் தொடர்பு பட்டு வேலை செய்யும் ஏனைய நிறுவனங்கட்குமாக விரிவுபடுத்தப்படுகின்றது.

முதியோர் துஷ்பிரயோகத்திற்கெதிராக அடைக்கலம் பெற வேண்டியது அவசியமாக இருக்கும் அதேவேளை உங்கள் நிறுவனம் அல்லது வைத்தியர் அல்லது நம்பிக்கைக்குரிய நண்பரிடம் கூறுதல் மிக முக்கியமாகும். அநேகமான சந்தர்ப்பங்களில் முதியோர் தம்மால் முடிந்தபோதும் துஷ்பிரயோகம் பற்றி அறிவிக்காமல் இருக்கிறார்கள். அநேகர் தம்மைத் துஷ்பிரயோகம் செய்தவர்களால் ஆபத்து ஏற்படலாம் என அஞ்சுகிறார்கள். அதே வேளை வேறு சில முதியவர்கள் தம்மை துஷ்பிரயோகம் செய்தவர்கள் பற்றி தாம் முறைப்பாடு செய்ததைப் பற்றி அவர்கள் அறிந்தால் அதன் பின் தம்மை பராமரிக்க எவரும் இல்லை என நம்புகிறார்கள். அவர்களுடைய பிள்ளைகள் துஷ்பிரயோகம் செய்யும்போது இதனைக் குறித்து வெட்கமடைகிறார்கள். அவர்கள் சிறுவர்களாக இருந்தபோது நான் சரியான பெற்றோராக இருந்திருந்தால், இது நடைபெற்றிருக்காது என தம்மைத் தாமே குற்றம் கூறுவார்கள் அல்லது தமது பிள்ளைகள் சட்டத்தினால் பிரச்சனைக்குட்படுவதை விரும் பாதவர்களாயோ இருக்கலாம். இத்தகைய காரணிகளால் தமது பிள்ளைகளைப் பற்றி குற்றம் சாட்ட முதியோர் தயங்குகிறார்கள்.


ஜீவா திசைராஜா

jeeva@thaiveedu.com




### நீங்கள் ஓர் முதியவராக இருந்தால் உங்களை நீங்கள் எவ்வாறு முதியோர் துஷ்பிரயோகத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.

- உங்கள் நிதி மற்றும் சட்ட ரீதியான விடயங்கள் ஒழுங்காக இரக்கின்றதா என உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அவ்வாறு இல்லாவிடின் அவற்றை ஒழுங்குபடுத்துவதற்கு தேவையெனின் நம்பத்தகுந்த நண்பர் அல்லது உறவினரின் நிபுணத்துவ உதவியைப் பெறுங்கள்.
- எப்போதும் நண்பர்கள், குடும்ப அங்கத்தவருடன் தொடர்பு கொண்டிருப்பதுடன் தனித்திருப்பதைத் தவிருங்கள். இது முதியவர் துஷ்பிரயோகத்திற்கு உட்படும் உங்கள் வாய்ப்புகளை அதிகரிக்கும்.
- உங்கள் சொந்த வீட்டில் அல்லது பராமரிப்பு பெறும் இடத்தில் நீங்கள் பெறும் பராமரிப்பு பற்றி சந்தோஷமற்றிருந்தால், இருந்தால் மௌனமாக இராது இது தொடர்பாக கதையுங்கள். நீங்கள் நம்பும் ஒருவருக்கு இது தொடர்பாக கூறி இந்த துஷ்பிரயோகம் பற்றியோ அல்லது நீங்கள் சரியான முறையில் பராமரிக்கப்படாதிருப்பதையோ அறிவியுங்கள்.

வயது முதிர்ந்தோரின் துஷ்பிரயோகத்திற்காக போராடுவதற்காக ஒன்ராறியோவின் நீதிப் பிரிவுகள், முதியோர் துஷ்பிரயோகத்தை தடுக்கும் ஒன்ராறியோவின் வலைப்பின்னல் (ONPEA) அமைப்பை (Ontario Network for the Prevention of Elder Abuse) ஏற்படுத்தியுள்ளன. வயது முதிர்ந்தோர் துஷ்பிரயோகத்தைத் தடுக்கும் ஒன்ராறியோவின் வலைப்பின்னலானது, வயது முதிர்ந்தோருக்கு ஏற்படும் துஷ்பிரயோகத்தையும் அலட்சியத்தையும் தடுப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட இலாப நோக்கற்ற ஓர் தர்ம தாபனமாகும். வயது முதிர்ந்தோர் துஷ்பிரயோகம் தொடர்பான பிரதேசரீதியான ஆலோசகர்கள், மாகாணமெங்கும் வயது முதிர்ந்தோரின் துஷ்பிரயோகத்தை கவனித்து தடுப்பதற்கு முயற்சிகளையும் ஆதரவுகளையும் ஊக்குவிப்பதற்கு உதவுமுகமாக உள்ளனர்.

வயது முதிர்ந்தோருக்குப் பொறுப்பான அமைச்சர் 2004 ஒக்டோபர் 19ஆம் திகதியை ஒன்ராறியோவின் முதலாவது முதியோர் துஷ்பிரயோக விழிப்புணர்வு நாளாக (Elder Abuse Awareness Day) ஏற்படுத்தினார். முதியோர் துஷ்பிரயோக நாள் மாகாணம் முழுவதும் வருடாவருடம் அனுஷ்டிக்கப்படுகிறது.

கனடா அரசாங்கம் 2008 வரவு செலவுத் திட்டத்தில் 13 மில்லியன் டொலர்களை 3 வருடத்திற்கு முதியவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக போராட ஒதுக்கியுள்ளதாக அறிவித்துள்ளது.

ஒக்டோபர் 2007இல், நீதி அமைச்சர் Rob Nicholson முதியோர் உட்பட கனடியர்களை அடையாளத் திருட்டில் இருந்து பாதுகாக்கும் முகமாக சட்ட மசோதா C-27இனை அறிமுகப்படுத்தியுள்ளார்.

முதியோர் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கான கனடாவின் வலைப்பின்னல் அமைப்பின் இணையத்தள முகவரி பின்வருமாறு: http://www.onpea.ca/prevention.html இவ்வலைப்பின்னல் அமைப்பினுள் முதியோர் துஷ்பிரயோகம் நடைபெறும்போது அதிலிருந்து மீளும் வழிவகைகள், உதவி பெறக் கூடிய வழிவகைகள் என்பன கூறப்பட்டுள்ளன.

■ ■ ■


வாழ்க்கை கவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...
Elaguppllai (Mike) Srinathan B.Sc
Sales Representative
Dir: 416-276-1225 Off: 905-470-9800
Email: esrinathan@trebnet.com
SOLD
9 th / 16th
$309,900
Never lived in Brand New Freehold 3Br 3 Bath,Cornell Community,Excellent Mattamy Open Concept Design, Huge Master With Ensuite & W/I Closet.
Mccowan / Steeles
$399,000
Excellent Opportunity to Own Absolutely Gorgeous & Upgraded Executive Home. Newer Windows, hardwood flooring and Oak Stairs. Outstanding New Roof and CAC
Greenhalf/Pickering Beach
$284,900
Detached 2 story, Bed rooms 3, Washrooms 3, Within Walking Distance To Parks,Schools
Bovaird & Creditview
$304,900
Detached 2 story, Bed rooms 3, Washrooms 3, Brand New Hardwood Flooring Throughout The Living Room / Dining Room
Brimley/ Denison
$316,800
Link 2 Story, , Bedrooms 3, Washrooms 2 , Lots Of Upgrades; Excellent Condition;Remodeled Kitchen W/Extra Cupboards
Mccowan / Denison
$329,000
Link 2 Story, Bedrooms 3+1 Wasroom 3, New Paint, New Shingles, New Windows, Too Many Upgrades To List., Walk To Good Schools
9th/ 16th
$339,900
Detached 2 Story, Bed rooms 3 Washrooms 3,Beautiful 5 Yrs New Detached Home Hardwood Floor,Direct Access From House To Garage
Markham & Denison
$348,000
Link 2 Story, Bed rooms 3 Washrooms 3, Close To Schools, Churches, Shopping, Public Transportation And Hwy 407
Staines/Steeles
$349,000
Detached 2 Story, Bed rooms 3, Washrooms2 Well Appointed All Brick 3 Bedroom House, Clean, Sun Detached Home
Finch & MorningsideRd
$349,900
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3 Immaculate Detached Brick Home With Many Upgrades Hardwood Flooring
Dennison/Middlefield
$369,900
Link 2 Story, Bedrooms 4+1 Washrooms 4, 2000 Sq Ft Plus Prof Fin Bsmt, Some Newer Windows, French Doors & Parquet Flooring.
Markham & Steeles-
$389,000
Detached 2 Storys, Bed rooms 3+1, Washrooms 3, 4 Yrs Old Home, Upgraded Throughout House. Gorgeous Eat-In Kitchen
Markham / Denison
$389,800
Detached 2 Story, Bedrooms 3+1, Washrooms 4, Fully Upgraded Home, Upgraded Bathrooms,Large Profesion-
Mccowan/14th
$389,900
Link 2 Story, Bedrooms 3 Washrooms 3, Newly Renovated Kitchen, New Windows Throughout The Home,Basement Has Separate Enter-
Kennedy / Denison
$399,900
Link 2 Story, Bedrooms 4+2 Washrooms 5 Close To Denison Plaza,Pacific Mall, Library,High School Finished 2 Br Basement
Steeles / Staines
$399,000
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3, Thousands Of $$ Upgrades Breakfast Area Great Room And Dining Room Hardwood Floors
Mccowan/14th Ave
$429,900
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 4, Professionally Finished Basement, Dir Access From Gar To The House,
9th Line/14th Ave
$508,000
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3, Fully Loaded 2Yrs New Home-Beautiful Kitchen W/Granite Counter Tops
9th Line/14 Avenue
$1,380,000
Detached 2 Story, Bed rooms 5+1 Wasrooms 7 Beautiful 6 Yrs Old Custom Built Home, Large W/O Entertainment Room
Markham/Lawrence
$269,990
Detached Bungalow, Bed rooms 3+2, Washrooms 3, New Kitchens, New Closets, New Basement, New Washroom,
Sale Of Business
$259,000 for sale
Sale Of Business Without Property Gas Stations Self-Serve Petro Canada Gas Station With Convenience Store
Vacant Land
$189,900
100 Acres - 65 Acres Workable/Clear Land-35 Acres 30 Minute Drive From The Bruce Nuclear Plant
Sale Of Business
$1,650,000
New Look Petro Canada Gas Station With Country Style Donuts And Residential Apartment Located In Heart Of Hamilton
RE/MAX
Realtron Realty Inc. Brokerage
Independently Owned and Operated
7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7
'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'



# Buying or Selling Homes

Selling Commission , As Low As 1%

**Call Nada**

Nada.G.Nadarajah B.V.Sc
Sales Representative

Cell: 416 – 616 – 8751
Bus: 416 – 293 – 5093

HOMELIFE
HIGHER STANDARDS

HomeLife Metro Realty
Inc. Brokerage
Platinum Award Winner
Ontario Emerald Club Member


$499,000

**McCOWAN/MAJOR MAC**
Detached/2-Storey
4 Bedrooms - 3 Washrooms
2 Yrs. Old | 2947 sq. ft


$159,000

**CHURCH/KINGSTON RD.**
Condo. Apt
1 Bedrooms - 1 Washrooms
Open Balcony, Great View!


$222,000
NEW LISTING

**McCOWAN/FINCH**
Condo Apartment
2 Bedrooms - 2 Washrooms


$454,000

**HIGH VIEW/WHITES**
Detached 2-Storey
5+1 Bedrooms - 3 Washrooms
Approx. 3122 Sqft.


$349,900

**CORONATION/MANSE**
Detached Back-Split
4 Bedrooms - 3 Washrooms
2 Kitchens


$236,000
NEW LISTING

**MIDDLEFIELD/FINCH**
Condo Apartment
2+1 Bedrooms - 3 Washrooms
Open Balcony, 2 Yrs. Old!

NEW LISTING



**MIDLAND/EGLINTON**
Sale of Business
Beauty Salon


$174,900

**DON MILLS/OVERLEA**
Condo Townhouse
2-Storey
4 Bedroom - 2 Washrooms

# $100,000

## லைவ்(f) இன்சூரன்ஸ்

10 Year Term Life Insurance - $12.42 மட்டுமே
Whole Life Insurance - $44.70 மட்டுமே
புகை பிடிக்காத 35 வயது ஆணுக்கு,

உங்களுக்கான மாதக்கட்டணத்தையும், ஏனைய இன்சூரன்ஸ்
பற்றிய தகவல்களையும் அறிந்து கொள்ள அழையுங்கள்...

**DON'T BE LEFT ALONE**



**KEN KIRUPA**
Life Insurance Broker
759 Warden Ave., Toronto, ON

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

Unity Life of Canada

RBC Insurance

கென் கிருபா
காப்புறுதி முகவர்
416 294 9322

E&OE

# நூற்றாண்டுகளின் அடிமைத்தளை வேதனை விலகியது!

## ஓர் கறுப்பினத்தவர் அமெரிக்காவிற்கு அதிபராகினார்!



மாமூலன்
maamulan@thaiveedu.com

தனது வெற்றி ஏற்புரையை 125 ஆயிரம் மக்களிடையே பேசுகையில் 'எங்கள் வழி நீண்டது. எங்கள் முன்னுள்ள சவால்கள் பாரியவை. நாங்கள் அனைவரும் சேர்ந்து" அதை வென்றெடுப்போம் என்பதாகச்



சொன்னார் அமெரிக்காவின் 44 அதிபராக விருக்கும் பராக் ஒபாமா.

வெற்றியின் களிப்பு அவரது பேச்சில் இல்லை. அமெரிக்காவின் நிலை பற்றிய கவலையும் எதிர்காலத்தில் மிகப்பெரிய மாற்றங்களைக் கொண்டுவருவதற்கான அடித்தளமுமே அவரது பேச்சில் இருந்தது. மிகுந்த எச்சரிக் கைத் தன்மையுடன் அமைந்த உரை அது.

ஒபாமாவிற்கு இந்த வெற்றி புதிதல்ல. சட்டப்படிப்பின்போது 108 ஆண்டு வரலாற்றை உடைத்து ஹாவார்டு பல்கலைக்கழகத்தின் சட்ட பேரவையின் முதற் கறுப்பினத் தலைவராகிய வரலாறும் உள்ளவர். 2004 ஆண்டில் சனநாயகக் கட்சியின் மாநாட்டில் ஒரு தடவை மட்டுமே பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டபோது பேசியதன் மூலம் அதிரடியாக அனைத்துப்பேரும் அவரைத் திரும்பிப் பாரக்கும்படி செய்த திறமையாளர்.

ஆனால் உண்மையான ஒபாமாவின் வெற்றி யின் அடித்தளம் எது? ஒபாமாவுக்கு வேலை செய்பவர்கள் எப்படியாவது அவரை வெற்றி யடைய வைக்கவேண்டும் என்ற வெறியில் இருந்தார்கள். ஒருவேளை ஹில்லாரி இருந் திருந்தால் வென்றிருப்பாரோ என்று எண்ண வைக்கக் கூடாது என்பதிலும், ஒரு கறுப்பர் என்பதால் அமெரிக்கர்கள் ஒபாமாவைத் தோற்கடித்துவிட்டார்கள் என்ற அவப்பெயர் வரக்கூடாது என்பதில் இளைய சந்ததியின-ரும் நிற வேறுபாடின்றிக் கவலையுடன் இருந்-தார்கள். அத்துடன் ஒபாமாவின் தேர்தல் பரப்புரைக் குழுவினர் சமூக சேவைப் பணி போலச் செய்பட்டதினால் இந்த வெற்றி அடையப்பட்டிருக்கிறது. இது தவிரவும் அனைத்து தரப்பு இளையோருக்கும் இந்த அமெரிக்காவின் புளித்துப்போன அரசியலில் மாற்றம் தேவையாய் இருந்திருக்கிறது.

இந்த வெற்றியின் மூலம் ஓர் கறுப்பினத்தவர் அதிபரானார், ஓர் கல்விமான் அதிபரானார் அல்லது ஓர் திறமையானவர் அதிபரானார் என்பதற்கப்பால் ஒபாமாவின் முன்னால் உள்ள பணிகள் மலைபோல் குவிந்திருக் கின்றன.

ஐந்தரை ஆண்டுகளாக ஈராக்கிலும் ஆப்கா னிலும் நடக்கும் இரு போர்கள், கடந்த 50 ஆண்டுகளில் இல்லாதவாறு சிதைந்திருக்கும் அமெரிக்கப் பொருளாதாரம், தொடர்விளை வாக இருக்கும் உலகப் பொருளாதாரம் என்பன முதன்மையானவை.

ஆனால் இவையல்ல ஒபாமா கொண்டுவர-விரும்பியதாகச் சொல்லிய மாற்றங்கள்.

அவர் அரசியலில் மாற்றம் கொண்டுவர விரும்பினார். கட்சி வேறுபாடு முதலான அனைத்து வேறுபாடுகளும் இன்றி மக்கள் சுபிட்சமாக இருக்கவேண்டும் என்று விரும்பு கிறார். அதையே அவரது ஏற்புரை சுட்டிக் காட்டுகிறது.

ஒபாமா அமெரிக்காவின், உலகின் இச்சிக்க லான நிலையிலும் மிகவும் நம்பிக்கையுடன் இருக்கிறார். ஏற்கெனவே பலமுறை சொல்-லப்பட்டது போல மிகவும் நிதானமானவர். மிகவும் கடும் உழைப்பாளி.

அமெரிக்காவின் இளைய தலைமுறை இன மத வேறுபாடின்றி அவரை நம்புகின்றது.

அமெரிக்காவில் மருத்துவம் காசுக்கே கிடைக்கும் நிலை இருக்கிறது. அதனை ஓரளவேனும் மாற்றுவதற்கு ஒபாமா வாக்கு-றுதி கொடுத்திருக்கிறார். பெரியளவு மாற்றங் களைக் கொண்டு வந்தால் ஒழிய அது சாத்தியமல்ல.

மேலும் வரி விலக்குகள் தரப்படும் என்பதும் சொல்லப்பட்டிருக்கிறது. வரியைக் குறைக் கையில் எவ்வாறு மருத்துவத்தை கட்டண மின்றித் தரமுடியும் என்ற கேள்வி எழுகிறது. அமெரிக்காவின் பல படைச் செலவினங்-



களைக் குறைக்க முயற்சிக்கலாம். இது வரை அவரது வாக்குறுதிகள் மட்டுமே முன்னால் உள்ளன. அடுத்து வரும் இரு மாதங்களிலும் ஒபாமா என்ன செய்யப் போகிறார் என்பதை ஊகிக்கவே முடியும்.

யனவரியில் பதவி ஏற்கும் வரையான காலம் பதவி மாற்றக் காலம் எனப்படுகிறது. இதன் போது தனது செயற்பாட்டுக் காரியதரிசியை முதலில் நியமிப்பார். பின்னர் அதன் அடித் தளத்தில் அமைச்சரவையையும் அவருடன் பணியாற்றும் அதிகாரிகளையும் அவர் தேர்ந் தெடுத்து தனது திட்டங்களைச் செயலாக்கு வதில் அவர்களுடைய கருத்துக்களையும் கேட்பார். அதே போல தனது குழுவின் மனதிலிருக்கும் பயனுள்ள திட்டங்களை எடுத்துக்கொள்வார். இந்த நிலையில் ஊகங்களாக மட்டுமே ஒபாமாவின் நடவ டிக்கைகள் தற்போதைக்கு முடிவுசெய்யப் படும்.

யனவரிக்குப் பின்புதான் அவரது செயற்பாடு களின் ஆழம் வேகம் வெளிப்படும். எனினும் தற்போதிருந்து அவர் உருவாக்கும் அடித் தளச் செயற்பாடுகள் அவரது போக்கை காட்டும்.

இவற்றைவிடவும் தந்திரமான நகர்வு ஒன்றி ருக்கிறது. தற்போதிருக்கும் அரசின் பணி-யாட்கள் தங்கள் துறைகளில் தங்கள் காலடிகளை மிகவும் தந்திரமாக ஆழமாக கடைசிநேரத்தில் பதித்து அதனால் ஏற்படும் விளைவுகள் எதிர்காலத்தில் மீள முடியாத படி செய்துவிடும். அதைத் தடுப்பதற்காக ஒபாமாவின் தற்போதைய உதவியாளர்கள் பலர் பல துறைகளுக்கும் சென்று அங்கு கண்காணிப்பு மேற்கொள்வர்.

ஓர் ஒபாமாவின் உதவியாளர் சொன்னதைக் கருதில் கொள்ளவேண்டும்: 'நாங்கள் எவ் வளவு கடுமையாக இருப்போம் என்பதை மக்கள் பார்க்கத்தான் போகின்றனர்". அதாவது ஏனோதானேவென்று இல்லாமல் மக்களுக்காக உறுதியாகச் செயற்படுவோம் என்கிறார் அவர்.

எதிர்வரும் 15 ஆவது திகதி பொருளாதார உலகத் தலைவர்கள் மாநாடு வெள்ளை மாளிகையில் நடைபெறவுள்ளது. உலகத்தை எதிர்கொள்ள ஒபாமாவுக்குக் கிடைக்கும் முதல் வாய்ப்பு அதுதான். அடுத்து டிசம்பர் மாதம் போலந்தில் உலக சுற்றுச்சூழல் மா நாடு நடைபெறவுள்ளது. ரசியாவின் எல்லை யில் நடக்கும் அந்த மாநாடு மற்றொரு வகையில் ஒபாமாவின் உலகப் பார்வையை எடுத்துரைக்கும்.

படிக்கும் காலத்திலேயே அப்பகுதியில் உள்ள ஏழை மக்களின் நல்ல வாழ்விற் கான தேவாலய நடவடிக்கைகள் சமூக நடவடிக்கைகளில் ஒபாமா ஈடுபட்டுள்ளார்.

இந்து சமுத்திரத்தின் கரையில் உள்ள கென்யா நாட்டிலும் தொடர்புபட்டு பசுபிக் சமுத்திரத்தில் உள்ள ஹவாயில் பிறந்து, வாழ்ந்து அத்திலாந்திக் கடலோரத்தில் இருக்-கும் வாசிங்ரனில் அதிபராகக் குடியேறப் போகும் ஒபாமாவிற்கு அமெரிக்காவில், உலகில் மக்கள் படும் துயரம் எட்டுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

■ ■ ■

### ஒபாமா ஓர் எழுத்தாளர்

**ஒபாமா இரண்டு நூல்கள் எழுதியுள்ளார். ஒபாமாவின் நூலில் இருந்து ஓர் பகுதி...**

**கேள்வி: எமது பிள்ளைகளைப் படிப்பிப்பதற்கு எங்களுக்கு தனிப்பட்ட கடமை இருக்கிறது என்று சொல்கிறீர்கள். அமரிக்காவில் ஒரு பெற்றார் இதற்காகச் சிறியதாக என்ன காரியத்தை செய்யலாம்? பெரிய மாற்றத்தை பிள்ளைகளில் கொண்டு வர என்ன சிறிய வேலையைச் செய்யலாம்?**

**ஒபாமா: குழந்தைகளின் தொடக்காலத்தில் அவர்களுக்கு வாசித்துக் காட்டு வதுபோல வேறு எதுவும் பெரிதாக நல்ல விளைவைத் தராது. நாம் அனைவரும் தொலைக்காட்சியை நிப்பாட்டிவிடுவதற்குக் கடைமைப்பட்டுள் ளோம். எமது பிள்ளைகளுக்கு வாசித்துக் காட்டவேண்டும். இது மட்டுமல்-லாமல் எழுத்தறிவு திட்டங்களில் பங்கேற்க வேண்டும். வாசிப்பில் சிக்கலுள்ள பெற்றோருடன் சேர்ந்து உதவவேண்டும். அவர்களுடைய குழந்தைகளுக்கு வாசிப்பதற்காக மொழியறிவிற்காக உதவி செய்வேண்டும். அதுவே பெரிய மாற்றத்தை குழந்தைகளின் வாழ்வில் ஏற்படுத்தப் போதுமானது.**

**ஒபாமாவின் நூற்கள் மக்களுக்கு நம்பிக்கை தருவதைப் பற்றிப் பேசுகின்றன.**



# HomeLife/GTA Realty Inc., Brokerage*

1711, McCowan Rd,#206, Scarborough, ON.

**Buy Or Sell Any Properties With Me**

**And Win This Brand New BMW**



**Sasi Chelvaratnam**
Sales Representative
**Cell: 416.858.4828**
**Office: 416.321.6969**




- Great Scarborough Location
- 4 Bedrooms/3 Washroom
- Close to All Amenities
- Call for Details...





- Beautyfull Detached House
- 4 Bedrooms/3 Washroom
- Great Location in Ajax
- Call for Details...




- Beautyfull Detached House
- 4 Bedrooms/3 Washroom
- Great Location in Markham
- Call for Details...




- Great Location in Brampton
- Beautiful Detached House
- 4 Bedrooms & 3 washrooms
- Call for Details....




- Well Maintained unit
- 2Bedrooms+Dent
- Very spacious condo
- Close to All Amenities




- Few years old Detached
- 3 Bedrooms/3 Washroom
- Demand Markham Area
- Close to all amenities.




- Great Location in Brampton
- Beautiful Detached House
- 4 Bedrooms & 3 washrooms
- Call for Details....




- Few Years Old in Markham
- 3 Bedrooms/3 Washroom
- Tastefuly Upgraded
- Close to all amenities.




- Excellent Investment
- Ideal For Medical/Dental
- Fully Equip Rooms
- Scarborough Location




- Great Location in Pickering
- Beautiful Detached House
- 4 Bedrooms & 3 washrooms
- Call for Details....

This is not intend to solicit properties currently listed for sale

*Each office independently owned and operated

# LIFE INSURANCE •RESP • NON MEDICAL INSURANCE



- **ஆயுட்காப்புறுதி**
  10, 15 அல்லது 20 வருடங்களில் செலுத்தி முடிக்கலாம்
- **வயோதிபர்களுக்கான காப்புறுதி**
  மருத்துவ பரிசோதனை எதுவும் இல்லாமல் பெற்றுக்கொள்ளலாம்.
- **கொடிய நோய்களுக்கான காப்புறுதி**
  காப்புறுதித் தொகையைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது கட்டிய பணம் முழுவதும் திரும்பப் பெறலாம்.
- **குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம்**
  20% அரச மானியத்துடன் எமது நிறுவனத்தால் 15% சலுகையும் வழங்கப்படும்.
- **ஈட்டுக்கடன் காப்புறுதி**
  Mortgage Insurance

Apex Creations - 416-297-0707

## வசந்த் விநாயகமூர்த்தி

காப்புறுதி முகவர்



**647-885-3012**

**www.vasanth.adstamil.com**

## ACCOUNTING & TAX

**Queen & Jameson**
10 MacDonell Ave.

**Pharamcy & Finch**
2525 Pharmacy Ave.

LiLand Insurance Inc.


Industrial Alliance
Insurance and Financial Services Inc.

759 Warden Ave. Toronto, ON. M1L 4B5 Tel : 416-759-5453 ext. 362

# அழகிய பூஞ்செடிகள்

# கார்த்திகைப் பூ

## (Glory Lily ) Gloriosa superba



சந்திரசேகரி
segari@thaiveedu.com

**அறிமுகம் :**

கார்த்திகைப்பூ கொல்கிகேசியே (Family Colchicaceae) குடும்பத்தைச் சேர்ந்தது. இந்தக்குடும்பத்தில் 5-6 இனங்கள் காணப்படும். வெப்ப வலயங்களாகிய ஆபிரிக்கா, ஆசியா, அவுஸ்ரேலியா, மலேசியா, இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் நீண்டகாலம் வாழும் பற்றிப் படர்ந்து ஏறும் கொடியாக வளர்கின்றது. இது நிமிர்ந்து அழகிய விரல்கள் போலவும் சுடர்கள் போலவும் காட்சி அளிப்பதால் அதியுயர்ந்த மாட்சிமை பொருந்திய கருத்தில் 'Gloriosa superba'என அழைக்கப்படுகின்றது. தனது பற்றும் கொடிச்சுருள் மூலம் வேறுதாவரங்கள் மேல் ஏறி, 3மீற் உயரம் வரை வளரக்கூடியது.

### அடையாளச்சின்னமாகிய அழகிய பூக்கள்

பூக்கள் பலரையும் கவரக்கூடியதாகப் பிரதிபலிக்கின்றன. பூக்கள் தீச்சுவாலை போன்று காணப்படுவதால் 'அக்கினிசலம்' என அழைக்கப்படும். நிறங்கள் பல மாதிரியாகவிருக்கும். பச்சையான மஞ்சள், மஞ்சள், செஞ்சிவப்பு, கடும்சிவப்பு, வெள்ளை நிறங்களில் பூக்கள் காணப்படும். பண்டைய காலத்தில் தேசங்களின் அடையாளச் சின்னங்களாக பூக்கள் இலங்குவது எல்லோரும் அறிந்த உண்மை. இந்த வகையில் கார்த்திகைப்பூ, சிம்பாவே, றோடேசியா நாட்டின் தேசிகப்பூவாகவும், தமிழ்நாட்டு மாநிலப்பூவாகவும் பிரகடனப்படுத்தியிருப்பதை நாம் அறிவோம்.

கார்த்திகை மாதத்தில் கொடியானது பூக்களைக் குலுங்க வைத்து காட்சி அளிப்பதால், தமிழீழத் தேசியக் கொடியின் வர்ணங்களின் பிரதிபலிப்பாகவும், தமிழீழத் தேசியப் பூவாகவும், கார்த்திகைப்பூ நவம்பர் மாதம் 2003ஆண்டில் பிரகடனப்படுத்தி இருப்பதையும் எல்லோரும் அறிந்திருக்கின்றனர். மக்கள் இறைவழிபாடுகளிலும் இப்பூவினைத் தொடர்பு படுத்தி இருக்கின்றனர். பண்டைத்தமிழர்கள் போர்க்கடவுளாக மதித்து வந்த முருகப் பெருமானுக்காக மலரும் கார்த்திகைப்பூவென குறிப்பிட்டுள்ளனர்.

இக்கொடி, ஒற்றை விதையிலைத் தாவரமாகும். தண்டு பசுமையானது, மென்மையானது. இலைகளின் நுனிகள் நீண்டு சுருண்டு பற்றும் கம்பிகளைப்போல, ஆதாரங்களைப் பற்றி பலஅடி உயரமாக வளர்கின்றன.

### கிழங்குகளும் பயிர்ச்செய்கையும்.



ஆண்டு தோறும் நிலத்திலுள்ள கிழங்குகளிலிருந்து புதிய செடிகள் தோன்றி வளர்கின்றன. கிழங்குகள் கலப்பை போல தோற்றம் அளிக்கின்றன. ஒரு செடியிலிருந்து இரு கிழங்குகள் மட்டுமே கிடைக்கும். பருமனைப் பொறுத்து, கிழங்குகள் பாதுகாக்கப்படும் காலம் வேறுபடுகின்றது. பொதுவாக 6-8 கிழமைகள் உறங்குநிலை தேவைப்படும். நன்கு செழிப்பாக வளர்வதற்கு வெப்பம் 59-80°F ம், நன்கு நீரோடும் நிலமும் தேவை. உரம் 15-10-15 உகந்ததாக இருக்கும். கிழங்குகள் நிரையாக 3அடி தூரத்தில் 4அங் இடைவெளியில் ஆதரவுக்கான தடிகளோடு பதிக்கவேண்டும். கிழங்கின் முனையிலிருந்து தோன்றும் கணுவிலிருந்து முளை ஆரம்பமாகி தனியான தண்டு மேலாகவும், அடியில் மென்மையான வேர்களும், தோன்றி விருத்தியாகின்றது. செடியின் இலைகள் காம்புகள் அற்றதாக அகலமாகவும் தடிப்பாகவும் காணப்படும். பக்கத்தண்டுகள் ஏறக்குறைய ஐந்து மட்டில் தோன்றும். இலைக்கணுக்களில் பூ அரும்புகள் விருத்தியாகும். தோட்டத்தில் பல செடிகள் காணும்போது பூக்கள் நிறைந்துள்ள அந்த இடமே உண்மையில் சொர்க்கபூமியாகக் காட்சியளிக்கும். பூக்கள் பெரியவை. அழகியவை. பூக்கள் 6 இதழ்களையுடையவை.

செப்ரம்பர் மாதம் தொடக்கம் மார்ச் மாதம் வரை பூக்கள் மலர்கின்றன. பூக்காம்புகள் நீளமானவை. பூக்கள் வாடாமல் பல நாட்கள் இருக்கும். பூக்களின் நிறம் மாறிக்கொண்டு போகும் தன்மையுள்ளதால், பலதரப்பட்ட நிறங்களை அங்கு காணக்கூடியதாக இருக்கும். கேசரங்கள் நீளமானவை. சூல்தண்டு குறுகியதாக, ஒருபுறம் மடிந்திருக்கும். சூலகம் மூன்று அறைகளையுடையதாயிருக்கும். பொதுவாக வித்துக்கள் மூலமும் பயிர் செய்கை மேற்கொள்ளப்படுகின்றன. பூக்கள் வெட்டப்பட்டு உலகரீதியாக சந்தைப்படுத்தப்படும்.

### பூச்சிகளின் தாக்கம்

பலதரப்பட்ட நோய் இருப்பதாக அவதானிக்கப்பட்டது. ஏபிட்ஸ், சிலந்திப்பேன், நத்தை வகைகள் குறிப்பிடத்தக்கவை. வைரஸ் தாக்கம் இலைகளின் பச்சையத்தைக் குறைப்பதால் நிறமாற்றம் நிகழ்கின்றன.

**- வீட்டுத் தோட்டம் - 9**

### மருத்துவ முக்கியத்துவம்

கிழங்குகள் ஆயுர்வேத மருத்துவத்தில் பயன்படுகின்றன. இதில் காணப்படும் நச்சுப் பொருளான கொல்கிசையின் வைத்திய முறைகளில் உபயோகமாகின்றது. தேள் கடிக்கு பயன்படுத்துவார்கள். இலை நுனிகளிலிருந்து வெளியாகும் திரவம் தோல் வெடிப்பு, தொப்பளம் போன்றவற்றிற்கு பயன் படும். வேர்கள் நீரோடு சேர்த்து அரைக்கப் பட்டு தலைமுடி உதிர்வதற்குப் பூசுவார்கள். கிழங்குகள், பொதுவாக பலதரப்பட்ட நோவுகள், ஆறாத புண்கள் விந்துவெளி-விடுதல், புற்றுநோய், போன்றவற்றிற்கு மருத்துவரீதியில் பயன்படுத்தப்படுகின்றது..

■ ■ ■



## Family Caricaceae
## பப்பாசி மரம்

**Botanical Name : Carica papaya(Eng.Name: Papaw)**



பப்பாசி பப்பாசியே குடும்பத்தைச் சேர்ந்தது. இது ஆரம்பத்தில் தென்மெச்சிக்கோ நகரத்தில் உண்டாக்கப்பட்டது. பின்னர், ஏனைய வெப்பப் பிரதேசங்களாகிய இலங்கை, இந்தியா, மலேசியா, இந்தநேசியா, அவுஸ்திரேலியா, ஆபிரிக்கா போன்ற நாடுகளிலும் சந்தைப்படுத்தும் விதத்தில் பயிர்செய்யப்படுகின்றது. இது ஒரு சிறிய காலம் வாழும், மிகவும் விரைவாக உண்டாகும், பெரிய வைரமான செடிவகையாக 10-13 அடி உயரமாக வளர்ந்து காணப்படும். ஒரு சில மரங்கள், தாக்கங்களினால் கிளைகள் விட்டும் காணப்படும். தண்டு பச்சை நிறம் அல்லது இளமஞ்சள் நிறமான குழாயாக, உட்குழிவுள்ளதாகவும் வெளியே தெளிவான இலையடித் தளிம்புகளையுடையதாகவும் காணப்படும். தண்டு ஏறக்குறைய 3-10 அங் விட்டத்திலிருக்கும். இலைகள் நேரடியாகத் தண்டின் மேற்பகுதியில் மட்டும் சுருள் போன்றதாக 2-3 அங் நீளமான இலைக்காம்புகளை உடையதாயிருக்கும். பூக்கள் ஐந்து இதழ்களையுடையவை. சில மரங்கள் பெண் அல்லது இருபாற்பூக்களையும் சில ஆண்பூக்களையும், சில ஆண், பெண் பூக்களையும் கொண்டு காணப்படும். பழங்கள் பல பருமன்களில் கூடிய பகுதி சுவையான சதைப்பற்றுள்ளதாகவும் வித்துக்கள் பலவற்றையும் அடக்கியிருக்கும். கூடிய விற்றமின் சீ காணப்படும். பழுத்த பழம் காலை உணவாகவும் சதைப்பற்றுள்ள பகுதி, சமையலில் பலவிதமாக உணவு தயாரிப்பதற்கும் பழயூஸ் குளிர்ந்த பானமாகவும் பாவிப்பார்கள்.

தண்டு, இலைகள், காய், பழங்கள் போன்றவற்றிலிருந்து காணப்படும் நொதியங்களான 'பப்பயின், கீமோபப்பயின்' சமீபாட்டிலும் பப்பயின் வாதநோய் குணப்படுத்தவதற்கும் பயன்படும். பால் போன்ற சாறு உலரவைத்து பிசின்ஒட்டு, பற்பசை செய்வதற்குப் உபயோகமாகும்.

உங்கள் குழந்தைகளின் உறுதியான எதிர்காலத்திற்கான முதலீடு




## HERITAGE EDUCATION FUNDS

Save towards your child's post-secondary education and find out how the government can help you pay for it.

- With a Heritage Education Funds RESP How much can you comfortably save?
- Want to start building your child's future today?
- 40 years of RESP expertise helping families from coast to coast.
- Start Early, Invest often, Stay invested.
- Start saving now and plan for your child's future possibilities.

We are also hiring sales representatives that are self motivated and are capable of building their own business.

HERITAGE Educational Foundation

**Thaya Balan**
(Agency Director)
**416.831.4725**



digi



அமைதியான வாழ்க்கைக்கு ஓர் அருமையான தீர்வு காப்புறுதி

**Life Insurance • Critical Insurance • Long Term Coverage • Disability Insurance**
**Final Expenses • Dental & Hospital Expenses • Travel Insurance**

All your Insurance Needs



**Thaya Balan**
Licensed Insurance Broker
Dir: **416.831.4725**
**Morning Star Financial Service**
5050 Dufferin St., Suite 218, Toronto, ON M3H 5T5
Tel: 416.661.9155 ext. 340

Industrial Alliance Insurance and Financial Services Inc.
Medavie Blue Cross
Transamerica Reinsurance
Canada Life
Manulife Financial
RBC Insurance

digi

## பணம் என்னடா பணம், பணம் பணம் தானடா நிரந்தரம்

# பொருளாதார நிலைவரம் உங்களது நிறுவனத்தை பாதிக்குமா?



ராகுலன்
- Accountant -
ragulan@thaiveedu.com


பொருளாதார நிலைவரம் பாதிக்கப்பட்டு கொண்டு போகும் போது உங்களது நிறுவனத்தின் பண வருவாயை நிர்வகிப்பது முக்கியமானது என்று பல அனுபவம் வாய்ந்த வர்த்தகர்கள் தெரிவித்துள்ளார்கள். இதற்கு முக்கியமாக செலவுத் தானத்தில் மிகவும் கவனமாகவும் ஒரு கஷ்டகாலத்திற்கு என சேமிப்பும் இருக்க வேண்டும்.

ஊழியர்களின் எண்ணிக்கை குறைவாகவும், வெளிநாடுகளுக்கு அனுப்பி செய்யக் கூடிய வேலைகளை (out sourcing) அனுப்பிச் செய்யக் கூடியதாகவும் இருக்க வேண்டும். கடின காலத்திற்கு என்று சேமித்து வைப்பது உண்மையாக கடின காலம் வரும்போது பணம் தான் பேரரசன் என்பதை உறுதி செய்யும்.

ஆனாலும், நிறுவனங்களின் நடவடிக்கைகளை அவதானித்த பல ஆய்வாளர்கள் பல நடத்துனர்களுக்கும் இது தெரிந்த போதிலும் இந்த விடயத்தைக் கையாள முழுமையான அறிவைப் பெற்றுக்கொள்ள வில்லை என்று தெரிவத்துள்ளார்கள். அதிகமாக இந்த நடத்துனர்கள் லாபமீட்டுவதிலும் Revenue கணக்கிடுவதிலும் காட்டும் ஆர்வத்தை Cash flowஇல் காட்டுவதில்லை.

இந்த Cash flow தான் ஒரு நிறுவனத்தின் முழுமையான நிதி ஆரோக்கியத்தைக் காட்டுவதாகும். இந்த Cash flow என்பது வருவாயிலிருந்து செலவீனத்தையும் depreciation, depletion, amortization என்பவற்றை நீக்கிவிட வருவதாகும்.

> **“ Cash flow என்பது வருவாயிலிருந்து செலவீனத்தையும் depreciation, depletion, amortization என்பவற்றை நீக்கிவிட வருவதோ. Cash flow தான் ஒரு நிறுவனத்தின் முழுமையான நிதி ஆரோக்கியத்தைக் காட்டுவதாகும். ”**

பொருளாதாரச் சூழல் எப்படி இருந்தாலும் இந்த Cash flowவை கட்டாயம் விளங்கி வைத்துக் கொள்ளவேண்டும் என்று Alex Morrison என்ற Ernest and Young நிறுவனத்தைச் சேர்ந்தவர் கூறுகிறார். இந்த நிறுவனம் ஒரு பெரிய கணக்காய்வு நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த Cash flow பற்றி எமது அறிவு ஒரு குறுகிய கால நீண்டகால பரிணாமத்தில் இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் உங்களது Cash flow இன்று எப்படி இருக்கிறது மூன்று மாதம் அல்லது ஒரு வருடத்தில் Cash flow எப்படி இருக்கும் என்று உங்களுக்கு ஒரு தெளிவு இருக்க வேண்டும். அப்போதுதான் ஒரு கடின காலத்தில் எப்படி எங்கிருந்து புதிய முதலீட்டுவது, வர்த்தக மாதிரியை காலத்தின் தேவைக் கேற்ப மாற்றுவது என்பது பற்றி தெளிவாக இருக்க முடியும். ஆனால், அதிகமான நிறுவனங்கள் ஆயத்தமாக இருக்காமையினால் இழப்புக்களைச் சந்திக்க நேரிடும். உங்களுடைய வங்கியுடனான உறவுகளை ஒரு இரவில் மாற்றிக் கொள்ள முடியாது.

இந்த Cash flow நிர்வாகம் எப்போதும் நடக்க வேண்டிய ஒரு விடயம். இதனுடைய நிர்வாகம் நல்ல காலத்திலோ கூடாத காலத்திலோ தங்கியிருப்பதில்லை. நீங்கள் திட்டமிடுவதில் மெத்தனமாக இருந்தால் இந்தப் பிரச்சினைகளுக்கு நீங்கள் ஆயத்தமாக இருக்கமாட்டீர்கள்.

ஆனால், மிகுந்த கவனமாக நீங்கள் திட்டமிட்டு இருந்ததுகூட சில நேரங்களில் அந்தத் திட்டம் சில வீதி தடைகளை சந்திக்க நேரும். இந்த நேரங்களில் கடனை அதிகரிப்பது நல்லதல்ல. ஆனால், நல்ல நேரங்களில் புதிய நிதியை (Finance) இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம். ஒரு செழிப்பான காலாண்டு நிலவரத்தைக் காட்டி ஒரு வங்கியிடம் இருந்து கடனைப் பெறுவது இலகு.

அத்துடன் பணத்தை சேர்ப்பதற்கு வேறும் பல வழிகள் இருக்கின்றன. Inventory குறைப்பதனால் பணத்தை சேர்க்கலாம். இது லாபத்தைக் குறைக்கலாம். ஆனால் உங்களின் வங்கியில் பணத்தின் மீதியை அதிகரிக்கும். ஊழியர்களின் எண்ணிக்கையையும் வினைதிறனையும் அதிகரிப்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

அத்துடன் ஒரு பொருளாதாரப் பின்னடைவுக் காலகட்டத்தில் எல்லா வழிவகைகளையும் பார்க்கவேண்டும். வர்த்தகத்தில் இருக்கக் கூடிய பங்காளர்கள், முதலீட்டாளர்கள், Suppliers, Landlords வாடிக்கையாளர்கள் என்று எல்லாக் கோணத்திலும் பார்த்து பணம் உங்களிடம் இருக்கத்தக்கதாக பார்த்துக் கொள்ள வேண்டும். உங்களின் பணம் அடுத்தவர் பையில் இருக்கும் போது உங்களுடையது அல்ல. உங்களின் வங்கிக்கு பணம் வந்த பின்னே உங்களுடையது ஆகும்.

கடினமான காலங்களில் உங்களின் Suppliers Landlord உடன் இலகுவான நிபந்தனைகளுடன் கூடிய ஒப்பந்தங்களைச் செய்து கொள்ள வேண்டும். அத்துடன் உங்கள் Balance Sheetஐப் பார்த்து பணத்தை விரைவாக உங்கள் வங்கிக் கணக்கிற்கு வரக் கூடியதாக பார்த்துக்கொள்ள வேண்டும்.

விரைவாகப் பணம் தருவோருக்கு கழிவுகளைத் தரலாம். விரைவாக உங்களின் பற்றுச்சீட்டுக்களை வாடிக்கையாளருக்கு அனுப்புவது முக்கியம். விரைவாக வாடிக்கையாளர்களுக்கு பொருட்களைப் பட்டுவாடா செய்யும் போது பணம் விரைவாக உங்களை வந்தடைய முடியும்.

இப்படி விரைவாக எல்லா வழியாலும் செயற்பட்டு வந்தால்தான் ஒரு கடின காலத்தை மனதில் கஷ்டம் இல்லாமல் ஓட்ட முடியும்.

அத்துடன் இந்த Cash flow எதிர்வு கூறுவதற்கு ஒரு யதார்த்தமான எதிர்பார்ப்புக்களைப் பாவிக்க வேண்டும். எவ்வளவு வரவு, செலவு வங்கியில் உள்ள மீதி என்பவை இதற்கு முக்கிய எண்களாகும். இவற்றை நீங்களே பராமரித்துக் கொள்வதற்கு பல கணனியில் பாவிக்கக்கூடிய மென்பொருட்கள் (Software) சந்தையில் உண்டு. உங்களின் வங்கிக் கணக்குகளைக் கூட இந்த மென்பொருட்களுள் நீங்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இங்கு மேற்கு நாட்டு பொருளாதாரத்தில் ஏற்ற இறக்கங்கள் ஒரு வட்டமாகவே வரும். ஒரு பின்னடைவுக் காலத்தில் தப்பிப்பிழைத்தால் தான் ஒரு செழிப்பான காலத்தில் பணமீட்டலாம்.

■ ■ ■


KESAVAN LAW OFFICE

இலவச ஆரம்ப ஆலோசனை
மாலை, வார இறுதி நாட்களிலும்
சந்திக்கலாம்

- Real Estate
- Business Law
- Immigration Law
- Family Law
- Last Wills
- Power of Attorney
- Affidavits



சட்டம் சம்பந்தமான சகல
தேவைகளுக்கும்
கேசவன் சட்ட நிறுவனம்

THANGAVEL M. KESAVAN
(Barrister & Solicitor)

Tel: 416-754-9843
Fax: 416-754-2362

5200 Finch Ave. East, Unit 302,
Scarborough, ON M1S 4Z5
(Middlefield & Finch)
Web: www.lawyers.com/kesavanlaw
E-Mail: kesavanlawoffice@bellnet.ca



வீடு வாடகைக்கு
McCowan & Seppard
சந்திப்புக்கு அருகாமையில்
3 அறைகள் கொண்ட தொடர்மாடிக் குடியிருப்பு வாடகைக்கு உண்டு
416 609 1924

# முகப்பரு நீங்க மூலிகை வைத்தியம்

**குளிர்காலம் ஆரம்பித்துவிட்டது. தடுப்பூசி (Flushot) எடுப்பது நல்லதா?**

ஞானம்

தடுப்பூசி எடுப்பது பொதுவாகவே நல்லதல்ல. வீரியம் குறைக்கப்பட்ட நோய்த்தொற்று கிருமிகள், பாதரசம் முதலியவை தடுப்பூசியின் மூலமாக நமது மூளையை சிறிது சிறிதாக தாக்கும் அபாயம் உண்டு. வட அமெரிக்கக் கண்டத்தில் பல மில்லியன் முதியோர் மன அழுத்தம் மற்றும் மூளை சம்பந்தப்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பது – அவர்கள் தங்கள் வாழ்நாட்களில் எடுத்துக்கொண்ட தடுப்பூசிகளால் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

உணவு, உறக்கம், உடற்பயிற்சி மூலம் நோய் எதிர்ப்பாற்றலை வளர்த்துக்கொள்வதுதான் நல்ல குடிமக்கள் செய்யவேண்டிய கடமை.

**டாக்டர், எனக்கு சர்க்கரை நோயின் பாதிப்பு 20 ஆண்டுகளாக உள்ளது. இப்பொழுது கை, கால் மூட்டுகளில் வலியும் உண்டு. எளிய தீர்வு இருந்தால் சொல்வீர்களா?**

லிங்குசாமி

முருங்கைக் கீரை, கறிவேப்பிலை, மிளகு, இஞ்சி, பூண்டு, சின்னவெங்காயம், நெல்லிவற்றல், இவற்றை இடித்து இரண்டு கோப்பை நீரில் கொதிக்கவைத்து நன்கு வற்றியவுடன் அதனை எடுத்து காலை உணவுக்குப் பின் அருந்திவர வேண்டும். இதன்மூலம் சர்க்கரை நோயின் பாதிப்புகளான மூட்டுவலி, முதுகு வலி, இடுப்புவலி, கழுத்துவலி, மரத்துப் போதல் என்பவை நீங்கும்.

**எனக்கு வயது 40. நான் கணனித் துறையில் வேலைசெய்கிறேன். கண்களில் சோர்வும், கண் நரம்புகளில் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது. இயற்கை நல மருத்துவத்தில் தீர்வு அறிய விரும்புகிறேன்.**

அரவிந்த்

முருங்கைக் கீரை, மிளகு, கறிவேப்பிலை, வெள்ளைப்பூண்டு சேர்த்து ரசம் வைத்து தினமும் இரவில் குடித்துவந்தால் உங்கள் பிரச்சினை தீரும். தவிர, கண்களைச் சுழற்றிப் பயிற்சி செய்யவேண்டும். போதிய ஓய்வும், பப்பாளிப் பழமும் உங்களுக்கு உதவும்.

**ஞாபகசக்திக்கு நல்ல மருந்து என்ன?**

வினயன்

வல்லாரை, பிரம்மி, முருங்கைக் கீரை, மற்றும் காலையில் 7.30 மணிக்கு எடுக்கும் சத்தான உணவு. இவைகளே ஞாபகசக்திக்கு நல்ல மருந்துகளாகும். தடுப்பூசிகள் அதிகம் எடுக்கக்கூடாது. மஞ்சளைத் தினந்தோறும் உணவில் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

**மன அமைதி கிடைக்க மருந்து உண்டா?**


குணா

நிச்சயமாக உண்டு. மரணமும் அதற்கு இணையான தூக்கமும்தான் மன அமைதிக்கு மருந்து. முருங்கையிலை இரசம் தினமும் குடித்துவந்தால் 'இம்சோம்னியா' போன்ற தூக்கமின்மை நோய் குணமாகும். மனமும் அமைதியடையும்.

**முகப்பரு நீங்க மூலிகை வைத்தியம் என்ன?**

வெண்ணிலா

சந்தனம் 25 கி, வசம்பு 25 கி, மல்லி விதை 25 கி, எடுத்து சிறிதளவு தண்ணீர் விட்டு அரைத்து முகத்தில் பூசிவந்தால் முகத்தில் உள்ள பருக்கள் மாறும். தழும்புகளும் குணமாகும்.



**நரம்புத் தளர்ச்சி நீங்க என்ன செய்யவேண்டும்?**

நல்லசிவம்

நெய், முருங்கைக் கீரை, பாசிப்பயறு இவற்றை தினமும் உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். 'தாது' குறைவு உள்ளவர்கள் வேகவைத்த வேர்க்கடலை (peanut) மற்றும் முருங்கைக் கீரை இவற்றை உணவில் சேர்த்துக்கொள்வதால் தாது விருத்தியடையும். முருங்கை ஒரு கற்பகம்.

"செறிமந்தம் வெப்பந் தெறிக்குந் தலை நோய்
வெறிமூர்ச்சை கண்ணோய் விலகும் - மறமே
நெருங்கையிலை யொத்தவிழி நேரிழையே நல்ல
முருங்கை யிலையை மொழி"

என்ற அகத்தியர் பாடல்மூலம் முருங்கையின் சிறப்பை உணர முடியும்.

**இளமை குன்றாமல் வாழ காயகல்ப மருந்து என்ன?**

பால்ராஜ்

ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல? நெல்லிக்காய், மங்குஸ்தான், கரிசாலை, மூங்கில் பூ, மூங்கில் அரிசி போன்ற எல்லாமே காயகல்ப மருந்துகள்தான்.

## மருத்துவக் கேள்வி - பதில்

**கால் பாதங்கள் அழகுடன் திகழ என்ன செய்யலாம்?**

பவளம்

கேரட் மற்றும் வெண்ணெய் இரண்டையும் சேர்த்து அரைத்து கால் பாதங்களில் தடவி வந்தால் பித்தவெடிப்புகள் மாறி பளபள வென்று அழகாய்த் தோன்றும்.

**மார்பக புற்றுநோய் வராமல் தடுக்க என்ன செய்யவேண்டும்?**

சாந்தி குருசாமி

வெள்ளைப்பூண்டு, சின்னவெங்காயம், கருவாப்பட்டை, இஞ்சி, கொத்தமல்லி இவைகளில் ஏதேனும் ஒன்றை தினமும் உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

**தலையில் புழுவெட்டு நீங்க என்ன செய்யவேண்டும்?**

விவேகம்

கொத்தமல்லி இலையைக் கசக்கி புழு வெட்டு உள்ள இடங்களில் தேய்த்து வரலாம். இங்குள்ள Nutrition store களில் silica என்ற மருந்து கிடைக்கின்றது. சித்த மருத்துவத்தில் கிடைக்கும் புழுவெட்டுத் தைலம் இதற்கு உதவும்.

**மெலிந்த உடல் பருமனாக என்ன செய்யவேண்டும்?**

குமார்

பொன்னாங்கண்ணிக் கீரையை துவரம் பருப்புடன் கடைந்து சிறிது நெய் சேர்த்து சாப்பிட்டு வந்தால் சில மாதங்களில் உடல் தேறி பளபளப்பாகும்.

**மலச்சிக்கல் நீங்க இயற்கை வைத்தியம் என்ன?**

ஒரு டம்ளர் வெந்நீரில் எலுமிச்சம் பழத்தை இரண்டாக வெட்டி பாதியளவு சாறுபிழிந்து உணவுக்குப் பின் அருந்திவர மலச்சிக்கல் தீரும். சோற்றுக் கத்தாழைச் சாறு, கற்கண்டு, மிளகு சேர்த்து அருந்திவந்தால் மலச்சிக்கல் நீங்கி உடல் சூடும் குறையும்.

**டாக்டர், எனக்கு உதிரப்போக்கு அதிகமாக உள்ளது. தயவுசெய்து இயற்கை நலத் தீர்வு ஒன்று கூறுங்கள்.**

மதுரவல்லித்தாயார்

கற்றாழைச் சாறு, பனங்கல்கண்டு சேர்த்து தினமும் அருந்திவந்தால் மாதவிலக்கு நாட்களில் ஏற்படும் அதிக உதிரப்போக்கைக் கட்டுப்படுத்தி கர்ப்ப சம்பந்தமான நோய்களை நீக்கி இளமையுடன் வாழலாம்.

**முடி வளர மூலிகை மருந்து என்ன?**

கற்றாழைச் சாறு, சம அளவு நல்லெண்ணெய் இரண்டையும் காய்ச்சி எடுத்து தலையில் தடவிவந்தால் முடி வளர்வதுடன் நல்ல நித்திரையும் வரும்.


இராஜசேகர் ஆத்தியப்பன்
rajasegar@thaiveedu.com




"பேய்க்கற்றா ழைக்குப் பெருமேகம் மெய்யெரிச்சல்
ஏய்க்கக்கூடா அழலும் ஏகுங்காண் - தாய்க்கு நிக
ராஞ்சிவந்த கற்றாழை யங்கங் குளிர்விக்கும்
பாய்ஞ்சயத்தைப் பொன்னாக்கும் பார்"

**பற்களுக்கான நல்ல பற்பசை என்ன?**

ஹெலன்

Dabur Red tooth past மிகவும் நல்ல பற்களைப் பாதுகாத்து பளிச்சிட வைக்கும் பற்பசை.

**மார்பகத்தின் வெளிப்பூச்சுக்கு எது நல்லது?**

ஹிலாரி

ஆண்களுக்கு சந்தனமும், பெண்களுக்கு மஞ்சளும் மார்பகத்தின் வெளிப்பூச்சுக்கு நல்லது. மார்பகம் வளர்ச்சி இல்லாத இளம் வயதுப் பெண்களுக்கு ஒரு ஊதாப்பூவின் வாசனைத் தைலம் மூலிகை மருத்துவத்தில் நல்ல பலனைத் தருகிறது.

**குழந்தைகளுக்கு ஏற்படும் தடிமன் (ஜலதோஷம்) நீங்க நம் நாட்டு மருத்துவம் என்ன?**

ஷியாமா

இரண்டு துண்டு இஞ்சியை எடுத்து தோல் சீவி சிறு துண்டுகளாக நறுக்கி, வெள்ளைப் பருத்தித் துணியில் (cotton) வைத்துப் பிழிந்து சாறு எடுத்து அத்துடன் சம அளவு தேன் கலந்து குழந்தைகளுக்குக் கொடுத்தால் தடிமன் (ஜலதோஷம்), இருமல் போன்றவை நீங்கும்.

**எனக்கு வயது 45. உடல் சூடு, சர்க்கரை நோய், மலச்சிக்கல், வாய்வு. வயிற்றுவலி, தலைமுடி உதிர்தல் போன்ற எல்லா உடல் உபாதைகளும் உள்ளன. இவைகளுக்கு மொத்தம் எத்தனை மருந்துகள் நான் எடுக்கவேண்டும்?**


சாந்தகுமார்

நீங்கள் சொன்ன ஒவ்வொரு பிரச்சினைக்கும் ஒவ்வொரு மருந்தை நான் சொன்னால் நிச்சயமாக அது ஏற்படுத்தும் பக்க விளைவுக்கு இன்னொரு மருந்தை நான் தேட வேண்டும். ஆனால், நீங்கள் குறிப்பிட்ட எல்லா நோய்களுக்கும் ஒரேயொரு மருந்து போதும். அது வெந்தயம். வெந்தயப் பொடி, வெந்தயத் தோசை, இதுபோக வெளிப்பூச்சாக தலையில் பூச அரைத்த வெந்தயம் என்று நீங்கள் வெந்தயத்தைப் பயன்படுத்தி சிறப்பான பலனைப் பெறலாம்.

■ ■ ■


Arthritis
முழங்கால், தோல்பட்டை, கைவிரல்களில்
திருகு வலியா? விரைவில் குணமடையலாம்
Blood pressure - Hyper Tension
அமைதியான ஆட்கொல்லி
SILINT KILLER
இரத்த அழுத்தமா
நல்ல சுகமடைய இயற்கை மூலிகை மருத்துவம்

canada 416 - 995 -0416
India -91-9362728808

திக்குவாய், ஞாபகசக்தி குறைவு, Dementia
மூளை வளர்ச்சி குறைவு – Autism
Alzimer, நடுக்குவாதம் – Parkinson
போன்ற நோய்களுக்கு
ஆயுர்வேதம்

மருத்துவ ஆலோசனை பெற அழையுங்கள்
416-995-0416


Welcome to....
Step Up To
40+
Years
Real Estate Experience
RED CARPET.
Royal Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
Join the Winning Real Estate Team for your Success
• Regular Sales Training from Experts (Won National Awards)
• Flexible Commission up to 100%
• Free Real Estate Classes
• Help for Newly licensed agents
• Referral leads
UP TO 100% COMMISSION
20 Years Real Estate Experience
Karu Kandiah
President
Bus: 416-284-5555
Fax: 416-284-5727
880 Ellesmere Road,Suite 204, Toronto, ON., M1P 2W6

# GRAND OPENING

HOMELIFE
HIGHER STANDARDS

## HomeLife/Future Realty Inc. Brokerage*

7 Eastvale Dr, Suit 205, Markham On. L3S 4N8

**Bus.: 905-201-9977 Fax : 905-201-9229**












# GRAND OPENING OUR NEW OFFICE

# வீட்டுக் காப்புறுதியும் அதன் முக்கியத்துவமும்

அலன் சிவசம்பு
- வீடு விற்பனைப் பிரதிநிதி -
alen@thaiveedu.com



நாம் பொதுவாக ஒரு வீடு வாங்குவதானால் பல வீடுகளைப் பார்த்த பின்பு அதில் எமக்கு முக்கியமான தேவைகள் அமைந்த வீட்டையே வாங்குவோம். அதேபோல் வீட்டுக்குக் காப்புறுதி வாங்கும் போதும் பல காப்புறுதி செய்யும் இடங்களுக்குச் சென்று அதில் எமக்கு எந்தக் காப்புறுதி பொருந்துகின்றதோ அதைத்தான் வாங்க வேண்டும். வீடு வாங்குவது ஒரு பெரிய முதலீடாகும். அதே போல்தான் அதைப் பாதுகாப்பதற்கும் நாம் சரியான காப்புறுதியை வாங்குதல் எமது பெரிய முதலீட்டைப் பாதுகாக்கும்.

பொதுவாக நாம் வீட்டுக் காப்புறுதி வாங்கும் போது நாம் நெருப்பால் ஏற்படும் ஆபத்தை மட்டும் தான் நினைக்கின்றோம். ஆனால், வீட்டிற்கு காப்புறுதி வேறு முக்கியமான தேவைகளுக்கும் உண்டு. அதாவது எமது சொந்தப் பொருட்கள், நெருப்பால் ஏற்படும் விபத்து, Basementல் கசிவு ஏற்படுதல் ஆகிய பலவற்றையும் நினைவில் கொண்டு வாங்குதல் நல்லதாகும். வீட்டுக் காப்புறுதி ஆனது ஒவ்வொரு காப்புறுதி Company களுக்கு மட்டும் அல்லாது ஒவ்வொரு வீட்டிற்கும் வித்தியாசம் ஏற்படும். அத்துடன் விலையிலும் வித்தியாசம் ஏற்படலாம்.

Insurance bureau of Canada (IBC)யின்படி நான்கு விதமான Standard Policyகள் உள்ளன.

- Comprehensive Coverage (கூடுதலாக எல்லாவிதமான தேவைகளையும் உள்ளடக்கும்)
- A Basic – ஒரு சில குறிப்பிட்ட Coverage உள்ளடக்கியிருக்கும் அதாவது Fire, theft)
- Broad Coverage Buildingக்கு மட்டும் Comprehensive Coverage. (அத்துடன் சில குறிப்பிட்ட தேவைகளுக்கு)
- No Frills policy சில வீடுகளில் Physical defect இருந்தால் அந்த வீட்டுக்கு சாதாரண காப்புறுதி ஸ்தாபனங்கள் காப்புறுதி கொடுக்க மாட்டாது. முதலில் defectற்குக் கொடுக்கும் ஸ்தாபனத்தில் எடுத்து விட்டு பின்பு பிழைகளைத் திருத்திய பின்பு சாதாரண காப்புறுதி ஸ்தாபனங்களுக்குச் செல்வதால் வருடாந்தம் செலுத்தும் செலவைக் குறைக்கலாம்.

கூடுதலான Insurance Policyகளில் சில நிபந்தனைகள் இருக்கலாம். அதாவது எந்த விதமான Damageற்கு காப்புறுதி செலுத்தப்படும், எதற்கு காப்புறுதி செலுத்தமாட்டாது என்பதாகும். ஆகவே Insuranceஐ எடுக்கும் முன்பு கேட்கப்பட வேண்டிய சில முக்கியமான கேள்விகளைக் கீழே குறிப்பிடுகின்றேன்.

- What kind of home owner's policy do I have and who / what is covered under it?
- How do I know I'm adequately insured?
- What is not covered in my homeowner's policy?
- Do I have replacement cost? what about granted replacement cost?
- What are the limitations on valuables, such as Jewellery, silverware, and Computers?
- What does my policy cover in terms of water damage?
- What is my deductible? How much money can save on my premium by choosing a higher deductible?
- What optional coverage should I consider?
- What safety features can I install that will help me save money and increase my protection?
- Does the company offer 24 hour claims service?

எம்மால் ஓடித்திரிந்து சரியான காப்புறுதியைப் பெற்றுக்கொள்ள நேரம் இல்லாவிடில் ஒரு Certified காப்புறுதியாளரிடம் அணுகி அவர் மூலம் செய்வதால் எமது வீட்டிற்குத் தேவையான காப்புறுதியைப் பெற்றுக் கொள்ளலாம்.

### கூடுதலான வீட்டுக் காப்புறுதிகள் சில இழப்புக்களை காப்புறுதியில் உள்ளடக்க மாட்டாது

அவற்றில் சிலவற்றைக் கீழே பார்க்கவும்.

- ஒவ்வொரு நாளும் பாவிக்கும் பொருட்களில் ஏற்படும் தேய்வனவுகள், (கறல் (rust) பிடிக்கும் போருட்கள்).
- வெள்ளத்தால், underground water, ஏற்படும் பாதிப்பு.
- சரியான முறையில் Heater பாவிக்காமல் அதனால் ஏற்படும் பாதிப்பு (Indoor plumbing)
- வீட்டின் வெளிப்பகுதியில் ஏற்படும் Freezing, melting, or moving snow or ice.
- வீட்டில் ஏற்படும் சில பாதிப்பு (termites, squirrels, mice போன்றவற்றால் ஏற்பட்டால்).

ஆகவே மேலே குறிப்பிட்டுள்ள தேவைகளுக்கு ஏற்ப உங்களுக்குத் தேவையான காப்புறுதியைப் பெற்றுக்கொள்வது உங்களது பெரிய முதலீட்டிற்கு ஒரு பாதுகாப்பாக அமையும். அத்துடன் ஒரு வீட்டை வாங்கும் போது, தேவை ஏற்படும் மற்றைய காப்புறுதியும் அவற்றின் தேவைகளும்.

- High Ratio Insurance – கடன் வாங்கும் தொகை 80% வீதத்திற்கு மேலே அதிகரித்தால்.
- Mortgage Life Insurance – வீட்டு உரிமையாளர் இறந்தாலோ, அவர் முழுசாக இயங்கமுடியாமல் போனாலோ தேவை ஏற்படும்.
- Mortgage loan Insurance- பணக்கஷ்டம் வந்து கடன் கட்ட முடியாது போகும்போது வீடு வங்கியினால் விற்கப்பட்டால் உங்களது முதல் (Principal) மீளப்பெறுவதற்கு.
- Title Insurance - Titleல் ஏதாவது பிரச்சனை ஏற்பட்டாலோ, அல்லது வீட்டு உரிமையாளர்களின் tatle detects and tatle fraund.

■ ■ ■

## சக்தி என்றால் காப்புறுதி



1983ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித்துறையில்
முழுநேர நெறியான சேவை

"சகல காப்புறுதி நிறுவனங்களினதும் பிரதிநிதி"

- பாரபட்சமின்றி எந்த நிறுவன திட்டமாக இருப்பினும் தெளிவான துல்லியமான இலகுவில் கிரகிக்கும் வண்ணம் விளக்கம்.
- 9000 இற்கும் மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்
- 90க்கும் மேலான துரித காப்புறுதி இழப்பீடுகள்.
- எனது வாடிக்கையாளர் பட்டியலில் ஒருசில
  - வருமான வரி இலாகா, கணக்கியல் சோதனையாளர்கள் (Revenue Canada Auditors) .
  - நிதியமைச்சு அதிகாரிகள் (Ministry of Financial Services).
  - காப்புறுதி பிரதிநிதிகள், அவர்கள் குடும்ப அங்கத்தவர்கள், முதியோர், சிறார்கள்,
  - பிரபல வர்த்தகர்கள், குடும்பத்தவர்கள்,
  - பிரபல எழுத்தாளர்கள்,
  - வைத்தியர்கள்,
  - வழக்கறிஞர்கள்
- 85 வயதுக்குட்பட்ட எவருக்கும், எச்சூழ்நிலையிலும், நிச்சயமாக காப்புறுதியளிக்கும் திறமை (நிறுவனங்களின் நிபந்தனைப்படி)
- எக்காப்புறுதித் திட்டமாக இருப்பினும், விளக்கத்துடன் மன ஆறுதல் திட்டமாக பெற்றிட தயங்காமல் நாடுங்கள்
- மருத்துவ ரீதியின்றி 275,000 வரை காப்புறுதி

## - சக்திவேல் -

தொலைபேசி: 416.706.3530, 905.428.9299, 905.763.8912
Fax: 905.428.9307 Email: george14@sympatico.ca

மன்னிக்கவும்!
வாகனக் காப்புறுதி (Car Insurance), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!

## வீடு வாங்க விற்க




Sutton

**Alen Sivasambu**
Sales Representative



**Please Call Alen :**
**905-822-5000**
Fax: 905-822-5617

alen@sutton.com

# பங்குச் சந்தையில் தற்போது செய்யக்கூடியது என்ன?

மாறன் செல்லையா

- நிதி திட்டமிடல் ஆலோசகர் -

maran@thaiveedu.com



கடந்த காலங்களில் பங்குச் சந்தை சுட்டிகள் மேல் நோக்கியே போய்க்கொண்டிருக்கும் போது பங்குச் சந்தை முதலீடு பற்றி ஆய்வு செய்வது சுலபம். ஆனால் தற்போது எல்லாமே இறங்கு முகமாக இருக்கையில் மனம் போன போக்கிலே ஆய்வுகளைச் செய்து மக்களுடைய கடினமாக உழைத்த பணம் காற்றிலே போகும்படி செய்துவிடக் கூடாது.

இந்த ஆய்வைச் செய்வதற்கு தற்போது சந்தையில் என்ன நடக்கிறது என அறிந்து கொள்ள வேண்டும். அமெரிக்காவில் அதிகளவு வீக்கமடைந்த வீட்டு விலை பரிமாற்றங்களுக்கு அமெரிக்க வங்கிகள் 100% ஈட்டுக் கடனை கேட்டு கேள்வியில்லாமல் வழங்கியதைத் தொடர்ந்து அந்த விலைகளை சந்தை தொடர்ந்து நிலைநிறுத்த முடியாமல் சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த உயர்வு கடந்த 15 வருடங்களாக நடைபெறுகிறது.

இந்த வீழ்ச்சியைத் தொடர்ந்து வங்கிகளில் 100% கடன் பெற்று வீடு வாங்கியவர்கள் வீடுகளில் விலை சரியும் போது தாம் வீட்டின் தற்போதைய பெறுமதியை விட அவர்களால் ஈட்டுக் கடன் அதிகமாக இருந்ததால் அந்த கடனிலிருந்து வெளியேற தீர்மானித்தார்கள். இதுதான் அமெரிக்க ஈட்டுக்கடன் சந்தையின் வீழ்ச்சியின் ரகசியம். இது அமெரிக்காவில் மட்டுமல்லாது மேலும் பல ஐரோப்பிய நாடுகளிலும் நடந்தது.

நுகர்வோர் ஒரு புறம் இருக்க இந்த கடனை கொடுத்த வங்கிகள் இவற்றை வித்தியாசமான முறிகளாக முதலீட்டாளர்களுக்கு விற்றார்கள். அத்துடன் புதிய கணணி தொழில் நுட்பங்களால் மிகவும் சிக்கலாக அமைக்கப்பட்ட இந்த முதலீட்டுச் சாதனங்கள் ஒரு காகித வீடு போல சரியத் தொடங்கின. இந்த சாதனங்களின் சரியான பெறுமதியை அளவிடவோ இவற்றிற்கு ஒரு சட்ட ரீதியான கட்டுக்கோப்பை அரசாங்கங்களால் சரியான நேரத்திற்கு தரமுடியாமல் இருந்தது.

இந்த முதலீட்டுச் சாதனங்களின் சரிவு ஒரு பாரிய பிரச்சினையாக மாறிய போது அமெரிக்காவின் பாரிய முதலீட்டு வங்கிகள் சிறிய வங்கிகள் பெரும் பிரச்சினையைச் சந்தித்தன. பணத் man brothers, Bear stearns போன்ற நிறுவனங்கள் கூறுபோட்டு விற்கப் பட்டன. பெரிய வங்கிகள் பாரிய இழப்பைச் சந்தித்தன. இதைத் தொடர்ந்து உலக வங்கிகள் பங்குச் சந்தைகளிலும் முதலீட்டாளர்கள் நம்பிக்கை இழந்தார்கள். இதனால் முதலாளித்துவத்தின் முதுகெலும்புகளான வங்கிகளும் பங்குச் சந்தையும் பாரிய சரிவைச் சந்தித்தன. Ice land, Argantina, Pakistan போன்ற நாடுகள் பாரிய பொருளாதார சிக்கலை சந்தித்தன.

இதனைத் தொடர்ந்து அமெரிக்க மத்திய அரசும் ஐரோப்பிய அரசுகளின் நடவடிக்கை காரணமாக இந்த பிரச்சினைக்கு இந்த நிதி நிறுவனங்களின் அரசாங்கங்கள் பாரிய முதலீடுகளை நடத்த தீர்மானித்தன. ஆயினும் முதலீட்டு சந்தைகளிலும் பழைய நம்பிக்கை நிலைக்கு முதலீட்டாளர்கள் இன்னும் வரவில்லை. இந்த சரிவுகள் பொருளாதாரத்தில் ஏற்படுத்தக்கூடிய பாதிப்புக்கள் குறித்து இன்னும் தெளிவாக ஒருவருக்கும் தெரியவில்லை.

பொருளாதாரம் பற்றி கடந்த தேர்தலில் விபரிக்கப் போன பிரதம மந்திரி Harper ஒவ்வொரு நாளும் வித்தியாசமான தொனியில் பேசிக் கொண்டிருந்தார். பங்குச் சந்தை சரிவைப் பற்றிச் சொன்ன அவர் இது பங்குகளை வாங்குவதற்கு நல்ல சந்தர்ப்பம் என்றார். கனடிய நிதியமைச்சர் கூட 25 Billion நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். இந்த நிதி வங்கிகள் பிரச்சினைக்குட்பட்டால் அதில் முதலிட உதவும்.

தற்போது எல்லோருடைய மனதிலும் ஏற்பட்டுள்ள கேள்வி இந்தப் பிரச்சினை எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது. எப்படிப்பட்ட தாக்கந் தரும் எவ்வளவு பேர் வேலையிழந்து போவர் என்பதே. இதைத் தொடங்கிய நிறுவனங்களும் மக்களும் தமது செலவீனங்களைத் சுருக்கத் தொடங்கியுள்ளன.

இப்படிப்பட்ட காலகட்டங்களில் defensive stockஇல் முதலிட வேண்டும் என்று சில நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த நிறுவனங்கள் இந்தப் பிரச்சினைகளுக்கு மத்தியில் ஒரு உறுதி நிலையுடன் இருக்கும் இந்த நிறுவனங்கள் வர்த்தகம் உணவு, புகையிலை, utilitilities போன்றவையாகும். ஏனென்றால் மக்களின் அடிப்படைத் தேவைகள் பொருளாதார பின்னடைவுக் காலத்திலும் மக்கள் சில விடயங்களை நிறுத்த முடியாது. சாதாரணமாகப் புகைப்பவர் வேலையில்லாவிட்டால் கூடப் புகைப்பார்கள். குடிப்பவர்கள் இன்னும் குடிப்பார்கள். இந்த நிறுவனங்கள் பொருளாதாரம் வளரும் போது பெரிதாக வளருவதில்லை. அதுபோலவே வீழ்ச்சியடையும் போதும் பெரிதாக வீழ்ச்சியடைவதில்லை. ஏனென்றால் கேள்வி வழங்கள் பெரிதாக மாறுவதில்லை.

இந்த வகையில் CML Health care என்ற நிறுவனம் சுகாதாரம் சம்பந்தமான பரிசோதனைகளை செய்யும் நிறுவனமாகும். இந்த சேவைகளுக்கு மாகாண அரசு செலவிடுவதால் இவை கட்டாயம் தொடர்ந்து நடக்கும். அத்துடன் இந்த நிறுவனங்கள் கடந்த 30 வருடங்களாக பாரிய வளர்ச்சியைக் காட்டியதுடன் dividiendஉம் தரும் நிறுவனமாகும். அதனுடைய Dividiend 8% தற்போதைய நிலையில் மிகவும் கவர்ச்சிகரமானதும் ஆகும்.

■ ■ ■

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

*E-mail:thaiveedu@gmail.com*

*Fax: 416-849-0594*

*Tel: 416-646-3422*

**Law Office**

**T. JEGATHEESAN**

(Barrister, Solicitor and Notary Public (on)



உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

**தி. ஜெகதீசன்**

(Barrister, Solicitor and Notary Public (on)

Off: **416 • 266 • 6154**
Res: 416 • 449 • 0358
Fax: 416 • 266 • 4677

2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3


வீடு வாங்குவதற்கும் விற்பதற்கும்



CENTURY 21 SERVICES PLUS
5835, Taschereau blvd (office 207)
Brossard, Quebec
J4Z 1A5
sugumaran@sympatico.ca

SUGUMARAN SINNIAH
(Chartered real estate broker)
Office : (514) 299-3186
(450) 926-1881




FULL TIME
REAL ESTATE AGENT
வீடு வாங்க விற்க
St.Clair/ Rockcliffe
$850 For Lease
1 Bedroom, 1 Washroom
Large Size One Bedroom Basement Appartment. Private Front Door Entrance
Neilson/Ellesmere
$1,000 For Lease
3 Bedrooms, 2 Washrooms
3 Bedroom End Unit Town House. Walk To Uoft Scarborough Campus, Shopping
Mccowan/Lawrence
$1,300 For Lease
4 Bedrooms, 2 Washrooms
Well Maintained 4 Bdrm Detached Home In A Very In Demand Location
Mccowan/Progress
$1,600 For Lease
2 Bedrooms, 2 Washrooms
Living With Comfort And Convenience. Immaculate 2-Storey Townhouse
Victoria Park/Eglinton
$239,000
2+1 Bedrooms, 1 Washroom
Prestigous 'Victoria Village' Townhouse In Convenient Location. Corner Unit Move-In
Birchmount/Ellesmere
$249,900
2+1 Bedrooms, 2 Washrooms
Luxury Tridel Built - Well Kept Move-In Condition. Very Spacious Living/Dining Room
Midland/Finch
$269,900
Well Maintained Industrial/ Commercial Condo In A Great, Covenient Location, Total Area 2,150 Sq Ft
Kennedy/S Of Eglinton
$309,900
3+2 Bedrooms, 2 Washrooms
Motivated Seller. Totally Renovated Main Floor! Ready To Move In! Great Investment
9th Line/Hooverpark
$464,900
4 Bedrooms, 3 Washrooms
Gorgeous, Unique & Popular Mattamy Built Home On Premuim Lot With Panoramic View
Finch/Staines
$454,900
3+1 Bedrooms, 3 Washrooms
Just Like A Model Home, A Must See! Approx $75,000 In Upgrades
Neilson/ Sheppard
Exclusive
$129,000
2+1 Bedrooms, 2 Washrooms
Large Living Room, 2 parking underground & Locker
Stouffville
$449,900
4 Bedrooms, 3 Washrooms
Tastefully Upgraded. Walk-Out To Balcony From Living Room
Ashok Ragupathy, B.Com
Sales Representative
Cell: 647-401-9203
Office: 416.284.5555
E-Mail: Ashokragupathy@yahoo.ca
RED CARPET.
Royal Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
880 Ellesmere Road, Suite 204, Toronto, M1P 2W6



**Shan Thayaparan**
Sales Representative
**Dir. 416-567-7675**
Visit us at: www.shan123.com
" Your peace of mind is our goal "

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife GTA**

GTA Realty Inc., Brokerage*
Bus: 416-321-6969
Fax: 416-321-6963
206-1711 McCowan Rd,
Scarborough - ON., M1S 3Y3

Not intended to solicit properties currently listed for sale or buyers under contract.
*Each office is independently owned and operated.




### Scarborough

**Power Of Sale**
**$133,900**



Very Spacious 2Bedrooms with 2 Washrooms. Steps to TTC, Mall, Bank, Doctor's office, Library, Parks, Community centre, and Elementary and High School. Why Rent? Very good deal!!!!
**Please call for more details**

### Scarborough

**Affordable Detach**
**$259,900**



Open Concept 3 Bedrooms home with finished basement, Close to TTC, Schools, Shopping, Churches and Park. Minutes to 401 and 407.
**Please Call for more details**

### Scarborough

**Affordable Detach**
**$249,900**



Ideal starter 3 Bedroom home. Close to TTC, 401, Schools and more. Newer Kitchen, Windows and Room. Ready to move in.
**Please call for more details**

### Scarborough

**Affordable Detach**
**$260,000**



4 bedroom detached bungalow Located in a very good neighbourhood. Close schools, TTC, 401, Hospital, Park and Community centre.
**Call for more details**

### Meadowvale / Shepard

**Semi-Det**
**3 Years old**
**$354,900**



The largest model. 1850 sqf. 4 bedrooms Fenced backyard, California shutters, Sep. Entrance to basment, Access to Garage. Close to TTC & 401
**Please call for more details**

### Meadowvale / Shepard

**Famous Trinity Bay**
**$419,900**



Immaculate Detached home on a Premium lot. Stone front. Professionally landscaped. Hardwood main floors. Oak Stairs. Separate entrance and more
**Please call for more details**

## Business for Sale

**Pizza and Fast Food**
Business for sale Scar location Very Low Rent.
$18,000 sales/Month
40 Seats & LLBO Ready
**$ 59,900**

## Business for Sale

**BAR&GRILL**
Business for sale
Scarborough location
Very Low Rent.
$30,000 Sales/Month
**$ 89,900**

## Business for Sale
**BAR & GRILL**
Business & Property for sale
Oshawa location
26Yrs Same Owner
$100,000 Sale/ Month
130 Seats **$325,000**
**Property $2.2 Million**




## Looking For.....
- > Mortgages
- > Refinancing
- > 2nd Mortgages
- > Business Loans


## Call Now
**416-826-7426**

## Renters Zone
- > Credit Check
- > Reference Check
- > Employment Check
- > Good Tenants

அறியவில்லையானால் அறிந்துகொள்ளுங்கள் - கனடாவில் சில தகவல்கள்

# வாகன காப்புறுதிகளின் விலைகளை நிர்ணயிக்கும் காரணிகள்

தகவல் தொடர் - 23



சிவ பஞ்சலிங்கம்
- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -
sivapunch@thaiveedu.com

- **வாகன காப்புறுதியில் மாதா மாதம் செலுத்தும் விலைகளை நிர்ணயிக்கும் காரணிகள் எவை?**
- **வாகன காப்புறுதியின் விலைகள் என்பது கனடாவில் தனி ஒருவர் தமது வாகனத்துக்கு பெற்றுக் கொள்ள முயற்சிக்கும் போது கம்பனிக்கு கம்பனி விலைகளில் வித்தியாசம் இருப்பது ஏன்?**
- **ஒழுங்கான பதிவுகளை *(Good Records)* தொடர்ந்து வைத்திருந்தும், தொடர்ந்து வருடம் தோறும் புதுப்பிக்கும் போது, மாத கட்டுப் பணம் அதிகரிப்பது எதற்காக?**

வாகன காப்புறுதியின் விலையினை நிர்ணயிப்பதில் காப்புறுதி செய்து கொள்ள போகின்றவரின் தனிப்பட்ட நிலைப்பாட்டில் பின்வரும் அம்சங்கள் விலையினை தீர்மானிக்கின்றன.

### வயது, பால், திருமணமானவரா?

"வயது" (Age) என்பது வாகன காப்புறுதியின் விலையினை தீர்மானிக்கும் பிரதான அம்சங்களில் ஒன்றாகும். 65 வயதினைக் கடந்து, ஓய்வூதிய வருமானம் பெற்றுக் கொண்டிருக்கும் ஒருவர் வாகன காப்புறுதி செய்யும்போது அவர்களுக்கு ஒரு விசேட கழிவு (Retiree Discount)என சகல காப்புறுதி கம்பனிகளும் வழங்குவது வழமையாகும்.

ஏனெனில் இவ் வயதில் உள்ளவர்கள் மிக மெதுவாக, அவதானமாக வாகனம் ஓட்டுவதால், இம் முதியோர் விபத்துகளை உருவாக்கி நட்ட ஈடு கோறலுக்கு வருவது அரிது என்பதால் இவ் விசேட கழிவு வழங்கப்படுகின்றது.

ஆனால் இதே நிலை வயது குறைந்த திருமணமாகாத நிலையில் இருக்கும் இளம் வயதினருக்கு எதிர்மாறாகவே இருக்கும். கனடாவில் விபத்துகளை அதிகமாக உருவாக்கும் வயதினர் இவர்கள் என புள்ளி விபர அறிக்கைகள் தெரிவிக்கின்றன. எனவே வயது மிக குறைந்த (Teen age) நிலையில் உள்ளவர்களுக்குரிய காப்புறுதியின் விலை என்பதும் மிகவும் அதிகமாகவே இருக்கும்.

வீட்டில் உள்ள, வாகன ஓட்டத்தில் அனுபவம் உள்ள முதியவர் ஒருவரை வாகன உரிமையாளராகவும், முதல் சாரதியாகவும் நியமித்து இவ் வயது குறைந்தவரை இரண்டாவது சாரதியாக நியமித்தால் சிறிது பணத்தினை இவ் விலையில் மீதப்படுத்தலாம்.

விலையினை குறைப்பதற்கு இந்த இடத்தில் இது ஒரு வழி! இரண்டாவது சாரதியாக தொடர்ந்து பதிவில் வைத்திருந்து, எதுவித மான தப்பு என்ற நிலையில் இருந்து விபத்துகளை உருவாக்கி, நட்ட ஈடுகளும் (at fault claim) கோரவில்லையானால், இவ் வயது குறைந்த நபருக்கு இது ஒரு நல்ல பதிவாக அமையும். தொடர்ந்து இவ் வயது குறைந்தவர் சில வருடங்களின் பின்பு தனியாக வாகன காப்புறுதி செய்யும்போது அது சாதகமாக அமையும்.

ஆனால்! இங்கு ஒரு பிரச்சனை! இவ் வயது குறைந்த நபர் வாகனத்தினை செலுத்தும் போது, தப்பான நிலையில் விபத்துகள், நட்ட ஈடுகள் கோரும் நிலை என போயிருந்தால் அது அடிப்படையில் உள்ள முதல் சாரதியினையும், தொடர்ந்து காப்புறுதி விலையில் பாதிக்கும்.

### வாகனமோட்டும் சாரதியின் லைசென்சின் தன்மையும் அனுபவங்களும் (Driver's Information)

வாகனமோட்டும் சாரதி அனுமதி பத்திரங்கள் என்பது பல வகைப்படும்.

***G2 License***: இது தற்காலிகமான சில வருடங்களுக்கு மட்டும் செல்லுபடியாகும் சாரதி பத்திரம் ஆகும். இச் சாரதி அனுமதி பத்திரம் உள்ளவர்களுக்கு காப்புறுதி விலை சற்று அதிகமாக இருக்கும்.

***G License:*** இது குறிப்பிட்ட சாதாரண வாகனங்களை ஓட்டும் நிரந்தரமான லைசென்ஸ் (Fully Graduation License) ஆகும். இந்த லைசென்ஸ் என்ற நிலைமைக்கு வந்தவர்களுக்கு முதல் நிலையில் இருந்து ஒரு சிறு தொகை விலை கழிவு கிடைக்கும் (எனவே தான் இவ் லைசென்சினை பெற்றவர்கள் உடனடியாக தங்கள் தங்கள் வாகன காப்புறுதி கம்பனிக்கு எழுத்தில் அறிவித்து விலைகளை குறைத்து கொள்ளுங்கள் என அறிவுரை வழங்கப்படுவது வழக்கமாகும்). இது தவிர சிறு பாடசாலை பேருந்து, சிறு பிரயாணிகள் பேருந்து ஓட்டும் லைசென்ஸ் (D License), றக் வண்டி, பெரிய பாடசாலை பேருந்து, நகர சபைக்குரிய பிரயாணிகள் பேருந்து வண்டிகள் ஓட்டும் லைசென்ஸ் (B License), பாரிய தொடர் றக் வண்டி ஓட்டும் லைசென்ஸ் (A License) என பல வகை லைசென்ஸ் வைத்திருப்பவர்கள், வைத்திருக்கும் லைசென்சின் தரம் என்ற தன்மையில் உயர்ந்தவர்கள் ஆவார்கள்.

இங்கு சாரதி அனுமதி பத்திரம் பெற்று எவ்வளவு காலம் அனுபவம் என்பதுடன் வீதி ஒழுங்கு சட்டத்தினை மீறி ஏதாவது தண்டனை ரிக்கற்றுகள் பெற்று மாகாண அரசின் புள்ளி மதிப்பீடுகளை இழந்திருந்தால், அது வாகன காப்புறுதியின் விலை நிர்ணயத்தினை பாதிக்கும்.

இவ் விலை உயர்வில் இருந்து தப்புவதற்கு ஒரே வழி! வீதி ஒழுங்குகளை மதித்து, கவனமாக வாகனம் செலுத்துவது ஆகும். ஏனெனில் வீதி ஒழுங்குகளை அனுசரித்து வாகனம் செலுத்தாதவர்கள் விபத்துக்களை எதிர் கொண்டு நட்ட ஈட்டுக்கு வருவார்கள் என காப்புறுதி கம்பனி கருதுவதால், இந்த நிலையில் உள்ளவர்களுக்கு விலையினை அதிகமாக நிர்ணயிக்கின்றது.

வாகனம் ஓட்டுதலை தொழிலாக செய்பவர்களுக்கு முக்கியமாக சாரதி பயிற்றுனர், பிரயாணிகள் பேருந்துகளின் சாரதிகள் போன்றோருக்கு மூன்று புள்ளி மதிப்பீட்டு இழப்புகளை (Loss three demerit points in driving record) எதிர் கொண்டால் தொழில் லைசென்சினையே இழக்க வேண்டி ஏற்படும் நிலை ஒன்றாறியோ மாகாணத்தில் தற்போது சட்டமாக உருவாக்கப்பட்டுள்ளது. எனவே தான் காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும்போது இப் பதிவுகள் எடுத்து பரிசீலனை செய்வது வழமையாகும்.

### ஏற்கனவே வாகன காப்புறுதி வைத்திருந்த அனுபவங்களும் நட்ட ஈடுகள் கோரிய வரலாறுகள், பதிவுகளும். (Past Insurance Experience & Claims History)

- என்ன மாதிரியான வாகனம் எவ்வளவு காலம், கடந்த காலங்களில் சொந்தமாக வைத்திருந்தார்?
- எந்த கம்பனியில் எவ்வளவு காலம் காப்புறுதி ஒப்பந்தம் செய்து வைத்திருந்தார்?
- எந்தெந்த காலங்களில் விபத்துகள் நடந்தது? இதில் தப்பு என்பது எந்த பக்கம்? எவ்வளவு தொகை? எந்த பிரிவின் கீழ் நட்டஈடு ஏற்கனவே பெற்று இருந்தார்?
- விபத்தில் சம்பந்தப்பட்ட ஏனையோர் பற்றிய விபரங்கள் யாவை?

இது போன்ற கேள்விகளுக்குரிய பதில்களையும் வரலாறுகளையும் சாரதி அனுமதி பத்திர இலக்கத்தினை வைத்து காப்புறுதி கம்பனிகளும், முகவர்களும் பெற்று விலையினைத் தீர்மானிப்பது வழமையாகும். எதனையும் மூடி மறைக்க முடியாத அளவுக்கு இங்கு பதிவுகள் ஒரு வரலாறாக காட்டும்.

"Auto Plus History" என்னும் தகவல் மையம் ஒவ்வொருவரின் பதிவுகளையும் வரலாறாக பதிந்து வைத்திருக்கும்.

இங்கு ஒரு மூன்று வருடங்கள் தொடர்ந்து வாகன காப்புறுதி ஒப்பந்தம் வைத்திருந்து, பதிவுகளில் தப்பான முறையில் விபத்துகள் (Fault Accident) நட்ட ஈடு கோரல் என இல்லாத பதிவுகள் இருக்குமானால் அது "மூன்று ஸ்ரார்" (Three Star) என ஒரு நற்சான்றிதழ் பதியப்பட்டவராக இவ் வரலாற்றில் இருக்கும். இதே நிலைமை ஆறு வருடங்கள் களங்கமில்லாதவராக இருந்தால் "ஆறு ஸ்ரார்" (Six star) என்ற சான்றிதழ் வழங்கப்பட்டவராக கருதப்படுவார். இத்தகைய நிலையில் உள்ளவர்களுக்கு வாகன காப்புறுதியின் விலையும் சாதகமாகவே இருக்கும்.

இந் நல்ல பதிவுகள் என்பது தலைகீழாக மாறி, தப்பான நிலையில் விபத்துகள், நட்ட ஈடு கோருதல் (Fault Claim) என பதிவுகளில் இருந்தால் விலை அதிகமாக இருப்பது என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகவே போய் விடும்.

இந் நிலைமைகள் உருவாகும்போது தப்புவதற்குரிய வழி யாதெனில், விபத்துகளின் போது வாகனங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் என்பது சிறு தொகையாக இருந்தால் இவற்றினை காப்புறுதி கம்பனிகளின் பதிவுகளுக்கு செல்ல விடாது விபத்துக்கு உள்ளானவர்கள் தங்களுக்குள்ளேயே கொடுத்து தீர்த்து விட்டு, தொடர்ந்து வாகனத்தினை ஜாக்கிரதையாக ஓட்டுவதே ஆகும்.

### வாகனமோட்ட போகும் நகரம் (Territory of Driving)

கடந்த காலங்களில் வாகன காப்புறுதி கம்பனிகளின் நட்ட ஈடு கோருதலில், எந்தெந்த நகரங்களில் இருந்து விபத்துகளும் நட்ட ஈடு கோருதலும் அதிகமாக வந்தது? எங்கு குறைவாக வந்தது? என்ற அடிப்படையில் இங்கு வசிக்கும் இடம் என்பது விலையினை தீர்மானிப்பதில் முக்கிய காரணியாக உள்ளது. கனடாவின் தபால் குறியீடுகளை (Postal Code) வைத்து வசிக்கும் இடம் முடிவு செய்யப்படும். விபத்துகளும், நட்ட ஈடு கோருதலிலும் அதிகமாக இருக்கும் ரொறன்ரோவும் அதனை அண்மித்த நகரங்களிலும் வசித்து கொண்டு வாகன காப்புறுதி செய்யும்போது விலை அதிகமாகவும் நகரத்திற்கு வெளியே உள்ள சிறு நகரங்களில் விபத்துகள், நட்ட ஈடுகள் கோருவது குறைவாக இருப்பதால் அங்கு விலை என்பதும் குறைவாகவும் இருக்கும். சிலருடைய ஒப்பந்தங்களில் காப்புறுதியின் விலை என்பது இந் நகர வசிப்பிடங்களின் வேறுபாட்டில் மாதம் $100க்கு மேலும் வித்தியாசப்படுவதுண்டு.

உதாரணமாக, ரொறன்ரோவில் இருந்து 'அஜெக்ஸ்', 'நியூ மார்க்கட்' போன்ற நகரங்களிலேயே விலை வித்தியாசங்கள் பாரிய அளவில் காணப்படுவது வழமையாகும்.

### வாகனத்தின் உபயோகம் (Usage of Vehicle)

சராசரி தினமும் வாகனம் எவ்வளவு கி.மீ செலுத்தப்படும் என்பதும், ஏதாவது வர்த்தக நோக்கத்திற்கு வாகனம் உபயோகிக்கப்பட்டால் சற்று அதிக விலை கொடுக்க வேண்-

36ம் பக்கம் பார்க்க...

உங்கள் வாகன காப்புறுதிக்கு
பல்வேறு வகையான காப்புறுதி கம்பனிகளிலும் விலைகளை அறியவேண்டுமா
To shop around auto insurance price please call



Siva Panchalingam, B.Com.
(Licensed Insurance Broker)
Office: 905-479-3400 Ext. 132
Home: 416-321-0999
Cell: 416-990-4908
800, Denison Ave., Suite 201, Markham, ON

# வாகன காப்புறுதிகளின் விலை...

35ம் பக்கத் தொடர்ச்சி...

டிய நிலையும் தவிர்க்க முடியாதது ஆகும்.

### மேலதிகமாக வாகனத்தினை உபயோகிப்பவர்களின் விபரங்கள் (Any Additional Drivers)

வீட்டில் உள்ள ஏனையோரும் இங்கு இதே வாகனத்தினை உபயோகப்படுத்துபவராக இருந்தால், அவர்களின் விபரங்கள், சாரதி அனுமதிப் பத்திரத்தின் தன்மை, வாகனம் ஓட்டிய அனுபவங்கள், வாகன காப்புறுதி வைத்திருந்த பதிவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் மேலதிகமாக ஒரு விலை அதிகமாக சேர்க்கப்படுகின்றது.

### நட்டஈடு இழப்பு நிவாரணங்கள் பற்றிய விபரங்கள் (Types of Coverage)



இங்கு ஒன்ராறியோ மாகாணத்தில் சட்ட ரீதியாக வைத்திருக்க வேண்டிய அடிப்படை காப்புறுதி ஒப்பந்த பிரிவுகள், விரும்பினால் மேலதிக விலை கொடுத்து பெற்று வைத்திருக்கும் மேலதிக விபரங்கள் என்ற அடிப்படையில் இக் காரணி விலையினை தீர்மானிக்கின்றது.

### அடிப்படை காப்புறுதி ஒப்பந்தங்களின்பிரிவுகள் பின்வருமாறு:

**Third Party Liability Coverage**

தாங்கள் வாகனம் செலுத்தும் போது ஏனையோரின் உடல், உயிர், உடமைகள், வாகனங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு வழங்கும் நட்ட ஈட்டுப் பிரிவு

**b) Accident Benefits**

விபத்துகளில் தங்களுக்கு ஏற்படும் பல்வேறு வகையான உடல் காயங்களுக்கு வழங்கும் நட்ட ஈடுகள்

**c) Direct Property Compensation – No- Fault Coverage**

தங்களில் தப்பு எதுவும் இல்லாது தங்களின் வாகனத்திற்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு வழங்கும் நட்ட ஈடுகள்

**d) Uninsured and Unidentified Coverage**

வாகன காப்புறுதியில்லாதவர், விபத்தின் பின்பு தப்பியோடியவருடன் ஏற்பட்ட மோதலில் தங்கள் வாகனத்திற்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு வழங்கும் நட்ட ஈடுகள்.

### இது தவிர விரும்பினால் மேலதிக பணம் கொடுத்து பின்வரும் நட்ட ஈடுகளை பெற்று வைத்து இருக்கலாம்

**a) Collision Coverage**

தங்கள் தப்பினால் தங்களின் வாகனங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கான நட்ட ஈடுகள்

**b) Comprehensive Coverage**

திருட்டு போதல், தீ விபத்து, கண்ணாடிகள் உடைதல் போன்ற இழப்புகளுக்கு வழங்கும் நட்ட ஈடுகள்.

புதிய விலை உயர்ந்த வாகனங்களாக இருந்தால் நிச்சயமாக இம் மேலதிக பிரிவுகளும் தேவை. விலை குறைந்த பழைய வாகனங்களாக இருந்தால் அடிப்படை காப்புறுதியே போதும் என கருதி முடிவுக்கு வந்தால் விலையினை சற்று குறைத்துக் கொள்ளலாம்.

இங்கு விலைகளை குறைக்க வேண்டுமானால் இன்னும் ஒரு வழி! சில நட்ட ஈட்டு வழங்கல் பிரிவுகளில் தங்கள் கொடுப்பனவுகளை (Deductible) அதிகரிப்பதாகும். உதாரணமாக வாகனத்தின் பாதிப்புக்கு $5000 நட்ட ஈடு என்றால் பாதிப்புக்குரிய செலவாக $500 தங்கள் சொந்த பணத்தில் இருந்து கொடுத்தல் வேண்டும். மிகுதி $4500 டொலர் மட்டுமே காப்புறுதி கம்பனி வழங்கும். இதனை $1000 ஆக அதிகரித்தால் தங்களின் காப்புறுதியின் விலையும் குறைவாக இருக்கும்.

### காப்புறுதி செய்யப் போகும் வாகனம் (Type of Automobile)

விலை உயர்ந்த வாகனத்திற்கு காப்புறுதியின் விலை அதிகம். விலை குறைந்த வாகனத்திற்கு காப்புறுதியின் விலை குறைவாகும். இங்கு இரு கதவு கார்களின் விலை என்பது நான்கு கதவு கார்களின் விலையினை விட அதிகமாகும். ஒவ்வொரு உற்பத்தியாளரின் வாகனத்திற்கும் ஒரு இலக்க அடையாள குறியீடு ஒன்றினை உருவாக்கி அதன் அடிப்படையில் காப்புறுதி கம்பனிகள் விலைகளை நிர்ணயம் செய்கின்றன.

### 9. ஏனைய விசேட கழிவுகள் (Discounts)

சில காப்புறுதி கம்பனிகள் பின்வரும் நிலைகளில் சிறு தொகை கழிவுகள் வழங்கப்படுவது வழமையாகும். அவையாவன:

- வீட்டு காப்புறுதியினையும் (Home Insurance) வாகன காப்புறுதியுடன் சேர்த்து வைத்திருந்தால்
- ஏனைய வாகனத்தினையும் ஒரே ஒப்பந்தத்தில் சேர்த்து வைத்திருந்தால் (Multi Vehicle Discount)
- சில நிறுவனங்கள் அல்லது ஒரு குழுவின் அங்கத்துவம் (Membership Discount)
- 65 வயதினை தாண்டியவர்களின் கழிவுகள் (Retiree Discount)

பொதுவாக ஒரே நபருக்குரிய வாகனம் ஒன்றுக்கு குறிப்பிட்ட ஒரு நகரில் இருந்து காப்புறுதி செய்யும்போது விலை என்பதனை நிர்ணயம் செய்வதில் கம்பனிக்கு கம்பனி வித்தியாசப்படுவது வழமையாகும். விலைகள் என்பதில் கம்பனிக்கு கம்பனி எதற்காக வித்தியாசப்படுகின்றது என்பது பொதுவாக வியப்பாக இருக்கும். கம்பனி ஒன்று விலைகளை தீர்மானிப்பதில் தனிநபர் காரணிகளை தவிர பொதுவான காரணிகள் என மூன்று அம்சங்களின் அடிப்படையில் விலைகளை தீர்மானிக்கின்றது. இப் பொதுவான காரணிகள் கம்பனிக்கு கம்பனி வித்தியாசப்படலாம்.

### ஏற்கனவே கம்பனி ஒன்றிலிருந்து கோரப்பட்ட நட்ட ஈடுகளின் தொகைகள் (Claim History)

பொதுவாக "காப்புறுதி" என்னும் சொல்லின் வரைவிலக்கணம் யாதெனில் "ஆபத்து" (Risk) என்பதனை பலரும் சேர்ந்து பகிர்ந்து கொள்ளுதல் என்பதாகும்.

அதாவது வாகனம் ஓட்டுபவர்கள் ஏராளமானோர் கூட்டாக சேர்ந்து ஆபத்தினை பகிர்ந்து கொள்ளும் நேரத்தில் காப்புறுதி என்ற "பண பெட்டகம்" ஒன்றினுள் மாதா மாதம் சிறு தொகை பணத்தினை முதலீடு செய்து வரும் நிலையில் இவ்வாறு முதலீடு செய்பவர்களில் எவராவது ஒருவர் ஆபத்துகளையும், இழப்புகளையும் எதிர்கொள்ளும் நேரத்தில் இவ் இழப்புகளுக்கு நட்ட ஈடாக ஒரு தொகை பணத்தினை வெளியே பெற்றுக் கொள்கின்றார்.

இங்கு ஒவ்வொரு காப்புறுதி கம்பனியினையும் ஒவ்வொரு பணவைப்பு பெட்டகம் என கருதலாம். இப் பணப் பெட்டகத்தினுள் இருந்து ஆபத்துகள், இழப்புகளை எதிர்கொள்பவர்கள் நட்டஈடு அல்லது நிவாரணம் என்ற பெயரில் பணத்தினை வெளியே எடுக்கும் போது பெட்டகத்தினுள் பணம் குறைந்து கொண்டு போகும் நிலைமை அதிகமாக இருந்தால் அதனுள் மாதா மாதம் வைப்பு செய்பவர்களை அதிகமாக வைப்பு செய்யுமாறு கோரப்படுவது தவிர்க்க முடியாததாக போய் விடுவதுண்டு.

கொட்டும் பனி மழையில் இன்று அதி வேக கடுகதி வீதிகளில் ஆயிரம் வாகனங்கள் வீதி விபத்துக்கு உள்ளாகியது என்ற செய்தியினை தொலைக்காட்சியில் பார்க்கும் போது இந்த ஆயிரம் பேரின் இழப்பு நிவாரண கொடுப்பனவுகள், அந்த இழப்புகளுக்கு உள்ளாகாதவர்களையும் பொதுவாகவே பாதிக்கப் போகின்றது என்பதனை புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் காப்புறுதி கம்பனியின் பெட்டகங்களில் உள்ள பணம் என்பது கை மாறி மாறி வெளியேதான் போகின்றது.

இழப்பு நிவாரணங்களை ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி கம்பனிகள் தத்தமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கிவிட்டு பின்னர் விபத்தில் சரி? பிழை? எந்தப் பக்கம் என்ற சட்ட அடிப்படையில் (Based on Accident Fault Determination Rules & Regulations) தங்களுக்குள் பகிர்ந்து கொள்கின்றது. இங்கு ஏராளமான பணம் இவ்வாறு கம்பனியின் முதலீட்டு பெட்டகத்தில் இருந்து வெளியே போகும்போது அதனை நிவர்த்தி செய்ய விலையினை அதிகரிக்கப் பண்ணி வாடிக்கையாளரிடமிருந்து அறவிடுவதும் வெளியே போகும் பணம் குறைவாக இருந்தால் கட்டுப் பணம் அதாவது விலை குறைவதும் மாறுபடும் ஒரு நிலையாக உள்ளது தவிர்க்க முடியாது போகின்றது.

இந் நட்ட ஈடுகள், இழப்பு நிவாரணங்களை பாதிப்புக்கு உள்ளானவர்கள் பெற்றுக் கொள்ளும் தொகை வருடாவருடம் அதிகரித்து கொண்டு போகின்றதே தவிர குறைவதாக இல்லை.

இது தவிர மோசடியாக இழப்பு நிவாரணங்களை பெறுவோர் தொகை அதிகரிப்பதும், அவர்களை புலனாய்வு செய்ய என பல மில்லியன் டொலர் பணம் செலவழிப்பதும் என எல்லாமே இப் பண பெட்டகத்தினுள் உள்ள பொது மக்களின் கட்டுப் பணத்தில் இருந்தே ஆகும். சுமார் 15வீதமான வாகன காப்புறுதியின் விலை உயர்வுக்கு காரணம் இம் மோசடியான நட்ட ஈடு கோரலுக்கு போகும் பணங்களின் செலவு அதிகரிப்பே காரணம் என கனடாவின் காப்புறுதி தகவல் பிரிவுகள் தெரிவிக்கின்றன.

### காப்புறுதி கம்பனியின் முதலீட்டு வருமானங்கள் (Investment Income from Insurance Fund)

காப்புறுதி கம்பனிகளில் இவ்வாறு வாகனம் செலுத்துபவர்கள் யாவரும் கூட்டாக மாதா மாதம் செலுத்தும் பணம் நட்ட ஈடு வழங்கலுக்கு ஒதுக்கி வைத்திருப்பது தவிர மிகுதி யாவும் காப்புறுதி கம்பனியின் முதலீட்டு நிபுணர்களினால் பல்வேறு தொழில் துறைகளில் முதலீடு செய்யப்படுகிறது.

இம் முதலீடுகளில் இருந்து வரும் வருமானங்கள் அதிகரிக்கும் போது அது அக் கம்பனியின் வாடிக்கையாளர்களுக்கு சாதகமாகவும், முதலீட்டு வருமானம் வீழ்ச்சி அடையும்போது பாதகமாகவும் அமைவது பொதுவான அம்சமாகும்.

சர்வதேச பொருளாதாரங்களில் ஏற்படும் மாற்றங்கள் கனடாவின் தொழில் வளர்ச்சிகளையும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்த நிலையில் ஏதோ வழியில் பாதிப்புகளை ஏற்படுத்தும்.

தொழில் துறைகளின் வளர்ச்சி அத் தொழில் துறைகளில் பங்குகள் வாங்கி முதலீடு செய்த காப்புறுதி கம்பனிகளுக்கு கிடைக்கும் பங்கு லாபங்களின் வளர்ச்சி, வீழ்ச்சிகள் வாகன காப்புறுதிக்காக மாதா மாதம் பணம் செலுத்துபவர்களின் விலைகளை வருடா வருடம் புதுப்பிக்கும் போது நிர்ணயம் செய்வதில் ஒரு பொதுவான அம்சமாகவே கருதப்படுகின்றது.

### காப்புறுதி கம்பனியின் செலவுகள் (Operating Expenses)

காப்புறுதி கம்பனி ஒன்றினை நடத்துவதற்கு ஏற்படும் சகல செலவுகள், மோசடிகளை கண்டு பிடிக்க என உருவாகும் செலவுகள் யாவும் மக்களின் இப் பொதுவான காப்புறுதி பெட்டகத்தில் இருந்தே போகின்றது. வாகன காப்புறுதியில் ஒவ்வொரு தனி மனிதனும் செய்யும் மோசடியான நட்ட ஈடு கோரல் என்பது வாகன காப்புறுதிக்கு பணம் செலுத்தும் எவரையும் ஏதோ ஒரு வழியில் பாதிக்கின்றது. இவ்வாறு பெட்டகத்தில் இருந்து பணம் வெளியே போகும் போது அது காப்புறுதியின் விலையினை அதிகரிக்கப் பண்ணி அதனுள் அதிகம் பணம் போட வேண்டிய நிலையினை உருவாக்குகின்றது.

எனவே ஒவ்வொரு கம்பனிக்கும் மேற்குறிப்பிட்ட இம் மூன்று அம்சங்களும் மாறுபடுவதால் கம்பனிக்கு கம்பனி விலையும் மாறுபடுகின்றது.

இங்கு வாடிக்கையாளர்களுக்கு தேவை பல கம்பனிகளிலும் விலைகளை அறிந்து (Shop around) முடிவுக்கு வருவதே ஆகும்.

மேற்குறிப்பிடப்பட்ட மூன்று பொதுவான காரணிகளுமே, ஒழுங்கான பதிவுகளை தனிப்பட்ட ரீதியில் புதுப்பிக்கும் போது விலை அதிகரிப்பது தவிர்க்க முடியாது போய் விடுகின்றது.

எனவே வருடம் தோறும் வாகன காப்புறுதிகளை புதுப்பிக்கும் போது பொதுவான காரணிகளின் அடிப்படையிலும் விலைகளில் ஏற்ற இறக்கங்கள் ஏற்படலாம். மேலே குறிப்பிடப்பட்ட பல்வேறு வகையான தனி நபர்களுக்குரிய காரணங்களினாலும் விலைகளில் மாற்றங்கள் ஏற்படலாம்.

■ ■ ■

# உங்கள் வீட்டுக்கடன் வியாபாரக்கடனிற்கு என்னை அழையுங்கள்

**MORTGAGE RATES**
**Call me**

**MORTGAGE**

1st & 2nd Mortgages
New Immigrants / Self Employed / 0% Down
Refinance / Equity Line of Credit / Renewal

**BUSINESS**

Commercial Mortgage
Business Loan upto One Million
Line of Credit / Personal Line of Credit





## Kethes Sivasubramaniyam

Mortgage Consultant

**Cell : 416.873.5780**

ViaFinancial Services Inc.

Our Office : 5200 Finch Ave. E, Suite 304, Scarborough, ON. M1S 4Z5

Apex Creations - 416-297-0707

# வருமானவரிச்சேவையில் பலவருடம் அனுபவம் வாய்ந்தவர்களினால் நம்பிக்கையான சேவை

**KETVAR**
**TAX & ACCOUNTING**

304-5200 Finch Ave.E, (Middlefield & Finch)
Toronto. ON M1S 4Z5
**Tel : 416-548-8005** Fax : 416-548-8006
Email : ketvar@gmail.com

- Personal Tax
- Small Business Tax
- E-File Services
- Arrange RRSP
- Maximum Refund
- Tax Saving Advice

Tax Problems?
Penalties?
Haven't Filed?
We can help you...

# ஈயம் கலந்த TOYகளும் குழந்தைகளின் பாதிப்பும்!

ராஜ்மோகன் செல்லையா
- ஈட்டுக்கடன் பிரதிநிதி -
rmohan@thaiveedu.com



அண்மையில் ஹெல்த் கனடா ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் அணிகலன்களை வியாபார நிலையங்களில் இருந்து அப்புறப் படுத்துமாறு விடுக்கப்பட்ட அறிவித்தல் எல்லோரையும் ஒரு கணம் சிந்திக்க வைத்திருக்கும். ஈயம் அல்லது Lead எனப்படுகின்ற ஒரு வகை உலோகம் மேற்குறிப்பிட்ட பொருட்களில் அதிகமாகக் கலந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே இவற்றுக்கான தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் பிஸ்கட்டுகளில் கலக்கப்பட்ட மெலமைன் (Melamine) பற்றிய செய்தியும், சீனாவில் குழந்தைகளின் பால் பவுடர் மற்றும் முட்டைகளில் செறிந்திருந்த மெலமைன் பற்றிய தகவலும் வெளிவந்த இந்த நேரத்தில் ஈயம் கலந்த விளையாட்டுப் பொருட்களின் செய்தி மிகுந்த பரபரப்பை பலரிடம் ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் அண்மையில் ஸ்காபரோவில் உள்ள டொலர் கடைகளில் Baby pacifier எனப்படுகின்ற குழந்தைகளின் சூப்பிகளில் அதிகளவிலான ஈயத்தின் (lead) அளவு கண்டு பிடிக்கப்பட்டுள்ள விடயம் பல தாய்மார்களை விசனத்திற்குள்ளாக்கியுள்ளது. அதுமட்டுமல்லாமல் ஏப்பிரல் 2007இல் இருந்து 10,000க்கும் மேற்பட்ட இவ்வகை ஈயம் கலந்த pacifierகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் அறியப்பட்டுள்ளது.

ரொரன்ரோ பெரும்பாகத்தில் விளையாட்டுப் பொருட்கள் விற்கும் 18 கடைகளில் அண்மையில் நடத்தப்பட்ட lead பரிசோதனையில் 4:1 என்ற பொருட்கள் விகிதாசாரத்தில் lead அதிகளவில் கலந்திருந்ததாக ரொரன்ரோ ஸ்ரார் என்னும் பத்திரிகை அண்மையில் செய்தி வெளியிட்டுள்ளது. அத்துடன் இவற்றில் அதிகமானவை சீனாவில் இருந்து தயாரிக்கப்பட்டதாகவும் (Made in China) தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்னும் ஒரு அதிர்ச்சியான தகவல் என்னவென்றால் இவ்வகை ஈயம் கலந்துள்ள பொருட்களின் லேபல்களில் Lead free என்ற வாசகம் எழுதியிருப்பதுதான். இந்த பொய்யான வாசகத்தை நம்பி அவற்றை வாங்கும் நுகர்வோர் ஏமாறுகின்றனர்.

> “ நம்மில் எத்தனை பேர் குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருட்கள் வாங்கும்போது ஈயத்தின் தாக்கத்தைப்பற்றி சிந்திக்கின்றோம்? நேரம் மற்றும் பணம் இவைதான் எமக்குப் பெரிதாக தெரிகின்றபோதிலும் அவற்றால் ஏற்படப்போகும் பாரதூரமான விளைவுகள் பற்றி சிந்திப்பதில்லை. ”

ஹெல்த் கனடாவினால் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளபோதிலும் இவ்வகை ஈயம் கலந்த விளையாட்டுப் பொருட்கள் ஏதோ ஒரு வழியில் விற்பனைக்கு வந்துவிடுகின்றன. இப்படியான விளையாட்டுப் பொருட்களை இறக்குமதி செய்வோர் தாம் அதிகளவு விலை (premium) கொடுத்து lead free toyகளை வாங்குவதாகவும் அவற்றை ஒவ்வொன்றாக தம்மால் பரிசோதித்து விற்பனைக்கு விடமுடியாதிருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

### Lead (ஈயம்) கலப்படம் என்றால் என்ன? அது எவ்வகையான பாதிப்புக்களை குழந்தைகளுக்கு ஏற்படுத்தும்?

ஈயம் ஒரு பாரமான மென்உலோகம். இதன் தொடுகை எமது உடலில் படும்போது அது இலகுவாக நமது இரத்தத்தில் கலந்துவிடும் தன்மை கொண்டது. காரணம் இதன் துகள்களாகும் தன்மை. இது அநேகமாக toys, paint, rubber, plastic, ceramics, costume jewelry, dolls, lipsticks, rain coat போன்ற அன்றாடம் பாவிக்கும் பல பொருட்களில் காணப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளன.

ஹெல்த் கனடாவின் அறிவுறுத்தலின்படி குழந்தைகளின் வாய்க்கு கிட்டவாக பாவிக்கும் பொருட்களில் மிகவும் அதிக கவனம் எடுக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. Pacitier, baby bottle nibbles, crib toys, வாய் ஊடாக உபயோகிக்கும் இசைக் கருவிகள், குழந்தைகளின் தளபாடங்கள், வண்டில்கள், உணவு ஊட்டும் மேசைகள் மற்றும் மேசை விரிப்புகள் போன்ற பல பொருட்களை மிகவும் அவதானமாக பெற்றுக்கொள்ள வேண்டுமென நுகர்வோர்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளார்கள்.

அதேவேளை மேலே குறிப்பிட்டுள்ள ஈயம் கலந்துள்ள பொருட்களின் உற்பத்தியாளர்கள் யார், அவர்களின் background என்ன மற்றும் அவை எங்கே விற்பனை செய்யப் படுகின்றன போன்ற விடயங்களை அறிவதன் மூலம் இவ்வகை பொருட்களின் தராதரத்தை ஓரளவு அனுமானம் செய்துகொள்ள முடியும். மிகப் பெரிய அளவிலான உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் தரம் குறைந்த பொருட்களை விற்பனை செய்யும் சதவீதம் சற்றுக் குறைவாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வகைப் பொருட்களிலுள்ள ஈயத்தின் அளவு, PPM (Part Per Million) அல்லது எவ்வளவு சதவிதமான ஈயம் அடங்கியுள்ளது என்ற அடிப்படையிலேயே அளவிடப்படுகின்றது. ஹெல்த் கனடாவின் அறிவுறுத்தலின் படி இந்த ஈயத்தின் அளவு எந்த ஒரு பொருளிலும் 65 PPMக்கு மேல் இருக்கக் கூடாது.

அதே வேளை ஆராய்ச்சியாளர்களின் கணிப்பின்படி ஈயத்தின் அளவு குழந்தைகளுக்கு முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும் என்கிறார்கள். இரத்தத்தில் சேர்ந்துள்ள மிகச் சிறிய அளவு ஈயம் குழந்தைகளின் கல்வி கற்கும்ஆற்றல், மூளைவிருத்தி, IQ திறமைகள், கவனமின்மை, மறதி, hyperactivity, வயிற்றுவலி, தலையிடி மற்றும் வாந்தி போன்ற பல பாதிப்புக்களை ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கின்றனர்.

குழந்தைகளின் இரத்தத்தில் இருக்கக்கூடிய ஈயத்தின் அளவை ஒரு slow killer என்று அழைக்கின்றார்கள் ஆராய்ச்சியாளர்கள். ஏனெனில் மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் குழந்தைகளில் தென்படும்போது குழந்தைகளின் இரத்தத்தில் இதன் அளவு பெரிதாக இருந்துவிடும்.

40ம் பக்கம் பார்க்க...

Tution Classes
(at McCowan and Dennison)
From JK to Grade 8
* Math
* English
* Science
* Art
* Homework Help (Any Subject)
* Preparation for the Next Grade
* Computer Subjects




1 to 1 or Group classes
Please call 905-554-2496

Tutoring
Grade 1- 7 : English, Math, Science & Social Studies
Grade 8- 10: English & Math
அஞ்ஜலீன் ஜீவா திசைராஜா
B.A (Hons),M.Sc,Ph.D
(647) 291 1357
(Kennedy & Ellesmere அருகாமையில்)

**Homelife/GTA Realty Inc Brokerage**
1711 Mccowan Rd , #208
Toronto,Ont,M1S 3Y3
TEL:416-321-6969 Fax 416-321-6963



**Baskaran Sinnadurai**
Cell:416-880-8585
eMail: trabask@yahoo.ca

# COMMERCIAL PROPERTIES




Well Established Business For 25 Years.Very Low Rent Canada Post, Purolator, Greyhound Bus Depot, Lotto 639, Nevada Tickets. Lease 5Yr + 5Yr ONLY 129,000



Land with house in developing are ONLY 599,000



Indestrial space of 3,000 sq feet ONLY 338,000



Excellent restaurant 66seats plus 20 seats patio in yonge st ONLY 279,000



Space for banquet hall easy acces to high way



Mote with property in highway ONLY 325,000



Vana Shanmuganathan
Sales Representative
416-833-2925




Mahendran Muthukumaru
Sales Representative
416-302-1994




Shanthy Vinayagamoorthy
Sales Representative
416-939-2288

**Hwy 7/Humber College**



2+1 Bedroom 2Washroom
2 Parking Spaces
$214,000 For Sale

**Humber College Blvd**



3+1 Bedroom 3Washroom
Apartment Sep Entrance
$324,900 For Sale

**Major Mack/Weston**



3 Bedroom 3Washroom
Excellent Location
$364,900 For Sale


**Meadowvale/Ellesmere**



4+2 Bedroom 4Washroom
Finished Basement
$449,900 For Sale


**வீடு வாங்க விற்க**

**Lawrence & Port Union**



3 Bedroom 2Washroom
Steps Away From Go Train
Rouge Beach
$310,000 For Sale

**Neilson/Mclevin**



3+1 Bedroom 3Washroom
Finished Basement
$314,900 For Sale

HOMELIFE HIGHER STANDARDS

**HOME LIFE**
GTA /REALTY INC., BROKERAGE*
206-1711 McCowan Road
Scarborough, ON, M1S 3YS
Bus: 416-321-6969
Fax: 416-321-6963

**Ellesmere/Calthorpe**



4 Bedroom 3Washroom $339,000 For Sale

*Best Services *Low Commission *low rates mortgages *home inspections *lawyers

**BUY YOUR DREAM HOUSE OR SELL YOUR PROPERTY QUICKLY FOR THE BEST PRICE**

# ஈயம் கலந்த TOYகளும்...

38ம் பக்கத் தொடர்ச்சி...

அத்துடன் ஈயத்தின் அளவு இரத்தத்தில் அளவுக்கதிகமாகும் போது நரம்பு மண்டலம் பாதிப்படைந்து மரணம் அல்லது வலிப்பு (seizures) போன்றவை எற்படலாமென மேலும் கூறப்பட்டுள்ளது.

### எப்படி இலகுவாக ஈயம் கலந்துள்ள விளையாட்டுப் பொருட்கள், மற்றும் அணிகலன்களைக் கண்டறிய முடியும்?

உண்மையில் கண்ணால் பார்த்தோ அல்லது தொடுகை மூலமாகவோ இவற்றைக் கண்டு பிடிப்பது மிகவும் சிரமமான ஒரு விடயம். ஆனால் பின்வரும் தரவுகள் உங்களுக்கு உதவக்கூடும்:

- Dull (பிரகாசம் குறைந்த) மற்றும் grey வர்ணங்களைக் கொண்ட உலோகங்களின் உபயோகம்.
- ஈயத்தன்மை கொண்ட அநேகமான விளையாட்டுப் பொருட்கள், அதன் அளவிற்கும் அதிகமான நிறையைக் கொண்டிருக்கும். உதாரணமாக சிறிய ஒரு விளையாட்டுக் காரின் நிறை அதிகரித்துக் காணப்படுதல்.
- ஒரு பேப்பரில் ஈயத்தன்மை கொண்ட விளையாட்டுப் பொருளை அல்லது அணிகலனைத் தேய்க்கும்போது அதில் grey நிறத்திலான வரி பதியப்படும்.
- அதி பிரகாசமான வர்ணங்கள் (orange and red) கொண்ட மினுமினுப்பான பொருட்கள்
- மென்மையான plasticஇனால் செய்யப்பட்ட பொருட்கள். அனேகமான டொலர் கடைகளில் கிடைக்கும் சாப்பாட்டுப் பெட்டி மற்றும் அது தொடர்பான கொள்கலன்கள் (plasticஐ மென்மைப்படுத்த இந்த ஈயம் உபயோகிக்கப்படுகின்றது).
- அளவுக்கு மீறிய பாரமான costume jewelry
- Paintஇனால் முலாமிடப்பட்ட அல்லது பூசப்பட்ட பொருட்கள்

இது போன்ற பல வழிகளில் ஈயம் உள்ள விளையாட்டுப் பொருட்களின் தராதரத்தை அடையாளப்படுத்த முடிந்தாலும் நீங்கள் lead test kitsஐ வாங்கி பரிசோதிப்பதன் மூலம் அவற்றை நூறு சதவீதம் உறுதி செய்துகொள்ள முடியும். அதேவேளை இதற்கான நேரம் மற்றும் வசதிகள் எம்மிடம் உள்ளனவா என்பதும் ஒரு கேள்விக்குறியே.

குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்களில் உள்ள ஈயத்தின் அளவை அளப்பதோடு மட்டுமல்லாது குழந்தைகளின் இரத்தத்தில் எற்கனவே இருக்கக்கூடிய ஈயத்தின் அளவை அறிவதும் இன்றைய நிலையில் நமது கட்டாய கடமையாகவுள்ளது.

### குழந்தைகளின் இரத்தத்தில் எவ்வளவு ஈயம் கலந்துள்ளது என்பதை எப்படி அறிய முடியும்

ஈயம் உள்ள விளையாட்டுப் பொருட்களினாலோ அல்லது வேறு புறக் காரணிகளினாலோ ஒரு குழந்தையின் இரத்தத்தில் ஈயம் கலந்திருப்பது இன்றைய காலகட்டத்தில் தவிர்க்கப்பட முடியாததொன்றாகவே இருக்கின்றது. நீங்கள் எவ்வளவு தூரம் கவனமாக இருந்தாலும் உங்கள் குழந்தைகள் ஏதாவது ஒரு வகையில் ஈயத்தை உள்வாங்கிக்கொள்கிறார்கள். எனவே, நீங்கள் உங்கள் வைத்தியரை அணுகி, ஈயத்தை அளவீடு செய்யும் இரத்தப் பரிசோதனை செய்து உங்கள் குழந்தையின் இரத்தத்தில் ஈயத்தின் அளவைக் கண்டுபிடிப்பது அவசியமாக இருக்கிறது. இரத்தத்தில் ஈயத்தின் அளவு ஒரு deciliterக்கு 10 மைக்ரோ கிராம் அளவாக இருந்தால் அது பாதுகாப்பான நிலையாக கருதப்படுகிறது. இது 25 மைக்ரோ கிராமுக்கு மேல் உயர்ந்திருந்தால் வைத்தியர்களால் அவதானிக்கப்படுகிறது. அதே போல் 40 மைக்ரோ கிராமுக்கு மேற்பட்டிருந்தால் ஈயத்தை இரத்தத்தில் இருந்து நீக்குவதற்கான சிகிச்சை முறைகள் கொடுக்கப்படுகின்றன. உடலும் சூழலும் மாசுபடிந்துவரும் இன்றைய காலகட்டத்தில் இந்த ஈயப் பரிசோதனை மிகவும் அத்தியாவசியமானதொன்றாகவே கருதப்படுகின்றது.









### கடந்த மாதம் ஹெல்த் கனடாவினால் தடை செய்யப்பட்டிருந்த ஒரு சில பொருட்களின் விபரங்கள் இவை:

Party Blast Silly String
Michaels Stores Inc. of Irving, Texas

Wooden Number Puzzle
Dollarama L.P./S.E.C. of Montreal, Quebec

Otter Medium Cabin Ice Fishing Tent
Otter Outdoors Inc., of Maple Lake, Minnesota

Rechargeable Batteries and Recharging Station for Didj
Custom Gaming System LeapFrog Enterprises Inc., of Emeryville, California

Rage Wireless Guitar Game Controller Performance
Designed Products LLC, of Sherman Oaks, California

Ice Shelters
HT Enterprises Inc. of Campbellsport, Wisconsin

Rechargeable Batteries sold with portable DVD/CD/MP3 players.
Coby Electronics Corp., of Lake Success, New York

Make-It Special Pewter Embellishments
Dollarama L.P./S.E.C. of Montreal, Quebec

Mini Hockey Stick
A.E.S Imports Inc. of Markham, Ontario

CTG Kool
Charmz Canasia Toys & Gifts Inc. of Vaughan, Ontario

Children's Charm Craft Kits
Action Products International Inc., of Ocala, Florida

Alnico Bar Magnets
Home Science Tools, of Billings, Montana

Fujifilm BC-50 Battery Chargers
Fujifilm Canada Inc.

"My Baby" Brand Pacifiers
Ontai Products Company (OPC) of Toronto, Ontario

GN9120 Wireless Headsets
GN Netcom (Canada) Inc., of Mississauga, Ontario

Toy Dump Truck
Toys "R" Us (Canada) Ltd. of Concord, Ontario

Electrical Wire Splices (also known as Butt Splice Connectors)
Gardner Bender Canada, of Mississauga, Ontario

Pop Pop Toy Boats Buzz's Boatyard, of New Smyrna Beach, Florida

Glow star necklaces
Make-A-Wish® Canada of Toronto, Ontario

Ice Finisher Shaping Hair Spray
Piidea Canada Ltd. of Pointe-Claire, Quebec

**ஹெல்த் கனடாவினால் தடை செய்யப்படுகின்ற பொருட்கள் பற்றிய மேலதிக விபரங்களை பின்வரும் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்:**

**http://www.healthycanadians.ca**

எமது வாழ்க்கை முறையுடன் பின்னிப் பிணைந்துள்ள சில வழக்கங்களை மாற்றுவதென்பது மிகவும் சிரமமானதொரு விடயம். ஆனால், எமது எதிர்கால சந்ததி ஆரோக்கியமானதாக இருக்கவேண்டுமென்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்து கிடையாது. இன்று நம்மில் எத்தனை பேர் குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருட்கள் வாங்கும்போது ஈயத்தின் தாக்கத்தைப்பற்றி சிந்திக்கின்றோம்? நேரம் மற்றும் பணம் இவைதான் எமக்குப் பெரிதாக தெரிகின்ற போதிலும் அவற்றால் ஏற்படப்போகும் பாரதூரமான விளைவுகள் பற்றி சிந்திப்பதில்லை.

ஒரு குழந்தைக்கு ஒரு விளையாட்டுப் பொருள் வாங்கிக் கொடுக்கும் விடயம் என்பது இங்கே முக்கியம் அல்ல. அந்த விளையாட்டுப் பொருளினால் ஏதாவது பக்க விளைவுகள் அல்லது பாதிப்புகள் ஏற்படுகின்றதா என்பதே முக்கியமானதாக கருதப்படுகின்றது. இது முற்றுமுழுதாக உங்கள் கைகளிலேயே இருக்கின்றது.

தரமான பொருட்களை வாங்குவோம்!
வலுவான எதிர்காலத்தை உருவாக்குவோம்!

■ ■ ■

ROOM FOR RENT

WARDEN & FINCH
சந்திப்புக்கு அருகாமையில்
தொடர்மாடிக் குடியிருப்பில் ஓர் அறை
வாடகைக்கு உண்டு
(முதியவர்கள், பெண்கள் விரும்பத்தக்கது)

416 498 6708

# www.realhouse.ca

## முகவரி காட்டும் முகவர்களாய் நாங்கள், வீடு வாங்க விற்க அழையுங்கள்

**Markham & Steeles**



**$389,000**

**3+1 Bedrooms, 3 Washrooms**

Great Yorkwood 4 Yrs Old Home
Rouge River Valley On Golf Course.
Award Winning Design, Stunning
Open Concept Layout. W/Out Balcony.
Open To Above W/Two Storey Window,
Upgraded Throughout House.

**McCowan & Finch**



**$324,900**

**3+1 Bedrooms, 3 Washrooms**

Very Good Neighborhood,
Close To Schools, Mall, Library, Ttc.
All Existing Window Coverings,
Broadloom Where Laid.
Lots Of Upgrades.
Bright And Clean, Priced To Sell.

**Markham & Bur Oak**



**$589,900**

**5 Bedrooms, 4 Washrooms**

Fully Loaded Upgrades
Over 70K By Royal Park Builder,
Upgraded Hardwood Staircase,
Close To School, Park & Shopping..
Steps To Go Station Public Transit.

**9th Lane & 16th Ave**



**$439,900**

**4 Bedrooms, 3 Washroom**

Great Neighbourhood,
Very Clean & Bright, Big Deck,
Granite Counter Top,
Close to School,
Park & Shoppings

**Steeles / Staines**



**$489,900**

**4 Bedrooms, 3 Washroom**

Very Very Demand Location**
Lots Of Upgraded Thru-Out**
4 BR House With Front Stone Exterior**
Upgraded Kitchen Cabinets**
Hardwood Floor, Granite Foyer With
R/Iron** 9' Ft Ceiling ** Close To School,
Park, Shopping & Ttc.

**Middlefield & McNicoll**



**$339,900**

**3 Bedrooms, 2 Washrooms**

Corner Lot Property, Close To All Amenities,
Such As Public & Cathloic School
& Shopping Plaza, Double Driveway,
Direct Door Access To Garage,
Bsmt Finished Execpt Ceiling,
Bsmt Can Be Modified For Sep.Entrance,

**Hwy 7 & 9th Line**



**$328,900**

**3 Bedrooms, 3 Washrooms**

Brand New Immaculate Green Park Semi
House In High Demand Area, Very Bright Just
Move In Condition. Master Broom
With 4 Pc Ensuite, Tarion New Home Warranty.
Lots Of Upgrades, Oak Staircase,
Modern Kitchen,
Four Brand New Appliances.

**Meadowvale & Sheppard**



**$419,000**

**4 Bedrooms, 3 Washroom**

Detached 2 Storey Ft Ceiling Main Floor,
Approx 2000 Sq Ft, Jaccuzzi, Pot Lights,
Marble Countertop In All The Washroom,
Maple Hardwood Thru-Out.
In Main Floor Maple Staircase,
Upgraded Kitchen Cabinets,
Crown Moulding Thru-Out Main Fl,
Pot Lights Neutral Decor, Backsplash,

**McCowan & Alton Towers**



**$329,000**

**3+1 Bedrooms, 2 Washrooms**

Recently Renovated,
New Fridge And Exhaust Fan,
Roof(2006), New Window (1 Month)
Close To Ttc, Shopping Plaza, Restaurants,
Medical/Dental Off., Banks, Groceries,
Coffee Shops, Schools, Library, Parks Etc.

**Markham / Nashdene**



**$128,900**
**Commercial Unite**
**980 Sq Ft**



HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/Future Realty Inc., Brokerage***
7 Eastvale Dr, Suit 205, Markham On. L3S 4N8
**Bus.: 905-201-9977 Fax : 905-201-9229**
*Independently Owned and Operated, REALTOR



**Thamil Suberamaniam (Selvan)**
Sales Representative
**Direct : 416.358.6200**
Email : thamilrealtor@gmail.com

**Mugunthan Nadarajah**
Sales Representative
**Direct : 416.276.8025**
Email : homelifemugunthan@gmail.com

Not Intended to Solicit Currently Listed Properties or Buyers Under Contract.

**Make the Right Move, at the Right Time, with the Right Professional**

Apex Creations - 416-297-0707

# விசித்திர மனநோய்

- எஸ். சிவாகுமர் -

**'மேல் வீட்டில் இருக்கின்றவர் என்னைக் கொல்ல சதி செய்கின்றார்' - இந்த வாசகம் ஒரு மனநோய் ஆகவும் இருக்கலாம்**

'மேல் வீட்டில் இருக்கின்றவர் என்னைக் கொல்ல சதி செய்கின்றார்' என்று உங்கள் அயலவர் சண்முகம் உங்களிடம், அல்லது தனது குடும்பத்தினரிடம் திடீரெனக் கூறினால் இன்றைய சமூக நிலைமையில் நாம் இதை நிச்சயமாக நம்பித்தானே ஆகவேண்டும்.

உடனடியாக நாம் 911க்குத் தான் டெலிபோன் செய்ய முடியும். அதற்கு முன்னர் தயவு செய்து "இதற்கு என்ன ஆதாரம்?" என்று ஒரு வார்த்தை சண்முகத்திடம் கேட்டுப் பாருங்கள்.

"மேல் வீட்டில் இருப்பவர் என்னைக் கொல்ல ஒரு அணுகுண்டு தயாரித்துக் கொண்டு இருக்கின்றார்", என்று சண்முகம் சொன்னால் உங்களுக்கு சற்று அதிர்ச்சியாக இருக்கும். அணு குண்டை வீட்டில் இருந்தே தயாரிக்க முடியுமா? என்று நீங்களே ஒரு சமயம் குழப்பம் அடையலாம்.. இதையும் நீங்கள் நம்பாமல் சந்தேகப்பட்டு சண்முகத்தைக் கேட்டால், 'அப்துல் கலாம் கூட நேற்று அந்த வீட்டுக்கு வந்து போனார்' என்று சண்முகம் அடித்துக் கூறுவார்.

சண்முகத்தை விடுங்கள், லட்சுமி என்ன சொல்லுகின்றார் என்று பாருங்கள் "இந்த தபால்காரர் என்னுடைய குழந்தையை கடத்துவதற்குத் தான் ஒவ்வொரு நாளும் வந்து நோட்டம் பார்க்கின்றார்" என்று லட்சுமி சொல்லுகின்றார். ஏன் அப்படி சந்தேகிக்கின் றீர்கள்? என்று கேட்டால், 'அதான் தபால் காரர் தோளில் ஒரு பையோடு திரிகின்றாரே' என்று லட்சுமி அடித்துக் கூறுகின்றார்.

இதில் ஒரு விடயம் கூட உண்மையில்லை. சண்முகமும், லட்சுமியும் நம்புவது பொய்யான விடயங்கள். இவர்கள் மட்டுமல்ல, "என்னை கணவன் கொல்ல திட்டமிடுகின்றான்", "என் மனைவி யாரையோ காதலிக்கின் றாள்" என்று எல்லாம் தாமாக கற்பனை செய்து சொல்பவர்கள் உள்ளனர்.

சிலர் ஏதோ வாசைன வீசுகின்றது என்று கூறிக்கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு மட்டும் எப்போதும் ஏதோ வாசைன வீசிக் கொண்டிருக்கும். அந்த வாசைன வேறு எவருக்கும் மணக்காது.

தான் உண்மையில் வேறு ஆள் என்று சிலர் நம்பத்தொடங்குவார்கள். நம்புவது மட்டுமல்ல செயல்படவும் தொடங்கி விடுவார்கள். "நான் தான் ஐன்ஸ்டின்" என்று கோப்பை. கொப்பரைகளுடன் ஒருவர் ஆராட்சி செய்ய புறப்பட்டு விடுவார்.

"இதோ நான்தான் கடவுள்" கூறுகின்ற இன்னொருத்தர் கமண்டலம் என்று, பூவரசம் தடியோடு கிளம்பி விடுவார்.

யார் இவர்கள்? ஏன் இவர்கள் இப்படிச்ச சொல்கின்றனர்?

இவர்களுக்கு இருப்பது மனநோய். இவர களுக்கு மட்டும் ஒரு குரல் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கும். சில சமயம் இவர்களுக்கு மட்டும் உருவங்கள் தெரியும். இந்த உருவங்கள் இவர்களோடு பேசும் இவ்வாறு உருவங்கள் பேசும் போது மற்ற வர்களுக்கு கேட்காது. தங்களோடு மட்டுமே உருவங்கள் பேசுகின்றன என்று இவர்கள் கூறுவார்கள்.

கனடாவில் வாழும் ஒரு மூதாட்டி "என்னோடு இறந்து போன எனது உறவினர்கள் வந்து தினமும் பேசுகின்றனர். அவர்கள் அந்தக் கதிரையில் அமர்ந்து என்னுடன் ஆர அமர இருந்து கதைக்கின்றனர். ஆனால் இதைச் சொன்னால் எனது மகளும், மருமகனும், மற்றவர்கள் எவரும் நம்புகின்றார்கள் இல்லை" என்று சில நாட்களுக்கு முன்பு எனது நண்பனிடம் குறைப்பட்டுக் கொண்டார்.

இந்த மூதாட்டிக்கு இருப்பது மனநோய். அதை அவரது குடும்பத்தினர் புரிந்து கொள்ளவில்லை.

மனநோய் என்பது ஒரு குறிப்பிட்ட நோய் அல்ல. இதற்குள் பல வகையான நோய்கள் உள்ளடங்குகின்றன.

புற்று நோய் என்று சொல்கின்ற போது, எவ்வாறு இரத்த புற்று நோய், மார்பு புற்று நோய், தோல் புற்று நோய், ஈரல் புற்று நோய்... என்று வகை வகையான புற்று நோய்கள் இருக்கின்றனவோ, அது போல மனநோய் என்று சொல்லும் போதும் வகை வகையான மன நோய்கள் உள்ளன.

இந்த மனநோய்க்கு வயது, பால், பொருளாதாரம், இனம் என்று எந்த வேறுபாடும் கிடையாது. எவரையும் எந்த நேரமும் இது தாக்கக் கூடும். சிந்தனையிலும், நடத்தையிலும் பெரும் குழப்பத்தை இது ஏற்படுத்தும். இதன் காரணமாக சாதாரண வாழ்க்கையில் பெரும் குழப்பங்கள் உருவாகும்.

மனநோய்க்கான காரணங்கள் இதுவரையில் சரியாகக் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் மூளையில் ஏற்படும் இரசாயன சமனின்மையே இந்த மனநோய்க்கான காரணமாக இருக்கலாம் என்று பெரும்பாலான ஆய்வாளர்கள் முடிவுக்கு வந்துள்ளனர். வாழ்க்கையில் திடீரென்று ஏற்படுகின்ற அழுத்தங்கள், மரபணுக்கள் என்பன இந்த இரசாயன சம நிலையில் பாதிப்பு ஏற்படுத்துவதற்கு காரணமாக இருக்கலாம்.

## மனநோய் அறிகுறிகள்

காரண காரியம் எதுவும் இல்லாமல் அழுவதும், சிரிப்பதும், தனக்குத் தானே பேசிக் கொள்ளுதல், தொடர்ச்சியாகப் பேசிக் கொண்டிருப்பது, தடால் தடால் என்று ஒரு விடயத்தை விட்டு இன்னொரு விடயத்திற்குத் தாவுவது, அதீத பயம், கவலை, என்ன வென்று விபரித்து சொல்ல முடியாத எண்ணங்கள், தற்கொலை செய்வதற்கான எண்ணம் ஏற்படுதல், அன்றாட நடவடிக்கைகளில் செயல்பட முடியாத நிலை, உணவு உண்ணுதலிலும், நித்திரை கொள்வதிலும் சிக்கல் என்பன மனநோய்க்கான சில அறி குறிகளாகும்.

## Depression

மூளையில் நரம்புகளுக்கிடையேயான செய் திகளை பரிமாற்றுவதற்கு காரணமான இரசாயனப் பதார்த்தத்தின் சமநிலை சீர் குலைகின்றது. இரசாயனப் பதார்த்தத்தின் அளவு குறைய செய்திகளின் செறிவு குறை கின்றது. இதனால் நரம்பு மண்டலம் பூரணமாக செயல்பட முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றது.

இந்நிலையில் பாதிக்கப்பட்டவர் சோர்ந்து போய் இருப்பார். பெரும் கவலை இவருக்கு இருக்கும். இது ஒரு நாள் இரண்டு நாளில் மாறக்கூடிய கவலை அல்ல. மருத்துவ உதவி பெற வேண்டிய மனநோய்.

பொழுது போக்கு, பாலியல், வேலை எதிலும் நாட்டம் இருக்காது. எந்த விசயமும் இவர் களுக்கு சந்தோசத்தை தராது. முன்பு மகிழ்ச்சியை தந்த காட்சிகள், பொருட்கள், பாடல்கள் எல்லாம் அதன் ஜீவனை இழந்து விட்டதாகத் தோன்றும். எதற்கும் பிரயோசனம் இல்லாத ஆள் தான் என்ற நினைப்பு அடிக்கடி வரும். தற்கொலை எண்ணம் தோன்றிக் கொண்டே இருக்கும். பின்னர் எப்படி தான் தற்கொலை செய்து கொள்வது என்று கற்பனை செய்ய தொடங்குவார்கள்.

## Schizophrenia

தாழ்வு மனப்பான்மை அளவுக்கும் அதிகமாக இருக்கும். ஒருவரின் சிந்தனை, பேச்சு, உணர்ச்சி, நடத்தையில் எல்லாம் குழப்பம் இருக்கும். உலகம் இவருக்கு ஒரு பயமுறுத்துகின்ற இடமாகவும், குழப்பமான இடமாகவும் தோன்றும்.

உண்மைக்குப் புறம்பான எண்ணங்கள் இவர் களுக்குத் தோன்றிக் கொண்டே இருக்கும்.

சமூகத்துடனான தொடர்பை துண்டித்து, தனிமையை நாடுவதில் அதிக விருப்பம் இவர்களுக்கு இருக்கும். குடும்பத்தினருடனும், நண்பர்களும், உறவினர்களுடனும் கோபப்படுதல், அவர்களை காயப்படுத்தும் விதமாக பேசுதல் போன்ற நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபடுவார்கள். நித்திரை வராமல் அவதிப்படுவார்கள். பொருத்தமற்ற வார்த்தை பிரயோகங்களை பாவிப்பார்கள். இந்த வார்த்தைகளில் அர்த்தம் இருக்காது. திடீரென சமயபக்தியில் ஈடுபடுவது, அரசியலில் ஈடுபாடு காண்பிப்பது போன்ற, திடீர் பிரவேசங்களில் ஈடுபடுவார்கள். மனத்தில் எழும் எண்ணங்களை கட்டுப்படுத்த முடியாமல் அந்த எண்ணங்களுக்குள் சிக்கித் தவிப்பார்கள். "என்னை அவன் முத்தமிட்டு விட்டான்" என்றும் திடீர் என்று சொல்லுவார் கள். இதனால் ஏராளமான குடும்ப பிரச்சனை கள் ஏற்படலாம். மற்றவர்களுக்கு கேட்காத குரல்கள், ஒலிகள் இவர்களுக்கு மட்டும் கேட்கும். மற்றவர்கள் காணாத உருவங்களை இவர்கள் மட்டும் காணுவார்கள்.

இந்த ஒலிகள், ஒளிகள் எல்லாம் பொய்யானது என்பதை இவர்கள் அறியார். "செத்துப் போன பாட்டி, தாத்தா எல்லாரும் தினமும் வந்து என்னுடன் பேசுகின்றனர்"என்று இவர் கள் சொல்லலாம். அது உண்மையில்லை இல்லை என்று நீங்கள் சொன்னால் உங்கள் மீது அவர்களுக்கு சந்தேகம் வரும்.


இவை மட்டுமல்ல தாம் யாராலேயோ கண் காணிப்படுவதாகவும் இவர்கள் நினைப்பார்கள்.

Schizophrenia என்ற மனநோய் அமெரிக்காவில் மட்டும் இரண்டு பில்லியன் பேர் இந்த மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். 17 வயது முதல்- 35 வயது வரை இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளனர். இந்த நோயாளர்கள் தற்கொலை செய்வதற்கான மனநிலையை உடையவர் கள். இந்த மனநோய் உள்ளவர்களில் பத்து வீதமானவர்கள் உண்மையாகவே தற்கொலை செய்து கொள்கின்றனர்.

சாதாரணமாக தற்கொலை செய்பவர்களை விட இந்த மனநோய் உள்ளவர்களே மிக அதிகமாக தற்கொலை செய்துகொள்ளுகின்றனர். எனவே உங்கள் நண்பர்கள், உறவினர்கள் யாராவது இந்த மனநோயாளராக இருந்தால் அவருக்கு உதவ முற்படுங்கள். கண்டிப்பாக அவருக்கு மருத்துவ உதவி தேவை. ஆரம்பத்திலேயே இதை குணப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் அதிகம். முற்றிலும் குணப்படுத்த முடியாவிட்டாலும் மனநோயின் வேகத்தைக் குறைக்க முடியும்

மருத்துவ உதவி பெற்றவர்கள் கூட மருந்துகளை ஒழுங்காக சாப்பிட மாட்டார்கள். மருந்துகள் சாப்பிடாவிட்டால் எந்தப் பயனும் கிடையாது. எனவே இவர்கள் ஒழுங்காக மருந்து சாப்பிடுகின்றார்களா என்று கண்காணியுங்கள்.

■ ■ ■



C-7 LOCALIZATION OF CORTICAL FUNCTIONS IN THE FOUR LOBES OF THE LEFT CEREBRAL CORTEX

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

*E-mail:thaiveedu@gmail.com*

*Fax: 416-849-0594*

*Tel: 416-646-3422*

எண்ணித்துணிக கருமம் துணிந்த பின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

உங்கள் கடன் பிரச்சினைகளை
தீர்க்கும் போது
அதனால் உருவாகும் நன்மை தீமைகளை
சரியாக அறிந்துள்ளிர்களா?

நீங்கள் எடுக்கும் நடவடிக்கையால்

- எதிர்காலத்தில் உங்கள் பிள்ளைகளின் கல்விக்கோ, அவர்களின் தொழில்துறைக்கோ பாதிப்புக்கள் வருமென எண்ணுகிறீர்களா?
- நீங்கள் ஒரு புதிய வேலைக்கு செல்லும்போதோ அல்லது வேறு வேலைக்கு மாறும்போதோ பிரச்சினைகள் வருமென்று எண்ணுகிறீர்களா?
- எதிர்காலத்தில் ஸ்பொன்சர் செய்யும் போது ஏதாவது பிரச்சினைகள் வருமென எண்ணுகிறீர்களா?
- உங்கள் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுமென எண்ணுகிறீர்களா?

இவைபோன்ற பல கேள்விகளுக்கு சரியான பதில்களை அற்ந்துகொள்ள
இத்துறையில் பலவருட கால அனுபவமுள்ள
பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்களின் கடன் பிரச்சினைகளைத் தீர்த்துவைத்த

CRCanada
அழையுங்கள்
சங்கர் அல்லது கிறிஸ்

Having Difficulty
Repaying
Your Student Loan?
New Rule Changes
Can Help

உங்களுக்குத் தெரியுமா?
நீங்கள் கட்டவேண்டிய கடன் தொகையிலிருந்து 15%-20%த்தை மட்டும்
தவணை முறையில் கட்டிமுடிக்கலாம்.


T.SHANKAR
Director

CRCanada
Credit Reform Canada
*Judgement in your favour!*
885 Progress Ave, Unit - 202, Scarborough.
CR Canada
416-264-1010

# Your life.
# Your career.
# *Your call.*

If you're looking for a career that offers the potential for financial success and have the drive, discipline, energy, and self-confidence to run your own business, then consider becoming a Sun Life Financial advisor. Contact us to learn more about this rewarding career opportunity.



**Chandran Rasalingam**
Sales Manager
Bus 416-412-0401 ext 305
Cell 416-909-0400
Fax 416-412-1438
gnanachandran.rasalingam@sunlife.com

2075 Kennedy Road, Suite 1300
Scarborough ON M1T 3V3

**Sun Life Financial**

Sun Life Financial advisors are contracted with Sun Life Financial Distributors (Canada) Inc., registered in Quebec as a financial services firm.
© Sun Life Assurance Company of Canada, 2008.



To get the key
for the future!!!
வீடு வாங்க விற்க, வியாபார நிலையங்களில் முதலீடுகள் செய்ய...
RE/MAX
Karuna Gopalapillai
Broker
Office: 416.321.2228
Direct: 416.830.8520
RE/MAX Vision Realty Inc., Brokerage
1-2210 Markham Road
Toronto, ON M1B 5V6
E & OE
Toronto
Detached
Markham/Brimorton
3 + 2 BR, 2 WR
$339,000
Toronto
Detached
Brimely/Lawrence
3 + 2 BR, 2 WR
$334,900
Toronto
Detached
Port Union/Sheppard
4 Bedroom, 3 Washroom
$379,900
Ajax
Detached
Taunton & Salem
4 Bedroom, 4 Washroom
$393,000
Ajax
Detached
Rossland/Audley
4 Bedroom, 3 Washroom
$394,000




Centum Vision
Mortgage Inc.
The Essential
MORTGAGE
GUIDEBOOK
WANTED
New & Experience Agents
WE PROVIDE THE BEST
TRAINING
WE PROVIDE:
☑ Training
☑ Support
☑ Better Split
☑ Convenient Locations
☑ Franchise Opportunities*
☑ Residential Mortgage
☑ Commercial Mortgage
☑ Equity Loan & Line of Credit
(*only for Brokers)
416.830.8520
2929 Lawrence Avenue East, Suite 203, Scarborough, ON M1P 2S9

RE/MAX
Rouge River Realty Ltd., Brokerage
*Independently Owned and Oper ated*

# Buying or Selling Home





## Uthayan Nadarajah
**Broker**
37-31 Tapscott Road, Toronto, ON M1B 4Y7

Office: 416-321-1999
Cell: 416-727-9945
Toll Free: 800-663-7119
Fax: 416-321-2290
Email: unadarajah@trebnet.com

Apex 416 297 0707

# 'மக்கள் கவிஞன்' பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்



தேவகாந்தன்
devakanthan@thaiveedu.com

இப்போதெல்லாம் கார்களில் தவிர்க்க முடியாத ஓர் அம்சமாகியிருக்கிறது இசை. வானொலியில், குறுந் தகட்டிலென்று பல வாறாக அவை. சிலவற்றை அவற்றின் அர்த்தத்துக்காக, சிலவற்றை அவற்றின் இசைக்காகவென்று ரசிக்கவும் முடிகிறது தான். ஆனாலும் இவற்றின் சமூகப் பொறுப்புப்பற்றி யோசிக்கையில் வெறுமைதான் எஞ்சுகிறது. பழையனவெல்லாம் நல்லனவுமல்ல, புதியனவெல்லாம் கெட்டனவுமல்ல என்ற புரிதல் எனக்கிருக்கிறது. ஆயினும் சில பழைய ஆளுமைகள்போல் புதியனவான ஆளுமைகள் தோன்றவில்லை என்பதையும் நாம் ஒப்புக்கொண்டேதான் ஆகவேண்டும்.

தம் கொள்கைகளைக் கடைசிவரை காத்திருந்து, அவற்றோடு தம் வாழ்வை இணைத்துக்கொண்டவர்கள்தான் வரலாற்றில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அப்படியானவர்களில், திரைப்படப் பாடலாசிரியர்களைப் பொறுத்தவரை பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் இடம் முதன்மையானது. அவருக்குப் பின் இன்று நூற்றுக்கு மேற்பட்ட பாடலாசிரியர்கள் தமிழ்த் திரைப்படத் துறையிலே தோன்றியிருக்கிறார்கள். ஆனாலும் இன்னும் பட்டுக்கோட்டையாரின் இடம் வெறுமையாகவே இருக்கிறது.

இளையராஜாவுக்கு இருக்கும் சிறப்புகளில் ஒன்று அவர் கிராமிய இசையை திரைப்படத் துறைக்குள் அதிகமாகவும் புகுத்தியவர் என்பது. அதுபோல் கிராமியப் பாடல்களை, அதன் அர்த்தங்களை திரைப்படத் துறைக்குள் புகுத்தியவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். மட்டுமில்லை, தான் சார்ந்த கொள்கையைக்கூட அவ்வப்போது திரைப் படப் பாடல்களில் புகுத்தி மக்களின் குரலை எதிரொலிக்கச் செய்தவர் அவர். அவரது எளிமையே சில பாடல்களில் மிகஅழகாக வந்து விழுந்திருக்கும்.

ஸ்ரீதர் 'கல்யாண பரிசு' திரைப்படத்தை உருவாக்கிய சமயம், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்திடம்தான் பாடல்களை எழுதி வாங்கவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டார். அதன்படி பாடலாசிரியரைச் சந்திக்க பட்டுக்கோட்டை போயிருக்கிறார்கள். அவர் முதலில் கதையைக் கேட்டிருக்கிறார். ஸ்ரீதர் மேலோட்டமாகக் கதையைக் கூறி முடிய கல்யாணசுந்தரம் சொல்லியிருக்கிறார், 'சரி, பாடலை எழுதுங்கள்: காதலிலே தோல்வியுற்றான் காளை ஒருவன் - கலங்குகிறான் அவளை நெஞ்சில் நிறுத்தி..'

தான் கதை சொன்ன இலகு பாணியிலேயே கல்யாணசுந்தரம் பாடலைச் சொன்னது திகைக்க வைத்திருக்கிறது ஸ்ரீதரை. பின்னாளில் இதை ஸ்ரீதரே மிக உருக்கமாகச் சொல்லி கல்யாணசுந்தரத்தின் திறமையைப் பதிந்துகொண்டிருக்கிறார்.

இடதுசாரிக் கருத்துக்களில் மிகத் தீவிரமான ஈடுபாடிருந்தது பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்துக்கு. ஒரு கலைஞன் மக்களை நோக்கிப் பயணிக்கிறானென்பதின் அர்த்தம், அவர்களது இருண்ட வாழ்வின் விடிவுக்கான பாதையில் சிரத்தைகொண்டு உழைப்பது தானே.

எம்.ஜி.ஆர். நடித்து இயக்கிய படம் 'நாடோடி மன்னன்'. அதில் நாடோடியான எம்.ஜி.ஆருக்கும் புரட்சிக்காரியான பானுமதிக்கும் ஒரு பாடல் வரும். பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரமே அதை எழுதியிருந்தார். கேள்வி பதில் மாதிரியான வடிவத்தில் அப்பாடல் அமைந்திருப்பது அதன் சிறப்புகளில் ஒன்று.

அதில் பெண் கேள்வியாகக் கேட்பாள்: 'காடு விளைந்தென்ன, நமக்கு கையும் காலும்தானே மிச்சமாக இருக்கிறது? இந்தப் பஞ்சைகள் வாழ்வதற்கு வழியே இல்லையா?'

அதற்கு ஆண் பாட்டிலே பதிலளிப்பான்: 'தினம் கஞ்சி கஞ்சியென்றால் பானை நிறையாது, சிந்தித்து முன்னேற வேணுமடி.'



அந்த 'சிந்தித்து முன்னேற வேணுமடி' என்ற சொற்களில் எவ்வளவோ அர்த்தங்கள் பொதிந்திருக்கின்றன.

'பொருளே இல்லார்க்குத் தொல்லையா
புதுவாழ்வே இல்லையா
இருள் நீங்கும் மார்கம் இல்லையா
இறவைா நீ சொல்லையா'

என்றுதான் வறுமையின் உச்சத்தை அக் காலத் திரைப்படப் பாடலாசிரியர்களால் வெளிக்கொணர முடிந்திருந்தது. வறுமையை நீக்க அவர்கள் அறிந்திருந்த ஒரேவழி இறைவனை அழைப்பதுதான். வறுமையை இல்லாது செய்ய இறைவன் சுடர் பிடிக்க வேண்டியிருந்தது. குசேலருக்கு கிருஷ்ணன் 'அளப்பது'போல் இறைவனே வந்து அவரவர் வறுமையையும் தீர்ப்பதான மார்க்கம் தவிர வேறு மார்க்கம் அவர்களுக்குத் தெரியாதிருந்தது.

வறுமையை ஒழிக்க வேறு ஒரு மார்க்கம் இருக்கிறது என்ற கருத்தானது மார்க்சீயச் சிந்தனைகள் பரவ ஆரம்பித்த பின்னால் தான் பலருக்கும் தெரிய வந்தது. அவ்வாறு தெரிந்திருந்தவர்களிலும் சிலர்தான் தம் வாழ்வும், வளமும் அழிந்தாலும் கலங்காமல் அக் கொள்கைகளைக் கடைசிவரை தம் எழுத்துக்களிலும், பாடல்களிலும் எதிரொலிக்கச் செய்தார்கள்.

அவ்வாறானவர்களில் முதன்மையானவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். கஞ்சி.. கஞ்சியென்று அழுதுகொண்டிருந்தால் பானை நிறைந்திடாது, அதைப் புரட்சி மூலம் தான் பெறவேண்டும் என்பது 'சிந்தித்து முன்னேற வேண்டுமடி' என்ற அவ்வரியின் கருத்து. அக் கருத்து உள்ளுறைந்து வருவதிலும் ஓர் அழகுண்டுதான். ஆனாலும் கல்யாண சுந்தரம் அதை அழகுக்காகவே சொல்லாமல் விட்டிருந்தார் என்று கொள்வதற்கில்லை. அக்கால கட்டத்தில் தென்னிந்தியா முழுவதும் வியாபித்திருந்த நக்ஸலைட்களுக்கெதிரான சட்ட வன்முறை காரணமாக அப்படியொரு பூடகத்தில் தன் கருத்தை வெளிப்படுத்தவேண்டிய நிலையே அவருக்கு இருந்திருக்க முடியும்.

தனது கருத்தை இன்னொரு படத்திலேதான் கொஞ்சமேனும் வெளிக்கொண்டுவர முடிந்தது பட்டுக்கோட்டையாருக்கு. அது 'அரசிளங்குமரி' படம். அதில் எம்.ஜி.ஆர் குழந்தையை வைத்துக்கொண்டு அதன் அழுகையைத் தணிப்பதற்காகப் பாடுவது போன்ற ஒரு காட்சி வரும். 'சின்னப்பயலே... சின்னப்பயலே...' என்று அப்பாடல் தொடங்கும். இந்தப் பாடலைக் கேட்கிறபோதெல்லாம் பாரதியாரின் 'ஓடிவிளையாடு பாப்பா' என்ற பாடல் எனக்கு நினைவுவரத் தவறுவதில்லை. 'மோதி மிதித்துவிடு – பாப்பா, அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா' என்று குழந்தைகளுக்கு பாரதி கூறுவதுபோல்தான், கையிலுள்ள குழந்தைக்கு கதாநாயகன் சொல்லும் 'தனியுடைமைக் கொடுமைகள் தீர தொண்டுசெய்யடா, தானாய் எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா' என்று வரும் சுந்தரத்தின் பாடல்வரிகளும் இருக்கின்றன.

இதிலேகூட தனியுடைமையை ஒழிக்கப் பாடுபடு என அறிவுரை சொல்வதாக மட்டும் தான் வருகிறது. தனியுடைமையை ஒழித்து விட்டு அந்த இடத்தில் எதை ஸ்தாபிப்பது என்பதற்கு அதில் விடையிருக்காது.

அதற்கு, மேலும் சில காலம் செல்ல வேண்டியிருந்தது கல்யாணசுந்தரத்துக்கு.

'திருடாதே' படம் வந்தது. அதிலும் கதாநாயகன் எம்.ஜி.ஆர்தான். அதிலும் சின்னப் பிள்ளைகளை நோக்கிப் பாடுவதுபோலத் தான் பாடல் வரும். 'திருடாதே, பாப்பா திருடாதே' என்று தொடங்குகிறது அப் பாடல். அதிலேதான் 'இருக்கிறதெல்லாம் பொதுவாய்ப் போனால், பதுக்கிற வேலை இருக்காது' என்று எல்லாம் பொதுவுடைமையாக வேண்டியதன் அவசியம் வற்புறுத்தப்பட்டிருக்கும்.

இன்று எத்தனையோ திரைப்படப் பாடலாசிரியர்களை தமிழ்ச் சினிமா உலகம் கண்டுவிட்டது. ஆனால் மக்களை நினைத்து, தன் கொள்கையை நினைத்துப் பாடல் எழுதுபவர்கள் அறவே இல்லாதிருப்பது தமிழ்ப்பட உலகத்தின் சாபம்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தை 'பாட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்' என்று ஒரு பிரபலம் புகழ்ந்திருக்கிறது. அது கண்ணதாசன் என்பதாய் ஞாபகம். அப்படி பாட்டின் வீறுசெறித்து தன் கொள்கையை எந்தெந்த வழிகளிலெல்லாமோ பிரசித்தம் செய்த அந்தத் தலைமகனின் இடம் இன்றும் வெறுமையாகத்தான் இருக்கிறது. அந்த ஆளுமைகள்போல் புதிய ஆளுமைகள் தோன்றவில்லையே ஏன்? மேட்டை இடிக்காமல் பள்ளத்தை நிரப்ப முடியாது என்பது புரியாத சங்கதியல்ல. அதை வெளியே சொல்வதற்கு எழுத்தாண்மை தேவை. அது கல்யாணசுந்தரத்திடம் இருந்தது. இன்றைய தலைமுறைப் பாடலாசிரியர்களிடம்...?

■ ■ ■

கனடாவில் நடைபெறும் நிகழ்வுகளைப் பார்ப்பதற்கும், உங்கள் நிகழ்வுகளைப் பதிவதற்கும்.

www.inayam.net

# அனர்த்தங்கள் நிகழ்ந்தால் ஆயத்தமாக இருக்கின்றீர்களா?

உலகளாவிய ரீதியில் புயல், வெள்ளம், பூகம்பம், சுனாமி, தொற்று நோய்கள் போன்ற அனர்த்தங்கள் அடிக்கடி நடந்தேறுவதை வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் போன்ற ஊடகங்கள் மூலம் அறிந்திருப்பீர்கள். இவ் அனர்த்தங்கள் எந்த நாட்டையும் எப்பொழுதாவது தாக்கலாம்.

இவ்வனர்த்தங்களில் இருந்து பொது மக்களைக் காப்பாற்றுவது ஒவ்வொரு அரசாங்கத்தினதும் கடமையாகும். இக் கடமைகளின் நிமித்தம் ரொரான்றோ பொது சுகாதாரத் திணைக்களம் (பொ.சு.தி) அவசர காலத் திட்டமிடல், ஆயத்தமாதல் பிரிவு







ஒன்றை நிர்ணயித்து உள்ளது. இப்பிரிவு ரொறொன்ரோ அவசர சிகிச்சைப் பகுதியினருடன் சேர்ந்து ஒரு அங்கமாகத் தொழிற்படுகிறது.

அனர்த்தங்கள் யாரையும் தாக்கலாம். அப்பொழுது பல சேவைகள் துண்டிக்கப்படலாம். அத்தருணத்தில் பொதுமக்களுக்குரிய உணவு சேவை, வைத்திய சேவை மற்றும் அவசிய சேவைகள் துண்டிக்கப்படலாம். இவை தற்காலிகமானதே என்பதனால், பொதுமக்கள் தமக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை குறைந்தது மூன்று நாட்களுக்காவது ஆயத்தமாக வைத்திருக்கும்படி துண்டுப்பிரசுரங்களின் மூலம் குறிப்பிட்டுள்ளார்கள். அவர்கள் குறிப்பிட்ட அத்தியாவசியப் பொருட்களின் பட்டியலை கீழே தருகின்றோம்.

### உணவு வகைகள்

- உலர்ந்த உணவு வகைகள்
- நீர் பிளாஸ்ரிக் போத்தல்களில்
- தகரப் பேளைகளில் அடைக்கப்பட்ட ஆயத்த நிலையிலுள்ள உணவு வகைகள்
- கடலை வகைகள் (நீண்ட நாள் வைத்திருக்கலாம்)
- பழ வகைகள் (பேளைகளில் அடைத்தவை)
- சூப் வகைகள்
- ரின் பால் (கட்டி) ஆவியாக்கிய பால்
- விசுக்கோத்து வகைகள் - இனிப்புள்ளவை, இனிப்பற்றவை.
- உலர் பால் மாவு வகைகள்
- பெட்டிகளில் வரும் தானிய வகைகள் (Corn Flakes போன்றவை)
- கன்டொஸ் சொக்லேட் வகைகள்
- ஈயத்தில் அடைக்கப்பட்ட NUTRI BAR போன்றவை
- நிலக்கடலை பட்டர், ஜாம், தேன் என்பன
- காய்ந்த உலர்ந்த பழங்கள் - பேரிச்சை, முந்திரிகை வற்றல் போன்றவை
- குழந்தைகளுக்குரிய எல்லாவித உணவு வகைகள்
- வயோதிபர்களுக்குரிய எல்லாவித உணவு வகைகள்
- கொள்கலனில் உள்ள பழச்சாறுகள்
- நூடுல்ஸ்
- முதலுதவிப் பெட்டிகளும் அதற்குரிய பொருட்களும்
- அஸ்பிரின், ரைலினோல் போன்ற மற்றும் பாவிக்கப்படுகின்ற வில்லை கள், மருந்துகள்.

ஒவ்வொரு உணவின் காலாவதித் திகதிகளை குறித்து வைத்து அவற்றை பாவித்த பின்பு மீண்டும் அவற்றை வாங்கி வைப்பது சிறந்த முறை. பழுதுபட்ட பேளைகளை அதாவது சிறிய துவாரம் விழுந்த தகரப் பேளைகள் களஞ்சிய வைப்பில் இடக் கூடாது. பழுதடைந்து விடும். உங்களுக்கு விருப்பமான அதேநேரத்தில் சத்துகள் அடங்கிய உணவு வகைகளைத் தெரிவு செய்யுங்கள்.

அவசரகாலப் பொதியொன்றை நீங்களே குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக தயார் செய்து வைத்திருக்கலாம். உங்கள் குடும்ப அங்கத்தவர்களை அவரச நேரத்தில் எப்படி, எங்கே தொடர்பு கொள்ளலாம் என்பதை கலந்தாலோசித்து அறிந்து வைத்திருத்தல் வேண்டும். இப் பொதிகளுடன் முதலுதவிப் பெட்டியும் சேர்த்துக்கொள்ளப்படுதல் வேண்டும். மேற்கூறிய பொதிகளை இலகுவாக எடுத்துச் செல்லும் வகையில் ஆயத்தமாக வைத்திருப்பது நல்லது.

பிள்ளைகளின் பாடசாலைத் தொலைபேசி இலக்கங்கள், தூர உள்ள உறவினர்களின் தொலைபேசி இலக்கங்கள், கணவன், மனைவி இருவரதும் வேலைத்தள தொலைபேசி இலக்கங்கள் என்பன பிரதானமாகும்.

கடவுச்சீட்டு, உயில், பிறப்புச் சாட்சிப் பத்திரம், பிரஜாவுரிமைப் பத்திரம் ஆகியவற்றின் நிழற் பிரதிகளையும் நீர், தீ என்பன வற்றால் பாதிக்கப்படாத பேளையில் வைத்திருக்கவும். செல்லப் பிராணிகளை வைத்திருப்போர் அதற்குரிய ஆயத்தங்களைச் செய்து வைத்திருப்பது நலம். ஏனெனில் அகதிகளாகக் கூடும் இடங்களில் இவை அனுமதிக்கப்பட மாட்டாது. பார்வையற்றவர்களுக்கு உதவும் சேவையிலுள்ள நாய் களை மாத்திரம் அனுமதிப்பார்கள்.

ஊடகங்கள் மூலம் அரசாங்கத்தால் விடுக்கப்படும் செய்திகளைக் கேட்டு அதன்படி ஒழுகுங்கள்.

மனதில் பீதி, பயம், கோபம், துக்கம் போன்ற உணர்ச்சிகள் உருவாகும். இது சாதாரணம். பிள்ளைகளுக்கு ஆலோசனை கூறுங்கள். அவர்களது உணர்ச்சிகளை அலட்சியம் செய்யாது நன்கு விளங்கிக் கொண்டு ஆறுதல் கூறி மனதைச் சாந்தப்படுத்துங்கள். இயலாதவிடத்து உதவி கேளுங்கள். இணையத்தளம் **www.toronto.ca/health**

### மேலும் சில பொருட்களின் அட்டவணை பின்வருமாறு

- Paper Towels / Toilet Paper / Facial Tissue / Feminine hygiene Products
- மெழுகுவர்த்தி, தீப்பெட்டி
- பெரிய தாங்கு சக்தியுள்ள பிளாஸ்ரிக் பைகள்
- ரோச் லைட், பற்றரிகள் - ஒவ்வொரு வருக்கும் தனித்தனியாக
- கையில் எடுத்துச் செல்லக்கூடிய வானொலிப் பெட்டி பற்றரிகள்
- மழையில் நனைந்தால் மாற்றுவதற்குரிய துணிகள்
- கம்பளிப் போர்வைகள்
- கத்தி, கரண்டி வகைகள்
- மேலதிக வீட்டுத் திறப்பு, கார் திறப்பு
- அலுமினியச் சுற்றுத்தாள்
- பிளாஸ்ரிக் சுற்றுத்தாள்
- ஊது குழல் (விசில்)
- உணவுப் பாத்திரங்கள் - தட்டுகள் குவளைகள்
- கைத்தொலைபேசி – மேலதிக பற்றறியுடன்
- அழியாத மைப்பேனா
- கையால் பாவிக்கக்கூடிய Can Opener
- பற் தூரிகைகள், பற்பசைகள்
- செலவழிக்கத் தேவையான பணம் - மாற்றியது
- பணம் பெறும் அட்டைகள்
- SLEEPING BAG / RAIN COAT / STURDY SHOES

மேற்கூறிய பொருட்களை உடனடியாக வாங்குவது சிரமம். சிறிது சிறிதாக ஒவ்வொரு கிழமையும் வாங்கிச் சேர்த்துக் கொள்ளலாம்.

மூன்று நாட்களுக்காவது எம்மைத் தயார் செய்து வைத்திருந்தால் பல சிரமங்களில் இருந்து தப்பிக் கொள்ளலாம். அதேசமயம் ரொறொன்ரோ பொது சுகாதாரத் திணைக் களமும், மற்றும் ஆயத்தங்கள் சன சமூக நிலையங்களுடன் இணைந்து சேவையாற்றத் தொடங்குவார்கள்.

இவ் ஆயத்தங்கள் ஒரு அவசரத் தேவையைச் சமாளித்து பல சிக்கல்களில் இருந்து பொதுமக்களைக் காப்பாற்ற ஏதுவாக இருக்கின்றது.

■ ■ ■

GP
TELECOM
இரமணன் திரு
(முன்னாள் பெல் கனடா, ரோஜேர்ஸ் ஊழியர்)

For Your Business We
- Install, Repair, Sell
- Meridian Phone Systems & System Phones
- Structured Voice & Data Cabling
- Install, Repair Home Phone Wiring
- TV Cable (RGB)
- Network Cable

உங்கள் அழகிய வீட்டில் பழுதுகள் ஏதும் ஏற்பட்டாமல்
சுவர்களுக்கு உள்ளால் வயர் எடுத்து கொடுக்கப்படும்

416.203.0344





# வீடு வாங்க விற்க...


வீடு வாங்க விற்க அல்லது அது சம்பந்தமான விபரங்களுக்கும்
குறைந்த வட்டி விகிதத்தில் மோட்கேஜ் செய்யவும் நட்புடன் அழையுங்கள்....



**Mathan Selvendarakumaran**
Sales Representative
Direct: **416-625-2870**
**Bus: 416-298-3200**

**Kuga Raveendrarajah**
**Broker**
**Tel: 416-843-8585**
**Bus: 416-298-3200**

"சேமிப்பின் அடையாளம்
அழகானதோர் வீடு"



**$329.000**

**Lawrence & Brimley**
3Bedrooms 2 Washroom
Finished Basement



**$329.000**

**Markham & Lawrence**
3 Bedrooms 2 Washroom
Finished Basement



**$514.900**

**Keele & Mcnaughton**
3+1 Bedrooms 4 Washroom
Finished Basement W/O

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/Today Realty Ltd.,** Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6

*Independently Owned and Operated, Realtor

# குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி



**RESP SPECIAL!**
இம்மாதம் RESP செய்பவர்களுக்கு
3 விசேட சலுகைகள் உண்டு!
**- Start from $25**

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.
RBC Insurance
Canada Life
Manulife Financial

**தனா மாணிக்கவாசகர்**
*Broker*

# Life Insurance

**Critical Illness Insurance**

Home Equity Line of Credit

# Disability Insurance
# Mortgage Insurance

**RRSP - Start from $25**
**Loan approval within 24hrs - Bad credit no problem**
**RESP - Start from $25**
**(20%-40% Government Grant + 15% Company Bonus)**



**INSURANCE SERVICE INC.**
**Cell: 416-728-5772**
Business: 416-290-1200

FREE

இலவசம்
இலவசம்
இலவசம்
இலவசம்

தகவல் 2009

THAKAVAL BUSINESS DIRECTORY 2009

**2009 தகவல் வர்த்தகக் கைநூலில் உங்கள் விளம்பரங்கள் முற்றிலும் இலவசமாக இடம்பெற இன்றே தொடர்புகொள்ளுங்கள்.**



உங்கள் வர்த்தக விளம்பரங்கள் குறைந்த செலவில் பல வடிவங்களில் வெளிவர அழைங்கள்.

Four Ways to Browse Your Ad

- Regular Directory
- Pocket Size Directory
- Website
- PDA (Personal Digital Assistant)

**FREE Advertisement Size: 11cm x 5.5cm**

FULL PAGE:
- Color: $300
- B/W: $150
- Both: $400
- 2 Color & 2 B/W = $750

இறுதி திகதி:
OCTOBER 31, 2008

Thakaval Business Directory
230-55 Nugget Ave.
Scarborough ON
M1S 3L1

Tel: 416-361-0482
Fax: 416-361-0482
info@thakaval.ca
www.thakaval.ca

# ஆரோக்கியம் நிறைந்த அறிவுள்ள பிள்ளையைப் பெற...

-துசிதா பத்மநாதன்-
thusitha@thaiveedu.com

மீண்டும் வீடு பத்திரிகை வாயிலாக உங்க-ளைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகி-றேன். அறிவுள்ள ஆரோக்கியமான குழந்தை யைப் பெறுவதற்கு கருத்தரிப்பிற்கு முன், கருத்தரிப்பிற்குப் பின் என பிரசவ காலம் வரை கடந்த கட்டுரையிற் பார்த்தோம். அத்தகவல்கள் நிச்சயமாக உங்களுக்குப் பயனளித்திருக்கும் என நம்புகின்றேன்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பர், அதிலும் நோயற்ற அறிவுச் செல்வங்-களைப் பெற்றுவிட்டால் பேரானந்தம் தான். பிரசவத்திற்குப் பின் குழந்தைகளை நோயற்ற அறிவுச் செல்வங்களாக எவ்வாறு வளர்க்-கலாம் என இக்கட்டுரையிற் பார்ப்போம்.

## ஆரோக்கியமான குழந்தைக்கு அடிப்படை தாய்ப்பால்.

ஆரோக்கியமான குழந்தைக்கு அடிப்படை யாக அமைவது தாய்ப்பால். தாய்ப்பால் கொடுக்கக் கூடியவர்கள் தாய்ப்பாலைக் கொடுப்பதன் மூலம் சேய்க்கு மட்டுமல்ல தாயின் ஆரோக்கியத்திற்கும் சிறந்தது. ஒரு குழந்தைக்கு, தாய்ப்பாலுக்கு இணையான வேறு எந்த உணவும் இவ்வுலகிற் கிடையாது. குழந்தை பிறந்ததுமே தாய்க்கு முதன் முதலில் சுரக்கும் பாலை சீம்பால் (Colostrums) என் கிறோம். இது முதல் மூன்று நாட்கள் வரை சுரக்கும். இதன் அருமை பலருக்குப் புரிவ-தில்லை. இந்த சீம்பாலைக் குழந்தைக்குக் கட்டாயம் கொடுக்க வேண்டும். இதுவே, குழந்தையின் வாழ்நாள் முழுவதுக்கும் நீங்கள் போடும் உரமாகும். இச்சீம்பால் மூலம் குழந்தைக்கான நோய் எதிர்ப்பு சக்தி அதிக அளவிற் கிடைக்கின்றது.

தாய்ப்பால் கொடுப்பதால் கிடைக்கும் திருப் தியே தனிதான்! தாய்ப்பால் கொடுப்பதால் தாயால் ஒரு விதமான திருப்தியை உணர முடியும். அதைக் கொடுப்பதன் மூலம் தாயின் மன அழுத்த நிலை பெருமளவு குறைவதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. தாய்ப்பால் கொடுப்பதால் பெண்களுக்கு மார்புப் புற்று நோயிலிருந்து இயற்கையான பாதுகாப்பும் கிடைக்கிறது.

குழந்தை தாயிடமிருந்து பாலை உறிஞ்சிக் குடிக்கும்போது அந்தச் செயலானது தாயின் மூளையிலிருந்து ஒரு சிறப்பான ஹார்மோனை சுரக்கச் செய்கிறது. இதுதான் தாயின் மார் பகத்தின் மீது செயற்பட்டு பால் சுரக்கவே செய்கிறது! மேலும் இந்த ஹார்மோன் தாயின் கர்ப்பப்பையின் மீதும் செயற்பட்டு அதை இயல்பாகச் சுருங்கச் செய்து பழைய அளவுக்குக் கொண்டுவர உதவுகிறது.

தாய்ப்பால் கொடுப்பதால் குழந்தைகளின் இறப்பு விகிதம் மிகவும் குறைகிறது என்கிறது இன்னுமோர் ஆய்வு. சில குழந்தைகளுக்கு சிறு வயதிலேயே நீரிழிவு நோய் வந்து, அவர்களை வாழ்நாள் முழுவதும் அவஸ்-தைப்பட வித்திட்டுவிடுகிறது. தாய்ப்பால் கொடுப்பதால் குழந்தைகளுக்கு நீரிழிவு (Juvenile Diabetes) வருவது வெகுவாகக் குறைவதாகவும் தெரிகிறது.

## தாய்ப்பால் குடிப்பதால் அதிபுத் திசாலியாக வளரும் குழந்தை

தாய்ப்பால் குடித்து வளரும் குழந்தை அதிபுத்திசாலியாக இருக்கும் வாய்ப்புகளும் அதிகம் என்றும் ஆராய்ச்சிகள் சொல்கின் றன. குழந்தையின் மூளை வளர்ச்சி சீராக இருப்பதோடு, குழந்தையின் ஒவ்வொரு காலத்திற்குமான செய்பாடுகளை (உடம்பு பிரட்டல், தவழுதல், நடத்தல், பேசுதல்) உரிய காலத்திற் செய்யவும் உதவுகிறது.

தாய்ப்பால் எளிதாக சமிபாடடையக் கூடியது. மாப்பால் (formula) எளிதில் சமிபாடடை-யாததால், குறிப்பிட்ட நேரங்களிலே தான் கொடுக்கவேண்டும். ஆனால், தாய்ப்பால் குழந்தை பசிபோன்று காணப்பட்டால் எந்த நேரமும் கொடுக்கலாம். அத்தோடு உங்கள் குடும்ப வருவாயில் இருந்து, மாப்பால் வேண்டும் செலவை இல்லாது செய்கிறீர்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாகக் குழந்தைக்குத் தாய்மேல் அளவுகடந்த பாசத்தையும், தாய்க்-குக் குழந்தைமேல் அளவுகடந்த அன்பையும் தாய்ப்பால் கொடுக்கின்றது. ஆகவே, தாய்ப்-பால் கொடுக்கக் கூடியவர்கள் உங்கள் குழந்தைக்கு ஆகக் குறைந்தது 6 மாதங்க ளுக்காவது ஊட்டுங்கள். ஓர் ஆண்டு காலம் வரை கொடுக்கக் கூடியவர்கள் தொடர்ந்து கொடுத்தால் மிகவும் நன்று.


முதல் மூன்று வாரங்களுக்கும், நாளுக்கு 8-10 முறைகள், ஒவ்வொரு முறையும் 60-100 ml பாலூட்டலாம். 4 கிழமைகளில் இருந்து 3 மாதங்கள் வரை நாளுக்கு 6-8 முறைகள், ஒவ்வொரு முறையும் 125-150 ml பாலூட்டலாம். 4-6 மாதங்கள் வரை நாளுக்கு 5-6 முறைகள், ஒவ்வொரு முறையும் (150-225ml) பாலூட்டலாம். மாப் பாலூட்டுபவர்கள் கண்ணாடிப் போத்தலை (Glass Bottle) பயன் படுத்தவும். பாற் போத்தல் மற்றும் சூப்பியை அவ்வப்போது கொதிநீரில் போட்டுக் கழுவு வதன் மூலம் நுண்ணிய கிருமிகளைப் போக்கலாம்.

தாய்ப்பாலூட்டும் பெண்கள் மீன், காய்கறிகள், பால், தண்ணீர் ஆகியவற்றைத் தாராளமாக உட்கொண்டால் குழந்தைக்குப் போதுமான பால் கிடைப்பதுடன் தாயின் ஆரோக்கியத் திற்கும் நன்மை பயக்கும். அத்துடன் தாய்-பால் ஊட்டும் காலம்வரை Maternaவை தொடர்ந்தால் தாய்க்கு அனைத்து வகை யான உயிர்ச்சத்துக்களும் தாராளமாகக் கிடைக்கும். அத்தோடு வைத்தியரிடம் அறிந்து குழந்தைக்கும் Vitamin ஒவ்வொரு நாளும் கொடுக்க வேண்டும். தாய்ப்பாலில் அனைத்துச் சத்துக்களும் நிறைந்திருந்தா-லும் Vitamin D மட்டும் இன்மையால், நிச்ச யமாக Vitamin D-யை வைத்தியரின் அனு மதியுடன் வாங்கிக் குழந்தைக்கு ஒவ்வொரு நாளும் கொடுக்கவேண்டும். தாய்ப்பால் கொடுக்கும் காலங்களில் தாய் பழைய சாப்பாடுகளை மற்றும் தோசை, இட்லி போன்ற புளிச்சல் சாப்பாடுகளை முடிந்தளவு தவிர்த்தல் நன்று. இதனால் தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு சமிபாடடைவ திற் சிக்கல்கள் ஏற்படலாம். அத்தோடு தாய்மார் நீராடிய பின் நன்றாகத் தலை துவட்டாது வெறுவயிற்றுடன் குழந்தைக்குப் பாலூட்டுவதால் குழந்தைக்கு தடுமன் வர-லாம்.

குழந்தைகளுக்கு நாம் எவ்வளவுக்கு எவ்வ ளவு திண்ம உணவை (Solid food) தாமதித்து அறிமுகம் செய்கின்றோமோ அவ்வளவுக்கு நன்மையே பயக்கும். பொதுவாக குழந்தை கள் 6 மாதங்களில் திண்ம உணவை உண் பதற்கு (Solid food) தயாராக இருப்பினும் குழந்தைக்குப் போதுமான தாய்ப்பால் சுரக் குமாயின் குழந்தைக்கு தாய்ப்பாலைக் கொடுப்பதே நன்று. அவ்வாறு போதுமான பால் இல்லையெனின் குடும்ப வைத்தியரின் ஆலோசனையைப் பெற்றுப் பின் திண்ம உணவைக் கொடுக்க ஆரம்பிக்கலாம்.

திண்ம உணவு (Solid food) ஆரம்பிக்கும் பொழுது Rice Crerealல் ஆரம்பிக்கவேண்டும். rice cereal-லிலே ஒவ்வாமையின் (allergic reations) பாதிப்பு மிகக் குறைந்தளவில் உள்ளது. அதன் பின் Oats cereal எனப் படிப் படியாக ஆரம்பிக்கலாம். 3-5 நாட்களுக்கு ஒரு Cereal-லையே அறிமுகம் செய்ய வேண்டும். இதன் மூலம் குழந்தைக்குப் புதிதாக அறிமுகம் செய்த உணவுக்கு ஒவ்வாமை உள்ளதா என்பதைக் கண்டறிய முடியும். எப்பொழுதுமே புதிதாக ஒரு உணவைக் கொடுக்கும் பொழுது குழந்தை யைக் கவனமாகக் கண்காணிப்பதோடு, வேறு புதிய உணவுவை அதே நாளில் கொடுக்காமல் தவிர்ப்பது நன்று.

ஏற்கனவே தயாரித்து போத்தல்களில் அடைத்த உணவுகளைக் வாங்கிக் கொடுக் காது நல்ல உடன் காய்கறிகளை வாங்கி உடன் சமைத்து அரைத்துக் கொடுப்பதே குழந்தையின் ஆரோக்கியத்திற்கு நல்லது. முடிந்தளவு வீட்டுத் தயாரிப்பில் குழந்தை களுக்குத் திருப்தியாக உணவூட்டுங்கள். அதேபோன்று நன்கு கனிந்த பழங்களை மசித்துக் கொடுங்கள். குழந்தைகளுக்கு கடைகளில் இருந்து வாங்கும் பழச்சாறு



(Juice) கொடுக்காது அதற்கீடாக போதியளவு சுட்டாறிய தண்ணீர்க் கொடுக்கலாம். அல்லது நீங்கள் சீனி சோர்காது பழச்சாறு செய்து கொடுக்கலாம். குழந்தைகளுக்கு இனிப்பை அறிமுகம் செய்யாமற் தவிர்பதன் மூலம் குழந்தைகள் நீரிழிவு நோய்க்கு அகப்படுவதைத் (Juvenile Diabetes) தவிர்க்-கலாம்.

குழந்தைக்கு நன்கு பசித்தபின்பு பால்/உணவு கொடுத்தல், காலம் தாழ்த்தி diaper மாற்று தலை அறவே தவிர்த்துக் கொள்ளுங்கள். நன்கு பசித்து குழந்தை அழுது ஆர்பரித்த பின் உணவைக் கொடுக்கும் பொழுது தன்னம்பிக்கை குறைந்த பிள்ளையாக வளர் கிறது. அதே நேரத்தில் காலம் தாழ்த்தி diaper மாற்றும் பொழுது குழந்தையின் ஆரோக்கியத்திற்கு கெடுதல் மட்டுமன்றி இயல்பாக அழுக்கில் வாழப் பழகிவிடுவார் கள். "தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரை" என்பர். ஆகவே, குழந்தைப் பருவத்திலே இருந்தே நாம் நல்ல பழக்கவழக்கங்களைப் பழகத்திற் கொண்டு வரவேண்டும்.

குழந்தை பிறந்த பின் முதல் ஓரிரண்டு வாரங்களுக்கு ஒரு நாளைக்கு எத்தனை diapers மாற்றுகிறீர்கள், குழந்தை எத்தனை ounce பால் குடிக்கின்றது, மல/சலம் ஒழுங் காகக் கழிக்கின்றதா, குழந்தையின் எடை அதிகரிக்கின்றதா போன்ற விடயங்களைக் கூர்மையாகக் கவனிக்க வேண்டும். இங்கு பிறக்கும் அதிகமான குழந்தைகளுக்குப் பிறந்தவுடன் மஞ்சற் காமலை என்று சொல் லப்படுகின்ற Jaundice வருவது வழக்கம். ஆகவே, குழந்தையின் கண்கள், மற்றும் உடல் மஞ்சள் நிறமடிக்கின்றனவா என்பதைக் கவனிக்க வேண்டும். அத்துடன் பால் குடிப் பதில்லை, காச்சல், வாந்தி, மல/சலம் கழிப்பது குறைவு போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடன் வைத்தியரை நாடுங்கள். காலைச் சூரிய ஒளி குழந்தையின் உடலில் படும்படி குழந்தையை யன்னல்களுக்குப் பக்கத்தில் வைத்திருந்தல் நன்று.

முதல் மூன்று மாதங்களுக்கும் குழந்தை நன்றாக நித்திரை கொள்ள வேண்டும். அவர்கள் நித்திரை செய்யும் பொழுதே அவர்களின் உடல் உறுப்புக்கள், மூளை போன்றன விருத்தியடைகின்றன. அவர்கள் நித்திரை கொள்ளும் வேளை மெதுவாக, அமைதியான இசை கேட்கும் வண்ணம் சூழலை அமைத்தால், அச்சூழலில் இருந்து வரும் பிற ஒலிகள் குழந்தையைத் தொந்த-ரவு செய்யமாட்டா. அத்துடன் இசையின் மீது ஆர்வமுள்ள குழந்தையாகவும் வளரும். குழந்தை தானாக உடம்பு பிரட்டும் வரை, குழந்தையைக் குப்புறப் (கவுட்டு) படுக்க

52ம் பக்கம் பார்க்க...

# ஆரோக்கியம் நிறைந்த அறிவுள்ள...

51ம் பக்கத் தொடர்ச்சி...

வைத்தல் கூடாது. அவ்வாறு, நாம் படுக்க வைத்தால், குழந்தை மூச்சுத் திணறி இறப்புக்கான அபாய நிலைக்கும் இட்டுச்செல்லாம். அதேபோன்று குழந்தையை பாரமான போர்வையால் போர்ப்பதும் குழந்தை உயிர்க்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய ஒன்று.

குழந்தையின் ஆரோக்கியத்திற்கு முக்கிய காரணங்களில் அமைவது குழந்தை வாழும் சூழலாகும். குழந்தையின் சூழலைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். குழந்தையின் சூழலில் வாழ்பவர்களும் குறிப்பாகத் தாய் ஆரோக்கியமாக இருக்கவேண்டும். குழந்தை பிறந்த பின் ஏற்படும் உடலியல்



மாற்றம், உடற்களை, நித்திரையின்மை, படபடப்பு, புது அனுபவம் போன்ற பல காரணிகளால் எரிச்சல் தன்மை அதாவது மன அழுத்தம் ஏற்படுவது இயல்பு. இ∴து அனைவருக்கும் இயல்பான ஒன்று. இம்மாற்றத்தைக் கண்டு அதிர்ச்சியடையாது இப்பூமிக்கு வந்திருக்கும் புதிய உறவின் உவகையைக் கொண்டாடுங்கள். இத்தருணத்தில் கணவரின் உதவியும் ஆறுதலான வார்த்தைகளும், உறவினர்களின் வருகையும் மகிழ்ச்சியை சூழலை ஏற்படுத்துவதோடு உட்சாகத்தையும் கொடுக்கும். ஆறு கிழமைகளுக்குப் பெரும் வேலைகள் செய்யாது, ஆரோக்கியமான உணவுகளை உட்கொண்டு ஓய்வெடுப்பது சாலச்சிறந்தது. ஆறுகிழமைகளின் பின் உங்கள் உடல், உள்ளம் பழைய நிலைக்குக் மாற்றமடையும்.

கர்ப்பகாலத்தில் எப்படிக் குழந்தையுடன் பேசினீர்களோ, பாடினீர்களோ, நூல்கள் வாசித்தீர்களோ, கதை கூறினீர்களோ அவ்வாறே குழந்தை பிறந்த பின்னும் தொடருங்கள். நாளுக்குக் குறைந்தது 20 நிமிடங்களாவது குழந்தைக்குப் புத்தகம் வாசியுங்கள். நீங்கள் செலவிடும் இந்த 20 நிமிடங்கள் குழந்தையின் நல் எதிர்காலத்திற்கான உங்கள் சேமிப்பு. குழந்தைக்கு ஒவ்வொரு வேலையும் செய்யுபொழுது (குளிப்பாட்டுதல், உடைமாற்றுதல், உணவூட்டுதல்) அவர்களுடன் பேசுங்கள். குழந்தைக்கு இது விளங்காது, அது தெரியாது என்று எதையும் நிராகரிக்காது அவர்களை உங்களுக்குச் சமமான ஒரு நபராக ஏற்று ஆறுதலாக உரையாடுங்கள். அவர்களுக்குப் பயன்படுத்தும் ஒவ்வொரு பொருளையும் அதன் பெயர்களையும் அறிமுகம் செய்து அதனை ஒவ்வொரு முறையும் பயன்படுத்தும் போதும் மீண்டும் மீண்டும் அதன் பெயர்களைப் பயன்படுத்துங்கள். சில மாதங்களின் பின் நீங்கள் கற்றுக் கொடுத்த அனைத்து விடயங்களையும் குழந்தையால் விளங்கிக் கொள்ளமுடியும். அவர்களால் திருப்பிக் கூறமுடியாவிட்டாலும், கூறும் பொருட்களை தமது பார்வையால், மற்றும் செயற்பாட்டால் வெளிப்படுத்துவர். நேரம் கிடைப்பின் play school என்ற சொல்லப் படுகின்ற வகுப்பிற்கு கூட்டிச் சென்றீர்களானால், சிறுவயதில் இருந்தே தன்னம்பிக்கை மிக்கவர்களாகவும், கூச்ச சுபாபம் அற்றவர்களாகவும் விளங்குவர்.

இப்படி நாளும் செய்வதன் மூலம் குழந்தையின் பேச்சுத் திறன், கேட்டல் திறன், கிரகிப்பு, பார்த்தல் ஆகியவற்றை அதிகரிப்பதுடன் இவற்றில் எமது குழந்தைக்கு ஏதும் குறைபாடுகள் இருக்கின்றனவா என்பதையும் எளிதாக விரைவிற் கண்டறிய முடியும். அவ்வாறு இளமையிற் கண்டறிந்தால் அவற்றை மாற்றுவதும் எளிது. எனக்குத் தெரிந்த எத்தனையோ குழந்தைகளுக்கு காது கேட்கவில்லை, பேச்சு வரவில்லை என்பதைக் குழந்தைகள் 3, 4 வயதை எட்டிய பின்னரே பெற்றோர் கண்டறிந்தனர். நாம் அதுவரை தெரிந்து கொள்ளாமல் பிள்ளைகள் மேல் எரிச்சற் படுவது, கோபப்படுவது எல்லாம் நாம் குழந்தைகளைத் துன்புறுத்துவதாகவே அமையும். பிறக்கும் பொழுது நன்கு காது கேட்ட குழந்தைக்குப் பின் படிப்படியாகக் கேட்காமல் போகும் வாய்ப்புகளும் உண்டு. ஆகவே, குழந்தையின் ஒவ்வொரு செயற்பாடுகளையும் நுணுக்கமாக, கூர்மையாகத் தொடர்ந்து அவதானிக்க வேண்டும்.

குழந்தை பிறந்து மூன்று-நான்கு கிழமைகளின் பின், வர்ண நிறங்களைப், பெருட்களைப் பார்பதில் ஆர்வம் காட்டுவர். நிலத்தில் பாய்போட்டு, மேல் ஒரு சீலையை விரித்து அதன்மேற் குழந்தையைப் படுத்தி விடுங்கள். குழந்தையைச் சுற்றி, அவர்கள் கை எட்டும் தூரத்தில் பல வர்ண நிறங்கள் பொருந்திய, இசையெழுப்பும் பொருட்களைத் தொங்க விடுங்கள். அவர்கள் அவற்றைப் பார்த்து மகிழ்வார்கள். தமது தலையை அசைத்துச் சுற்றிச் சுற்றிப் பார்ப்பார்கள். மகிழ்ச்சியில் கால்கள், கைகளை அடிப்பார். இ∴து அவர்களுக்கு நல்ல உடற்பயிற்சி ஆகும். மூன்று மாதங்களின் நிறைவில் ஒரு பொருளை அவர்கள் கையில் எடுப்பர், ஒரு பொருளை எட்டிப் பிடிக்க முற்பாடுவார்கள். தாம் கையில் வைத்திருக்கும் பொருளை ஆட்டுவார்கள், ஆ..., ஓ... போன்ற ஒலிகளை மகிழ்ச்சியான நேரங்களில் மற்றும் விளையாடும் பொழுதும் எழுப்புவார்கள். தீடீர் ஒலி கேட்பின் திடுக்கிடுவார்கள். அவ்வாறு செய்யவில்லையெனின், குழந்தைக்குக் கேட்கும் திறன் குறைவு என்பதே பொருள். நீங்கள் அவர்கள் முகத்தைப் பார்த்து உரையாடும் பொழுது அல்லது பாடும் பொழுது ஆர்வத்தோடு உங்களைப் பார்ப்பார்கள். உங்கள் கதைகளுக்குச் சிரிப்பால் பதில் கொடுப்பார்கள். இவ்வாறு குழந்தையின் ஒவ்வொரு சிறிய அசைவுகளை நுணுக்கமாகக் கவனித்து அவர்களுக்குரிய பருவத்தில் செய்ய வேண்டிய செயற்பாடுகளைச் செய்கிறார்களா என்பதைக் கவனிப்பதன் மூலம் குழந்தையின் குறைபாடுகளை நாம் எளிதாக இனங்காண முடியும்.

ஆறு மாத நிறைவில் உதவியின்றி இருப்பர். சில குழந்தைகள் தவழுவர். பல வகையான ஒலிகளை எழுப்புவர். சில ஒலிகளைப் போலச் (imitate) செய்வர். தனியாக விளையாடும் பொழுது “லாலா, ஆஆஆ” போன்ற ஒலிகளை பாடல் போன்று எழுப்பித் தமது நாக்குடன் விளையாடுவர். நாம் அவர்களுடன் கூடி விளையாடுவதில் மகிழ்வர், ஒலி வரும் திசைக்குத் தலையைத் திருப்புவர், பல விதமான அழுகையால் தனது தேவைகளை (பசி, நித்திரை, வருத்தம், மலம் கழித்தபின், ஒரு பொருளை எடுத்துத் தரும்படி) வெளிப்படுத்துவர். நீங்களும் குழந்தையாக மாறி அவர்களுடன் விளையாடுங்கள். குழந்தைகள் ஒரு பொருளைத் தொட்டு உணர்வதன் மூலம் நிறைய விடயங்களைக் கற்றுக்கொள்வர், ஆகவே, அவர்களின் கைகளைப் பிடித்துத் தொட்டுத் தொட்டு ஒவ்வொரு பொருட்களின் பெயர்களையும் கூறுங்கள். தொலைக்காட்சியை 3 வயது வரை தள்ளியே வையுங்கள். குழந்தைகள் இருக்கும் இடத்தில் இருந்து வன்முறை கொண்ட படங்களை நீங்களும் பார்க்காதீர்கள்.

குழந்தையுடன் தாராளமாகத் தமிழ்மொழியில் உரையாடுங்கள். சிலர் குழந்தைக்கு ஆங்கிலம் தெரியாமற் போய்விடும் என்ற அச்சத்தில் ஆங்கிலத்தில் பேசுவர். குழந்தைகள் 3 வயது வரை எத்தனை மொழிகளையும் விரைவாகக் கற்றுக் கொள்வர் என்று ஆய்வுகள் சொல்கின்றன. 3 வயதுக்குள் நாம் எவ்வளவு விடயங்களை, சொற்களை குழந்தைக்கு ஊட்டுகின்றோமோ, அவை பசுமரத்தாணி போல் பதிந்திருக்கும். ஆகவே, அச்சத்தை விடுத்துத் தமிழ்மொழியிற் பேசுங்கள், மொழியூடாகத் தமிழ்ப் பண்பாட்டை ஊட்டுங்கள்.

எந்த சூழ்நிலைகளிலும் குழந்தைக்கு முன் கணவன்-மனைவி இருவரும் கோபமாக, ஆவேசத்துடன் விவாதத்தில் ஈடுபடாதீர்கள். குழந்தைக்கு நீங்கள் பேசுவது புரியா விட்டாலும், உங்கள் குரல் உயர்வு, முகபாவத்திலிருந்த சூழ்நிலையை அறிந்து கொள்ள முடியும். அது நிச்சயமாக குழந்தையின் உளவியலைப் பாதிப்பதோடு, இளவயதிலேயே பய உணர்வையும் தோற்றுவிக்கும். இருவரில் யார் குரலை உயர்தி ஆவேசத்துடன் பேசுகிறீர்களோ அவருடன் குழந்தையின் நெருக்கம் குறைவதோடு வெறுப்பும் ஏற்படும். ஆகவே, குழந்தைகளுடன் பேசும் பொழுதும் குரலை உயர்த்திப் பேசாதீர்கள். ஆனால், நீங்கள் பேசும் குரலில் இருந்து, தான் எதைச் செய்யலாம், எதைச் செய்யக் கூடாது என்பதைக் குழந்தை அறிந்து கொள்ளும் வகையிலும் இருக்கவேண்டும். ஒருபோதும் குழந்தையுடன் எதிர்மறையாகப் (negative) பேசாதீர்கள். குழந்தை பிடிவாதம் பிடிக்கிறது எனின் அவர்களை அவர்கள் போக்கில் விட்டுவிடுங்கள். அவர்களுடன் நாமும் முரண்டு பிடித்தால் அவர்கள் பிடிவாதத்தை நாமே அதிகரிப்பது போன்று அமையும். ஆகவே, விட்டுக்கொடுத்துப் பின் அவர்கள் கவனத்தை வேறுதிசையிற் திருப்பி மாற்றிவிடுங்கள். நாம் எதையும் அன்பாற் சாதிக்கமுடியும். நாம் என்ன பாணியிற் பேசுகின்றோமோ அவர்களும் அதே பாணியிற் பதிலளிப்பர். குழந்தை நல்ல விடயங்களைச் செய்தால் அவர்களை உடனுக்குடன் கைதட்டிப் பாராட்டுங்கள். எடுத்துக்காட்டாக நீங்கள் கூறிய ஒரு செயலைச் செவிமடுத்து குழுந்தை உடன்செயற்பட்டால் “கெட்டிக்காரன், கெட்டிக்காரி, அச்சாப்பிள்ளை” போன்ற வார்தைகளால் பாராட்டுங்கள். நீங்களும் ஒரு நல்ல செயலைச் செய்து விட்டீர்கள் எனின், அவர்களும் உங்களைப் பாராட்டுவார்கள். இவ்வாறு பாராட்டுவதன் மூலம் தாம் பாராட்டுப் பெறுவதற்காகவே நற்காரியங்களை மட்டுமே செய்வார்கள் மற்றும் உங்களைச் செவிமடுப்பார்கள்.

குழந்தைகள் ஒரு வெற்றுத் தாளைப் போன்றவர்கள். அந்த வெற்றுத் தாளில் அழகான ஓவியத்தை வரைந்தோ அல்லது அழகான கவிதையை வடித்தோ அழகுபடுத்த வேண்டியது பெற்றோர்களாகிய எமது பொறுப்பாகும். திட்டமிட்டு நாம் குழந்தையை வளர்க்க முனைந்தால், நிச்சயமாக அழகான ஓர் அறுபடையைச் செய்ய முடியும் என்பதில் ஐயமில்லை. பிரசவத்திற்குப் பின் ஆறு மாதங்கள் வரை ஆரோக்கியமுடன், அறிவுள்ள குழந்தையை எவ்வாறு வளர்க்கலாம் என இக்கட்டுரையிற் பார்த்தோம். மீண்டும் அடுத்த இதழில் ஆறு மாதங்களின் பின் குழந்தையின் வளர்ப்புப் பற்றித் தொடர்வோம்.

■ ■ ■

FOR ALL MORTGAGE NEEDS

Canada Trust Scotiabank™

2929 Lawrence Ave. East, Suite 203,
Scarborough, ON M1P 2S8
Head Office: 701 Evans Ave., Suite 600, Toronto, ON M9C 1A3
rajmoganselliah@invis.ca

Rajmogan Selliah
Mortgage Consultant

Dir: 416.569.3200
Bus: 416.430.0111, Fax: 416.430.0222



digi



# கடன் தொல்லைகளிலிருந்து விடுபட்டு புதிய வாழ்வு திரும்ப ஓர் அரிய சந்தர்ப்பம்

## NEW LIFE FRESH START

- கடன் 80% குறைய நடவடிக்கை
  **Reduce your debts upto 80%**
- கடனுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
  **Stop all interest on your debts**
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புக்கள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்
  **Stop collection calls, legal action & garnishments**
- உங்கள் சொத்துக்கள் பாதுகாக்கப்படும்
  **Protect all your assets**
- மாதாந்த ரீதியில் எலங்லாக்கடனையும் தீர்க்க வசதி செய்தல்
  **Make one monthly payment to all of your creditors**
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
  **Give you solutions with out bankruptcy**

digi Media

## Suren Sornalingam

Government Certified Insolvency Counsellor

Tel: **416.264.1272**

Fax: 416.332.0914
E-mail: suren@crc4u.com
web: www.crc4u.com



crc

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON
M1P 4X4






வி. கந்தவனம்
kanthavanam@thaiveedu.com

## இலக்கியத் திறனாய்வு

இலக்கிய வளர்ச்சிக்குத் திறனாய்வு இன்றியமையாதது. பண்டைக் காலத்தில் ஆக்கப் படைப்புகளைப் புலவர்கள் ஆராய்ந்து தகுந்தவற்றை எட்டுத் தொகை, பத்துப் பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களாக வகுத்தனர். நூலரங்கேற்றங்கள் ஆய்வரங்கங்களாக இருந்தமை பற்றி இலக்கியச் சான்றுகளாலும் கர்ண பரம்பரைக் கதைகளாலும் அறிகின்றோம்.

அரங்கேற்றத்தின்போது நூலாசிரியரைப் புலவர்கள் பல கேள்விகள் கேட்பார்கள். நூலாசிரியர் அவற்றுக்கெல்லாம் தகுந்த விளக்கங்கள் கொடுத்தல் வேண்டும். இவ்விதம், திறனாய்வு, தமிழில் நூல் அரங்கேற்றத்துடனேயே பிறந்து விட்ட ஒரு கலையாகிவிட்டது.

பெரும்படிப்புத் துறையாக, இலக்கியத் திறனாய்வு இன்று வளர்ந்துள்ளது. இலக்கியத் திறனாய்வு செய்வதில் சிறப்பான தகைமை பெற்ற அறிஞர்கள், எல்லா மொழிகளிலும் உள்ளனர்.

திறனாய்வு செய்பவர், இலக்கிய வளர்ச்சியில் / போக்கில் மட்டும் போதிய தேர்ச்சி பெற்றவராக இருந்தால் போதாது. பரந்த மனப்பான்மை உள்ளவராகவும், நீதி நியாயங்களை அறிந்தவராகவும், அவர் இருத்தல் வேண்டும். வேறுவகையாகக் கூறின், கோட்பாட்டுப் பூசல்களுக்கு அப்பாற்பட்டவராகவும், பாரபட்சமற்றவராகவும் உள்ளவரே எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய திறனாய்வாளராக விளங்க முடியும்.

ஆய்வுரை ஆழமானதாகவும் முழுமையானதாகவும் இருத்தல் வேண்டும். ஆழம் என்பது ஆய்வாளரின் ஆழ்ந்த புலமையைக் காட்டுவதன்று; படைப்புப் பற்றிய நுண்ணிதான ஆய்வைக் குறிப்பது. முழுமை என்பது படைப்பின் இயல்புகள் ஒன்றையேனும் புறக்கணிக்காத மதிப்பீடு.

ஒரு நீதிபதி, வழக்கின் இருதரப்பு வாதங்களையும் தொகுத்துக் கூறி, நீதியின் அடிப்படையில் தனது தீர்ப்பை வழங்குவதல் போல, திறனாய்வாளரும் ஓர் இலக்கியப் படைப்பின் நிறை குறைகளை நன்கு எடுத்துக்காட்டி, தனது கருத்துக்களைத் தெரிவிப்பதே முறையானதாகும்.

இளம் எழுத்தாளர் ஒருவரின் படைப்புப் பற்றிய திறனாய்வு ஊக்குவிப்பதாயும் வழிப்படுத்துவ-தாயும் அமைதல் விரும்பத்தக்கது. முளையிலேயே கிள்ளி எறியும் முறையில் கருத்துக்கள் தெரிவிப்பது இலக்கிய உலகில் வெறுக்கப் படுகின்றது. அதேவேளையில், விமர்சனம் என்பது வேறு, பாராட்டுரை வேறு, என்பதனையும் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

இனி, எந்த எழுத்தாளரும் தமது படைப்புகள் குறித்து, எப்பொழுதும் பாராட்டுகளையே எதிர்பார்க்க முடியாது. தம் படைப்புக் குறித்து, தாம் எதிர்பார்க்கும் வகையில் ஒரு திறனாய்வாளர் கருத்து அமையவில்லையெனில், அவரைத் தூற்றிப் பேசலும் முறையாகாது.

தம்மிலும் தகைமை சான்ற ஓர் அறிஞர், சில குறைகளைச் சுட்டிக்காட்டின், அவற்றை மதிப்புடன் கூர்ந்து கேட்டல் இலக்கியத் துறையில் வளர விரும்புவோரின் இயல்பாயிருத்தல் வேண்டும். ஆரோக்கியமான திறனாய்வுக்கு எப்பொழுதும் மதிப்பு அளித்தல் வேண்டும்.

ஒரு படைப்பு வெளியிடப்படுமிடத்து, அது விமர்சனத்துக்கு உள்ளாகும் என்பதனையும் எழுத்தாளர் எதிர்பார்த்தல் வேண்டும்.

சில ஆய்வாளர், ஒரு படைப்பினைப் போற்றலாம்; சிலர் தூற்றலாம். நேற்று ஒன்றைப் போற்றியவர், நாளை இன்னொன்றைத் தூற்றலாம். போற்றலும் தூற்றலும் இலக்கிய உலகில் பொதுவானவை. புகழ்ச்சியைக் கண்டு மயங்காமலும், இகழ்ச்சியைக் கண்டு தயங்காமலும், இருக்க எழுத்தாளர்கள் பழகிக் கொள்ளுதல் வேண்டும்.

## இதழியல் (Journalism)

பத்திரிகைகளைத் தமிழ்நாட்டில் இதழ்கள் என்று வழங்குகின்றார்கள். ஏடு என்ற சொல்லும் இதழ்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதழ்களை அவற்றின் உள்ளடக்கங் கொண்டு,

செய்தி இதழ்கள்,
கலை இலக்கிய இதழ்கள்,
சமய இதழ்கள்,
சினிமா இதழ்கள்,

எனவும், வெளியிடப்படும் கால அளவு கொண்டு,

நாளிதழ்கள்,
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
காலாண்டு இதழ்கள்

எனவும் பலவகையாகப் பிரிக்கலாம். இவை சில உதாரணங்கள் மட்டுமே.

பத்திரிகைக்கும் ஒரு தனி நூலுக்குமுள்ள வேறுபாடுகளில் மிகவும் முக்கியமானது யாதெனில், பத்திரிகை பலபேருடைய கருத்துக்களைத் தாங்கி வரும். நூல் பெரிதும் நூலாசிரியரின் கருத்துக்களையே கொண்டிருக்கும்.

பத்திரிகைத் துறையில் மேலோங்கியவர்களிற் பெரும்பாலானோர், ஆரம்ப காலங்களிற் பத்திரிகை நிருபர்களாகப் பணியாற்றி இருப்-பதைப் பார்க்கின்றோம். ஒரு நாளாந்தச் செய்தி இதழுக்கு நிருபர்கள் இன்றியமையா-தவர்கள்.

செய்திகளைத் திரட்டிப் பத்திரிகைக்கு அனுப்புவது நிருபரின் பணி. அவ்விதம் அனுப்புகையில் அவர் பின்வரும் பொறுப்புகளுக்கு உரியவராகின்றார்:

-செய்தி சரியானதாக இருக்க வேண்டும்.
-முறையாகவும் திருத்தமாகவும் திரட்டப்படல் வேண்டும்.
-கவர்ச்சியாக எழுதப்படல் வேண்டும்.
-அது விரைவாக அனுப்பப்படல் வேண்டும்.
அதாவது பழசாகமுன், முந்திவிட வேண்டும்.

நிருபர்கள் பலர், தமது அநுபவம், திறமை போன்ற தகைமைகள் காரணமாகப் பத்திரிகை ஆசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர், இன்னும் பலர் தாமாகவே பத்திரிகைகளைத் தொடங்கியிருக்கின்றனர்.

பத்திரிகை ஆசிரியருக்கு எழுத்துக் கலை நன்கு கைவரல் வேண்டும். எல்லா விடயங்கள் பற்றியும் பொதுவான அறிவு இருத்தல் வேண்டும். குறிப்பாக, நடைமுறையில் உள்ள நாட்டு நடப்புகள் பற்றி, அவர் நன்கு அறிந்திருத்தல் அவசியம். எல்லாவற்றிலும் மேலாக, பத்திரிகை ஆசிரியர் ஒருவர் நீதி நியாயங்களைப் போற்றும் நெஞ்சமும் நேர்மையான போக்கும் பரந்த மனப்பான்மையும் எல்லோரையும் அணைத்துச் செல்லும் வல்லமையும் எதையும் தாங்கும் இதயமும் உள்ளவராயிருத்தல் வேண்டும்.

பத்திரிகை உலகில் முக்கியமானது பத்திரிகைப் பண்புகளைப் பேணும் நேர்மை,

பத்திரிகைப் பண்புகளாவன:

-பத்திரிகையை உரிய காலத்துக்கு வெளியிடுதல்.
-சக பத்திரிகைகளை மதித்தல்.
-தகுந்தனவற்றையே வெளியிடுதல்.
-பிறரின் ஆக்கங்களுக்கு எழுத்தாளரிடம் அல்லது உரிமையாளரிடம் அனுமதி பெறல்.
-இரவற் செய்திகள் / கட்டுரைகள் முதலியவற்றின் மூலத்தைக் குறிப்பிடுதல்.
-பிரசுரிக்கப் படுபவைக்குத் தகுந்த சன்மானங்களை உரிய காலத்தில் வழங்குதல் முதலியன.

பத்திரிகைக் கலை அறிவைப் பரப்புங் கலை; பகுத்தறிவை வளர்க்குங் கலை. கூடவே மொழியையும் அந்த மொழியைப் பேசும் இனத்தின் நலனையும் பண்பையும் கலாச்சாரத்தை-யும் பேணும் பொறுப்பும் பத்திரிகைக்குரியது.

வாசகர்களைக் கவரும் பொருட்டு, பாலுணர்ச்சிப் படங்களுக்கும் பண்பாட்டுக்கு ஒவ்வாத படைப்புகளுக்கும் பல பத்திரிகைகள் முக்கியத்துவம் அளித்து வருகின்றன. இவை ஆசை காட்டி மோசம் செய்யும் பத்திரிகைகள்.

குடிகாரர் ஒருவருக்குக் குடிவகையிலேயே விருப்பம் இருக்கும். அந்த விருப்பம் அவரது அவசிய குடும்பத் தேவைகளையும் மறக்கச் செய்யும். இந்த நிலையில் நாம் அவருக்கு வழங்க வேண்டியது யாது?

வாசகர்கள் படிக்க / பார்க்க விரும்புவதை வழங்கும் பத்திரிகையிலும் அவர்களது தேவைகளை அறிந்து அவற்றுக்கு உகந்த படைப்புக்களை வழங்கும் பத்திரிகையே சமுதாய நலனில் அக்கறையுள்ள பத்திரிகையாகும்.

பத்திரிகைக்கு அழகு உயர்ந்த லட்சியம்; மக்களை நல்வழிப்படுத்தும் இலட்சியம்; மக்கள் முன்னேற்றத்துக்கு உழைக்கும் உன்னத கொள்கை.

## எழுத்தாளர் வாழ்க்கைத் தரம்

தமிழ் எழுத்துத் துறை முன்பு போல் இல்லை; அது நன்கு வளர்ந்து விட்டது. ஆனால் எழுத்தாளர் வளர்ந்திருக்கின்றாரா?

தரமான ஆக்க இலக்கியங்களை எழுத்தாளர் படைத்து வருகின்றனர், ஆனால் எழுத்தாளரின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கின்றதா?

எழுத்தைப் பற்றி, எழுத்தாளரைப் பற்றி என்னதான் உயர்வாக எழுதப்படினும், பேசப்பட்டு வரினும், எழுத்தை முழுநேரத் தொழிலாகக் கொள்வதற்குப் பல எழுத்தாளர் அஞ்சுகின்றனர். எழுத்தை நம்பி வாழ்க்கை நடத்த முடியாது என்பது இவர்களின் நம்பிக்கை.

பத்திரிகை நிறுவனங்களில் மாதச் சம்பளத்துக்குத் தொழில் புரியும் எழுத்தாளரைத் தவிர்ந்த பிற எழுத்தாளர் பலர் நிரந்தரமான வேறு தொழில்கள் செய்பவர்களாகவே

55ம் பக்கம் பார்க்க...



# எழுத்தாளர்...

25ம் பக்கத் தொடர்ச்சி...

காணப்படுகின்றனர். இவர்களிலும் சிலருக்கே எழுத்து ஒரு துணைத் தொழில்; பலருக்கு அது பொழுதுபோக்கு.

எழுத்தை நம்பி வாழ்கின்ற தமிழ் எழுத்தாளர் பலர் வறுமையில் வாடுகின்றனர். அவர்களுக்குப் புகழ் வருகின்றது. ஆனால் பொருள் வருவதில்லை. கலைமகள் இருக்கும் இடத்தில் இலட்சுமி இருப்பதில்லை என்பது உண்மைதானா?

உண்மையில்லை. உண்மை எனின், மேலைநாட்டு எழுத்தாளர் வாழ்க்கையிலும் அது சரியாகவன்றோ இருத்தல் வேண்டும்?

மேலை நாடுகளில் எழுத்தாளர் நன்கு மதிக்கப் படுகின்றனர். பிரசுரிக்கப்படும் படைப்புகளுக்குத் தகுந்த சன்மானத்தைப் பத்திரிகை நிறுவனங்கள் வழங்குகின்றன. எழுத்தாளர் படைப்புகளைப் பதிப்பித்து விற்பனை செய்வதற்கு வெளியீட்டகங்கள் உள்ளன. குறிப்பாக, இளம் எழுத்தாளரை இனங்கண்டு, அவர்களை ஊக்குவிப்பதற்கு நிறுவனங்கள் இருக்கின்றன.

தமிழ்நாட்டில், பெயர் பெற்ற எழுத்தாளர் சிலரைத் தவிர, மற்றயவரின் வாழ்க்கைத் தரம் குறைவாகவே உள்ளது. ஈழநாட்டில் எழுத்தை நம்பி வாழ்கின்றவர் குறைவெனினும் அவர்களின் வாழ்க்கையும் ஏனோதானோ என்றே ஓடுகின்றது.

எழுத்தை ஒரு பொழுதுபோக்காகக் கருதி எழுதும் எழுத்தாளரால், எழுத்தை நம்பி வாழ்கின்றவரின் வாழ்க்கையும் பாழாகின்றது. தமது பெயர் பத்திரிகையில் வந்தாற் போதும் என்ற நோக்கத்தையே கொண்டு எழுதுகின்றவர், எழுத்தால் வருவாய் கிடைக்க வேண்டும் என்று எழுதுகின்றவருடன், ஒருவித மறைமுகப் போட்டியை நடத்துகின்றார் எனின் மிகையாகாது.

எழுத்தாற் பொருள் ஈட்டாதவருக்கு எழுத்துலகம் இல்லை. எழுத்தாளருக்கு மாலை போட்டுப் பரிசுகள் வழங்குவதிற் பயனில்லை.

அவர், புகழையே சாப்பிட்டுக் கொண்டிருக்க முடியாது. எழுத்தால் வருவாய் கிடைக்க வேண்டும். வருவாய் உள்ளவருக்கே சமுதாயத்தில் உண்மையான மதிப்பு என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். இல்லானை ஈன்றெடுத்த தாயும் வேண்டாள்!

எழுத்தை வியாபாரப்படுத்தும் நிறுவனங்கள், எழுத்தாளருக்குத் தகுந்த ஊதியத்தை / சன்மானத்தைக் கொடுத்து உதவுதலே உண்மையான சேவையாகும். வாழ்க்கை நிறைவெய்துகின்ற பொழுதே எழுத்தும் வளம் பெறுகின்றது.

## எழுத்தாளரின் ஒழுக்கம்

எழுத்தாளர் ஊருக்கு நல்லது சொல்பவர்; சமுதாயம் இன்புற்றிருக்கத் தனது எழுது கோலைப் பயன்படுத்துபவர்; மக்கள் முன்னேற்றமே அவரது இலட்சியம்.

எழுத்தாளர், தம் ஆக்கங்களை வாசகர் விரும்பிப் படிக்க வேண்டும் என்று நினைப்பவர்; தமது கருத்துக்கள் எங்கும் சென்றடைய வேண்டும் என்று விரும்புபவர்; தமது படைப்புக்களை வெளியீட்டகங்கள் வெளியிட முன்வர வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்.

இத்தகைய இலட்சியத்தோடும் எதிர்பார்ப்புகளோடும் செயற்படுகின்ற எழுத்தாளரின் பிரத்தியேக வாழ்க்கையும் பெருமை தருவதாக முன்மாதிரியாக அமைதல் வேண்டும்.

எழுத்தாளரை ஏமாற்றுக்காரராகவும் குடிகாரராகவும் காமுகராகவும் அடிபிடிகாரராகவும் காணச் சமுதாயம் விரும்புவதில்லை. சாதாரணமாகவே நடத்தை கெட்ட ஒருவரைத் தள்ளி வைக்கும் இயல்புடைய சமுதாயத்துக்கு, மனம்போன போக்கெல்லாம் போகும் எழுத்தாளரை எடுத்தெறிய அதிக நேரம் பிடிக்காது.

ஊருக்கு ஒன்று சொல்லித் தாம் ஒன்று செய்யும் எழுத்தாளர்கள், ஏமாற்றுப் பேர்வழிகள்; கொள்கையில்லாதவர்கள்; பேதையர்கள்.

**ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்**
**பேதையின் பேதையார் இல்**

என்று வள்ளுவனார் கடிந்தது இவர்களைத்தாம் போலும்.

ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விடம் போல, ஒரு சிலரின் ஒவ்வாத செய்கைகள், எழுத்துலகம் முழுவதையும் பாதிக்கவல்லது; பாதிக்கின்றது.

ஒழுக்கத்தை உயிரினும் மேலாக ஓம்புதல் வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். அழுக்காறு உடையவரிடத்தில் ஆக்கம் நில்லாது. அதுபோல, ஒழுக்கம் இல்லாதவரிடம் உயர்வு இருக்காது. மயிருக்கு உயர்வு தலையில் அது பெற்ற நிலை; அந்த நிலையிலிருந்து வீழின் அதற்கு மதிப்பு என்பது இல்லை. அதுபோலவே மனிதனின் ஒழுக்க வாழ்வும், மனிதனுக்கென்று மதிப்பு எதுவும் இல்லை. மதிப்பெல்லாம் அவனது ஒழுக்கத்துக்கே ஆகும்.

ஒருவரின் நடத்தை மனத்துடன் தொடர்புடையது. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன் என்பர் வள்ளுவர் பெருமான். நினைவு நல்லது வேண்டும் என்று பாடினார் பாரதியார்.

எழுத்தாளருக்கு நினைவு நல்லதாக வேண்டும். பல எழுத்தாளர் பொறாமையால் புழுங்கி அவிகிறார்கள்; போட்டிகளால் வேறுபட்டு நிற்கின்றார்கள்; மறைமுகமாக விதம் விதமான புனைபெயர்களில் ஒருவரை ஒருவர் தாக்கி எழுதிக் கயமைக் கஞ்சி வடிக்கிறார்கள். நெஞ்சில் உரமில்லாத, நேர்மைத் திறமில்லாத எழுத்துக்களால் யாருக்கு என்ன பயன்? வேற்றுமைக்கு நல்ல பயனை! விழலுக்கு நல்ல நீர்!

சமுதாயத்தைச் சீர்திருத்த வேண்டும் என்று நினைக்கும் எழுத்தாளர், முதலில் தம்மைத் தாமே திருத்திக் கொள்ள வேண்டும். உள்ளச் சுத்தமும் உயர்ந்த ஒழுக்கமும் உள்ள சான்றோர் சொல்லுக்கே சமுதாயம் மதிப்பு அளிக்கும்.

ஒழுக்கத்தை ஓம்பி, நீதிவழுவா நெறிறையில் நின்று, வாழ்வாங்கு வாழ்பவர்கள் தெய்வங்களுக்கு நிகராவர். அத்தகைய தெய்வங்களின் ஆக்க எழுத்துக்கள், சக்தி வாய்ந்தவை. அந்தச் சக்தியே அவர்களைக் காலந் தோறும் வாழ வைக்கும்.

■ ■ ■


Est. 1991

Computek College

BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

Exam Prep
CANADIAN SECURITIES COURSE ( CSC )

Starting on
Sunday, Nov 2
at 9.30AM
Prior registration required
416.321-9911



Lecturer :
Qualified Senior Manager at a leading Investment Bank in Canada

Study & get Jobs in Banks & Financial Services

The Canadian Securities Course is designated to help you build a solid foundation for a career in financial services. Consider enrolling today if you are,

- Seeking licensing as mutual fund representative
- Training to become a full-service investment advisor, discount broker
- Investment representative or a sales associate
- A bank or trust company officer
- A financial planner

Financial Assistance may be available for those who qualify. We welcome
- EI - currently receiving / received recipients
- Maternity benefits received recipients
- New immigrants /Social Assistance recipients

For details, Call
Dr. T. Vasanthakumar

Diploma Courses
NETWORK ENGINEERING
EARLY CHILDCARE ASSISTANT ( ECA
COMPUTERIZED ACCOUNTING
PERSONAL SUPPORT WORKER ( PSW )
MEDICAL OFFICE ADMIN ( MOA )
BUSINESS ADMINISTRATION

Kennedy / Sheppard
(North-East Corner)
Tel: 416-321-9911
2347, Kennedy Road, Suite 301
Scarborough, ON., M1T 3T8

Kennedy / Eglinton
(N/W Corner, Above Library)
Tel : 416-285-9941
2390 Eglinton Ave East, Suite 248
Scarborough ON M1K 2P5

www.computek.edu

# கைதிகளின் வதை

- பொன் குலேந்திரன் -

அன்றொரு நாள் தொலைகாட்சியில் மிருகங்களின் குணாதிசயங்களைப் பற்றிய செய்திப் படம் (Documentray) ஒன்றினை கண்டுபிடிப்பு அலைவரிசையில் (Discovery Channel) பார்த்துக்கொண்டிருந்தேன். ஒரு மிருகம் எவ்வாறு தன்னிலும் பலம் குறைந்த இன்னொரு மிருகத்தை வேட்டையாடி, அரை உயிருடன் வாயில் கவ்விக் கொண்டு வந்து தன் குகைக்குள் வைத்து அதைத் துன்புறுத்தி, அதன் அசைவுகளைக் கண்டு இரசித்து இறுதியில் அம்மிருகத்தை தன் உணவாக்கிக் கொள்கிறது என்பதை பற்றிய செய்திப்படம் அது. அப்படத்தில் சிலந்தி-வலையில் சிக்கிய பூச்சியை ஒரு சிலந்தி-யானது எவ்வாறு சித்திரவதை செய்து கொன்று பின்னர் தனது உணவாக்கிக் கொள்கிறது என்பதையும் தத்ரூபமாக காட்-டினார்கள். பார்ப்பதற்கே அருவருப்பான செய்திப்படமானாலும் பல பாடங்களை மனிதர்களுக்கு அது எடுத்துக்காட்டுகிறது. ஒரே ஒரு வித்தியாசம். சித்திரவதை செய்து கைதியைக் கொன்றபின்னர், சித்திரவதை செய்தவன் இறந்தவன் உடலை தன் உண வாக்கிக் கொள்ளவில்லை. அந்த நிலையும் சில சமயம் மனிதர்களிடையே ஏற்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஒரு காலத்தில் பப்புவா நியூகினிக்கு அருகில் உள்ள சொலமன் தீவில் மனித மாமிசத்தை உண-வாக்கி வாழந்தவர்கள் இருந்தார்கள்.

படத்தில் வந்த காட்சிகள், அமெரிக்க இரா ணுவத்தின் ஆக்கிரமிப்பு என்ற சிலந்திவலை-யில் விழுந்த அல்குவைதா, தலீபன் கைதி-களை சித்திரவதைக்குள்ளாகி, அவர்களின் கதைகள் படங்களுடன் ஊடகங்களில் பக்கம் பக்கமாக எழுதப்பட்டு, அமெரிக்காவின் மதிப்பை தரம் குறைவான அளவுக்கு உலக நாடுகளால் மதிப்பீடு செய்யும் நிலைக்கு வந்ததைத் தான் எனக்கு நினைவுபடுத்தியது. இராக்கில் சதாம் ஹுசெயினின் சர்வாதிகார ஆட்சியின் போது இதை விட பயங்கரமான, அருவருப்பு தரும் சித்திரவதைக்கு, போர்க் கைதிகளோ, அரசியல் கைதிகளோ, குற்ற மற்ற மக்களோ உட்பட்டபோது ஊடகங்க ளுக்கு புகைப்படங்களோ அல்லது தெளிவான செய்திகளோ கிடைக்கவில்லை. ஆனால் எல்லா சர்வாதிகாரிகளைப் போல் சதாமும் அவ்வீனச் செயலில் ஈடுபட்டான் என்பது பலருக்கு தெரியும். அதுவும் அவனது மகன் ஒருவர் அத்தகைய ஈனச் செயல்மூலம் இன்பம் கணடவன். இறுதியில் சுட்டுக் கொல்லப்பட்டான் அமெரிக்க இராணுவத்தினால்! அவனுக்காக கண்ணீர் விட்டவர்கள் மிகக் குறைவு. அந்நாட்டில், சதாமின் ஆட்சியின் போது மனிதாபிமானத் துக்கு இடமில்லை என்பதும் பல நாடு களுக்குத் தெரியும். அதனால்தான் இராக் மக்களை அக்கொடியவனிமிருந்து காப்பாற்ற போர்தொடுத்தோம் என்கிறது அமெரிக்கா. ஆனால் - நடந்தது என்ன? கொடியவன் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தபின்னர் அவனைப்போல் ஆக்கிரமித்தவனும் நடந்-தால் யாரிடம் போய் இராக் மக்கள் முறை-யிடுவார்கள்? வேலியே பயிரை மேய்ந்த கதை போலல்லவா?


சிறுவயதில் பிள்ளைகள் வண்ணத்துப் பூச்சி களையோ, தும்பிகளையோ அல்லது பொன்வண்டுகளையோ போத்தலினுள் அடைத்து வைத்து துன்புறுத்தி இரசிப்பதை நாம் கண்டுள்ளோம். தும்பியின் வாலில் நூல்கட்டி அதை பறக்கவிட்டு இரசித்த சிறுவர்களும் உண்டு. பிறர் துன்பத்தில் இன்பம்காணும் குழந்தைகளின் இக்குணம் அவர்கள் வளரும் போது அவர்களோடு ஒன்றாகிவிடுகிறது. இவ்வாறு தொடர்ந்து பல கொலைகளைச் செய்தே கொலை காரார்கள் (Serial Killers) உருவாகியுள்ளார் கள் என்கிறார் கொலைகாரர்களைப்பற்றி ஆராய்ச்சிசெய்த Robert K. Resler என்பவர்.

1993ம் ஆண்டில், இங்கிலாந்தில் உள்ள லிவர்பூல் நகரில் பலகர் என்ற மூன்று வய துக் குழந்தையை இரு சிறுவர்கள் கடத்திச் சென்று, சித்திரவதை செய்து கொலை செய்தது நாட்டையே உலுக்கியது. இக் கொலைக்கு காரணம் அச்சிறுவாகள் வாழ்ந்த சூழ்நிலையும், தொலைகாட்சியில் சித்திரவதைக் காட்சிகளை பார்த்து இரசித் ததுமே என அறியவந்தது. சில வருடங்கள் சிறைவாசத்துக்குப் பின்னர் மாற்றுப்பெயரில் இரு சிறுவர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

மனிதனுள் புதைந்து கிடக்கும் மிருகக் குணம் பல சூழ்நிலைகளில் வெளிவருகிறது. போரின் போது, அரசியல் காரணத்துக்காக, தன் பதவிக்காக, தன் பாதுகாப்புக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் போது, அல்லது தன் ஆசைகளை அல்லது பற்றினை வேறு ஒருவனின் செயலால் பாதிக்கப்படும் போது மனிதன் பொறுமையை இழக்கிறான். மற்ற மனிதனை துச்சமாக மதித்து தனது கோப தாபங்களை அவன் மேல் கட்டவிழத்து விடுகிறான். சில மனிதர் தமது கடந்த கால வாழக்கையில் ஏற்பட்ட கசப்பான அனுப-வங்களினால் மனநிலை பாதிக்கப்பட்டு சுற்றாடலும் சூழ்நிலையும் பழைய ஞாபகங் களை அவர்கள் மனதில் மீட்கும் போது புதைந்து கிடந்த மிருகத்தன்மை கட்டவிழ்த்து விடப்படுகிறது. அனேகர் தாம் செய்யக் கூடாத செயலை புரிகிறோமே எனத் தெரிந் திருந்தும் செயல்பட வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். மேல் அதிகாரிகளின் உத்தரவுக்கு பணிந்து செயல்படவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகிறார்கள். இவ்வாறு மனிதனை மனிதன் சித்திரவதை செய்து அதில் இன்பம் காண்பதும், அதோடு படிப் படியாக சித்திரவதை செய்யப்பட்டவனின் உயிர் சிறிது சிறிதாக துடி துடித்து உயிர் போவதைப் பார்த்து இரசித்து, சில சமயம் புகைப்படம் பிடித்து, சமயம் வரும்போது போட்டுப்பார்த்து இரசிக்கும் குணமும் சில ருக்குண்டு. இவர்களை மன நிலை பாதிக்கப் பட்டவர்கள் என்பதில் தவறில்லை.

## கைதிகள் பலவிதம்!

மனிதன் எதிர்த்து நிற்கும் பலத்தை பெறாத போது இலகுவில் தாக்குபவனின் கட்டுப் பாட்டுக்குள் வருகிறான். இராணுவ, பொருளா தார பலமின்மையால் சிலர் தொடர்ந்து எதிர்த்து நிற்க முடியாமல் கட்டுப்பாட்டுக் குள் வருகிறார்கள். 18ம் நூற்றாண்டில், மிருகங்களை வேட்டையாடுவது போல், காட்டில் வாழ்ந்த உலகமறியாத அப்பாவி ஆபிரிக்க நீக்கிரோ மக்களை சிறைபிடித்து, கூண்டுக்குள் அடைத்து, கப்பலேற்றி அமெ-ரிக்காவின் தென் மாநிலங்களுக்கு அடிமை-களாக வெள்ளை இனத்தவர்கள் அழைத்துச்



சென்ற வரலாற்று உண்மையை எவரும் மறக்கமுடியாது. எருதுகளிடமும் குதிரை களிடமும் வேலை வாங்குவது போல் சாட்டை அடி மூலம், மனிதன் மனிதனிடம் உழைப்பைப் பெற்றான். கறுப்பின பெண்க ளும் ஆண்களும் மனித உரிமை மீறல்களுக் கும் இன துவேசத்துக்கும் ஆளானார்கள்.

அரசியல் காரணத்துக்காக கைதாகி சித்திர வதைக்கு உள்ளாகி மரணத்தை தழுவிய இந்திய சுதந்திரத்துக்காக போராடிய பல தியாகிகள் நம் நினைவை விட்டு அகல மாட்டார்கள். சிறீலங்காவில் தமிழரின் உரி-மைக்காக போராடிவரும் விடுதலைஇயக்கத் தைச் சேர்ந்த பல அரசியல் கைதிகள் சிறைச்சாலைகளில் பயங்கரமாக சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டதை எவரும் மறக்கமுடியாது. இது 1983ல் வெலிக்கடை ஜெயிலில் ஏற்பட்ட படுகொலை-யை நினைவூட்டுகிறது.

பர்மா, தாய்லாந்து, சீனா, ருஷ்யா நாடு களில் அரசியல் கைதிகள் நடத்தப்படும் விதம் பலத்த கண்டனத்துக்கு உள்ளாகியுள்ளது. சில அரசியல் கைதிகள் சிறச்சாலையில் வைக்கப்படாவிட்டாலும் வீட்டில் எவ்வித சுதந்திரமுமில்லாது சிறைவைக்கப்படுகிறார் கள். அவர்களது நடைவடிக்கைகள் துப்ப-றியும் பொலீசாரால் கண்காணிக்கப்படு கிறது.

கொலை, திருட்டு, கற்பழிப்பு, ஊழல் போன்ற குற்றங்களுக்காக நீதிமன்றத்தால் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டு சிறை சென்ற கைதிகள் இன்னொரு விதம். சிறு குற்றங்களுக்காக முதல் முறை சிறைசென்ற கைதிகள் பல குற்றங்களை புரிந்து பலதடவை சிறை சென்று அனுபவப்பட்ட கைதிகளின் பயமுறுத்தலுக்கு ஆளாகிறார்கள். சிறைச் சாலை அதிகாரிகள்கூட பாரபட்சத்துடன் கைதிகளை நடத்துவதினால் அமைதியான கைதிகள்கூட சித்திரவதைக்குட்படுகிறார்கள்.

சில அதிகாரிகள் சிறையில் உள்ள பிரபல்ய-மான கேடிகளின் பயமுறுத்தல்களுக்காகவும் சலுகைகளுக்காகவும் அவர்கள் கட்டுக்கடங் காமல் நடப்பதைக் கவனியாது விட்டு விடுவார்கள்.

நாட்டுக்காக உயிரையும் பணையம் வைத்து போராடி, எதிரியால் கைதானவர்களை ஜெனிவா உடன்படிக்கையின்படி போர்க் கைதிகள் எவ்வாறு நடத்தப்படவேண்டும் என்ற முறைகளைப் பல நாடுகள் கடைப் பிடிப்பதில்லை. வஞ்சம் தீர்க்கும் எண்ணமும் மத, இனவெறியுமே மனதில் ஓங்கி நிற்ப தால் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட முறைகள் கடைப்பிடிக்கப்படுவதில்லை. உதாரணத்துக்கு, ஆப்கானிஸ்தான் போரில் கைதான தலிபான், அல்குவைதா இயக்க கைதிகளை சிறையில் அமெரிக்க இராணு வம் குறுக்கு விசாரணை செய்யும்போது, போரில் இறந்த சக அமெரிக்க வீரர்களும், 2001ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ம் திகதி நியூயோர்க் நகரத்தின் உலக வர்த்தக மையம் தாக்குதலில் இறந்த சுமார் 5000 அமெரிக்கர்களுமே அவர்கள் மனதில் தோன்றும். செஞ்சிலுவைச் சங்கம் போர்க் கைதிகளை அடிக்கடி போய்ப்பார்த்து தகுந்த நடவடிக்கைகள் எடுப்பது கூட சிலசமயம் கடினமாகயிருக்கிறது

இன அழிப்புக்காக, கைதாவதற்கான குற்றம் ஏதும் செய்யாத மக்கள் கைதிகளாகிறார்கள். அவர்கள் செய்த குற்றம் ஒரு தனிபட்ட




58ம் பக்கம் பார்க்க...

# CELL TEL MOBILITY

Cell tel Mobility

For all your cellphone and accessory needs...

## Grand Opening Special !!!

We sell new & used cellphones, Pagers and accessories for:

ROGERS WIRELESS, FIDO, TELUS MOBILITY, BELL MOBILITY

**Opening special !!!**

Geunine Leather Case



From **$2.99** Reg. $19.99

1 25002 74135 0

Coupon valid only at the Morningside location until November 30 2008

One coupon per visit. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.

**Opening special !!!**

Hands free



From **$3.99** Reg. $29.99

1 25002 74135 0

Coupon valid only at the Morningside location until November 30 2008

One coupon per visit. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.

**Opening special !!!**

Smart car charger



From **$4.99** Reg. $39.99

1 25002 74135 0

Coupon valid only at the Morningside location until November 30 2008

One coupon per visit. Customer must bring this coupon to get the offer.
The coupon must be redeemed during the valid redemption period.
Cell Tel Mobility Reserved the rights to terminate the offer any time without notice.


Coupons valid only at the Morningside location until November 30, 2008.

- CAR CHARGER
- LEATHER CASE
- HEAD SETS
- HOME CHARGER
- CLEAR CASE
- BLUETOOTH HEADSET
- BLUETOOTH DONGLE
- DATA CABLES
- BATTERIES
- BELT CLIP/HOLDER
- ANTENNA BOOSTER
- SCREEN PROTECTOR




**Call Toll free:- 1.877.312.5123** *SHOP ONLINE* @ www.celltelmobility.com

## CELL TEL MOBILITY WIRELESS REPAIR CENTER



NOKIA, MOTOROLA, SONY ERICSSON, SAMSUNG, LG
HTC,BLACKBERRY,iPHONE,

***Display,Antenna Replacement and all other Repairs (Software & Hardware).***

NEW LOCATION

| | | | |
|---|---|---|---|
| 2637 Eglinton Ave. East,<br>Eglinton Ave/Midland Rd<br>416.266.6818 | 220 - 5990 16th Avenue<br>16th Avenue/ Markham Rd<br>905.201.4859 | 5C - 2950 Birchmount Rd<br>Birchmount / Finch Ave<br>416.495.7776 | 5A - 1162 Morningside Ave<br>Morningside Ave/ Sheppard Ave<br>416.281.2355 |

NetCom College
Where minds are challenged to a great future...
Registered and Approved as a Private Career College
Under the Private Career Colleges Act.

- International Students Welcome
- EI Students Could receive Free Diploma / Certification If Qualified



- Microsoft Technology Courses
- Accounting
- Programming
- VoIP
- Cisco Education
- LINUX
- MS Office
- Wireless Technologies
- Dataware Technologies
- A+ / Network+ / Security +

Special Summer 2008
Computer Classes
Only 7 Students per Class
Register NOW

We are introducing...
Microsoft Exchange 2007
Microsoft SQL 2005
Microsoft windows server 2008
Ethical Hacker

authorized Exam centers for
PEARSON VUE AUTHORIZED TEST CENTER
Authorised PROMETRIC TESTING CENTRE

1200, Markham Rd, Suite # 525,
Scarborough, ON,
M1H 3C3, Canada
Tel: 416.438.3737
www.netcomcollege.com
info@netcomcollege.com

# கைதிகளின் வதை...

25ம் பக்கத் தொடர்ச்சி...

இனத்தையும் மதத்தையும் அவர்கள் சார்ந்ததே. குர்தீஸ்தான் மக்களும் யூத மக்களும் இந்நிலைக்கு உட்பட்டவர்கள். ஹிட்டலர் ஆட்சியின் போது யூத மக்கள் வேட்டையாடப்பட்டார்கள். அதே போன்று சதாம் ஹுசெயின் ஆட்சியில் குர்தீஸ்தான் மக்கள் பட்ட வேதனையை யாவரும் அறிவர். ஏன் சிறீலங்காவில கூட தமிழ் மக்கள் வேட்டையாடப்பட்டனர். வேதகாலத்தில் ஆரியர்களின் ஆக்கிரமிப்பால் திராவிடர்கள் இக்கதிக்குள்ளானார்கள். பின்னர் இஸ்லாமிய ஆக்கிரமிப்புக்கு இந்தியா ஆளானபோது பல இந்துக்கள் இந்நிலைக்கு உள்ளானார்கள்.

பணயக் கைதிகள் அரசியல் காரணத்துக்காகவோ, விடுதலைப் போராட்டத்துக்காகவோ அல்லது பணம் பெறுவதற்காகவோ ஒரு குறிப்பிட்ட குழுக்களினால் சிறைவைக்கப்படுகிறார்கள். தங்கள் நோக்கம் கைகூடும் வரை பயமுறுத்தல், சித்திரவதை போன்றவற்றுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். அவர்கள் உயிர் எச்சமயம் பறிபோகும் என்பது நிட்சயமில்லை.

## எதற்காக சித்திரவதை?

கைதிகளை எதற்காக சித்திரவதை செய்ய வேண்டும்? சிறைச்சாலை என்றால் சித்திர வதைசெய்யும் கூடமா அல்லது குற்றவாளிகளை சீர்திருத்துமிடமா? சிறைச்சாலை அதிகாரிகளுக்கு மனிதாபிமானம் என்பது இல்லையா?. குற்றவாளிகளை இன மத ரீதியாக வேறுபடுத்திப் பார்க்கிறார்களா?. குற்றவாளிகளின் மனநிலை பாதிப்படையாதவாறு நடத்தப்படுகிறார்களா? என்பன போன்ற பல கேள்விகள் மனித உரிமைக்காகப் பாடுபடும் குழுக்களால் கேட்கப்படு கின்றன. சில கைதிகளிடம் இருந்து தகவல் களைப் பெற்று, தப்பி ஓடிய பல குற்றவாளிகளைக் கைது செய்ய பல சித்திரவதை முறைகளை அதிகாரிகள் கடைப்பிடிப்பது வழக்கம். அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பது போல் படிப்படியாக சித்திர வதையினால் ஏற்படும் பாதிப்பை அதிகரித்து கைதிகள் தனிமைப்படுத்தப்பட்டு, கைகளை யும் கால்களையும் சங்கிலிகளால் பிணைத்து ஒரு இருட்டு அறைக்குள் விடப்படுகிறார்கள். இம்முறை அவர்களின் மனநிலையை வெகு வாக பாதிக்கிறது. உணவின் அளவு குறைக்கப்படுகிறது. மின்சாரத்தைப் பாவித்து உணர்ச்சிகளைப் பாதிக்கும் இடங்களில் அதிர்ச்சியை கொடுப்பார்கள். நிர்வாணமாக்கி தண்ணீரை வேகமாக குழாய் மூலம் பீச்சியடித்து துன்புறுத்துவர். அதோடு மட்டுமன்றி தலைகீழாக பல மணி நேரம் கட்டித் தொங்கவிட்டு சித்திரவதை செய்வர். சிறைச் சாலைக்குச் சிறைச்சாலை சித்திரவதை முறைகள் வேறுபடும். சில சிறை அதிகாரிகள் வன்முறையை விரும்பும் குற்றவாளிகள் வாழும் சூழ்நிலையில் வேலை செய்வதி னால் அவர்களின் மனநிலை பாதிக்கப்பட்டு எதையும் அடித்து துன்புறுத்தி செய்யலாம் என்ற போக்கை கடைப்பிடிக்கத் தொடங்கு கிறார்கள். சிலர் கைதிகளுடன் சேர்ந்து போதை வஸ்து வியாபாரத்திலும் ஈடுபடுகிறார்கள்.

## சிறைச்சாலைகள் என்ன செய்யும்?

உலகில் சித்திரவதைக்குப் பிரபல்யமான சிறைச்சாலைகள் பல. சில சினிமாவில் படமாக கூட வெளிந்துள்ளது. தமிழ் நாட்டில் வேலூர் சிறைச்சாலையைப்பற்றி அறியாதவர்கள் கிடையாது. பிரித்தானியர் ஆட்சியின் போது அந்தமான் தீவில் அமைக்கப்பட்ட சிறைச்சாலை வாசம் என்றாலே இன்னொரு பிறவிதான் என்ற எண்ணத்தில் சென்றவர்கள் பலர். தென் ஆபிரிக்கா முன்னைய ஜனாதிபதியான நெல்சன் மண்டேலா 18வருடங்கள் Robben Island சிறைச்சாலையில் அரசியல் கைதியாக இனவெறி பிடித்த சிறுபான்மையினத்தின் ஆட்சியினால் காவலில் வைக்கப்பட்டார். கேப்டவுனில் இருந்து தெற்கே 12 கி.மீ. தூரத்தில் இத்தீவில் உள்ள சிறைச் சாலை சுமார் 400 வருடங்களாக இயங்கி வந்துள்ளது. இனத்துவேசம் படைத்த ஆட்சிக்கு எதிராக போராடிய அரசியல் கைதிகளை இச்சிறைச்சாலைக்கு அனுப்பி, தனிமைப்படுத்தி அவர்கள் போக்கினை மாற்ற நினைத்தது அரசு.

பிரான்ஸ் தேசத்தின் வரலாற்றில் “பஸ்டைல்” (Bastille) சிறைச்சாலை ஒரு மக்கள் புரட்சி வெடிக்கக் காரணமாயிருந்தது. உயர் வர்க்கமான பிரபுக்கள், அதிகாரிகள், மற்றும் அரச குடும்பத்தினரின் கொடுங்கோலாட்சிக்கு எதிராக மக்கள் கொதித்தெழுந்தனர். சிறைச் சாலையில் பல புரட்சிக்காரர்களை அரசு கைதிகளாக்கி சித்திரவதைசெய்தது. கிலட்டன் என்ற உயரத்தில் இருந்து கீழே விழும் கூரிய கத்தியினைப்பாவித்து பல கைதிகள் கொல்லப்பட்டனர். இராக் தேசத்து அல்கராப் சிறை சதாம் ஆட்சியின் போது சித்திரவதை களுக்கு பிரசித்தமானது. மத்திய கிழக்கு நாடுகளான சௌதி அரேபியா, இராக், இரான் போன்ற நாடுகளில் உள்ள சிறைச் சாலைக்கு கைதியாக சென்றால் எதோ் நரகத்திற்கு போவது போன்ற நிலைதான். இஸ்லாமிய சட்டம் குற்றம் புரிந்தவர்களைக் கடுமையாக தண்டிக்கிறது. இதே போன்று சோவியத் யூனியனில் கொம்யூனிசம் தழைத்து நின்றபோது கைதிகள் மிருகங்களைப் போல் நடத்தப்பட்டனர். கடும் குளிர் பிரதேசமான சைபீரியா பகுதியில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட அரசியல் கைதிகள் உறையும் குளிர் நிலையிலும் வேலை செய்ய வற்பறுத்தப்பட்டனர். சீனாவில் உள்ள சிறைச்சாலைகளில் நடக்கும் சித்திரவதை கள் வெளிநாடுகளுக்கு தெரிவதில்லை.

Terezin என்ற ஆஸ்திரியாவில் உள்ள இடம் பிரேக் நகரத்தில் 90 மைல் தூரத்தில் உள்ளது. இரண்டாம் உலக யுத்த காலத் தில் ஹிட்லர் ஆட்சியின் போது இங்குள்ள சிறைச்சாலை யூதர்களுக்கென உருவாக் கப்பட்டு சிந்தித்துப் பார்க்கமுடியாத சித்திர வதை முறைகள் அவர்கள் மேல் பாவிக்கப் பட்டது. 1757ம் ஆண்டு பங்களா தேசத்தை ஆண்ட நவாப் கொடுரமான முறையில் 146 ஆங்கிலேயரை கல்கத்தா நகரில், சிறு அறைக்குள் கைதியாக அடைத்து வைத்தான். மூச்சு திணறி 123 பேர் மரணத்தை தழுவினர். இச்சம்பவம் இந்திய வரலாற்றில் “கல்கத்தாவின் கறுப்புத் துவாரம்” (Black hole of Calcutta) என பிரசித்தம் பெற்றது. இச் சம்பவமே நவாப்பின் வீழ்ச்சிக்கு காரணமாகியது. மாலைதீவில் உள்ள Maafushi என்ற சிறைச்சாலை சித்திரவதைக்கு பிரபல்யமானதொன்றாகும். பல இலங்கையர் இங்கு கைதிகளாக இருந்து சித்திரவதை அனுபவிக்கிறார்கள் என சிறீலங்கா பத்திரிகைகள் சுட்டிக்காட்டியுள்ளது. அமெரிக்க சிறைச்சாலைகளில் ஒரு காலத்தில் பிரபல்யமாக திகழ்ந்தது சான்பிரான்சிஸ்கோவிற்கு அருகாமையில் உள்ள அல்கார்டாஸ் (Alcartaz) என்ற சிறைச்சாலையாகும். இச்சிறைச்சா லையை மையமாக வைத்து ஒரு சினிமா படம் கூட வெளிவந்துள்ளது. Bernie Coy என்ற வங்கிக் கொள்ளைக்காரன் இச் சிறைச்சாலையில் 26 வருட சிறைத்தண்டனை பெற்று கைதியாகயிருந்தபோது 1946ல் சில கைதிகளின் உதவியுடன் தப்பியோட வழி வகுத்தான். அத்திட்டத்தை 9 வருடகாலமாக அவன் தீட்டினான் என்கிறது வரலாறு. இந்த முயற்சியில் பல சிறைக்காவலாளிகளும் மூன்று கைதிகளும் மரணத்தை தழுவினர். 1963ல் இச்சிறைச்சாலை மூடப்பட்டது.

■ ■ ■

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

# விரும்பியோ அல்லால் விதிவசமோ.... புலம்பெயர்ந்தோம்

முடிந்தவரை மேல்நாட்டவர் போல் வாழவும் பழகிக்கொண்டோம். இருந்தும் சில பின்னடைவுகள் எம்மிடம் எஞ்சி நிற்கின்றன. அதில் ஒன்றுதான் நீண்டகால பாதுகாப்பான ஆயுட்காப்புறுதி செய்யாதிருத்தல் என்பது. நெருங்கிய உறவுகளிலோ அல்லது நமது குடும்பத்திலோ ஒரு இழப்பு ஏற்பட்டபின் வரும் ஞானோதயம் யாருக்கும் உதவாது. ஆகையால் யாராவது ஒரு முகவரை அணுகி ஏதாவது நல்ல நிறுவனத்தில் கட்டாயம் ஆயுட் காப்புறுதி செய்து வையுங்கள். நீங்கள் தெரிவு செய்யும்

**அந்த முகவர் நானாக இருந்தால் எனக்கும் மகிழ்ச்சிதான்.**






Insurance Broker

**Guna Selliah**

**416.371.7776**

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

RBC

759 Warden Ave., Toronto, Ontario, M1L 4B5, Tel: 416.759.5453 ext: 401
Fax: 416.759.6220, E-mail: guna@lilandinsurance.com

digi Media

# Magnificent India

**EXPERIENCE INDIA LIKE NEVER BEFORE WITH OUR AWESOME NEW TOURS.**

## Manasarover Yatra



Kathmandu – Kodari – Zangmu – Nyalam – Saga – horpa – Manasorover – Dharchen – Mt.Kailash – Dehraphuk – Zuthulphuk – Dolmala

**16 Days / 17 Nights**

## North Indian Experience

Delhi – Mandawa – Bikaner – Khimsar – Jaisalmer – Jodhpur – Deogarh – Ranakpur – Udaipur – Pushkar – Ranthambore – Bharatpur – Agra – Jhansi – Khajuraho – Khajuraho – Varanasi – Delhi



**21 Days / 20 Nights**


## Romantic Kerala

Munnar (Houseboat) - Alleppey - Kovalam



**6 Days / 5 Nights**

## Southern Heritage



Cochin (Houseboat) - Thekkady - Madurai - Tanjore - Rameshwaram - Kannayakumari - Kovalam

**12 Days / 11 Nights**

## Best of Kerala



Cochin – Munnar – Thekkady – Kumarakom (Houseboat) – Kovalam – Kanyakumari

**10 Days / 9 Nights**

## Exotic Kerala


Cochin – Munnar – Thekkady – Kumarakom (Houseboat) – Cochin



**21 Days / 20 Nights**


## Temples of South India

Chennai - Chidambaram - Kanchipuram - Kerala - Madurai - Palani - Rameshwaram - Thanjavur - Tiruchi - Tiruchendur - Tirupathi



**21 Days / 20 Nights**

## The Sacred Ganges



Delhi – Mathura – Agra – Allahabad – Varanasi – Delhi

**12 Days / 11 Nights**

For tour packages and more information contact us or vist our website.

# SERANDIB TRAVEL 1

IATA TICO 50012691

**Toll Free: 1-888-207-0902**

**www.serandibtravel.com**

**Toronto: 416-750-0009**
2075 Lawrence Ave East
Suite 202

**Mississauga: 905-564-7564**
1332 Khalsa Drive (@ Dixie & Derry)
Unit 3

**Montreal: 514-448-1389**
1410 Rue Guy
Unit 10

Calgary: 403-770-9647
Vancouver: 604-625-0495

BMK

# வீடு வாங்குதல்... எப்படி ஆரம்பிப்பது?


மங்கா அருணாசலம்
- வீடு விற்பனைப் பிரதிநிதி -
manga@thaiveedu.com

- பகுதி 4 -

### ஒருவர் வீட்டை விற்கப் போட்டுள்ளார். வீட்டிற்கு ஒரு கேள்வி (offer) வரும்போது என்ன FACTORSஐ கவனிக்க வேண்டும்

- வீடு விற்பவர்களின் பெயர்கள்
- வீடு வாங்குபவர்களின் பெயர்கள்
- Legal Description
- விலை
- வைப்பிலிடப்படும் பணம்
- Closing Date
- நிபந்தனைகளும் அவற்றின் சரத்துக்களும்
- வீட்டுப் பரிசோதனை
- வீட்டின் உத்தரவாதம்
- விற்பனைப் பிரதிநிதிகளின் Commission
- வீடு விற்போரின் வேண்டுபவரின் கை-யொப்பம்

வீடு விற்பவர்களின் பெயர்கள், வீடு வாங்குபவர்களின் பெயர்கள் சரியாக இருக்க வேண்டும். ஏனெனில், அந்தப் பெயர்களே வீட்டு உறுத்திப்பத்திரத்தில் இருப்பதும் வருவதும் ஆகும்.

விலையைத் தீர்மானிக்கும்போது அதற்கான கூடுதல் தகவல்களையும் (CMA Report அந்தப் பகுதியில் விற்ற வீடுகளின் பட்டியல்கள்) உங்கள் வீடு விற்பனை முகவர்களால் தரக்கூடியதாக இருக்கும் வீடு விற்பனையில் விலை ஒரு காரணி மட்டுமே. மற்றைய நிபந்தனைகளும் ஒன்றுசேரும் போது தான் வீடு விற்பனை முற்றாக பூர்த்தியடையும்.

வைப்பில் இடப்படும் பணம் (Deposit). இது சாதாரணமாக 1–10 வீதம் வரை இருக்கும். கூடுதலாக பணம் வைப்பில் இடப்படும்போது வீடு வேண்டுபவர் கூடுதலாக வீட்டை வாங்க விருப்பம் உள்ளவர் என எண்ணலாம். இப்பணம் வீடு விற்கும் முகவரின் காரியாலயத்தில் வீட்டு Closing வரை வைப்பில் இடப்படும்.

விலையை இரு பகுதியினரும் கதைத்து ஒரு முடிவுக்கு வருவார்கள். இந்த விலைப் பேச்சில் வீட்டில் உள்ள பல பொருட்கள் சேர்க்கப்படும் அல்லது விலக்கப்படும். உதாரணம் washer, Dryer, அடுப்பு, குளிர்சாதனப்பெட்டி, Dish washer, water heater, water softener, curtains, blinders, shutters, furniture, rugs, garden shed, hot tubs போன்றவை. இதில் வீடு விற்பவர் எவை தனக்குத் தேவையானவை, எவை இலகுவில் இடம் மாற்றக்கூடியவை போன்றவற்றை சிந்திக்க வேண்டும். இவையும் வீட்டின்



விலையை மதிப்பிடுவதற்கு காரணமாகும்.

### Closing Date

இத்திகதியில் உறுதிகள் கைமாற்றப்படும். இத்திகதியில் நீங்கள் வீட்டை vacate ஆக விட வேண்டும். இத்திகதியில் வீடு வாங்குபவரின் சட்டத்தரணி முழுப் பணத்தையும் (MORTGAGE, DOWN PAYMENT) வீடு விற்பவரின் சட்டத்தரணியிடம் கொடுப்பார். வீடு விற்பவரின் சட்டத்தரணி வீட்டில் இருக்கும் Mortgage, வீட்டு முகவர்களின் Commission போன்றவைகளைக் கழித்து மிகுதிப் பணத்தை உங்களுக்குத் தருவார்.

### Legal Description

இது உங்கள் வீடு, காணி யாவற்றையும் பதிவு செய்த தகவல்களை அடக்கியிருக்கும். இதுவே வீடு உங்களுடையது என்பதை உறுதிப்படுத்தும். அடுத்து நீங்கள் பார்க்க வேண்டியது, என்ன நிபந்தனைகள் போட்டுள்ளார்கள் என்பதாகும்.

### அடமானக் கடன் Mortgage

வீடு வாங்குபவர் அடமானக் கடன் எடுக்கத் தகுதியுள்ளவரா, எத்தனை நாட்களுக்குள் நிபந்தனையைப் பூர்த்தி செய்வார் போன்ற விடயங்களை அறிய வேண்டும். இது வீடு வாங்குபவருக்கு சாதகமான நிபந்தனையாகும்.

### வீட்டுப் பரிசோதனை

வீட்டுப் பரிசோதனை எத்தனை நாட்களுக்குள் செய்வார்கள், வீட்டுப் பரிசோதனைக்குரிய பணம் யாரால் கொடுக்கப்பட வேண்டும். பரிசோதனையில் வரும் வீட்டுத் திருத்தங்கள் யாரால் பூர்த்தி செய்யப்பட வேண்டும்? இதுவும் வீடு வாங்குபவருக்கு சாதகமான தாகும். இந்த நிபந்தனையைத் தவிர்ப்பதற்கு 'AS IS' என்னும் பதத்தைப் பாவிக்கலாம். ஆனால், இது வீட்டின் விலையைக் குறைப்பதற்கு சாத்தியமானது. வீடு விற்பவரே வீட்டை விற்பனைக்குப் போடுவதற்கு முன் வீட்டுப் பரிசோதனையைச் செய்து திருத்த வேலைகளைச் செய்தால் வீட்டின் விலையை கூடுதலாக விற்பதற்கு சாத்தியங்கள் இருக்கிறது.

### எனது வீட்டை விற்றுத்தான் வீட்டை வாங்குவேன் என்ற நிபந்தனை

இது வீட்டை வாங்குபவர் குறிப்பிட்ட காலத்தினுள் தனது வீட்டை விற்றால் மட்டுமே உங்கள் வீட்டை வாங்குவார் என்னும் நிபந்தனை. குறிப்பிட்ட காலத்தினுள் வீடு விற்கப்படாவிட்டால், உங்கள் ஒப்பந்தம் இரத்தாகும். இது தற்போதைய (Buyers Market) காலத்தில் வீடு விற்பதற்கு நன்மை அளிக்காது. ஏனெனில், வீட்டின் விலை குறைந்தால் வீடு வாங்குபவர் ஒப்பந்தத்தை ரத்துச் செய்யக்கூடிய சந்தர்ப்பம் உண்டு. (தனது வீட்டை விற்காமல் விடலாம்).

வீடு வாங்குபவர் அடமானக் கடன் குறிப்பிட்ட வட்டி வீதத்திற்குள் இருந்தால் மட்டுமே எடுப்பேன் எனக்கூறுவது. சில சந்தர்ப்பத்தில் வீடு வாங்குபவர் தனது குடும்பத்தார் அல்லது தனது சட்டத்தரணி இந்த ஒப்பந்தத்தை சரிபார்ப்பதற்கு குறிப்பிட்ட காலம் தேவை எனக் கூறுவார். இதுவும் வீடு வாங்குபவருக்கே சாதகமானதாகும்.

நீங்கள் CONDO அல்லது CONDO TOWN HOUSE விற்கப் போட்டிருந்தால் Status Certificate எடுப்பதற்கான பணம் யாரால் கொடுக்கப்பட வேண்டும் என்பதைத் தெரிவிக்க வேண்டும். சந்தை விலையைப் பொறுத்து (Buyer Market) Closing hostஐயும் வீடு வாங்குபவர் வீடு விற்பவரிடம் கேட்கலாம். வீடு வாங்குபவர் ஒப்பந்தத்தில் சரியான இடத்தில் கையெழுத்து போட்டுள்ளாரா என சரிபார்க்க வேண்டும்.


### வீடு விற்கும் ஒருவர் ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்ட பின் வீடு விற்கவில்லை என கூறமுடியுமா?

கூடுதலாக முடியாது. ஆனால் சில சந்தர்ப்பங்களில் வீடு விற்பவர் (Escape clause) போட்டிருந்தால், உதாரணம், வீட்டு ஒப்பந்தம் தனது வீட்டு அங்கத்தவரின் அல்லது தனது சட்டத்தரணியின் அனுமதிக்குப் பின்தான் செல்லுபடியாகும் எனக் குறிப்பிட்டிருந்தால் வீடு விற்பவர் ஒப்பந்தத்தில் இருந்து விலகக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு. இவை யாவையும் நீங்கள் தெரிவு செய்யும் வீடு விற்பனை முகவர் முழுமையாக அறியத்தருவார். ஏனெனில் அவர் வீடு விற்பனைத் துறையில் பயிற்றப்பட்டவர். இதைவிட மேலதிக சரத்துக்கள் (Factors) ஒப்பந்த நிலைமைக்கேற்ப மாறுபடும்.

இவற்றை வீடு விற்பவர் தெரிந்து வைத்திருந்தால் ஒப்பந்தத்தை முறையாகச் செய்யக்கூடிய சாத்தியத்தை நீங்கள் ஏற்படுத்துகிறீர்கள்.

■ ■ ■

S.P ELECTRONICS & COMPUTERS
அனைத்துத் தமிழ் வானொலிகளும் புதிதாக வாங்குவதற்கும், திருத்திக் கொள்வதற்கும்
416 264 6400
2641 Eglinton Ave. Scarborough
(Brimley & Eglinton)


VEEDU REALTY INC. BROKERAGE
1345 Morningside Ave., Unit #8
Toronto, ON, M1B 5K3
Tel: 416.759.6000
Fax: 416.759.6005
• Building permit
• Zoning info.
• Site plan approval
• Rezoning approval
Gop Kalaieswaraan
Master in Architecture
Sales Representative
(Residential, Commercial, Institutional)
Dir: 416.723.7467


# கோடீஸ்வரர் பேசுகிறார்

**அண்மையில் கணனி இணையத்தளத்தில் சிங்கப்பூரின் மிக இளமையான கோடீஸ்வரன் திரு.அடம் கூ பணம் சம்பந்தமாக சில கருத்துக்கள் தெரிவித்திருந்தார். அந்தக் கருத்துக்களை தமிழாக்கம் செய்து தாய்வீடு வாசகர்களுக்கு தந்துள்ளேன்.**

## குமார் புனிதவேல் பக்கம்

kpunithavel@thaiveedu.com

உங்களில் பலருக்குத் தெரிந்திருக்கும் இந்த பிராந்தியத்தில் நான் பரவலாக பயணம் செய்வது. மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து, சைனா போன்ற நாடு களில் எனது காரியாலயங்களுக்கும், கருத்தரங்குகள் செய்வதற்கும் செல்வதுண்டு. அனேகமாக இருவாரத்திற்கு ஒருமுறை நான் விமான நிலையத்திற்கு செல்ல வேண்டி இருக்கும். இதனால் நான் நடத்திய கருத்தரங்குகளில் பங்குபற்றிய பலருக்கும் முகம் கொடுக்க நேரிடுவதுண்டு. எனது நூல்களை வாசித்தவர்களையும் சந்தித்ததுண்டு.

அண்மையில் ஒருவர் நான் கொலாலம்பூர் பயணிக்கும் போது என் அருகில் வந்து ஆச் சரியமாகபார்த்து கேட்டார் ‘கோடீஸ்வரரான நீங்கள் இப்படி economy class இல் என்ன பயணம் செய்கிறீர்கள் என்று. அதற்கு நான் ‘அதனால் தான் நான் கோடீஸ்வரனாயிருக்கிறேன்’ என்றேன். அவர் குழப்பத்துடன் என்னைப் பார்த்தார்.

இது செல்வத்தைப் பற்றி மக்கள் அறிந்துள்ள ஆகப் பெரிய பொய்யினை எமக்கு எடுத்துக் காட்டுகிறது. (‘secret of self made millions’ எனும் நூலில் இதுபற்றி எழுதியுள்ளேன்) பலரும் கோடீஸ்வரன் என்றால் ‘Gucci’, Hugo Bass, Rolak பாவிப்பார்கள் என்று தப்புக்கணக்கு போட்டுள்ளார்கள். அவர்கள், கோடீஸ்வரர்கள் முதல் வகுப்பில் தான் பயணம் செய்வதாக நம்புகிறார்கள். இதனால் தான் பலரும் செல்வந்தராக வருவதில்லை. கொஞ்சம் பணம் கைக்கு வந்ததும் அவர்கள் இவைபோன்ற வகை பொருட்களை பாவிப்பது தான் இயல்பு என்று எண்ணி தங்களிடம் உள்ள பணத்தை விரயமாக்கி, ஆரம்பித்த இடத்துக்கே சென்று விடுகிறார்கள். உண்மையாதெனில், தாமாக முயன்று கோடீஸ்வரனாகியவர்கள் (செல்வத்திற்கு வாரிசாகிய மடையர்கள் அல்ல)மிக சிக்கனமாக, தேவைக்கு ஏற்றதாயும், கொடுக்கும் பணத்திற்கு பெறுமதியானதாயும், செலவு செய்வார்கள். இதனால் தான் அவர்கள் பணத்தை சேர்க்கவும் பெருக்கவும் கூடியதாயுள்ளது.

ஏழு வருடங்களுக்கு முன் நான் பெற்ற வருமானத்தில் 80% சேமிக்க முடிந்தது. ஆனால் இன்று நான் 60% மட்டுமே சேமிக்கின்றேன். காரணம் இப்போ நான் என் மனைவி, அவர் தாய், இருவேலைக்காரிகள், இரு பிள்ளைகள் ஆகியோரை பராமரிக்கும் பொறுப்பு இருப்பதே. ஆனால், பெரும்பான் மையோர் 10% மட்டுமே சேமிக்கிறார்கள் என்பதனை மறக்கலாகாது. நான் First class பயணச்சீட்டு அல்லது $300 பெறுமதியான சேட்டை வாங்காததற்கு காரணம் அது வீண் பண விரயம் என்று எண்ணுவதாலேயே. ஆனால், $300 செலவளித்து எனது இரண்டு வயது மகளை gulia gatrial speech வகுப்பிற் கும் நாடக வகுப்பிற்கும் தயங்காமல் செலவிடுவேன்.

நான் YEOவில் இணைந்த பொழுது (Young Entrepreneur’s Organization) இந்த அமைப்பு 40 வயதிற்கு குறைந்த ஒரு மில்லியனுக்கு அதிகமான வருவாய் வருடமொன்றுக்கு உள்ளவர்களை கொண்டது) ஐந்து வருடங் களுக்கு முன் நான் கவனித்த ஒரு விடயம் தாமாக முயன்று முன்னுக்கு வந்தவர்கள் அதில் பலர் 5 மில்லியனுக்கு அதிகமான ஐஸ்வரியமுடையவர்கள், விமானத்தில் சாதாரண (Economy) வகுப்பில் பயணித்ததுடன் ரொயாட்டா கார்களையும் நிசான் கார்களையும் தான் செலுத்தினார்கள். ஆனால், முயற்சி இல்லாமல் தம் அரசியல்வாதிப் பெற்றோர்களிடமும், பெரும் செல்வந்தர்களின் பிள்ளைகளும் தான். நாளை ஒரு நாள் உள்ளது என்பதனை மறந்து பணத்தை விரயமாக்குகிறார்கள். இந்த காரணத்தால் தான் குடும்பச் செல்வம் மூன்று தலைமுறைகளுக்கு அப்பால் பயணிப்பதில்லை. கடவுள் அருளால் எனது செல்வந்த தந்தையார் இதனை முன் உணர்ந்து எனக்கு தொழில் ஆரம்பிப்பதற்கு ஒரு சதமும் தர மறுத்துவிட்டார்.

பலரும் என்னிடம் கேட்பதுண்டு பெருமளவில் பணம் திரட்டி அதனை அனுபவிக்காவிட்டால் அதன் பயன் என்ன என்று. என்ன விடயம் எனில் நான் ஆடைகள், நகைகள் வாங்குவதினாலேயோ அல்லது ஆகாய விமானத்தில் முதல் வகுப்பில் பயணிப்பதாலேயோ மகிழ்ச்சி சொற்ப நேரத்திற்குத்தான் நிலைக் கும். அது நிலைத்து நிற்பதில்லை. பொருட் களினால் வரும் மகிழ்ச்சி விரைவாக வந்து சொற்பநேரத்தில் அழிந்து விடும். கொஞ்சம் நேரத்திற்குப் பின் மீண்டும் மகிழ்ச்சி இல்லாமலிருக்கும். திரும்ப அதனைப் பெறு வதற்கு மீண்டும் ஒரு பொருளை வாங்க வேண்டும். இதுவும் சொற்ப நேரத்திற்கே நிலைத்திருக்கும். என் கருத்துப்படி நீங்கள் பொருட்கள் வாங்குவதால் மகிழ்ச்சி பெறும் வாழ்க்கை வாழ்பவராயிருப்பின் நீங்கள் நிறைவில்லாத கவலையான வாழ்வு வாழ்கிறீர்கள் என்று கூறுவேன்.

இதுவல்லாமல் எனக்கு மகிழ்ச்சியை தருவது எனது குழந்தைகளின் சிரிப்பு. அவர்கள் விளையாடுவது, நன்றாக படிப்பது போன்றவையே. எனது வியாபார நிலையங்கள், எமது பயிற்சியாளர்கள் மேலும் மேலும் மக்களை சென்றடைந்து பல நாடுகளை வருடாவருடம் வளர்ச்சியடைவதை பார்க்கையில் மகிழச்சியை தருகிறது. எனது இணையத்தளம் எப்படி உங்களுக்கு ஊக்கத்தையும் வளர்ச்சியையும் தருகிறது என நீங்கள் எழுதும் மின் அஞ்சல்கள் எனக்கு பெரும் திருப்தியையும் மகிழ்ச்சியையும் நீண்டநேரத்திற்கு தருகிறது.

நான் உங்களுக்கு சொல்ல விரும்புவது என்னவென்றால் மகிழச்சி உங்கள் வாழ்க்கை அமையும் விதத்தில் (அது ஆசிரியத் தொழிலாக இருக்கலாம், வீடு கட்டுவதாக இருக்கலாம், வரை படம் வரைவதாக இருக்கலாம், அல்லது வேறு எதுவாகவும் இருக்கலாம்) இருக்க வேண்டும். செல்வம் அதனால் வரும் சிறு பெறுபேறாக இருக்க வேண்டும். நீங்கள் செய்யும் தொழிலை வெறுத்து அதில் வரும் செல்வத்தில் மட்டும் தங்கி இருப்பீர்களானால் உங்கள் வாழ்க்கை விபச்சாரியினுடையதிலும் எதுவிதத்திலும் சிறந்ததல்ல.

■ ■ ■



# நம்மவர் துயர் துடைப்போம்!

தமது சொந்த மண்ணிலேயே இன்று அகதிகளாக்கப்பட்டிருக்கும் நம் தாயக உறவுகளின் துயர் துடைக்க **HomeLife GTA Realty Inc,** நிறுவன வீடு விற்பனை முகவர்களின் ஒரு கூட்டு முயற்சி.

recycle
The possibilities are endless.



சகலவிதமான வெற்று மதுபான போத்தல்கள் அல்லது வெற்று மதுபான தகர குவளைகள் (any empty liquor,wine or beer bottles and cans) அனைத்தும் எங்களால் சேகரிக்கப்பட்டு, அதனால் பெறப்படும் முழுப் பணத்தொகையும் இடம் பெயர்ந்து அல்லலுறும் நம்மக்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

நீங்கள் வீசி எறியும் வெற்றுப் போத்தல்களும் தகரக் குவளைகளும் நம் உறவுகளுக்கு ஒரு வேளை உணவாகட்டுமே அல்லது அவர்கள் காயங்களுக்கு மருந்தாகட்டுமே.

இதற்கு உதவ விரும்புபவர்கள் **416-335-7325** என்ற தொலைபேசி இலக்கத்தில் எம்முடன் தொடர்புகொள்ளவும். உங்கள் இல்லத்திற்கு நாம் வந்து பொருட்களை சேகரிக்கும் வசதிகள் ஒழுங்கு செய்யப்படும். நீங்கள் எந்த நகர எல்லைக்குள் வசிப்பராக இருந்தாலும்,பொருட்களை சேகரிப்பதற்கான வசதிகள் செய்யப்படும்.

## அழையுங்கள்: 416-335-7325

"சிறு துளி பெரு வெள்ளம்" இது இயற்கை கற்றுத் தந்த பாடம்
உங்கள் ஆதரவுக்கு நன்றி

# "வெற்றியாளர்களின் தெரிவு"





செந்தியின் தமிழன் வழிகாட்டி
வர்த்தகக் கைநூல்

வெற்றியாளர்களின் குரலாக
ஒலிக்கும் தமிழன் வழிகாட்டியில்
உங்கள் குரலும் ஓங்கி ஒலிக்க
அன்புடன் அழைக்கின்றேன்..
=செந்தி=

தயாராகின்றது
**2009**

விளம்பர முடிவுத் திகதி
**November 12th 2008**

**விளம்பரங்களுக்கு அழையுங்கள்**

## Athavan Publications

792 Kennedy Road, Suite# 201, Scarborough, Ontario, M1K 2C8
**Tel: 416-615-4646** Email: tamilsguide@rogers.com

# "மக்களின் மனநிறைவு"

**N.K.S**

Drapery & Blinds Fabric LTD



**திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்**

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

**கேதா நடராஜா**

**416.321.6420**

**Ketha Nadarajah**
(President)
**Tel: 416.321.6420, 905.944.0218**
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9

**J.R.B** *Universal Inc.*

Almost All Services Available

- கடன் - அடமானக்கடன் - காப்புறுதி

- Loans
- Mortgages
- Insurance Claims
- Traffic Ticket
- Auto/Life Insurance
- Scholarship Plan (RESP)
- Real Estate Related
- Credit Counselling
- Accounting
- Tax Services



R.R. Rajkumar
B.Com (Hons) M.B.A
Dip. In Accy.

Bus; 416 • 752 • 7555 Fax: 416 • 752 • 7556
Cell: 416 • 937 • 9081
2390 Eglinton Ave. East, 206B, Scarborough, Ont. M1K 2P5

**Connectiong tutors & students in the GTA**

# BRILLIANT TUTOR @ YOUR HOME INC.

**தமிழ் மாணவர்களின் நலன் கருதி அவர்களின் வீடுகளுக்கு சென்று பாடங்களை ஒன்ராரியோ பாடத்திட்டத்திற்கு அமைய கற்பித்து வருகின்றோம்.**

- **SCIENCE**
- **CHEMISTRY**
- **PHYSICS**
- **BIOLOGY**
- **MATH**
- **CALCULUS**
- **ALGEBRA & GEOMETRY**
- **DATA MANAGEMENT**
- **ENGLISH**
- **FRENCH**

**EQAO Preparation**




## Call Kuna Today

Tel: **416-291-4684, 905-507-8470, 647-295-5862,** Fax: **416.264.6306**

E-mail: info@brillianttutor.com

**Over 100 Tutors**

We will visit your home

| JK to GRADE 8 $85^{00}$/MONTH | 1 ON 1 OR GROUP | 9 to University 2nd Year $90^{00}$/MONTH |
|---|---|---|

**Over 1500 Students**

79 Eastvale Drive, Markham, ON, L35 4R9

Markham, Scarborough, Mississauga, Toronto, Etobicoke, Brampton, North York, East York, Richmond Hill, Ajax, Malton, New Market, Vaughan

digi Media - 416-467-4952

# சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு உட்படாது பிள்ளையின் நடத்தையை சீர் செய்வது

- ஜீவா திசைராஜா -

## வெளியிடங்களில் பிள்ளைகள் எவ்வாறு நடந்து கொள்கின்றார்கள்

வீட்டில் பழகும் பழக்கங்களே பிள்ளை வெளியில் எவ்வாறு நடந்து கொள்கின்றது என்பதைத் தீர்மானிக்கின்றது. உங்கள் பிள்ளை சிறு பிள்ளையாக இருந்தாலும் அப்பிள்ளைக்கென ஒரு சொந்த உலகம் வெளியே இருக்கின்றது. நட்பு, போட்டி, மனமுறிவுகள், அன்பு, பாசம் என்பன எல்லாம் பிள்ளையின் சிறு பருவத்தில் இருந்தே ஆரம்பிக்கின்றன. உங்கள் பிள்ளையின் மனப் போராட்டங்களின்போது உங்கள் ஆதரவைப் பிள்ளைக்கு கொடுக்கலாமேழிய அப் பிள்ளையின் வாழ்க்கையில் நடைபெறும் விடயங்கள் சில சமயம் உங்கள் கட்டுப் பாட்டிற்கு அப்பாற்பட்டதாக அமைந்து விடுகின்றது.

வீட்டிற்கு வெளியே பிள்ளைக்கு என்ன நடக்கின்றது என்பதைப் பற்றி உங்கள் பிள்ளையிடமிருந்தே ஓரளவு நீங்கள் அறிய முடியும். நீங்கள் பிள்ளையுடன் எவ்வாறு தொடர்பாடுகிறீர்கள், பிள்ளையின் வயது, பிள்ளையின் மனநிலை, உங்கள் மனநிலை என்பவற்றில் இது தங்கியுள்ளது. பிள்ளையின் நண்பர்கள், பிள்ளையின் வயதை ஒத்த வயதுடையவர்கள் ஆகியோரை அவதானிப்பதில் இருந்து வெளியில் என்ன நடைபெறுகின்றது என்ற ஓர் உணர்வை நீங்கள் பெறலாம். இன்னோர் பெற்றோரிட மிருந்து உங்கள் பிள்ளை பற்றி அறிந்து கொள்ளலாம். ஆனால் அவர்கள் உங்கள் பிள்ளையைப் பற்றி எப்போதும் நல்லதையே கூறுவார்கள் என எதிர்பார்க்க முடியாது. சில சந்தர்ப்பங்களில் உங்கள் பிள்ளைகள் குறித்த குறைகளை நீங்கள் கேட்க நேரிடும்.

உங்கள் பிள்ளையின் நண்பர்களின் பெற்றோர்கள், ஆசிரியர்கள் அல்லது வெளியார் உங்கள் பிள்ளை குழப்படியாக இருந்தது என்று கூறும்போது, என்ன நடந்தது என்பதை இரண்டு பக்கமும் கேட்டு அறிய வேண்டும். உங்கள் பிள்ளையிடமும் கேட்க வேண்டும். உங்கள் பிள்ளையின் நடத்தை பற்றி உங்களுக்கு தெரிந்திருந்தால் பிள்ளைக்கு சார்பாக பேசாதீர்கள். அதே சமயம் பிள்ளையை மற்றவர்கள் எதிரே அவமானப்படுத்தாதீர்கள். அவசரப்பட்டு உங்கள் பிள்ளை செய்தது தான் சரி என்றோ அல்லது மற்றைய பெற்றார் கூறுவது பிழை என்றோ அல்லது சரி என்றோ கூறவேண்டாம். வீட்டிற்கு சென்று விசாரிப்பதாக கூறுங்கள். வீட்டில் அமைதியாக விசாரியுங்கள்.

சிறிய சிறிய விடயங்களுக்குக் கூட சிறு பிள்ளைகள் சச்சரவுக்குட்படுவதுண்டு. உதாரணமாக ஓர் பொம்மைக்காக நண்பனுடன் சண்டையிடும்போது, நண்பனின் பெற்றோர் அப்பொம்மையை பிள்ளையிடமிருந்து அகற்றுவதுடன், அப்பெற்றோர் அவனை கண்டிக்கலாம். வேறொரு வீட்டிற்குச் செல்லும்போது பொறுப்பற்ற தனமாக அவ்வீட்டுப் பொருட்களை உடைத்தல், வீட்டினை அழுக்காக்குதல் போன்ற விடயங்களையும் சில பிள்ளைகள் செய்வதுண்டு. பிள்ளைகள் விளையாடும்போது வீட்டினை அழுக்காக்கினால் வீட்டைத் துப்பரவு செய்யும்படி கூறலாம். இந்த விடயத்தில் பொறுப்பாக இருக்கும் பெற்றோரே இந்தப் பிரச்சனைகளைக் கையாள வேண்டும். மற்ற பெற்றோரிடம் உங்கள் பிள்ளையை ஒப்படைக்கும் போது அப் பெற்றோரே பிரச்சனைகளைக் கையாள்வதற்கு உரிமையுடையவராவார்.

எனினும் இது மோசமான பிரச்சனையாக இருந்தால், மற்றைய பெற்றார் இப் பிரச்சனையைத் தனியாகக் கையாளாமல் உங்களைத் தொடர்பு கொள்ள வேண்டும். உதாரணமாக வேறு வீடுகளில் பொருட்களை உங்கள் பிள்ளை உடைக்கும் போது நீங்களே அதற்கு பொறுப்பேற்க வேண்டும். எவராயினும் உங்கள் பிள்ளையை அடிக்கவோ, வாய்ச்சொற்களால் துன்புறுத்தவோ அல்லது கடுமையாகத் தண்டிக்கவோ அனுமதிக்க வேண்டாம். ஓர் நண்பரின் வீட்டில் உங்கள் பிள்ளை பிரச்சனைக்குட்பட்டிருந்தால், நீங்கள் அப் பிள்ளையுடன் அதனைப் பற்றி கதைக்க வேண்டும். அத்துடன், வீட்டிற்கு வந்த பின்பு அதன் தொடர்ச்சியாக நீங்கள் பிள்ளையுடன் கதைக்கலாம். ஆனால் பிரச்சனைக்குட்பட்டதற்காக வீட்டில் வந்து தண்டனை கொடுக்காதீர்கள்.

பிள்ளை தன்னம்பிக்கையுடனும் பயம் எதுவும் அற்றும் வளரவேண்டுமென்று விரும்பினால், வீட்டிலேயே அதனை உருவாக்குங்கள். பயிற்சி மூலமே பழக்க வழக்கங்கள் உருவாகின்றது. பிள்ளை வீட்டில் நற்பழக்கங்களைப் பழகாவிடில், வெளியிடங்களுக்குப் போகும்போது, பிள்ளை சீரான முறையில் நடந்து கொள்ளும் என எதிர்பார்க்க முடியாது. வீட்டில் நல்ல பழக்க வழக்கங்களுடன் வளரும் பிள்ளை, வெளியிடங்களில் நல்ல முறையிலேயே நடந்து கொள்ளும்.

சில பெற்றோர் தமது பிள்ளைகளை கலை நிகழ்ச்சிகள், வர்த்தக கண்காட்சிகள் அல்லது விருந்துபசாரங்கட்கு கூட்டிச் செல்வதில் எந்த வித பிரச்சனையையும் எதிர்நோக்குவதில்லை. இளமையிலேயே பிள்ளைக்கு நற்பழக்க வழக்கங்களை கற்பித்தல், குடும்பத்திலுள்ள சட்டதிட்டங்கள் பிள்ளைக்கு தெளிவாக்கப்பட்டிருத்தல், பொது இடங்களுக்குச் செல்லும்போது அமைதியாக இருக்க வேண்டுமென பிள்ளைக்கு கற்பிக்கப்பட்டிருந்தால், பிள்ளைகளுடன் பொது இடங்களுக்குச் செல்வது உங்களுக்கு பிரச்சனைகளைக் கொடுக்காது.

## பொது இடங்களுக்கு பிள்ளைகளை அழைத்துச் செல்லும் போது

உங்கள் எதிர்பார்ப்புக்களை பிள்ளைக்கு தெளிவாகக் கூறுங்கள். உங்கள் பிள்ளை மற்றவர்களை தொந்தரவு செய்தால் அவரை வெளியில் உடனடியாக கூட்டிச் செல்லுங்கள்


நீங்கள் எவ்வாறு நடந்து கொள்கிறீர்களோ, அதனையே பிள்ளையும் பின்பற்றும். எனவே பிள்ளைக்கு முன்னுதாரணமாக நடந்து கொள்ளுங்கள்.

ஏனைய வளர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று எண்ணி பொறுப்புக்களை மற்றவர்கள் மேல் சுமத்தாமல் உங்கள் பிள்ளையை நீங்களே கண்காணித்துக் கொள்ளுங்கள்.

## உணவு விடுதிகளில் நடந்து கொள்ளும் விதம்

பசியுடன் இருக்கும் பிள்ளையை ஓர் உணவு விடுதியில் காத்திருக்க வைக்கும் அதே நேரம் அமைதியாகவும் இருக்கச் செய்வதென்றால் அது முடியாத காரியமாகும். சில பிள்ளைகள் உணவு விடுதியில் அமைதியாக இருப்பர். ஏனைய பிள்ளைகள் அமைதியற்று ரகளை செய்த வண்ணமே இருப்பர்.

உணவு விடுதிக்கு நீங்கள் அமைதியாக இருந்து சாப்பிட விரும்பிச் செல்லும் நேரம் பிள்ளையின் நடத்தை எதிர்மாறானதாக இருக்கும். இதன் மூலம் நீங்கள் அவமானப்படும் அளவுக்கு ஓர் எல்லை இல்லாது இருக்கலாம். பிள்ளைகளின் குழப்படிகளையும் உங்கள் சந்தோஷமற்ற நிலைமையையும் தவிர்ப்பதற்கு அநேக வழிகள் உள்ளன.



## உணவு விடுதிகளில் பிரச்சினை நடப்பதைத் தவிர்த்துக் கொள்வதற்கான வழிமுறைகள்.

எந்த ஒரு உணவு விடுதிக்கும் நீங்கள் பிள்ளையை அழைத்துச் செல்லலாம். திடீர் உணவு விற்பனையாகும் இடங்கள் (Fast food), கோப்பிக் கடைகள் அல்லது பிற்சா உணவகங்களுக்கு மட்டுமே உங்கள் பிள்ளையைக் கூட்டிச் செல்லலாம் என எண்ணாதிருங்கள். உங்கள் பிள்ளை உணவக அனுபவத்தைப் பெற்றிராவிடில், மெழுகுவர்த்தி ஒளியுடன் அலங்காரமாக இயங்கும் உணவு விடுதிகட்கு பிள்ளைகளை அழைத்துச் செல்லாதிருங்கள்.

பிள்ளை பசியாயிருக்கும்போது உணவு விடுதிக்கு அழைத்துச் செல்ல வேண்டாம். அதிக பசியோடிருக்கும் பிள்ளை உணவு விடுதியில் ஒழுங்காக நடந்து கொள்ளாது. எனவே உணவு விடுதிக்கு செல்லும்போதே வாகனத்தில் வைத்து சிற்றுண்டிகளைக் கொடுங்கள்.

உணவு விடுதியில் உணவு தயாராகும் வரை பிள்ளை விளையாடுவதற்கு விளையாட்டுப் பொருட்கள், புத்தகங்கள், வர்ணம் தீட்டும் புத்தகங்களைக் கொடுங்கள்.

உங்கள் பிள்ளை எதை விரும்புகிறதோ அதனை உண்ணுவதற்கு அனுமதியுங்கள்

பிள்ளையின் வயிற்றில் குழப்பங்களை ஏற்படுத்தாத உணவு வகைகளாக தெரிவு செய்யுங்கள். ஆனால் அதே சமயம் ஏதாவது ஒரு புது உணவை ருசிக்கும்படி ஊக்குவியுங்கள். பிள்ளையை உணவு உண்பதற்கு தூண்டுங்கள்.

இன்னும் பிரச்சனையைக் குறைக்க வேண்டுமெனில் உணவு ஆயத்தமாகும் வரை விடுதியினுள் காத்திராது வெளியில் ஓர் நடை சென்று வாருங்கள்.

வீட்டிற்கு வெளியே பிள்ளையின் நடத்தையை ஓர் கட்டுப்பாட்டிற்குள் வைக்க வேண்டுமாயின் அது பெற்றோரின் கையிலேயே தங்கியுள்ளது.

## தமது பிள்ளைகளின் நடத்தையை மாற்றுவதற்கு பெற்றோர் என்ன செய்யலாம்?

### ஓர் பிள்ளையைப் பொறுத்தவரை சாதாரண நடத்தை என்றால் என்ன?

பிள்ளையின் சாதாரண நடத்தை (Normal behaviour) என்பது பிள்ளையின் வயது, ஆளுமை (Personality), உடலியல் மற்றும் உணர்வுபூர்வ விருத்தியில் தங்கியுள்ளது. குடும்பத்தின் எதிர்பார்ப்புகளுடன் பொருந்தாவிடில், அல்லது அழிவை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தால் பிள்ளையின் நடத்தை ஓர் பிரச்சனையாகலாம். சாதாரண அல்லது "சிறந்த" நடத்தையானது சமூக, கலாச்சார அபிவிருத்தி ரீதியில் பொருத்தமானதா என்பதன் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது. பிள்ளையின் ஒவ்வொரு வயதிலும் நீங்கள் பிள்ளையிடமிருந்து எதை எதிர்பார்க்கலாம் என்பதை அறிந்து கொள்வதன் மூலம் பிள்ளையின் நடத்தை சாதாரணமானதா அல்லவா என்பதைத் தீர்மானித்துக் கொள்ளலாம்.

## எனது பிள்ளையின் நடத்தையை மாற்றுவதற்கு நான்

67ம் பக்கம் பார்க்க...

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.

விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

# A1 TOP QUALITY FLORIST





உங்களின் மங்களகரமான வைபவங்களுக்கு
தேவையான பொருட்களுக்கும் நாடுங்கள்

**பிள்ளை 416-269-5522**

2871 Lawrence Ave. East, Scarborough. Ontario M1P 2S8

# A1 TOP QUALITY FLORIST

## Funeral Services




Floral Arrangement for Funeral Needs

**பிள்ளை 416-269-5522**

2871 Lawrence Ave. East, Scarborough. Ontario M1P 2S8

# சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு...

65ம் பக்கத் தொடர்ச்சி...

## என்ன செய்யலாம்?

பொதுவாக பிள்ளையின் குறிப்பிட்ட ஒரு நடத்தையை ஊக்குவித்து பாராட்டும்போதோ பரிசளிக்கும்போதோ பிள்ளை அக் குறிப்பிட்ட நடத்தையைத் தொடர விரும்பும். அதே நேரம் பிள்ளையின் ஓர் குறிப்பிட்ட நடத்தை உங்களுக்கு விருப்பமற்றிருந்தால் அதனை அலட்சியப்படுத்துவதன் மூலம், அந்த நடத்தையை நிறுத்தலாம். ஒரே நடத்தைக்கு ஒரு சந்தர்ப்பத்தில் பாராட்டுவதும் இன்னொரு சந்தர்ப்பத்தில் தண்டனை அளிப்பதும், உங்கள் பிள்ளையை குழப்பத்தில் ஆழ்த்தலாம். எனவே உங்கள் செயல்களும் எப்போதும் ஒரே மாதிரியாக இருப்பது அவசியம். உங்கள் பிள்ளையின் நடத்தை ஓர் பிரச்சனையாக இருக்கும்போது உங்களுக்கு மூன்று தெரிவுகள் உள்ளன.

- பிள்ளையின் வயது, மற்றும் அபிவிருத்திக் கட்டத்திற்கு பொருத்தமாயிருந்தால், இந்த நடத்தை ஓர் பிரச்சனையல்ல என்பதைத் தீர்மானித்தல்
- அலட்சியப்படுத்துவதன் மூலம் அல்லது தண்டனையளிப்பதன் மூலம் ஓர் நடத்தையை நிறுத்த முயற்சித்தல்
- நீங்கள் விரும்பும் ஓர் புதிய நடத்தையை அறிமுகப்படுத்துவதுடன், உங்கள் பிள்ளையைப் பாராட்டி பரிசளிப்பதன் மூலம் அந் நடத்தையை மேலும் ஊக்குவியுங்கள்.

## தவறான நடத்தையை நான் எவ்வாறு நிறுத்தலாம்?

வேண்டாத நடத்தையை நிறுத்துவதற்கு நீங்கள் செய்யக் கூடிய மிகச் சிறந்த வழி அதனை அலட்சியப்படுத்தலேயாகும். இதனை குறிப்பிட்ட காலம் வரை தொடர்ந்து மேற்கொள்வது சிறந்த பலனை அளிக்கும். உடனடியாக இந்த நடத்தையை நிறுத்த வேண்டுமெனில் ஒரு சிறிது நேரத்திற்கு ஓர் இடத்தில் பிள்ளையை இருக்க வைக்கும் முறை (Time-out method) சிறந்த பலனை அளிக்கும்.

## Time – Out முறையை நான் எவ்வாறு பயன்படுத்தலாம்?

ஓர் Time-Out முறையில் எவ்வாறு பிள்ளை நடந்து கொள்ளும் என்பதை முன்பே தீர்மானித்துக் கொள்ளுங்கள். பிள்ளைக்கு அழுகை தீவிரமடையலாம், மிக ஆத்திரத்துடன் வன்முறை அல்லது ஆபத்தான நடத்தையும் ஏற்படலாம். எனவே பிள்ளைக்கு ஆர்வமூட்டாத அதே சமயம் பயத்தை ஏற்படுத்தாத ஓர் இடத்தை பிள்ளையை விடுவதற்கு உரிய இடமாகத் தெரிவு செய்யுங்கள். அதே நேரம் உங்கள் கண்காணிப்பு இருக்க வேண்டும். உதாரணமாக, ஓர் கதிரை, வீட்டில் ஓர் மூலை அல்லது ஒதுக்கான ஓர் இடத்தை தெரிந்தெடுங்கள். நீங்கள் வீட்டிற்கு வெளியே சென்றிருந்தால் உங்கள் வாகனம் அல்லது வேறு ஏதாவது ஓர் அமரக்கூடிய இடத்தைத் தெரிந்தெடுங்கள்.

ஏற்றுக் கொள்ள முடியாத நடத்தையை (Unacceptable behaviour) பிள்ளை வெளிக்காட்டினால், அந் நடத்தை ஏற்றுக் கொள்ள முடியாதது எனப் பிள்ளைக்கு கூறுங்கள். அதே சமயம், அந்த நடத்தையை நிறுத்தாவிடில், பிள்ளையை ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு ஓர் இடத்தில் இருக்க வைக்கப் போவதாக (Time- Out) எச்சரிக்கை செய்யுங்கள். அதே நேரம் நீங்கள் அமைதியாக இருப்பதுடன், கோபமாக இருப்பதாக காட்டிக் கொள்ளாதிருங்கள். உங்கள் பிள்ளை தொடர்ந்து தவறான நடத்தையில் ஈடுபட்டால் அமைதியாக உங்கள் பிள்ளையை Time-Out இடத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்.

பிள்ளை எவ்வளவு நேரம் அக் குறிப்பிட்ட இடத்தில் இருக்கிறது என நேரத்தை சரி பார்த்துக் கொள்ளுங்கள். Timer போன்று நேர அளவைக் காட்டும் கருவியை பிள்ளை காத்திருக்கும் நேரத்தில் வையுங்கள். இவ்வாறு இக் கருவியை வைத்தல் காத்திருக்கும் நேரம் எப்போது முடியும் என்பதைப் பிள்ளை அறியச் செய்யும். இந்த Time-Out கால அளவு ஒவ்வொரு வயதுக்கும் ஒரு நிமிட அளவால் கூடிச் செல்லலாம். நீங்கள் பிள்ளையைப் பார்க்கக் கூடிய அல்லது கேட்கக் கூடிய தூரத்தில் இருக்க வேண்டும். ஆனால் பிள்ளையுடன் எதையும் பேச வேண்டாம். Time-Out முடிந்ததும் பிள்ளை அந்த இடத்தை விட்டு அகன்று செல்ல அனுமதியுங்கள். கூடாத நடத்தையைப் பற்றி அதற்கு மேல் எதுவும் கதைக்க வேண்டாம். ஆனால் அதன் பின் நல்ல நடத்தையை ஊக்குவிப்பதற்குரிய பாராட்டுக்களை அல்லது பரிசளிப்புக்களை செய்யுங்கள்.

## புதிய வரவேற்கத்தக்க நடத்தையை நான் எவ்வாறு ஊக்குவிக்கலாம்?

நல்ல நடத்தையை ஊக்குவிப்பதற்குரிய இன்னோர் வழி பாராட்டும் அல்லது பரிசளிக்கும் முறையாகும் (Rewarding method). இது இரண்டு வயதிற்கு மேற்பட்ட சிறுவர்களில் நல்ல பயனளிக்கும் முறையாகும். இம்முறையை நீங்கள் தொடர்ந்து 2 மாதங்கள் வரை பின்பற்ற வேண்டும். பெற்றோர் பொறுமையாக இருப்பதுடன், ஓர் நாட்குறிப்பில் உங்கள் பிள்ளையின் நடத்தையையும் அது எவ்வாறு மாறிவருகின்றது என்பதையும் குறித்து வாருங்கள். இது உங்களுக்கு உதவியாக அமையும். இங்கு நீங்கள் மாற்ற விரும்பும் நடத்தைகளில் ஒன்று அல்லது இரண்டைத் தெரிவு செய்யுங்கள். (உதாரணமாக, படுக்கை நேர பழக்கங்கள், பற்களைச் சுத்தம் செய்தல் அல்லது விளையாட்டுப் பொருட்களைக் கையாளுதல்).

உங்கள் பிள்ளை விரும்பக் கூடிய வகையில் ஊக்குவிப்பை பிள்ளைக்கு வழங்குங்கள். நல்ல ஊக்குவிப்புகட்கு உதாரணங்களாக, படுக்கைக்குச் செல்லும் நேரத்தில் மேலதிகமாக ஒரு கதையைச் சொல்லுதல், நித்திரைக்குச் செல்லும் நேரத்தை அரை மணித்தியாலத்தால் பின்தள்ளுதல், விருப்பமான சிற்றுண்டியைக் கொடுத்தல், வளர்ந்த பிள்ளைகட்கு ஓர் விருப்பமான விளையாட்டுப் பொருளைக் கொடுத்தல், அல்லது சிறிய தொகை பணத்தைக் கொடுத்தல் என்பன ஊக்குவிப்பாக அமையும்.

பிள்ளையில் நீங்கள் விரும்பக் கூடிய நல்ல நடத்தை-மாற்றம் அல்லது அவ்வாறு நடந்து கொள்வதால் கிடைக்கப் போகும் ஊக்குவிப்பைப் பற்றியும் பிள்ளைக்கு விளக்குங்கள். உதாரணமாக, "இந்த தொலைக்காட்சித் தொடர் முடிவதற்குள் இரவு உடையணிந்து பற்களை சுத்தம் செய்தால் இன்னும் அரை மணி நேரம் தாமதித்து படுக்கைக்குச் செல்லலாம்" எனக் கூறுங்கள். இக் கோரிக்கையை ஒரு தரம் மட்டுமே கூறுங்கள். பிள்ளை நீங்கள் சொல்வதைச் செய்தால் ஊக்குவிப்பை வழங்குங்கள். தேவையெனில் பிள்ளைக்கு உதவுங்கள். ஆனால் அளவுக்கு அதிகமாக பிள்ளையில் கவனம் செலுத்துவதாக காட்டாதிருங்கள். இது கண்டிப்பான கவனிப்பாக இருந்தும் கூட ஊக்குவிப்பை விட பெற்றோரின் கவனிப்பையே (Attention) பிள்ளைகள் அதிகம் விரும்புவார்கள். பிள்ளையுடன் அதிக நெருக்கமாக இருப்பதாக காட்டிக் கொள்ளாமல் உத்தரவிடுங்கள். உதாரணமாக "இன்னும் 5நிமிட நேரத்தில் விளையாட்டு நேரம் முடிய வேண்டும்" போன்ற உத்தரவுகள் உங்கள் பிள்ளைக்கு புதிய நடத்தைகளைக் கற்பிக்க உதவியாக அமையும்.

இந்த முறையானது உங்களுடைய பிள்ளையோடு நீங்கள் மல்லுக் கட்டுவதைத் தவிர்க்க உதவும். எனினும் இங்கு நீங்கள் கூறுவதற்கேற்ப பிள்ளை நடக்காவிடில் தண்டனை (Punishment) கொடுக்கக்கூடாது, அதேநேரம் பிள்ளைக்கு ஊக்குவிப்பும் (Reward) கிடைக்காது.

தொடரும்...

■ ■ ■

# துயர் பகிர்வோம்



## குட்டிப்பிள்ளை இராமநாதன்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் வன்னேரிக்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட குட்டிப்பிள்ளை இராமநாதன் 27.10.2008 அன்று விஸ்வமடுவில் இறையடி இணைந்தார். அன்னார் காலம் சென்ற குட்டிப்பிள்ளை சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகனும் தெய்வானைப் பிள்ளையின் ஆருயிர் கணவரும், காலம் சென்ற திரு.திருமதி கணபதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் நாகம்மா, கந்தையா, நாகலிங்கம், பொன்னம்மா, தர்மலிங்கம்(பிரான்ஸ்), காலம் சென்ற மயில்வாகனம், பரமலிங்கம், பராசத்தி, இராசமணி, ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலம் சென்ற கயிலாயபிள்ளை, பொன்னம்மா, பரமபூபதி, காலம்சென்ற நாகரத்தினம், அந்தோனிப்பிள்ளை(பிரான்ஸ்), கண்மணி(கனடா), பரமேஸ்வரி காலம்சென்ற சுப்பிரமணியம், காலம்சென்ற இரகுநாதன், ஆகியோரின் அன்பு மைத்துனரும், நடராசா, நாகரத்தினம், கமலாம்பிகை, நித்தியானந்தராஜா, காலம்சென்ற மகேந்திரராஜா, கனகராஜா(கனடா), வன்னியசிங்கம், பாலசந்திரன், இந்திராதேவி, புவனேஸ்வரி, கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பார்வதிப்பிள்ளை, தர்மலிங்கம் தனிநாயகம், இராயேஸ்வரி (இந்தியா) இராஜேஸ்வரி (கனடா), கோகுலாதேவி, லோகராணி, யோகேஸ்வரன், கணேசலிங்கம், சுகந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

| | | |
|---|---|---|
| கனகராஜா – கிளி | கனடா | 011-705-792-9294 |
| தர்மலிங்கம் - தருமு | பிரான்ஸ் | 011-331-430-86541 |
| கந்தையா | இலங்கை | 011-94-602-085016 |
| | | 011-94-776-054031 |



## சாகித்தியன் இராசையா

ஜனனம் - 01-30-1976 வீரமரணம் - 03-11-2008

திருவையாறு கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைந்து செயற்பட்டவருமாகிய சாகித்தியன் (ஜெயந்திரன்- கண்ணன்) இராசையா 03.11.2008 அன்று இலங்கை இராணுவத்துடனான மோதலில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார். அன்னார் இராசையா பரம்சோதி ஆகியோரின் அருமைப் புதல்வனும் அருந்தவராசா (அகிலன் கனடா) காலம் சென்ற கிருபாகரன், யசோதா (தங்கா) மேகலா (மேகா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். இவர் சுதாசினி, கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கஜானனின் அன்புச் சித்தப்பாவும், சச்சிந்தனின் அருமை மாமனாரும் ஆவார். இவ் வீரமரண அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றனர்.

| | | |
|---|---|---|
| அகிலன் | கனடா | 416-857-4785 |
| மகேஷ் | கனடா | 416-723-5097 |
| சுரேஸ் | கனடா | 416-877-8826 |

# இராகம் தானம் பல்லவி: ஒரு அசாத்திய நடனம்

ஸ்ரீரஞ்சனி அருள்லிங்கம்

நாட்டிய கலாலயத்தின் 40வது ஆண்டு பூர்த்தி விழா

பலா இலை பழுத்து முன்றலில் கொட்டிக் கிடக்கிறது... கிணற்றுக் கட்டில் இருந்தபடி கண்வெட்டாது அந்த இலைகளை பார்த்திருந்த நினைவு வந்து கலைகிறது. இலையுதிர்கால வண்ணத்துள் மரங்கள் நிறைந்து அழகு தருகின்றன. அந்த மரங்களுக்குள் முடிமேபிள் (Crown Maple) மட்டும் வித்தியாசமாய் இருக்கிறது. முடி மட்டுமே பழுத்து மிகுதி இன்னமும் பச்சையாகவே இருக்கிறது. ம்... முடிக்குரிய மரமாய் அது காட்சி அளிக்கிறது. இலையுதிர் வண்ணத்தில் திழைத்து மண்டபத்துள் நுழைகிறது மனம்.



இராகம் தானம் பல்லவி எனும் தலைப்பை பார்த்தவுடன் வாய்ப்பாட்டுக் கச்சேரி குறித்த குறிப்பேதும் எழுதப் போவதாக எண்ணவது தான் சரி. பலரைப்போல் அவர்களது நிகழ்ச்சிக்குறிப்பைப் பார்த்துவிட்டு வாய்ப்பாட்டும் இருக்குதாக்கும் என்றிருந்த எனக்கு முற்றிலும் மாறுபட்ட நிகழ்வை தரிசித்த சந்தோசம். நாட்டிய கலாமணி திருமதி வசந்தா டானியல் அவர்களது ஆளுமையும், பரதத்தில் அவருக்குள்ள ஆளமான அறிவும், கற்பனையும், தேடலும் புதியன பிறப்பதற்கு ஏதுவாகவிருக்கிறது. அதன் தொடர்ச்சியின் ஒரு பிறப்புத்தான் இராகம் தானம் பல்லவி என்ற நடன நிகழ்வு.

கர்நாடக கச்சேரியில் பிரதானமாகக் கருதப் படுவதும், பாடகரின் கற்பனையையும், ஞானத்தையும் பிரதிபலிப்பதாக இருப்பதே இராகம் தானம் பல்லவி. இராக ஆலாபனையின்போதும் தானத்தின் போதும் பொதுவாக வயலின் இணைந்து கொள்ளும். பல்லவியில் ஏனைய பக்கவாத்தியங்கள் இணைந்து கொள்வது வழக்கம். பின்பு தனியாவர்த்தனம் வாசிக்கப்படும். அதன் பிற்பாடு சுரம். மீண்டும் பல்லவி. கர்நாடக சங்கீதத்தின் பல நுண்ணிய விடயங்களை எடுத்தாள்வதாக இந்த இராகம் தானம் பல்லவி அமையும்.

உன்னி கிருஸ்ணன் அவர்கள் கீரவாணி இராகத்தில் கண்ட நடையில் பாடிய இராகம் தானம் பல்லவியே நடனத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. பரதநாட்டிய ஆசிரியர்களும், சங்கீத ஆசிரியர்களும் இதை நடனமாக்குவதில் உள்ள சிக்கல்களை நன்கறிவர். அதனால்தான் இவ்வகையான முயற்சிகளை ஒருவரும் செய்யத் துணிவதில்லை. நிகழ்வில் உரையாற்றிய சங்கீத ஆசிரியர் அமல்ராஜ் அவர்கள், அசாத்திய துணிச்சல் உள்ளவர்கள் மட்டுமே இதை சவாலாக எடுத்துச் செய்ய முடியும். அதையும் மிகவும் நேர்த்தியாக செய்து முடித்த கலாமணி வசந்தா டானியல் பராட்டத்தக்கவர் எனக் கூறினார்.

இராக ஆலாபனையின்போது ஆலாபனைக்கு ஏற்ப பரத உடல் அசைவுகள். சதங்கையின் ஒலி ஏழாத அளவுக்கு அவர்களின் உடல் அசைவுகள் இருந்தன. அதன் பிற்பாடு தானத்தில் தான ஏற்ற இறக்கத்திற்கு ஏற்றவாறு பரத அடவுகள் மிக நேர்த்தியாக ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது. பல்லவியில் ஒரு நந்தவனம் உருவாக்கப்பட்டது. அழகிய சோலை... மரம், செடி, கொடி, பூ, சிற்றாறு, மான், மயில், அன்னம். இவை அனைத்துமே நடன மாந்தர்களால் சஞ்சாரி பாவத்தில் உருவகிக்கப்பட்டன. எம் மனக்கண் முன்னே அழகிய நந்தவனம் மேடையில் நிறைந்திருந்தது. பல சந்தர்ப்பங்களில் பார்வையாளர்கள் கைதட்டி தமது பராட்டைத் தெரிவித்தனர். பின்பு அந்த நந்தவனத்துக்கு வரும் கன்னியர்கள். அவர்களோடு கண்ணன் செய்யும் லீலைகள். குளிக்கும்போது ஆடைகள் திருடுவது, நீர்ப்பானையை உடைப்பது, கன்னியர்களை மாற்றிக்கொள்வது, பறித்த பழத்தைப் கடித்துக் கொடுப்பது எனத் தொடர்ந்து... பின்னர் அவர்கள் கண்ணனை தண்டித்து... பின்பு அவனைச் சேர்த்து... அவனோட அன்புகொண்டு அவனோடு சேர்ந்து நடனமாட விளைகிறார்கள். இந்தக் கணத்துள் மிருதங்க தனியாவர்த்தனம் நுழைகிறது. கண்ணனோடு ஆடுகிறார்கள். நாட்டார் கும்மியும், கதக்கும் மிக நேர்த்தியாக இணைக்கப்பட்டன. நடன மாந்தர்களிடையேயிருந்த இணைவு மிகவும் அற்புதம். காலம், தாளம் என்பவும் மிகவும் நேர்த்தியாக இருந்தது. இது எம்மவர் மத்தியில் ஒரு புது முயற்சி. கலை நிகழ்வை நேரடியாகப் பார்த்து கிட்டும் அனுபவம் விமர்சனத்தை வாசிப்பதற்கூடாக கிட்டாது. எனவே இவ் நிகழ்வு மீண்டும் மீண்டும் அரங்கேற வேண்டும். அதைப் பலரும் பார்த்து நடன அனுபவத்தை பெறவேண்டுமென்பது எனது அவா.

இந்த நடனத்தில் பங்கேற்ற நிசா சிவகுருநாதன், சுஜீவா ராஜசிங்கம், குமுதா கஜன், தான்யா சிவகுமார் அலோசியஸ், எழில் நிலா மனோகரன், மயூரி கணேசமூர்த்தி, ஜகருண்யா மங்களமூர்த்தி, திவ்யா செல்வநாதன், சிந்தியா செல்வநாதன், காயத்திரி செல்வநாதன் ஆகியோரை வெவ்வேறு நடன நிகழ்வுகளுக்கூடாக பார்த்து வந்திருக்கிறேன். அவர்கள் அனைவருமே நம்பிக்கைமிகு நடனமாந்தர்களாக பரிணமித்துள்ளார்கள் என்பதே என் கருத்து. அதனை அங்கு நடனத்தை பார்த்த அனைவரும் ஏற்றுக்கொள்வர் என்றே கருதுகிறேன்.

40வது ஆண்டு பூர்த்தி விழா நிகழ்வு இரண்டு அங்கமாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. முதல் அங்கத்தின் ஆறு நடன நிழ்வுகளும் கலாமணி வசந்தா டானியலின் மாணவிகளான நிசா சிவகுருநாதன், சுஜீவா ராஜசிங்கம் ஆகிய இருவரின் நடன அமைப்பு, நட்டுவாங்கம், வாய்ப்பாட்டோடு இளநிலை மாணக்கர்கள் நிகழ்த்தினர். பக்கவாத்தியம் என்பனவும் அவரது மாணவர்களாலேயே நிகழ்த்தப்பட்டன. மிருதங்கம் மட்டும் சுரேந்தர் வாசித்திருந்தார். நாட்டிய கலாலயத்தின் அடுத்த நிலைக்கான தொடக்கமாக இதை எடுத்துக்கொள்ள முடியும். இரண்டாவது அங்கத்தில் இடம்பெற்ற இராகம் தானம் பல்லவி உள்ளீடான ஐந்து நடனங்களும் திருமதி வசந்தா டானியல் அவர்களின் நடன அமைப்பில் இடம்பெற்றிருந்தன.

பனைமரத்தின் நிழலில் வேர் விட்டு இன்று மேபிள் மரத்தின் நிழலில் கிளை பரப்பிக் கிடக்கும் நாட்டிய கலாலயம் எம்மவர் மத்தியில் மிகவும் பிரதானமான, முன்னணி நிறுவனமாகும். அது 40 ஆண்டுகளை கடந்துள்ளது. மூன்று பரம்பரை நடன மாந்தர்களை உருவாக்கியிருக்கிறது. பனை நிழலிலிருந்து அகன்று மேபிள் நிழலில் குடிபுக வைத்த அரசியல் இந்த நிறுவத்திற்கும் பொருந்தும். 80களின் முற்பகுதியில் தமிழீழ விடுதலைப் போராட்டம் முனைப்படைந்த காலங்களில், போராட்ட உணர்வை மக்கள் மத்தியில் கொண்டுசெல்வதற்காக எமது கலைகளை பயன்படுத்தவேண்டும் என்ற குரல் ஒலித்தபோது முன்னிற்று விடுதலைக்காய் உழைத்த நிறுவனம் நாட்டியகலாலயம் ஆகும். அவர்களது நாட்டிய நாடகங்கள் அதற்கு மிகுந்த ஒத்துழைப்பாயிருந்தன. நாட்டிய கலாலயத்தின் இயக்குனர் நாட்டிய கலாமணி வசந்தா டானியல் அவர்களது செயற்பாடு எமது வரலாற்றில் குறிப்பிடப்படவேண்டியது.

அவர் ஒரு சுயாதீனமான கலைஞராய் செயற்பட்டு வருவதால்தான் அவரிடமிருந்து பல புதுமைகள் பிறக்கின்றன. அதுமட்டுமல்லாது அடுத்த தலைமுறைக்கும் மிக நேர்த்தியாக எமது கலை கடத்திச் செல்லப் பட்டுக்கொண்டு இருக்கிறது. தமிழ் மாணக்கர்களுக்கு மட்டுமேயான நிறுவனமாகவல்லாது கனேடியர்கள் அனைவருக்குமான நிறுவனமாக நாட்டிய கலாலயம் பரிணமித்திருக்கிறது.

பலா இலை பரவிக்கிடந்த முன்றல் விட்டு அகன்று.. மேபிள் இலை விரிந்த முன்றலில் பாதம் பதிந்த போதும்.. நம்பிக்கை தளராது இலையுதிர்காலத்தின் அழகுக்கு அழகு சேர்க்கும் அந்த முடிமேபிள்போல் கனேடிய மண்ணில் எம்மவர்களை நிமிர்த்தி வைத்திருக்கும் நாட்டிய கலாலயம் மென்மேலும் வளர வாழ்த்துப் பல.

■ ■ ■

National Driving Institute

Male & Female Experience Instructors
will Teach For G1, G2 Road Test

Early Appointment For G1, G2 Road Test

Please Call:

Mrs. Saththi 416-816-1500 / 905-653-3878

# CTR தகவல் பலகை

## ROOMS / BASEMENT RENT

**McCowan & Seppard**
சந்திப்புக்கு அருகாமையில்
3 அறைகள் கொண்ட தொடர்மாடிக்
குடியிருப்பு வாடகைக்கு உண்டு
416 609 1924

**Steeles/Birchmond**
1B/R Basement
Raj: 905-944-9982
416-887-5315

**Donmills/Lawrence**
2B/R Basement
Near all Facility
Tamil Priyan: 416-438-3724

**Brimeley/ Steeles**
3B/R, 2B/R Basement finished
From Dec 1
Janash: 905-947-9413
647-885-4135

**Markham/ Ellesmer**
3B/Room
905-864-3297
647-896-4515

**Nelson/ Sheppard**
1B/R basement
Jude: 416-282-4370
416-451-2304

**Lawrence/ Offan park**
1Room for rent
Dining table/ with chair
Rasanayagam: 416-289-1951

**Jane/ Finch**
2B/R Basement
Was & dry from nov-1
Jefery: 416-666-2967

**Donmills/ Eglinton**
2B/R 1Condo for rent
Vijayan: 416-731-2829

**Bovaird/ Tobram**
1B/R Basement
Rajini: 905-458-8306

**Markham/Ell**
2B/R Basement
Suyam Soothy: 416-438-1249

**Weston/ Eglinton**
Rent/ Sale 2B/R
Suresh: 416-294-9764

**McCowan / Eglinton**
1B/R Basement
416-300-6797
416-286-8257

**Nelson/ Sheppard**
Basement – 2B/R
Car Parking free
416-282-4370
416-451-2304

**McCowan / Sheppard**
3+2 B/R Banglow House for rent
Siva: 905-640-2287
416-917-1500

**jane/ Finch**
2 B/R Basement Walk-Out
Helen: 416-745-0283

**Midland/ Eglinton**
2 B/R Basement Walk-Out
Veeva: 416-264-4520

**Warden/ Steel**
2B/R Basement
Raj- 905-944-9982
416-887-5315

**M.Side/ Old finch**
2 B/R Basement
Malar: 416-818-4453

**markham / steeles**
2 bedroom basement Walk-Out
Vimala: 905-209-1321/ 416-7160629

**law/otlan park**
1 room for rent
Rasanayagam 416 289 1951

## AUTO

**95 Honda Civic**
2nd Eng & 2Door
Ravimohan: 416-286-4780

**96 Honda Acord**
Rasan: 647-206-6842

**93 Toyota Camry**
Viji: 905-471-7373
416-402-1124

**2000 Dodge Grand**
Thusy: 647-500-8215

**99 Toyota Cam**
Mohan: 416-716-2975

CTR
கனடியத் தமிழ் வானொலி
416 264 8798

**99- Toyato Corolla**
Malar: 416-818-4453

**Leather Sofa Set**
Mathy: 647-894-2929

**42"LCD TV/ Home/ Theater**
Kumar: 416-400-2222

## Others

**Tamil/ Singaless**
மொழிபெயர்பாளர்
Victoria park/ finch, 416-497-1253

**Painting for house**
Tharan: 416-994-9612

**Jane/ Finch**
1 room for rent
Helan: 416-745-0283

**bed**
1Bunk bed, 1Single bed
Satkunam: 416-720-8709
647-341-5564


**Warden / Finch**
Room for Rent
தொடர்மாடிக் குடியிருப்பில் ஓர்
அறை வாடகைக்கு உண்டு
(முதியவர்கள், பெண்கள் விரும்பத்தக்கது)
416 498 6708




# நீர் சூடேற்றிகள் பற்றி...

- செல்வி அதினி -

வீட்டின் தண்ணீர் சூடேற்றி பழுதாகிய பின்னால் தான் அதைப் பற்றிய யோசனை தோற்றுகின்றது. எமது தண்ணீர் எவ்வாறு சூடேற்றப் படுகின்றது. எவ்வகையான சூடேற்றிகள் உள்ளன என்பது பற்றிய அறிவும் எமக்கு அதிகமாக இருப்பதில்லை. இனியும் கடைசி நிமிடம் வரையும் காத்திருக்காமல், புதியது வாங்கும் போது உங்களை நீங்கள் தயார்ப்படுத்தல் நல்லதல்லவா? அதற்காகத்தான் இந்தக் கட்டுரை வருகிறது.



Coil Water Heaters



Demand Water Heaters



Heat Pump Water Heaters



Solr Water Heaters

## நீங்கள் தீர்மானிக்கவேண்டிய

- அடிப்படையில் உங்கள் சுடுநீர் தேவையை நீங்கள் தீர்மானிக்கவேண்டும்.
- குறைந்த செலவில் நிறைந்த பயன் தரும் வழியை பின்பற்றவேண்டும்,
- சரியான வழியில் சூடேற்றி பொருத்தப்படல் வேண்டும்.

## பாவனையில் உள்ள நீர் சூடேற்றிகள்

கடந்த சில வருட காலமாக பாவனையாளருக்கு வெவ்வேறு வகை சூடேற்றிகள் அறிமுகமாகியுள்ளன. அவையாவான:

- சுடுநீர் தாங்கியுடைய மரபுமுறை சூடேற்றிகள் (Storage Water Heaters)
- தேவைக்கு ஏற்ப நீரை சூடேற்றல் (Demand Water Heaters)
- வெப்பப் பம்பு சூடேற்றிகள் (Heat Pump Water Heaters)
- தாங்கியற்ற வெப்பச்சுருள் சூடேற்றி (Tankless Coil Water Heaters)
- சூரியசக்தியை பாவித்து நீரைசூடேற்றல் (Solr Water Heaters)

## சுடுநீர் தாங்கியுடைய மரபு முறை சூடேற்றிகள் (Storage Water Heaters)

இவ் முறையில் நீரை சூடேற்றுவற்கு பல வழிமுறைகள் உள்ளன. மின்சாரம், எரிவாயு, மண் எண்ணை அல்லது எண்ணை.

பொதுவாக 75.7லீற்றர் 302.8லீற்றர் கொள்ளவு கொண்ட தாங்கிகள் விற்பனையில் உண்டு. கனடாவில் பொதுவாக பாவிக்கப்படும் சூடேற்றிகள் இவ்வகையினதே. சூடு நீர் தேவைப்படும் போது தாங்கியின் மேல் உள்ள குழாயினால் வெளியேறுகிறது. அத்துடன் தண்ணீர் தாங்கியின் கீழ் பகுதியினால் உள்ளே சென்று தாங்கியை நிறைத்து வைத்திருக்கும்.

தாங்கியில் உள்ள நீரை தொடர்ச்சியாக சூடேற்றிக்கொண்டிருக்கும். நாங்கள் பாவிக்காத பொழுதுகளிலும் நீர் சூடேற்றப்படுவதால் சக்கி வீணே விரயமாகிக் கொண்டே இருக்கும். இதை தயார்நிலை வெப்ப இழப்பு எனக் கூறுகிறோம். தற்போது விற்பனைக்கு வந்துள்ள தயாரிப்புகள் இவ் வெப்ப இழப்பை குறைப்பதற்கான தொழில் முறைகளை உள்ளடக்கியதாய் உள்ளன. பெரும்பாலும் இவற்றின் தொழில் முறை குறிப்பிலும், சக்தி சேமிப்பு குறிப்பிலும் மேலதிக விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

## தேவைக்கு ஏற்ப உடன் நீரை சூடேற்றல் (Demand Water Heaters)

தண்ணீர் இவ் சூடேற்றிக்கூடாக செல்லும் போது சூடு நீராக்கப்படுகிறது. இவ் தொழில் நுட்பத்தில் தாங்கிகள் இல்லை. எனவே சுடு நீர் தேவைப்படும் போது உடனுக்குடன் நீர் சூடேற்றி வழங்கப்படுகிறது. இதன் ஊடாக தயார்நிலை வெப்ப இழப்பு முற்றிலும் தவிர்க்கப்படுவதுடன் 20 வீதத்திலிருந்து 30 வீதம் வரையில் சக்தி சேமிக்கப்படுகிறது. சூடேற்றுவதற்கு எரிவாயு அல்லது மின்சாரம் பாவிக்கப்படுகிறது. இதனால் நீங்கள் குளிக்கும் போது சுடுநீர் இல்லாமல் போகும் நிலை வராது. ஆனாலும் நீர்ப்பாச்சல் வீதம் மட்டுப்படுத் தப்பட்டதாயே இருக்கும். பொதுவாக, இம்முறை மூலம் 7.6 லீற்றர்-15.2 லீற்றர் ஒரு நிமிடத்துக்கு என்ற பாச்சல் வீதமே இருக்கும். குறிப்பிட்ட ஒரு தேவைக்காய் மட்டும் சுடு நீரை பாவிக்கும் போது இவ் நீர்ப் பாச்சல் வீதம் போதுமானதாயே இருக்கும். ஒரே தடவையில் குளிப்பதும், சலவை இயந்திரமும் இயங்கும் சந்தர்ப்பங்களில் சுடுநீர் போது மானதாக இருக்காது. தேவைக்கு ஏற்ப சமாந்தரமாக வேறு பம்புகளை பொருத்துவதன் மூலம் தேவையை சமாளிக்க முடியும். எரிவாயுவை பாவிக்கும் போது நீர்பாச்சல் வீதத்தை அதிகரிக்க முடியும். ஆனால் மின்சாரத் திலிலும் விட அதிகளவு சக்கி எரிவாயுவினால் விரயமாகிறது. ஏனெனில் பைலட் விளக்கு தொடர்ந்தும் எரிந்து கொண்டிருப்பதால் அதற்கான வாயு விரயமாகிறது. ஆயினும் இது மிகவும் குறைந்தளவே.

## வெப்பப் பம்பு சூடேற்றிகள் (Heat Pump Water Heaters)

வெப்பப் பம்பு மின்சாரத்தினால் இயக்கப்படுகிறது. மின்சாரத்தினால் நேரடியாக வெப்பத்தை உண்டாக்காமல், வெப்பத்தை ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு கொண்டு செல்வதற்கே இங்கு மின்சாரம் பாவிக்கப்படுகிறது. இவ் வகையான சூடேற்றிகள் நீர் தாங்கிகளுடனும் வருகின்றன. அல்லது உங்களது தற்போதைய நீர் தாங்கியையும் இதனுடன் பாவிக்க முடியும். இத்தகைய பம்புகளை பொருத்துவதற்கு செலவு பெருமளவில் எதிர்பார்க்கப்படுகிறது. இவ் பம்புகள் பொருத்தும் இடம் குறிப்பாக 4.4 சென்றிகிரேட் - 32.2 சென்றிகிரேட் வெப்ப நிலையில் பேணப்படவேண்டும். அத்தோடு பம்பைச் சுற்றிய சூழல் குறைந்தது 1000 கன அடியாக இருத்தல் வேண்டும். இவ் பம்பு சிறப்பாக தொழில்படுவதற்கு எரிவாயு அறைக்குள் இவற்றை பொருத்துவதே உசிதமானது. குளிர் கூடிய இடங்களில் இவை சிறப்பாக வேலை செய்வதில்லை.

## தாங்கியற்ற வெப்பச்சுருள் சூடேற்றி (Tankless Coil Water Heaters)

சுடு நீரைப்பாவித்து உங்கள் வீட்டை சூடேற்றும் முறையை பாவிப்பவர்களுக்கு இம்முறை இலகுவாய் இருக்கும். இவற்றுக்காக கொதிகலன் பாவிக்கப்படுகிறது. இதுவொரு தாங்கியல்ல. குளிர் காலங்களில் வீட்டை சூடேற்றுவதற்காக கொதிகலன் பாவிக்கப்படுவதால், சுடு நீர் தேவைப்படும் போது தண்ணீர் வெப்ப மாற்றியூடாக சென்று சுடு நீராக எமது தேவைக்கு வருகிறது. இங்கு வெப்பமாற்றி பாவிக்கப்படுகிறது. இவ் மாற்றியே கொதிகலனை தேவை கருதி கட்டுப்படுத்தி வைக்கிறது. குளிர் காலங்களில் வீட்டைச் சூடேற்றுவதற்கும் இம்முறை பாவிக்கப்படுவதால், சுடுநீர்த் தேவையும் இலகுவாக பூரணப்படுத்தப்படுகிறது. ஆனால் கோடை காலங்களில் சுடு நீரைப் பெறுவதில் சிறு சிக்கல்கள் உண்டு.

## சூரியசக்தியை பாவித்து நீரைசூடேற்றல் (Solr Water Heaters)

சூரிய சக்தியைக் கொண்டு நீரை சூடேற்றி எமது தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும். பல்வேறு தயாரிப்புகள் வெளிவந்துள்ளன. ஆயினும் கனடா போன்ற குளிர் நாட்டில் துணைக்கு (பின்பலமாக) மற்றைய சூடேற்றிகளில் ஏதாவதொன்று இருப்பது நன்றே.

■ ■ ■

**ROOM FOR RENT**

**WARDEN & FINCH**

சந்திப்புக்கு அருகாமையில்
தொடர்மாடிக் குடியிருப்பில் ஓர் அறை வாடகைக்கு உண்டு
(முதியவர்கள், பெண்கள் விரும்பத்தக்கது)

416 498 6708



# Divine Home

*Ancient Indians designated an important part of the home as a sacred section where they retreat before each dawn to commune with the Supreme Being, the centre of the Spiritual Force is called Devatarchanam.*

*Love, Joy and prosperity come to a Hindu Family who worships in their homes through Poojas where the divine energies are invoked. The home shrine is also the focus point for private and group prayers.*

*The place should be meticulously kept like a temple through which whole household will be charged with Spiritual Vibration.*


OUR CRAFTSMEN CAN CUSTOM DESIGN AN ALTAR FOR YOUR POOJA ROOM AS REQUIRED

**NO PLYWOOD AND NO VARNISH**
**HEAT, OIL AND WATER RESISTANT**
**SPRAYED WITH HIGH QUALITY A.C. LAQUER**
**MORE THAN 100 MODELS ON DISPLAY**

THE PERFECT POOJA MANDIR FOR YOUR HOME




A HOME IS NOT COMPLETE WITHOUT A "DIVINE HOME"





Jaipur Gore Plaza
Units 9 & 10
8917 The Gore Road
Brampton, ON
Tel: 647 887 3997

747 Flea Market
Booths, 326,327,328
Tel: 416 999 3997
www.divinehome.org

1845 Lawrence Ave East
Scarbourough, ON. M1R 2Y3
Tel: 647 435 0105
divinehome@rogers.com

## List with Pakeer & Save Money



Century 21 Affiliate Realty Inc. Brokerage 416-290-1200

**Pakeer Sahadevan**
Sales Representative

**416-908-6003**

Customized Commission Plan for your Listings. as low as 0%.
some conditions apply

# EXCLUSIVE LISTED

## Markham & Denison




## 14 Kruger Rd.

## $ 339,000

- 3 Bedrooms
- 4 Washrooms
- Finished Basement

Apex Creations - 416-297-0707

**Markham & Steeles**




**$ 379,000**
- 4 Bedrooms
- 3 Washrooms
- Less than 5 years old

**Markham & Denison**




**$ 329,000**
- 3 Bedrooms
- 3 Washrooms

**Audly & Bayly**




**$ 399,900**
- 4 Bedrooms
- 3 Washrooms
- Less than 5 years old

**Midland & Lawrence**



**$ 169,000**
- 2 Bedrooms
- 2 Washrooms
- close to subway

**Ellesmere & Morningside**




**$ 99,000**
- 2+1 Bedrooms
- 2 Washrooms
- Low Maintenance

**Markham & Finch**





109 Crittenden Sqr.
**$ 249,000**
- 4 Bedrooms
- 2 Washrooms
- Finished bsmt. sept. Ent.

**2nd Mortgage @ Prime Rate Call for Details Pakeer 416-908-6003**

# சக்தியையும் பணத்தையும் சேமிப்போம்


செக்கலிங்கம் பிரபாகரன்
- வீடு விற்பனைப் பிரதிநிதி -
haran@thaiveedu.com

அதிகரித்து வரும் வீட்டுச் செலவுகள் வீடு வாங்குபவர்களை அச்சுறுத்துவதாக அமை கிறன்றது. ‘வீட்டுக்குக் கட்டும் மோர்கேஜை




விட Utilities அதிகமாக உள்ளது.’ என பலரும் புலம்புவது புரிகின்றது. ஓரளவுக் கேனும் சக்தி சேமிப்புக் குறித்த அறிவி னைப் பெறாவிடில் மாதாந்தம் வீணாக சக்திக்கான செலவுகள் அதிகரிக்கவே செய்யும். சக்தி சேமிப்பு என்பது வெறுமனே பணத்தை மட்டும் சேகரிக்க உதவும் ஒன்றல்ல. சூழலையும் சக்தியையும் பேண உதவும் ஒரு செயலாகும். சிறந்த சக்திப்பயன்பாடுள்ள (Energy Efficiency) மின் குமிழ்கள், மின் உபகரணங்கள் என்பனவற்றை பாவிப்பதன் மூலம் பெருமளவு சக்தியை சேமிக்கலாம்.

பழைய திருத்தப்படாத வீடுகளில், நாம் சக்தி சேமிப்பு நடைமுறைகளைப் பின்பற்று வதன் மூலம் சக்திச் செலவில் சுமார் 40% சதவீதத்தைச் சேமிக்க முடியும். Natural Resources Canada (NRC) இன் தகவலஷப் படையில் 2/3 வீட்டு உரிமையாளர்கள் Energy Guideஆல் வலியுறுத்தப்பட்ட சக்தி சேமிப்பு நடவடிக்கைகளை பின்பற்றி குறிப் பிடத்தக்க முன்னேற்றத்தை உணர்ந்துள்ள னர் என அறியப்படுகின்றது. அவர்களுள் அரைப்பங்கினருக்கு அதிகமானோரின் கருத் துக் கணிப்பீட்டின்படி இவ்வாறான நடவடிக் கைகளை பின்பற்றியதனால் அவர்களின் வீட்டின் பெறுமதி அதிகரித்துள்ளமையும் அறியப்படுகின்றது.

அத்துடன் இந்நடவடிக்கைகளின் பின் வீட்டில் காற்றின் தரம் உயர்ந்திருப்பதை யும் அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர். இதுவும் சக்திச் செலவைக் குறைக்க உதவும் ஒரு காரணியாக அமைகின்றது.

வீட்டைத் திருத்தியமைக்கும் எண்ணமிருப்ப வர்கள் Canada Mortgage and Housing Corporationம் NRCம் தரும் தகவல்களைப் பின்பற்றி உங்கள் வீட்டின் வசதியையும், சுகாதாரத்தையும், நீடிப்புத்திறனையும் அதி கரிக்க முயல்வதோடு மாதாந்த சக்திக்கான கட்டணங்களையும் குறைக்க முயல்வது நற்பயனைத் தரும்.

## அத்தகைய சக்தி சேமிப்புக் குறிப்புகளுள் சில

- உங்கள் வீட்டை திருத்துமுன்பாக Energy guide for Houses என அழைக் கப்டும் வீட்டின் சக்தி சேமிப்புக்கு வழி முறைகளை கூறுபவர்களை அழைத்து உங்கள் வீட்டை முழுமையாக பார்வை யிட்டு சக்தி விரயம் குறித்த மதிப்பீடு களை செய்யுமாறு வேண்டிக் கொள்ள- வும். எத்தகைய செயற்பாட்டுத்திறனில் உங்கள் வீட்டில் சக்தி பயன்படுத்தப்- படுகின்றது. வீட்டிலுள்ள சக்தியை விரய மாக்கும் விடயங்கள் யாவை? அவற்றை எவ்வாறு எவ்வகையில் நிவர்த்தி செய்வது? என்பன போன்ற வழிமுறை களை கேட்டறியுங்கள். சில பழைய வீடுகளில் காற்றிறுக்கத்தைக் குறைத்து 25% வரையான வெப்பத்துக்காக செல விடும் சக்தியைக் குறைக்கலாம்.

- Furnaces பொதுவாக 15லிருந்து 20 வருடங்கள்வரை பயன்பட வல்லன. உங்கள் furnaceஐ நீங்கள் மாற்றும் காலம் வந்து மாற்றவுள்ளீர்களானால் புதிதாக பிரதியீடு செய்யும் furnace ஆனது high energy-efficient energy star தகையையுள்ள model ஆக பார்த்து மாற்றுங்கள். இத்தகைய furnaceகள் உங்கள் heating billகளில் 20 %ஐ குறைக்க உதவுகின்றன.

- உங்கள் heating systemஐ தவறாமல் ஒழுங்காக பராமரிக்கவும் பராமரிக்கப் படாத filtersம் பாகங்களும் சக்தி சேமிப்பினைக் கோட்டை விடுவதோடு நீண்ட கால பாவனையையும் மட்டுப்படுத் துகின்றது.

- வீட்டில் Ventilation Systemஐ தொடர்ச்சி யாக பயன் படுத்துகின்றீர்களோயானால் அதற்கு பதிலாக HRV என அழைக்கப் படும் Heat Recovery Ventilationஐ பிரதியீடு செய்யவும். இது ஆரோக்கியத்- துக்கு துணைபுரிகின்றது. அதே வேளை அதை இயக்குவதற்கு செலவும் குறை வாக இருக்கும்.

- வீட்டிலுள்ள மின் உபகரணங்கள் யாவற்றையும் High Energy-Consuming Appliances என கூறப்படும் சக்தி சேமிப் புக்காக சிறப்புற தயாரிக்கப்பட்ட உப- கரணங்களாக மாற்றுங்கள்.

உதாரணமாக வீட்டில் உள்ளே குளிர் சாதனப் பெட்டியை சக்திசேமிப்பு உபகர- ணமாக வாங்கிப் பாவிக்கும்போது மட்டுமே வருடமொன்றிற்கு $200 டொலர்களை சேமிக்க முடியும். சக்தி சேமிப்பு யுக்திகள் இது போன்று பல உள்ளன. வீட்டைத் திருத்தவுள்ளவர்கள் முதலில் இது குறித்த அறிவுறுத்தல்களை அறிந்து செயற்படுவது நன்மை பயக்கும். இது குறித்த மேலதிக விடயங்களை இலவசமாகப் பெற்றுக் கொள்ள CMHCயுடன் 1-800-668-2642 என்ற தொலைபேசி இலக்கத்தில் அழைத்தோ www.cmhc.ca என்ற இணையத்தளத்திலோ பெறலாம். இல்லையேல் மேலதிகமாக EnerGuide தகவல்களை அறிய NRC உடன் 1-800-387-2000 என்ற தொலைபேசியல் அழைத்தோ அல்லது www.oee.nrcan.gc.ca என்ற இணையத் தளத்திலோ பெறலாம்.

தற்பொழுது கோடைகாலம். கோடை வந்தால் புல்லைப் பச்சைப் பசேலாக வைத்திருக்க வும் பூந்தோட்டங்களை குளிர்மையாக வைத்திருக்கவும் அதிகமாக நீரை பயன்படுத் துவது வழமை. வாகனங்களை கழுவுதல், நீச்சல்க் குளங்களைப் பேணல் என நீர் விரயம் கோடைகாலத்தில் அதிகமாக இருக் கும். இவ்வாறாக நீர்ப் பாவனையானது இருமடங்கைவிட அதிகரிப்பதால் கனடிய நகரங்கள் பலவற்றினதும் Municipal Water Systemகள் மேலதிக அழுத்தங்களை எதிர் நோக்குகின்றன. இதனால் நீர்ப் பாவனை யை மட்டுப்படுத்தும் தேவை உருவாகிறது. இதனால் Municipalஆல் நீருக்கான செலவு அதிகமாக எம்மிடமிருந்து அறவிடப்படுகின் றது. இதனால் வரி செலுத்துபலர்களுக்கும் நீர் பாவிப்பவர்களுக்கும் செலவுகள், அதிகரிக்கின்றன. CMHCயானது நீர்ப்பாவ- னையை குறைக்கவும் பல வழிமுறைகளை முன்வைக்கின்றன. அவற்றில் சில:

- பூந்தோட்டங்கள் வைக்கின்ற பொழுது குறைந்த நீரைப்பெற்று சூரிய ஒளியிலும் மண்வளத்திலும் அதிகமாக தங்கியுள்ள தாவரங்களை நாட்டவும்.

- நீர் வார்க்க முன்பாக கடந்த சில நாட் களில் இயற்கை வழங்கிய நீரின் அளவை மனதில்க் கொண்டு வார்க்கவும். இதற்காக மழையின் அளவை அளவிட ஒரு அளவுச் சாடியை தோட்டத்தில் வைக்கலாம்.

75ம் பக்கம் பார்க்க...





mediherbs.ca
சலரோகமா...?
சலரோக உபாதைகளிலிருந்து
நீங்குவதற்கான மூலிகைப் பானம்!
உடலின் கெடுதியான மிகைக்
கொழுப்பைக் குறைத்து உடல்
தென்பை பேணுவதற்கு!
Diabina HERBAL DRINK
Gluteala HERBAL DRINK
டயபீனா தினமும் அருந்தக்கூடிய மூலிகை ஆரோக்கிய பானம். இது உடலில் மிகுதியான குழுக்கோசினை குறைக்கக்கூடியதும், இரத்தத்திலுள்ள அதிகளவு குழுக்கோசினால் ஏற்படக்கூடிய நோய்களை ஒழுங்கு முறையாக தடுக்கவும் உதவுகிறது. விறைப்புத்தன்மை, பாதங்களில் சுளுக்கு, அலட்சியத் தன்மை மற்றும் மீண்டும் மீண்டும் வியாதிகளை படிப்படியாக நீக்கிவிடக் கூடியது. டயபீனா கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்கள் மட்டுமே பாவிக்கவேண்டியது.
க்லூாட்டியலா பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், குறிப்பாக உடலின் இடுப்பு, தொடை, தோற்பட்டை, கைகள் போன்ற பகுதிகளில் ஏற்படக்கூடிய ஊளைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும், உடல் வலியை நீக்கவும், அத்துடன் வாதத்தினால் ஏற்படக்கூடிய வலியினை குறைக்கவும் உதவுகிறது. க்லூாட்டியா உடலுக்கு புதுத்தெம்பைக் கொடுப்பதோடு நீண்ட சுகமான வாழ்விற்கும் வழிவகுக்கிறது.
Amazon Health Care
BBB ACCREDITED BUSINESS
SABONA
Montreal: 514 823 0462 Tel: 416 264 8787
www.amazonhealthcare.ca
2602, Eglinton Ave East. (Midland/Eglinton)




S.P.IMPORTERS
Furniture
SP
அனைத்து தளபாடங்களும் மிக மிக மலிவு விலையில்
NO PAYMENT INTEREST for 1 YEAR 416-266-3077
கொள்வனவு விலையில்
மலிவு விற்பனை
S.P.IMPORTERS
Sealy Posturepedic
Special Sealy Mattress on SALE
ஒரே பிளாசாவில் 4 தனிப்பெரும் ஸ்தாபனங்கள்...
2861 Lawrence Ave. East, Scarborough, ON M1P 2S8
(Brimley & Lawrence சந்திப்பில்)

# TAMIL STAR RADIO

**NewMarket முதல் Buffalo வரையும்**
**Kitchener முதல் Cobourg வரையும்**

**துல்லியமாக வானலையிலும் இணையம் மூலம் உலகெங்கிலும்**

TAMILSTAR
No Limits

168 மணி நேர தமிழ் வானொலி

வாரம் 168 மணி நேரமும் தமிழ் ஒலிக்கிறது

**சிரிக்க, சிந்திக்க, சினக்க....**

885 Progress ave., Suite 316,
Scarborough, ON M1H 3G3
**Tel: 416.438.STAR (7827)**
Fax: 416.438.7855
www.tamilstar.fm
info@tamilstar.fm




# பிரின்ஸ் எட்வேர்ட் ஐலன்ட் - ஒரு பார்வை



S.K. பாலேஸ்
- வீடு விற்பனை முகவர் -
skbales@thaiveedu.com


2008, 2009க்கு பிரின்ஸ் எட்வேட் ஐலண்டுக்குச் சுமாரான பொருளாதார வளர்ச்சியே எதிர்பார்க்கப்பட்டது. இந்த மாகாணம் சேவைப் பகுதியினால் தொடர்ந்து ஓரளவு வேலைவாய்ப்புகளைப் பெறும். இந்தத் தீவின் பொருளாதாரத்திற்குச் சவாலாக உள்ளது கனடாவின் டொலரின் பெறுமதி அதிகரிப்பும் எரிவாயு விலை அதிகரிப்புமாகும். இக்காரணிகள் தொடருமாயின் விவசாய உற்பத்தி, மற்றும் உல்லாசப் பயணத் தொழில்களின் வளர்ச்சி குறையும். மேலும் வதிவிட, வதிவிடமில்லாத கட்டிட நிர்மாண வேலைகள் வேகம் குறைந்து இருக்கும். இதனால் இயந்திர மற்றும் உபகரணங்களில் முதலீடு செய்ய கம்பனிகள் முயற்சிக்கும். காரணம் கம்பனிகள் தமது உற்பத்தியைப் பெருக்க முயல்வதே.

கனடாவின் டொலரின் பெறுமதி அதிகரிப்பானது தமது தேசத்தை விட்டு வெளியே பிரயாணம் செய்ய விரும்பும் அமெரிக்கர்களிடையே ஒரு பாதிப்பை ஏற்படுத்தவே செய்யும். பசளையின் விலை மற்றும் பயிருக்கு உபயோகிக்கும் ஏனைய பொருட்களின் விலை உயர்வு என்பனவற்றால் உருளைக் கிழங்குக்கான சந்தை நிலைவரம் சவாலையே எதிர்கொள்ளும்.

தொழில்வாய்ப்பு வீதம் இந்தத் தீவில் 2007ல் எதிர்பார்த்ததைவிட 1.1 வீதம் அதிகரித்துக் காணப்பட்டது. வருட முடிவில் 2008இல் வேலை வாய்ப்பு 0.6 வீதத்திற்குக் குறையலாம். ஆனாலும் அந்த மாகாணம் நிதி மற்றும் வணிக சேவைகளின் விரிவாக்கத்தால் நன்மை பெறும். கட்டிட நிர்மாணத் துறை 2007ல் எவ்வித முன்னேற்றமும் இல்லாமல் இருந்தது. காரணம் கட்டிட நிர்மாண வேலைகள் பூர்த்தியடையாமல் இருந்ததே. 2008, 2009இல் மாகாணத்தில் முதலீட்டுத் தொகை குறைவடைவதால் அதன் பொருளாதார வளர்ச்சி குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## விபரம்

தனிவீடுகளின் கட்டிட வேலைகள் அடுத்த இரண்டு வருடங்களில் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. புதிய குடிவரவு சிறிது பக்கபலத்தை வீட்டுச் சந்தைக்குத் தந்தாலும் மாகாணத்தில் பொருளாதாரத்தின் மந்தகதியும் கட்டிடப் பொருட்களின் விலையுயர்வும் தனிவீடுகளின் கட்டுமானம் குறையக் காரணமாகின்றன. 2008ல் 525 அலகுகளும், 2009ல் 500 அலகுகளும் எதிர்பார்க்கப்படுகிறது.

## பலவீட்டுத் தொகுதி

பலவீட்டுத் தொகுதிகளின் எண்ணிக்கை 2008, 2009ல் 175 அலகுகளை எட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதேபோன்ற ஒரு நடவடிக்கை 2007ல் நிகழ்ந்தது. 2007ல் நிகழ்ந்தது போன்று பல வீட்டுத் தொகுதியில் அநேக அலகுகள் ஓரளவு பிரிக்கப்பட்ட தனிவீடுகளாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இது முதல் தடவை வீடு வாங்குவோர் மத்தியில் தனிவீடுகளுக்கு ஒரு மாற்றாகப் பிரபல்யமாகின்றது. மேலும் பல தொடர் மாடிக் கட்டிடங்கள் போன்ற கொண்டோக்கள் உருவமைக்கப்படும் சாத்தியக்கூறுகளும் நிறையவே உள்ளன.

## மீள் விற்பனை

தீவின் மீள்விற்பனைச் சந்தை 2007ல் இருந்த சாதனை அளவான 1,675 விற்பனையை எட்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்கனவே கட்டப்பட்ட வீடுகளுக்கு கிராக்கி அதிகமாக இருந்தாலும் புதிய மற்றும் ஏற்கனவே கட்டப்பட்ட வீடுகளுக்கும் இடையில் உள்ள விலை வித்தியாசம் மற்றும் கடந்த ஐந்து வருடங்களாக ஏற்பட்ட விலை அதிகரிப்பும் முதல் தடவை வீடு வாங்குவோரின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தும்.

## விலை

ஏற்கனவே கட்டப்பட்ட வீடுகளின் விலை அடுத்த இரண்டு வருடங்களில் உயரக்கூடும். காரணம், நகரப் பகுதிகளிலும் நீர்நிலைகளுக்கு அண்மையிலும், நீர்நிலைகளைப் பார்க்கக்கூடியதாக அமைந்த வீடுகளுக்கும் பெரிய கிராக்கி ஏற்பட்டுள்ளது. MLS முறையில் விற்கப்படும் வீடுகளின் சராசரி விலை 2008ல் 3.4 வீதத்தாலும் 2009ல் 3.3 வீதத்தாலும் உயருமென எதிர்பார்க்கப்படுகிறது.

## மாகாண முக்கிய விபரங்கள்

பொழுதுபோக்குச் சொத்துக்கள் பிரின்ஸ் எட்வேட் தீவில் மிகவும் பிரபல்யமானவை. முக்கியமாக நீர்நிலைகளை அண்டிய அல்லது நீர்நிலைகளைப் பார்க்கக்கூடியவாறு அமைந்த சொத்துக்கள் 2000ம் ஆண்டில் ஒரு பொழுதுபோக்கு சொத்தின் சராசரி விலை 48,360 டொலர் மட்டுமே. ஆனால், 2007ன் இறுதியில் அவற்றின் சராசரி விலை 120,620 டொலராக இருந்தன. இந்த சொத்துக்களை வாங்கியவர்களில் பெரும் பாலானவர்கள் முன்னர் இந்தத் தீவில் வசித்துவிட்டு, அதிக வருவாயுள்ள தொழில்களை நாடி நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்றவர்கள். இவர்களுக்கு கோடைகால விடுமுறையை மகிழ்ச்சியாகக் கொண்டாட ஒரு கோடை வாசஸ்தலம் தேவைப்படுகின்றது.

■ ■ ■

# சக்தியையும் பணத்தையும்...

72ம் பக்கத் தொடர்ச்சி...

வாராந்தம் சேகரிக்கப்படும் மழையின் அளவைப் பொறுத்து நீரை வார்க்கலாம்.

- முறையான சிறப்புப் பயன் தரவல்ல நீர்ப்பாய்ச்சல் முறையை பின்பற்றவும். உதாரணமாக தாவரப் பாத்திகளுக்கும் தோட்டத்திற்கும் Soaker hoseஐ நிலத்தில் வைக்கவும். இல்லாவிடில் நேரடியாக மண்ணிற்கு நீர் பாய்ச்சப்படாமல் இவை கள்மீது பாய்ச்சப்படும். இதனால் நீர் விரைவில் ஆவியாகி இழக்க நேரிடும்.
- புற்களுக்கு தினமும் நீரூற்ற வேண்டியதில்லை. 2.5cm நீர் மட்டும் ஊற்றினால் போதும். வாரத்திற்கு ஒருமுறைக்கு மேல் நீரூற்றத் தேவையில்லை. மழை இடையில் பெய்தால் ஒரு வாரத்தை விட்டு மறுவாரம் நீர் வார்க்கலாம். 2.5cm என்பதை எவ்வாறு அளவிடுவது? ஒரு Tuna tin ஒன்றை புற்தரையில் வைத்து விட்டு புற்றரைக்கு நீர்வார்க்க வேண்டும் இந்த tin நிரம்பும் வரை.
- Sprinklerஐ செயல்படுத்தும் பொழுது இவ்வாறாக கொள்கலன் 2.5cm நிறைவதற்கு எடுக்கும் நேரத்தை ஒருமுறை கணித்துக் கொண்டு அதன்பின் அதே நேரத்திற்கு தானாக இயங்கும் வகையில் செயற்படுத்தி விடலாம்.
- Sprinklerஐ அல்லது hoseஐ சரி செய்கையில் புற்தரையில்லாத இடங்களில் நீர் வீணாக்கப்படாமல் பார்க்கவும்.
- நீர் ஆவியாகி வீணாவதை தவிர்ப்பதற்கு புற்தரைக்கும் தாவரங்களுக்கும் காலை 9மணிக்கு முதல் நீர் பாய்ச்சவும். அல்லது வெப்பம் குறைந்த நேரங்களில் நீர் பாய்ச்சவும்.
- நீரை மெதுவாக நன்றாக வீணடிக்காமல் மண் உறிஞ்சும் வகையில் பாய்ச்சவும்.
- Hoseஇல் அல்லது நீர்பாய்ச்சும் உபகரணத்திலுள்ள ஒழுக்குகள் அடைப்புகளை அவ்வப்போது சோதித்துத் திருத்த வேண்டும்.
- புல்லு வெட்டும்போது 6-8cmக்கு குறையாமல் வெட்ட வேண்டும். எனின் வேர்கள் இறுக்கமாக நீரைத் தேக்கி வைத்திருக்க போதுமா இருக்கும். வேர்களுக்கு நிழல் கிடைக்கும்.

இவை போன்று ஒவ்வொரு விடயத்திலும் பல வழிமுறைகளில் சக்தியை சேமிக்கலாம். அவற்றை அறிந்து தெரிந்து பின்பற்றுவதன் மூலம் சக்தி சேமிப்பில் நாமும் வெற்றிகரமாக பங்குபற்றுவதோடு சக்திக்கான செலவு நீருக்கான செலவுகளையும் மிச்சப்படுத்தலாம். சிறுதுளி பெருவெள்ளம் இல்லையா?... எம்மாலான சேமிப்பை நாம் செய்து நாட்டுக்கும் நமக்கும் பயனளிப்போம். அடுத்தவர் பாக்கட்டு எமக்கெதுக்கு கவலை என நாம் இருந்தால் அதன்பின் நீர்ப் பற்றாக்குறை சக்திப் பற்றாக்குறை எனப் பல பிரச்சனைகளை கனடா எதிர்நோக்க நேரிடும். துளித்துளியாக நாம் சேமிப்போம் பெரு வெள்ளமாக அது பயன்தரட்டும்.

■ ■ ■


ஒரே நாளில் Saree Blouse

உங்கள் சகலவிதமான சாறி புளவுஸ்
(Saree Blouse)
தைப்பதற்கும் அழையுங்கள்.

416 264 6400



RAVI
INCOME TAX
SERVICE

- LAST 14 YEARS IN TAX SERVICES
- PERSONAL INCOME TAX
- CORPORATE INCOME TAX
- SMALL BUSINESS TAX
- GST/PST AND PAYROLL REMITTANCE
- E.FILE SERVICES
- YEAR ROUND SERVICES

MORE INFO PLEASE CALL
RAVI PARAMU
416-262-4176

HOMELIFE
HIGHER STANDARDS

Ravi Paramu
Sales Representative
416•262•4176
rparamu@hotmail.com
www.raviparamu.com
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6



# சக்தி பெற சக்தி கொடு

சிவவதனி பிரபாகரன்
vathani@thaiveedu.com



மீண்டும் பனிபெய்யும் குளிர்காலத்தில் கால் பதித்துள்ளோம். இக்காலத்தில் சக்தி விரயம் என்பது தவிர்க்க முடியாத ஒன்று. ஆனாலும் வீடுகளில் வசிப்பவர்கள் இந்த சக்தி சேமிப்பு நடவடிக்கைகளில் முனைப்புடன் ஈடுபட வேண்டிய அவசியம் உண்டு. இதனால் சக்திக்கான விரயமாகும் பணத்தைச் சேமிப்பதோடு எம் மாகாணத்தில் வழங்கல் சக்தியையும் சேமித்து மீண்டும் ஒரு மின்துண்டிப்பினனான இருள்காலத்தை இக்குளிர் காலத்தில் வராமல் தவிர்க்கலாம்.

உங்கள் வீட்டில் நீங்கள் வாழும் வாழ்க்கை சிக்கனமாக சிக்கலின்றியும் வாழ சக்தி சேமிப்பு நடவடிக்கைகள் உதவுகின்றன. சக்தி சேமிப்புக்கான சில வழிமுறைகளை பார்ப்போம்.

- உங்கள் வீட்டில் வெப்ப இழப்பு பாதுகாப்புக்கு அணையிடப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்யுங்கள். (Properly insulated) அதாவது சரியான வெப்ப பாதுகாப்பானால் குறைந்த பட்சம் 10”-12” தடிப்பில் சீராக பரவப்பட்ட வெப்ப அரிதிற் கடத்தியால் பாதுகாக்கப்பட்டிருப்பது அவசியம். வீட்டைச் சுற்றி ஆராய்ந்து சிறு சிறு துவாரங்கள் இருப்பினும் அவை அடைக்கப்பட வேண்டும். குறிப்பாக Baseboards, Sink, Electrical Socketsக்குப் பின்னால் Cable wire வரும் இடங்கள் போன்ற துவாரங்களை பார்த்து வளி ஊடுபுகவிடா வகையில் அடைக்க வேண்டும்.

- கோடைகாலத்தில் பாவிக்கின்ற கதவு யன்னல் Blinds curtains பனிக்காலத்தில் பாவிக்காமல் தடித்த துணிகளை பாவிப்பது நன்று. அதேபோன்று வெயில் வருகின்ற வேளைகளில் இவ் Blinds Curtainகளை திறந்துவிட்டு போதிய சூரிய ஒளியை வீட்டிற்குள் அனுமதிப்பதன் மூலம் சூரிய வெப்பத்தை பயன்படுத்தி Furnaceக்கு சற்று நேரம் ஓய்வு வழங்கலாம். இரவு வேகைளில் திரைகளை மூடிவைத்து



உள்ளிருக்கும் வெப்பம் வெளியேறாத வகையில் பாதுகாத்துப் பேணலாம்.

- Thermastatஐ இரவில் படுக்கும் வேளையில் குறைத்து பகலில் கூட்டலாம். அதே போன்று வெளியே செல்லும் வேளைகளிலும் குறைத்துவிடலாம்.

- Dishwasher வைத்திருப்பவர்கள் அதனை முழுமையாக நிறைக்கு முன்பாக போடக் கூடாது. இதேபோன்றுதான் Washer, Dryer போன்ற உபகரணங்களும் அதன் உபயோத்தினை முழுமையாக சிக்கனமாக பயன்படுத்தவேண்டும். ஒரு சில உடுப்புக்களுக்காக Washer, Dryer போடுவதும் ஓரிரு பாத்திரங்கள்காக Dish washerஐ பயன்படுத்துவதும் கூடாது.

- தேவையில்லாமல் வீட்டில் மின் குமிழ்களை போட்டுவிடக்கூடாது. இப்பொழுது மின்சக்தி விரயத்தை அரைவாசிக்கும் மிகக்குறைவாக்கும் சக்தி சேமிப்பு மின் குமிழ்களான Compact Fluorescent மின் குமிழ்கள் உள்ளன. அவற்றை உபயோகிப்பதும் மின்சக்தி சேமிப்பிற்கு உகந்த உத்திகளில் ஒன்றாகும்.

- சிறு உபகரணங்களானாலும் பாவிக்காத போது மின் இணைப்பை துண்டித்து வைக்கப்பழகுவது நன்று. உதாரணமாக மின்கணணியானது Turn off செய்தால் சக்தியை பயன்படுத்துகிறது. இவ்வாறாக remote ஆக அல்லது stand by powerஐ பயன்படுத்தும் உபகரணங்களை ஒரு power bar சேமிக்க உதவும். சிறுதுளி பெருவெள்ளம் அல்லவா, சிறு சக்திதானே என பலர் உதாசீனம் செய்வதுண்டு. ஆனால் இவ்வாறு செய்வதால் மாத மின்சக்திக்கான billஇல் 4% சேமிக்க முடியும் என்கின்றது Toronto hydro அறிக்கை ஒன்று.

- குளிர் காலத்தில் நிலக்கீழ் அறையில் வசிப்பவர்கள் Humid பாவிப்பதுண்டு. ஈரப்பதனை அதிகரிப்பதற்கு அதற்கு பதிலாக தோய்த்த உடைகளை காயவைக்க பயன்படும் Drying rackஐ வாங்கினால் Dryerக்கு தேவையான சக்தியை சேமிப்பதோடு Humidifierக்கு தேவையான மின் சக்தியையும் சேமிக்கலாம். (ஒரு கல்லில் இரு மாங்காய்கள்). Dryer தான் பிரதான சக்தி உறிஞ்சும் உபகரணம் ஆதலால் Drying rackஇல் உடைகளைக் காய வைக்கும் முறையால் அச்சக்தியை சேமிக்கலாம். இவ்வாறு செய்வதனால் உடைகள் ஒரு நாளில் காய்ந்துவிடும்.

இவ்வாறாக மின்சக்தியை சேகரிக்கும் வழிமுறைகள் பல உண்டு. முன்னரும் ஒரு பொழுது சிலவற்றை வீடு பத்திரிகையூடாக தந்திருந்தேன்.

சக்தி சேமிப்பின் அனுகூலங்கள் பணம், மின்சக்தி சேமிப்பு மட்டுமன்றி $Co^2$வாயுவின் Enissicஐ குறைப்பதனூடாக ஆரோக்கியமான சூழல் ஏற்படுத்தலுமாகும். உங்களுக்கு வீட்டிற்குத் தேவையான சக்தி சேமிப்புகள் பற்றிய ஆலோசனைகளைப்பெற விரும்புவீர் களாயின் (416) 203 3106 என்ற இலக்கத்தில் அழைத்து Energy Audit செய்ய வருமாறு அழைக்கலாம். அவர்கள் பயன்தரும் ஆலோசனைகளை உங்களுக்குத் தருவார்கள். இது குறித்த மேலதிக விபரங்களை www.greensaver.org என்ற இணையத்தளத்தில் பார்க்கலாம். Green Saver என்பதை இலாபநோக்கற்ற கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்து ஆரோக்கியமான சூழல் உருவாக்குவதே இவ்வாறான சுற்றுச்சூழல் நலன் பேண அரச சுகாதார நிறுவனங்களின் நோக்கமாகும்.

மின்சக்தி சேமிப்பு என்பது கடினமானதொரு விடயமல்ல. கருத்தில் கொள்ள வேண்டிய ஒரு விடயமாகும். சக்தி சேமிப்புக்காக இரு வழிகள் உண்டு. ஒன்று நாமாக எமக்கு தெரிந்த வழிமுறைகளை பின்பற்றி முயல்வது. அடுத்தது நிபுணத்தவ ஆலோசனையைப் பெறுவது.

இங்கே மேலும் சில சக்தி சேமிப்பு வழிமுறைகளை பார்ப்போம். இது Smarthving எனப்படும் இணைத்திலிருந்து பெறப்பட்டது. இதன் மூலம் வருடமொன்றுக்கு $140 வரை சேமிக்கலாம் என கூறப்படுகிறது.

- குறைந்த வீச்சுடைய Showerhead உம் இரண்டு Faucet Aerators உம் பயன் படுத்ததுவதால் வருடமொன்றிற்கு ஒரு தனிநபர் உபயோகிக்கும் சக்தியான $45 டொலரால் மீதப்படுகிறது.

- ஐந்து Incandescent மின் குமிழ்களை அதிக பிரயோசனமுள்ள பகுதிகளில் Compact Fluorescent மின்குமிழ்களாக மாற்றவதால் வருடமொன்றிற்று $30 வரை மீதப்படுத்தலாம்.

- உங்கள் Thermostatஐ படுக்கச் செல்லும் போதும், வீட்டைவிட்டு வெளியே செல்லும் போதும் $20^c$ ஆல் குறைப்பீர்களேயாயின் வருடமொன்றுற்கு $58 டொலர்கள் வரை சேமிக்கலாம்.

- யன்னல் Insulation Kitஐ வாங்கி ஒரு யன்னலுக்குப் போட்டால் $7 வரை சேமிக்கலாம்.

சக்தி சேமிப்பு குறித்த மேலதிக தகவல்களை கனடிய அரச இணையத்தளமான- www.enerquideforhouses.gc.caஇல் பெறலாம்.

நாம் மின்சக்திக்காக அதிக விலையை செலுத்தி வருகிறோம். தொடர்ந்தும் விலை அதிகரிக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப் படுகினறது. ஆதலால் இந்த சக்தி செலவு விலைகளிலிருந்து எம்மைப்பாதுகாப்பது மிக முக்கியமான ஒரு விடயமாகும்.

அன்மையில் Toronto Hydro-Electric System ரொறன்ரோவிலேயே மிகப்பாரிய அளவான Industrial Solar power Generation Systerm எனப்படும் சூரிய சக்தியைப் பயன்படுத்தும் சக்தி பிறப்பாக்கி வழிமுறையை அறிமுகப் படுத்தியுள்ளனர். சூரிய சக்தியை மின்சக்தியாக்கும் இந்த அதிசிறந்த திட்டம் Toronto Hydroவினர் Solo Commrssioners Stemஇல் உள்ள Service Centre நடைமுறைப்படுத்தப்படவுள்ளது

இந்த திட்டத்தினூடாக 36,000 Watts (36 Kilo Watts) சூழல் மாசுபடுத்தாதமின்சக்தியானது பிறப்பிக்கப்படவுள்ளதாக அமைகிறது.

### இதன் அனுகூலங்கள்:

- Solar Panelல் அசையக்கூடிய பகுதிகள் இல்லை.
- பராமரிப்பு செலவுகள் இல்லை.
- கதிர்ஒளி அல்லது கதிர்ஒலி வீச்சுக்கள் இல்லை.

இது தவிர ரொரன்ரோவில் Wash'n' $ திட்டமும் வீகளிலுள்ளவர்களுக்கு $60 பண சலுகைகளை வழங்குகின்றது. அதாவது நகரால் முன் Washing Machine வாங்குவதனூடாக (சேமிப்பு உபகரணங்கள்)60% சக்தி சேமிப்பும் 40% நீர் சேமிப்பும் மட்டுமின்றி பண சேமிப்பும் சாத்தியமாகின்றது. இதன் மூலம் $11 - $103 டொலர்கள்வரை நீர் சக்தி செலவுகள் சேமிக்கலாம்.


அத்துடன் சக்தி கூடிய உபகரணங்கள் குறைந்த சவர்காரம் (Detergent)ஐ பயன் படுத்துவதோடு, உடைகளை மென்மையாகவும் நன்றாகவும் தோய்ப்பனவாக நிகழ்கின்றன.

இவ்வாறாக ஒவ்வொரு சிறுவிடயத்திலும் சக்தி சேமிப்பு குறித்த ஆர்வத்தை ஒவ்வொரு ஒன்ராரியோ வாசிகளும் காட்டுவோம் ஆயின் மீண்டும் ஒரு இருள்காலம் இப்பனிக்காலத்தில் வந்து வருத்தும் அபாயம் நேராது என்பதோடு அனாவசியமாக செலவு செய்யும் பணத்தையும் மீதப்படுத்தலாம்.

■ ■ ■

தமிழ் வகுப்பு

(McCowan & Dennison சந்திப்பிற்கருகில்)



இளமழலை முதல் தரம் 12 வரையான மாணவர்களுக்கு பல வருடகாலம் பட்டறிவுள்ள ஆசிரியையால் தமிழ் கற்பிக்கப்படுகின்றது.

- உங்கள் பிள்ளைகளும் தமிழில் பேசி, எழுதி, வாசித்து தேர்ச்சி பெற வேண்டுமா?
- பேச்சுப் போட்டிகள், சிறுவர் நாடகங்கள், பட்டிமன்றங்கள், சிறுவர் அபிநயப் பாடல்கள் போன்ற கலைநிகழ்ச்சிகளில் பங்குபற்றி தமது திறன்களை வெளிப்படுத்த வேண்டுமா?
- தொலைக்காட்சி, வானொலி சிறுவர் நிகழ்ச்சிகளில் பங்கேற்று தமது திறன்களை ஆளுமையுடன் வெளிக்கொண்டுவர வேண்டுமா?

அழையுங்கள்: 905-554-2496

“தமிழின் மேன்மை அதன் தொன்மையில் இல்லை அதன் தொடர்ச்சியில் உள்ளது.”

நாளைய எமது தமிழ்ச் சந்ததியினர் தமிழ் பேசும் நல்ல தமிழ்ப் பிள்ளைகளாக வளர்வது எமது கரங்களிலேயே உள்ளது.

# Unique Financial & Business Solutions Inc.

One Stop for all Your Financial Needs

We Offer
- FREE Mortgage Consultation
- Residential & Commercial
- Business Loan & Personal Loan
- Real Property Marketing
- Life Insurance
- All Accounting and Bookkeeping services

# COMMERCIAL MORTGAGE

*All Services Under One Roof*

*Call One Place For Your...*
*Mortgage Financing....Insurance...Real Estate Needs*

*Unique financial & business solutions*



**Kannan K.**
*Mortgage Business Development Manager*
**(416) 854-6183**



**Theepan L.**
*Real Estate Sales Representative*
**(416) 830-2700**



**Hariharan N.**
*Insurance/R.E.S.P Insurance Broker*
**(416) 856-4276**



**Raj T**
*Mortgage Specialist*
**(416) 831-2550**

**Finder Financial Services Ltd.**

Home Life Future Realty Inc.
262 Markham Road, Scarborough

**GTA Square: 5215 Finch Avenue, Suite 257, Scarborough (Middlefield & Finch)**
**Tel: (416) 754-8327 · Fax: (416) 754-8328 · Toll Free: 1 (877) 554-8327 · www.ufbsi.ca**

# ஹெச்ஐவி - HIV

**ஹெச்ஐவி தொடர்பான அருவருப்பு மற்றும் பாகுபாடு எவ்விதம் தென் ஆசிய சமுதாயங்களைப் பாதிக்கிறது என்பதைக் கவனத்தில்கொண்டு, ஹெச்ஐவியுடன் வாழ்ந்துவரும் மக்களுக்கு, அவர்கள் ஓரினச் சேர்க்கையாளர்களாகவே அல்லது நேரானவர்களாகவோ இருந்தாலும் சமுதாயத்தை ஓர் இனிமையான மற்றும் நட்புறவுடன் கூடிய இடமாக மாற்றுவதற்கு உங்களால் என்னசெய்யமுடியும் என்பதை சிறிது யோசித்துப் பாருங்கள்.**

## ஹெச்ஐவி என்றால் என்ன மற்றும் அதைப்பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும்?

ஹெச்ஐவி (Human Immuno-deficiency Virus) என்பது மனிதர்களிடையே பரவுகின்ற, உடலின் நோயெதிர்ப்பு மண்டலத்தைப் பலவீனப்படுத்தும் ஒரு வைரஸாகும். இந் நோய்க்கான எதிர்ப்புத் தன்மை நம்மிடம் இல்லாத காரணத்தால் நாம் அதைப்பற்றி நிச்சயம் கவலைப்படவேண்டியுள்ளது. மதம், வகுப்பு, கலாச்சாரம் அல்லது பாலியல் பழக்கம் ஆகிய அனைத்தையும் கடந்து, அனைவரையும ஹெச்ஐவி பாதிக்கிறது. ஹெச்ஐவியுடன் வாழ்ந்துவரும் தென்னாசிய மக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போவது ஒரு கவலைக்குரிய விடயமாகும். 1989 முதல், ஹெச்ஐவியுடன் வாழ்ந்துவரும் தென்னாசிய சமுதாயங்களுக்கு தென்னாசிய எயிட்ஸ் தடுப்பு கூட்டமைப்பு (ASAAP) சேவைகளை அளித்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் புதிதாக இத்தொற்றினால் பாதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தவண்ணம் உள்ளது. ஹெச்ஐவி பற்றிய தகவல்களைச் சரிவர அறியாமல் இருப்பது நமக்கு சுகாதார இடர்களால் பாதிக்கப்படக்கூடிய நிலையை ஏற்படுத்தும். இது ஒதுக்கித் தள்ளப்படாமல், நம்முடைய ஆதரவை நாடுகின்ற ஹெச்ஐவியுடன் வாழ்ந்துவரும் நபர்களுக்கு உண்டாகும் அவதிப்பையும் அதிகரிக்கிறது. ஆரோக்கியம் தொடர்பான பிற சமூக பய உணர்வுகளான வறுமை, ஆற்றல், இன உணர்வு, பாலியல் தன்மை மற்றும் ஓரினச் சேர்க்கை குறித்த அச்சம் ஆகியவையும் ஹெச்ஐவி பரவுதலுக்கு வலிமை சேர்க்கின்றன.

> **“ ஹெச்ஐவியுடன் வாழ்ந்துவரும் நபர்கள், மற்றவர்களால் மனம் புண்படும் வகையில் நடத்தப்படுகின்றனர். குடும்ப உறுப்பினர்கள் குளியலறை, மற்றும் உணவு போன்றவற்றை பகிர்ந்துகொள்ள மறுக்கின்றனர். பேருந்தில் செல்லும்போது அருகில் அமரத் தயங்குகின்றனர். ஹெச்ஐவியுடன் வாழ்ந்துவரும் பெற்றோரை உடைய குழந்தைகள் அவர்களது சக தோழர்களால் வெறுத்து ஒதுக்கப்படுவதுடன் தவறாகவும் நடத்தப்படுகின்றனர். ”**

இப்பிரச்சார இயக்கம், ஒன்றாறியோ முழுவதிலும் உள்ள ஓரினச் சேர்க்கையாளர்களிடையே ஹெச்ஐவி தொடர்பான அருவருப்பு, மற்றும் பாகுபாடு குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஹெச்ஐவி தொடர்பான அருவருப்பு மற்றும் பாகுபாட்டு உணர்வு வெளிப்படையாகத் தெரியக்கூடியதாக இருந்தாலும், அது பல சமயங்களில் நுட்பமான முறைகளிலும் காட்டப்படுகிறது. சில நேரங்களில் இத்தகைய செயல்கள் உள்நோக்கத்துடன் செய்யப்படாமலும் இருக்கலாம். இருந்தாலும், ஹெச்ஐவி தொடர்பான அருவருப்பு மற்றும் பாகுபாட்டு உணர்வின் தாக்கமானது, ஹெச்ஐவி உடன் வாழ்ந்து வரும் ஓரினச் சேர்க்கையாளர்களின் நலனையும் ஹெச்ஐவி தொற்றை தவிர்க்கக்கூடிய ஹெச்ஐவி பாதிப்பில்லாத ஓரினச் சேர்க்கையாளர்களின் ஆற்றலையும் குறிப்பிடத்தக்க அளவிற்கு பாதிப்பதாக உள்ளது.

ஓரினச் சேர்க்கையாளர்களின் ஆரோக்கியம் மற்றும் நலனை ஹெச்ஐவி தொடர்பான அருவருப்பு மற்றும் பாகுபாடு எவ்விதம் பாதிக்கிறது என்பது குறித்த விழிப்புணர்வை அவர்களிடையே ஏற்படுத்துவதையே இந்த இயக்கம் தனது நோக்கமாகக் கொண்டிருந்தாலும், தென்னாசிய சமுதாயங்களில்கூட ஹெச்ஐவியுடன் வாழ்ந்துவரும் மக்களிடம் இத்தகைய ஹெச்ஐவி குறித்த அருவருப்பு உணர்வு காட்டப்பட்டுவருகிறது. நமது சமுதாயங்களில் ஹெச்ஐவியுடன் வாழ்ந்து வரும் மக்கள் அவர்கள் ஓரினச் சேர்க்கையாளர்களாக இருந்தாலும், எதிர்பாலின சேர்க்கையாளர்களாக இருந்தாலும் அவர்கள் பணிபுரியும் இடம், பள்ளி, அவர்களது மதம் சார்ந்த அல்லது கலாச்சாரம் சார்ந்த சமுதாயம் மற்றும் குடும்பங்கள் உள்பட அவர்கள் வாழ்க்கையுடன் தொடர்புள்ள பல்வேறு இடங்களிலும் அருவருப்பு மற்றும் பாகுபாட்டை அனுபவித்து வருகின்றனர். நமது சமுதாயத்தில் ஹெச்ஐவி குறித்து பேசுவது கடினமான ஒரு விடயமாக இருந்தாலும், நம்மைப் பொறுத்தவரை ஹெச்ஐவி என்ற ஒன்றே கிடையாது என்றாகிவிடாது. நமது சமுதாயத்தில் ஹெச்ஐவியால் பாதிக்கப்பட்டு, அதனுடன் வாழ்ந்துவரும் ஆண்களும் பெண்களும் உள்ளனர். மற்றம் சிலர் தொற்று ஏற்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளனர். ஒரு சமுதாயம் என்ற முறையில் ஹெச்ஐவி பரவுவதைத் தடுப்பதற்கும், ஹெச்ஐவியுடன் வாழ்ந்து வரும் மக்களுக்கு உதவுவதற்கும் ஹெச்ஐவியைச் சுற்றிப் பின்னப்பட்டுள்ள அருவருப்பு உணர்வையும் பாகுபாட்டையும் நாம் உடைத்தெறிய வேண்டியது அவசியமாகும். இதுவே ஹெச்ஐவியுடன் வாழ்ந்துவரும் தென்னாசிய மக்கள் ஆரோக்கியமான மற்றும் முழுமையான வாழ்க்கை வாழ்வதை உறுதிசெய்யக் கூடிய ஒரே வழியாகும்.

## ஹெச்ஐவி தொடர்பான அருவருப்பு மற்றும் பாகுபாடு என்பது எதைக் குறிக்கிறது?

ஹெச்ஐவி தொடர்பான அருவருப்பு என்பது, ஹெச்ஐவி/எயிட்ஸ் இருப்பதாகக் கருதப்படும் அல்லது அறியப்படும் நபர்கள் மட்டுமல்லாமல் அவர்களுக்கு முக்கியமாக உள்ளவர்கள், அவர்கள் மீது அன்பு செலுத்துவோர், அவர்களுடன் நெருக்கமானவர்கள், சமூகக் குழுக்கள் மற்றும் சமுதாயங்கள் தொடர்பாக மற்றவர்களுக்கு உள்ள அனைத்துவிதமான எதிர்மறைக் கண்ணோட்டங்கள், நம்பிக்கைகள், நடத்தைகள், மற்றும் கொள்கைகள் ஆகியவற்றைக் குறிக்கிறது. கடந்த 19 ஆண்டுகளாக ஹெச்ஐவி தடுப்பு முயற்சிகளில் ASAAP ஈடுபட்டு வருகிறது. ஆனால், தென்னாசிய சமுதாயங்களிடையே ஹெச்ஐவி மற்றும் பாலியல் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் இத்தகைய எதிர்மறையான உணர்வுகள் தொடர்ந்து ஒரு மிகப் பெரிய தடையாகவே இருந்துவருகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் ASAAPஇன் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை 100 வீதமாக உயர்ந்திருப்பதுடன், பெண்களுக்கு ஏற்பட்டுள்ள தொற்றுகளின் எண்ணிக்கையும் 15 வீதம் அதிகரித்துள்ளது.

பிரதான வலைத்தளத்தை அணுகுவதன் மூலமாகவோ அல்லது எயிட்ஸ் தடுப்பிற்கான தென்னாசிய கூட்டமைப்பைத் தொடர்பு கொள்வதன் மூலமாகவோ ஹெச்ஐவி தொடர்பான அருவருப்பு மற்றும் அவமரியாதையை எவ்விதம் எதிர்கொள்ளலாம் என்பது பற்றி நீங்கள் கூடுதலாக அறிந்துகொள்ள முடியும்.

## ஹெச்ஐவி குறித்த அருவருப்பினால் ஏற்படும் சில விளைவுகள் யாவை?

ஹெச்ஐவி தொடர்பான அருவருப்பு கீழ்க் கண்டவை உள்ளிட்ட பல விளைவுகளை ஏற்படுத்தலாம்:

- ஹெச்ஐவியுடன் வாழ்ந்துவரும் மக்கள் அதிக அளவில் மன அழுத்தத்தையும் சமூக ரீதியாக ஒதுக்கப்படுதலையும் அனுபவிக்கின்றனர்.
- தனது குறிப்பிட்ட உடல் நிலையானது வாழ்க்கையில் ஒரு மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடுமென்ற இரகசியத்தைக் கட்டிக் காப்பதன் விளைவாக, ஹெச்ஐவியுடன் வாழ்ந்துவரும் ஒருவருக்கு ஏற்படுகின்ற அழுத்தம் மற்றும் தனிமையைக் கொண்டு இதனை நம்மால் ஓரளவிற்கு விளக்க முடியும்.
- உயிருக்கே ஆபத்தை விளைவிக்கும் ஒரு கொடிய நோயுடன் நீங்கள் வாழ்ந்து வருவதை உங்கள் குடும்பத்தினருக்கு உங்களால் கூறமுடியாத நிலையைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவும்.
- உங்களுக்கு மிகவும் ஆதரவு தேவைப்படும் நேரத்தில் அக்குடும்பம் மற்றும் சமுதாயத்தின் ஆதரவை நீங்கள் இழந்துவிடும் சூழ்நிலையை எண்ணிப் பார்க்கவும்.
- உங்கள் குடும்ப உறுப்பினர்களால் வெறுக்கப்படுவதையும் உங்கள் சமுதாயத்தால் நீங்கள் ஒதுக்கிவைக்கப்படுவதையும் சற்று சிந்தித்துப் பார்க்கவும்.


'கெட்ட செயல்களை' செய்பவர்களே ஹெச்ஐவியால் பாதிக்கப்படுகிறார்கள்

82ம் பக்கம் பார்க்க...

EXPERT
BUILDING INSPECTIONS LTD
"Dedicated to Expert, Honest & Independent Inspections"
Tel: 905 940 0811 Fax 905 940 6108
Toll Free 1 866 373 3315
- Commercial Building Inspections
- Environmental Assessments
- Air Quality Investigations
- Problem Analysis & Solutions
- New Home Warranty Inspections
- Resale Home Inspections
- Complete Home Audit
- Thermal Imaging
www.expertinspector.com
- Tough and Thorough Inspections by University of Toronto educated Building Science Experts Specializing in Defect Recognition
- Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act-Bill 158 and full members of ASHI and CAHPI-Ontario
- Exceed Nationally Recognized Standards
- Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
- On-Site Narrative Reports
- Seven Days a Week
ASHI MEMBER
CAHPI Ontario

# HONESTY & PROFESSIONAL EXPERIENCE TO SERVE YOUR REAL ESTATE NEEDS

## Residential and Commercial
## Buying / Selling
## &
## Leasing



**Raja**

**V.S. Rajagopal**

Sales Representative

**Dir : 416.727.8647**

Email : sinnarajagopal@hotmail.com

## மோட்கேஜ் வசதிகளும் செய்து தரப்படும்




Morningside / Sheppard
3 Story / 3 Bed Rooms, 3 Wash Rooms




Morningside & Sheppard
2 Story / 3 Bed Rooms, 2 Wash Rooms,




Brock & Kingston
Grocery/Supermarket




McCowan & Bullock
Automotive Related




Midland & Lawrence
1+1 Bed Room, Low Maintenance




Middlefield & Finch
2+1 Bed Rooms, 1 Wash Rooms,




Ossington & Davenport
4 Bed Rooms, 2 Wash Rooms




Davenport & Shaw
3 Bed Rooms, 2 Wash Rooms



☑ **Free Moving**

☑ **Home Inspection**

**Our gift to you on closing to use as you wish***

(நேரடியாக தொடர்பு கொள்பவர்களுக்கு மாத்திரமே)

* some conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/Future Realty Inc.,**

**Brokerage***

205-7 Eastvala Drive, Markham Road, Ontario L3S 4N8

**Bus.: 905.201.9977 Fax : 905.201.9229**

*Independently Owned and Operated, REALTOR

MLS MULTIPLE LISTING SERVICE

**Total Selling Commission As low as 3%***

# மரண வீடுகட்குச் செல்லும் போது...

மரண வீடுகள் (Funeral Homes), மரணச் சடங்குகளுக்குச் (Funeral Service) செல்லும் போது, பொது அறிவும் காலமறிந்து செயலாற்றும் தன்மையும் சிறந்த வழிகாட்டிகளாக இருந்த போதும், ஓர் சில அடிப்படை அம்சங்களை நாம் பின்பற்ற வேண்டியவர்களாக இருக்கின்றோம். சில சமயம், அறிந்தோ, அறியாமலோ மரணவீடுகளில் நாம் நடந்து கொள்ளும் முறைகள், மற்றவர்களை முகம் சுழிக்கச் செய்வதுடன், மனம் சலிக்கவும் செய்து விடுகின்றது. இதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமாயின் சில விடயங்களை நாம் அறிந்து கொள்ளத் தான் வேண்டும்.

### துக்க விசாரிப்புகள்

துயரப்படும் குடும்பத்தின் நெருங்கிய நண்பர்கள், துக்க வீட்டுக்குச் சென்று அனுதாபத்தையும் உதவியையும் வழங்குவது அவர்களது துயரத்தில் பங்கெடுப்பதை வெளிப் படுத்தும். இறப்பு நிகழ்ந்து முதல் சில கிழமைகளில் அக் குடும்பத்துடன் உங்களுக்கு உள்ள உறவினையும் சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் பொறுத்து எந்த நேரமாயினும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தடவை அவ் வீட்டிற்கு சென்று வரலாம்.

அனுதாபம் தெரிவிக்கும் அதேவேளை விரும்பினால், இறந்தவரைப் பற்றிய உங்கள் அன்பான நினைவுகளை குடும்ப அங்கத்தவர்களிடம் பரிமாறிக் கொள்வது பொருத்தமாகும். சில சந்தர்ப்பங்களில் குடும்ப அங்கத்தவர்கள் இறந்தவரின் நினைவுகளை அல்லது தமது துயரத்தை வெளிப்படுத்தும் போது நீங்கள் அதனை நன்கு செவிமடுத்து கேட்டுக் கொண்டிருப்பதை விரும்புவார்கள்.

அநேகமான சந்தர்ப்பங்களில், இறப்பிற்கு காரணம் என்ன என துருவி விசாரிப்பது பொருத்தமாகாது. உதாரணமாக, தற்கொலை போன்ற சம்பவங்களின்போது உங்கள் வினாக்கள் இறந்தவரின் குடும்ப அங்கத்தவர்களைப் புண்படுத்துவதாகவும் அமையலாம்.

நீங்கள் இறந்தவருக்கு மட்டுமே தெரிந்தவராகவும், அவரின் குடும்பத்திற்கு அறிமுகமில்லாதிருப்பின், நீங்கள் உங்களை அறிமுகப்படுத்த வேண்டும்.

இறந்தவரை பார்ப்பதற்காக நாளும் நேரமும் குறிக்கப்பட்டிருந்தால், நீங்கள் அவரைச் சென்று பார்ப்பதன் மூலம் உங்கள் மரியாதையை தெரிவிப்பது சம்பிரதாயமாகும். அத்துடன் அவரது குடும்ப அங்கத்தவர்களுக்கு உங்கள் அனுதாபத்தையும் வெளிப்படுத்தலாம். இந்த சந்தர்ப்பத்தில் ஓர் அமைதியான பிரார்த்தனை அல்லது தியானத்தை மேற்கொள்ளலாம். சில சந்தர்ப்பங்களில் இறந்தவரை வைத்திருக்கும் பேழையருகில் செல்லும்போது குடும்பத்தினரும் உங்களுடன் கூட வந்து துயரத்தில் பங்கு கொள்ளலாம்.

இறந்தவரை உறவினர்களும் நண்பர்களும் சென்று பார்ப்பதற்காக, வைத்திருக்கும் இடத்தில், எவ்வளவு நேரம் நீங்கள் தங்கியிருக்க வேண்டுமென்பது அவரவர் விருப்பத்தையும் நேரத்தையும் பொறுத்தது. ஆனால் கடமை முடிந்தது என்று சென்று பார்த்தவுடனேயே கிளம்புவது அவ்வளவு நல்லதல்ல.

இறந்தவர்களையும் அவரது உறவினரையும் பார்த்த பின் வந்திருப்பவர்களுடன் இறந்தவரைப் பற்றிய உங்கள் நினைவுகளைப் பரிமாறலாம். ஆனால் அதே சமயம், மரண வீட்டில் சந்திப்பவர் தமது வியாபாரக் கதைகளையும் தமது சொந்தவீட்டு, அயல் வீட்டுக் கதைகளையும் கதைத்து சிரித்து மகிழ்வது அழகல்ல. அது மரணமடைந்தவரை, அவரின் உறவுகளை

### குறிப்பேடு

பொதுவாக இறந்தவரைப் பார்வையிடும் இடத்தில் நீங்கள் உங்கள் குறிப்புகளை எழுதி கையெழுத்திடுவதற்காக ஓர் குறிப்புப் புத்தகம் வைக்கப்பட்டிருக்கும். அதில் நீங்கள் விரும்பினால் எழுதுவது நல்லது.

> “ திரும்பவும் வந்து குளிக்கத்தானே வேண்டும், ஆகவே மரணவீட்டிற்கு போய் வந்து குளிப்போம் என வியர்வை நாற்றத்தையும் பொருட்படுத்தாது செல்பவர்களும் நம்மவர் மத்தியில் இருக்கத்தான் செய்கிறார்கள். இறந்தவருக்கு செய்யும் மரியாதை இதுவல்ல. ”

### உடை

இறந்தவரின் குடும்பத்திற்கும் மரணவீட்டிற்கும் மரியாதையை கொடுக்கக் கூடியதான உடை அணிதல் வேண்டும். மரணவீடுகட்கு பொதுவாக கறுப்பு மற்றும் வெள்ளை நிற ஆடைகள் அணிவதே வழக்கம். இதனை விடுத்து சிவப்பு, மஞ்சள், பச்சை போன்ற கண்ணைக் கவரும் நிற ஆடைகளையும், பட்டாடைகளை அணிவதையும் தவிர்ப்பது அவசியம். நாம் என்ன நோக்கத்திற்காக மரணவீட்டிற்கு செல்கிறோம் என்பதை நினைவில் கொள்ளல் நல்லது. துயரத்தைப் பகிரவேண்டிய நேரத்தில் எமது ஆடை அலங்காரத்தை காட்ட வேண்டும் என எண்ணுதல் பொருத்தமற்றதாக அமைவதுடன், துயருற்றவர்களுக்கு ஆறுதலாக அமையாது.

மரண வீடுகட்குச் செல்லும்போது தூய்மையாக செல்லுதல் அவசியம். வேறு வேலையில் ஈடுபட்டு களைத்துப் போய் வியர்வை நாற்றத்துடன் செல்வது தவிர்க்கப்பட வேண்டும். திரும்பவும் வந்து குளிக்கத்தானே வேண்டும், ஆகவே மரணவீட்டிற்கு போய் வந்து குளிப்போம் என வியர்வை நாற்றத்தையும் பொருட்படுத்தாது செல்பவர்களும் நம்மவர் மத்தியில் இருக்கத்தான் செய்கிறார்கள். இறந்தவருக்கு செய்யும் மரியாதை இதுவல்ல. வேறு சிலர் தமது உடலில் எழும் நாற்றங்களை மறைக்க அளவுக்கதிகமான நறுமணங்களை (Perfume) தம்மில் விசிறிக் கொண்டு செல்வர். இது மற்றவர்களை முகம் சுழிக்கச் செய்யும் என்பதை கவனத்திற் கொள்ள மறக்க வேண்டாம்.

### பூக்கள்

மலர்க்கொத்துகளை அனுப்புவது இறந்த குடும்பத்திற்கு அனுதாபங்களைத் தெரிவிக்கும் ஓர் பொருத்தமான வழியாகும். மலர்கள், உயிரோட்டமான அழகினை வெளிப் படுத்துவதோடு இறந்தவரின் குடும்பத்திற்கு அதிக ஆறுதலையும் கொடுக்கும். மலர் கடைக்காரர், அஞ்சலிக்கான மலர்க் கொத்துகளில் கொடுத்தவர்களது பெயர்கள் எழுதப்பட்ட அட்டைகளை இணைத்து விடுவார்கள். மரண வீட்டில் இந்த அட்டைகள் அகற்றப்பட்டு குடும்பத்தவரிடம் கையளிக்கப்படும். இதன் அடிப்படையில் குடும்பத்தவர்கள், இவ்வாறு மலர்க்கொத்துக்கள் கொடுத்தவர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்கு இலகுவாக இருக்கும்.

மரணச் சடங்கு ஆரம்பிப்பதற்கு முன்பாகவே மரணச்சடங்கு நடக்குமிடத்திற்கு அல்லது அவர்களின் குடும்ப வீட்டிற்கு மலர்களை அனுப்பி வைக்கலாம். சிலசமயம் புரட்டஸ்தாந்து சேர்ச்களிற்கும் இம் மலர்களை அனுப்பி வைக்கலாம் (யூத தேவாலயங்கட்கும், கத்தோலிக்க சர்ச்சுகட்கும் மலர்கள் பொதுவாக அனுப்பப்படுவதில்லை). மலர்க்கடைகளை வைத்திருப்பவர்கட்கு எங்கு அனுப்புவது பொருத்தமானது என்பது நன்கு தெரிந்திருக்கும்.

### ஞாபகார்த்த நன்கொடைகள்

மலர்களுக்குப் பதிலாக சில நன்கொடை பெறும் தர்மஸ்தாபனங்கட்கு விரும்பினால் நன்கொடைகளை அளிக்குமாறும் சில குடும்பத்தவர்கள் கோருவார்கள். இச் சந்தர்ப்பத்தில் நன்கொடை வழங்குபவர் இறந்தவரின் குடும்பத்தின் பெயரையும் விலாசத்தையும் நன்கொடை கொடுக்கும் சந்தர்ப்பத்தில் வழங்குவார். நன்கொடைகள் வழங்காதபோதும், இறந்தவரின் குடும்பத்திற்கு இறந்தவரைப் பற்றிய நினைவுகளை வெளிப்படுத்தி ஓர் மடல் (Card) ஒன்றை அனுப்பி வைப்பது வரவேற்கத்தக்கதாகும். சிறப்பாக நீங்கள் மரணச் சடங்கிற்கு செல்ல முடியாதபோது இவ்வாறு தபால் அனுப்புவது சிறந்ததாகும்.

சில நன்கொடைகளுக்கு வரிவிலக்குகளும் உண்டு. மரணச் சடங்கை நடத்துபவர் இதனை விளக்குவார்.

### அனுதாப அட்டைகள்/தனிப்பட்ட குறிப்புகள்

மரண வீடுகட்கு நேரில் செல்ல முடியாத தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் அனுதாப அட்டை அனுப்புதல், தொலைபேசி அழைப்பு விடுத்தல் நல்லது.

“உங்கள் இழப்புகட்காக துயரப்படுகின்றேன்” போன்ற வார்த்தைகள் (I am sorry for your loss) இறந்தவரின் குடும்பத்திற்கு ஆறுதலாக அமையும்.

### தொலைபேசி அழைப்பு

குடும்ப அங்கத்தவருடன் கதைத்தல், உங்கள் சேவைகளை வழங்குவதற்கும் நீங்கள் அவர்களை உண்மையில் கவனிக்கிறீர்கள் என்பதற்கும் ஓர் சந்தர்ப்பத்தை வழங்கும். அவர்கள் தமது அண்மைய இழப்பைப் பற்றி கதைக்க விரும்பின் கதைக்க விடுங்கள். உங்கள் அனுதாபத்தை வெளிப்படுத்தி தந்தியை அனுப்புதலும் பொருத்தமானதாகும்.

“எனது ஆழ்ந்த அனுதாபங்கள்”

“நான் இந்த இழப்பிற்காக மனம் வருந்துகின்றேன்”

“இறந்தவர் எனது நல்ல நண்பர், அவரது இழப்பு ஈடு செய்ய முடியாதது” போன்ற வார்த்தைகள் பொதுவாக இச் சந்தர்ப்பத்தில் கூறப்படும்.

குடும்ப அங்கத்தவர்கள், மரணவீட்டிற்கு வந்தவர்களுக்கு பொதுவாக பின்வருமாறு கூறுவர்.

“நீங்கள் வந்ததற்கு நன்றி”

“இறந்தவர் உங்களைப் பற்றி எப்போதும் கதைப்பார்”

“இவ்வளவு பேர் இவரது மரணவீட்டிற்கு வருவார்கள் என நான் எதிர்பார்க்கவில்லை”

துயரப்படுபவர்கள் ஆறுதல் வார்த்தைகளைப் பரிமாறும் போதிலும் அளவுக்கதிகமாக பேசுவதை விடுத்து அமைதியாக ஓரிரு வார்த்தைகளைப் பரிமாறுவதே சிறந்ததாகும்.

மரணச் சடங்குகளின்போது, உயிரோடிருந்த நபரிற்காக ஏனையோர் தமது அன்பு, மரியாதை, துயரம், மற்றும் அவரது வாழ்க்கையை போற்றும் தமது எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங்கப்படுகின்றது. மரணம் நிகழ்ந்தால் ஏற்பட்ட இழப்புக்களையும் நெருக்கடிகளையும் மனந் திறந்து பேச இச் சடங்குகள் வழிவகுக்கின்றன. துயரப்படுவோர் தமது இழப்பினால் ஏற்படும் உணர்வுகளை தாங்கிக் கொள்ள முதலாவதுபடியாக மரணச் சடங்குகள் அமைகின்றன.

ஓர் வணக்க ஸ்தலத்தில் இறுதிச் சடங்கு நடைபெறுவதற்கென உரிய இடங்கள் அல்லது குடும்ப வீட்டில் நடைபெறும். பொதுவாக மிக நெருக்கமான நண்பர்களும் உறவினர்களும் மரணச் சடங்குகட்கு சமூகம் கொடுப்பார்கள்

### மரண ஆராதனைகள்

இறந்தவருக்காக ஒரு குறிப்பிட்ட வகையான சேவை நடத்தப்பட வேண்டுமென குடும்பத்தவர் குறிப்பிடுவர். குடும்ப அங்கத்தவர்கள் எந்த வகையான சேவைகளை விரும்புகிறார்களோ அதனை ஒழுங்குபடுத்த குடும்பத்தவர்கட்கு உதவுமுகமாக இறுதிச் சடங்குகளை நடத்துபவர்கள் பயிற்றப்பட்டுள்ளார்கள். இந்த ஆராதனைகள், வணக்க ஸ்தலங்களிலோ அல்லது இறுதிச் சடங்கு நடைபெறும் வீடுகளிலோ இறந்தவரை வைத்து நடைபெறும். இந்த சந்தர்ப்பங்களில் நண்பர்கள் இருப்பது, நட்பும் ஆதரவும் இருப்பதை உறுதிப்படுத்துவதாகும். இறப்பு மற்றும் எந்த வகையான ஆராதனை நடத்தப்படும் என்பதை நண்பர்கட்கும் சமூகத்திற்கும் அறிவிப்பதற்கான மரண அறிவித்தல் ஒன்றை வெளியிடுவது உதவியாக இருக்கும்.

### மரணவீடுகளில் பிள்ளைகள்

சிறு பிள்ளைகட்கு மரணம் பற்றிய விழிப்புணர்வையும் அதில் எவ்வாறு பங்கெடுப்பது என்பது பற்றியும் அறியத் தருவார்கள். இறந்தவரை பார்வையிடவும், மரணச் சடங்கில் கலந்து கொள்ளவும் பிள்ளைகள் விரும்பினால், பெரியவர்கள் அவர்களை அனுமதிக்க வேண்டும். மரணவீட்டில் பிள்ளைகட்கு

82ம் பக்கம் பார்க்க...

# Just make a phone call

## A Bright Financial Future is waiting for you!

## NOW Hiring! Agents.

Free Class

- Best Compensation in the industry
- Step-by-step Personal Training
- Guartanteed Leads Provided

You can make **50 to 100** Thousands dollars

## Join hands with Canada's #1 RBC Life Broker (2006-2007)

A state-of-the-art web site, that will make you
• More Productive • More Efficient • More Money

ROYAL BROKERS
Tel: 416•315•8100

பல்வேறு நிறுவனங்களிடமிருந்து குறைந்த விலையில் உங்கள் காப்புறுதியை தெரிவு செய்துகொள்ள

மருத்துவ பரிசோதனையற்ற ஆயுட் காப்புறுதி

Insuring your life. Ensuring your trust.



Canada Top Life Insurance Sales Award Winner 2006-2007
RBC Insurance

**Siva Kandiah**
*Managing General Agent, RBC*
*416•992•1259*

ROYAL BROKERS
Corporation

80 Nashdene Ave., Unit B26 Toronto ON. M1V 5E4
Tel: 416•298•4722 Fax: 416•298•4664

மிகக் குறைந்த கட்டணமாக **$15**ல் இருந்து!

வயோதிபர்களுக்கு அதிகுறைந்த விலையில் காப்புறுதி

**100% Cash Back Mortgage Insurance**

சிறுவர்களுக்கான சிறந்த RESP திட்டங்கள்

RBC Insurance Managing General Agent
Industrial Alliance
Canada Life

• Life Insurance/ Income Protection • Disability/ Critical Illness • Mortgage & Mortgage Insurance • Registered Education Saving Plans
• Travel Coverage • RRSP's, Annuities, RIF's GIS's • Tax Sheltered Savings & Investments

# மரண வீடுகட்குச்..

80ம் பக்கத் தொடர்ச்சி...

எவ்வாறு உதவி செய்வது என்பது பற்றி ஆலோசனையையும் மேலதிக தகவல்களையும் மரணவீட்டை நடத்துபவர் உங்களுக்கு வழங்குவார்.

### இறுதி ஊர்வலம்

மரணச் சடங்குகளும் அடக்க ஆராதனையும் ஒரே பிரதேசத்தில் நடைபெறுமாயின், நண்பர்கள், உறவினர்கள் ஆகியோர் இறந்தவரின் குடும்பத்துடன் கல்லறைக்குச் செல்வர். இந்த ஊர்வலம் மரணவீடு அல்லது வணக்க ஸ்தலத்தில் இருந்து ஆரம்பமாகும். மரண வீட்டில் ஒழுங்குகள் நடத்துபவர் (Funeral director) மரண ஊர்வலத்தின் போது வாகனமோட்டிச் செல்லும்போது எத்தகைய வீதி ஒழுங்குகளைப் பின்பற்ற வேண்டுமென அறிவுறுத்துவார்.

### ஞாபகார்த்த ஆராதனை

மரணச் சடங்கு முடிவடைந்து சில காலத்தின் பின் நிகழும் இவ் ஆராதனைகள் வெவ்வேறு சமூகம் மற்றும் மத வேறுபாடுகளுக்கேற்ப வேறுபடும். ஆராதனை நடைபெறும் இடங்களிலும் இறந்தவரைப் புகழ்ந்து கூறும் நிகழ்வு (Eulogy) நடைபெறும். இது மிக நீண்டதாக அமையாது சுருக்கமாக அமைய வேண்டும். அவரது நற்பண்புகள், வாழ்க்கை முறைகளை எடுத்துக் கூறுவதாக இருக்க வேண்டும்.

### நன்றி தெரிவித்தல்

மரணச் சடங்குகள் யாவும் முடிந்ததும் வழக்கமாக குடும்பத்தவர் உரையாடுவதற்காகவும் சிற்றுண்டி அல்லது உணவில் பங்கு கொள்ள தமது வீட்டிற்கு அழைப்பதும் வழக்கம்.

குடும்ப உறவினர்களும் நண்பர்களும் அனுப்பிய மலர்கட்கும், உணவும் மற்றும் உதவிகள் வழங்கியவர்கட்கும் நன்றி தெரிவிக்க வேண்டும். உங்களுக்கு உதவியவர்கள் நன்கு தெரிந்தவர்களாக இருந்தால் சுருக்கமான செய்திகளையும் அதில் எழுதலாம். உதாரணமாக, "நீங்கள் அனுப்பிய மலர்களுக்கு நன்றி" "நீங்கள் அனுப்பிய உணவிற்கு நன்றி, உங்கள் அன்பை மனமாரப் பாராட்டுகின்றோம்" போன்ற செய்திகளை அனுப்பலாம்.

சில சமூகங்களில் இறந்தவரின் குடும்பத்தினர் நன்றி தெரிவிக்கும் செய்தியினை செய்தித் தாள்களில் பிரசுரிப்பார்கள்.

இறுதியாக மீண்டும் ஒருமுறை, "இறப்பு ஒரு வீட்டில் நிகழும்போது அது குடும்ப அங்கத்தவர்கட்கு மிகவும் குழப்பத்தை ஏற்படுத்தக் கூடிய நேரமாகும். உங்கள் துயரத்தை வெளிப்படுத்தி அக் குடும்பத்தவரின் துன்பத்தில் நீங்களும் பங்கு கொள்கிறீர்கள் என அறியச் செய்தல் முக்கியமாகும்" என்பதை மனதில் கொண்டு மரணவீடுகட்குச் செல்வது நன்று.

■ ■ ■

# ஹெச்ஐவி - HIV...

78ம் பக்கத் தொடர்ச்சி...

அல்லது ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு மட்டுமே ஹெச்ஐவி பாதிப்பு ஏற்படுகிறது என்ற நமது நம்பிக்கைகள் ஹெச்ஐவி குறித்து போதுமான அளவிற்கு விழிப்புணர்வு பெறாத இளம் தலைமுறையினரும், மற்றும் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடாதவர்கள் தாங்கள் ஹெச்ஐவியால் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை என்று நினைப்பவர்களும், அதிகரிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிவிடும். இதன் விளைவாக, ஹெச்ஐவியிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான போதிய நடவடிக்கைகளை அவர்கள் எடுக்காமல் போகலாம். இது அவர்களுக்கு ஏற்படக்கூடிய இடரை அதிகரிக்கும்.

ஹெச்ஐவி பரிசோதனையை மக்கள் அணுகாமல் போகலாம். ஒன்ராறியோவில் ஹெச்ஐவியுடன் வாழ்ந்துவரும் மூன்றில் ஒரு பங்கினருக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, நோய் இருப்பது உறுதிசெய்யப்படவில்லை. தங்களுக்கு ஹெச்ஐவி இருப்பதே தெரியாத நிலையில், தங்களையோ அல்லது தங்களது துணைகளையோ அவர்கள் பாதுகாத்துக் கொள்ளப்போவதில்லை. மக்கள் தங்களது ஹெச்ஐவி நிலை குறித்து அறிந்துகொள்ள விரும்புவதை ஹெச்ஐவி தொடர்பான அருவருப்பு உணர்வு தடுக்கிறது. தங்கள் நோய் கண்டறியப்பட்ட நிலையில் ஏற்படும் அவமதிப்பு மற்றும் பாகுபாட்டை எதிர்கொள்வதைவிட, அந்நபர்கள் தங்கள் நிலைகுறித்து அறிந்துகொள்வது சிறந்ததாகும்.

நிராகரிக்கப்படுதல் அல்லது வன்முறை ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் ஆகியவை காரணமாக ஹெச்ஐவியுடன் வாழ்ந்துவரும் நபர்கள் தங்கள் பாலியல் துணையுடன் அதைப்பற்றிக் கூறுவதற்குப் பயப்படுகின்றனர். ஆனால், ஹெச்ஐவி இருப்பதாகக் கண்டறியப்படும் நபர்கள். பெரும்பாலும் தங்களுக்கு ஹெச்ஐவி இருப்பதை தங்கள் பாலியல் துணைகளிடம் கூறுவதுடன், தனது துணைகள் இத்தொற்றினால் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றனர் என்பதை நாம் அறிவோம். ஹெச்ஐவி பாதிப்பு குறித்து அமைதி காக்கும் கலாச்சாரத்தை வளர்ப்பது ஹெச்ஐவியிலிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்வதை மிகவும் கடினமான ஒன்றாக ஆக்கிவிடும்.

ஹெச்ஐவியுடன் வாழ்ந்துவரும் நபர்கள், அவர்களது அனுபவங்கள் குறித்து புரிந்து கொள்ளாத மற்றும் கருணை காட்டாத மற்றவர்களால் மனம் புண்படும் வகையில் நடத்தப்படுகின்றனர். குடும்ப உறுப்பினர்கள் குளியலறை, உணவுத்தட்டுகள், மற்றும் உணவு போன்றவற்றை ஹெச்ஐவியுடன் வாழ்ந்து வரும் நபர்களுடன் பகிர்ந்துகொள்ள மறுக்கின்றனர். பேருந்தில் செல்லும்போது ஹெச்ஐவியுடன் வாழ்ந்துவருவதாகக் கருதப்படும் நபரின் அருகில் அறிமுகமில்லாதவர்கள் அமரத் தயங்குகின்றனர். ஹெச்ஐவியுடன் வாழ்ந்துவரும் பெற்றோரை உடைய குழந்தைகள் அவர்களது சக தோழர்களால் வெறுத்து ஒதுக்கப்படுவதுடன் தவறாகவும் நடத்தப்படுகின்றனர்.

தென்னாசிய ஓரினச் சேர்க்கையாளராகவோ, இருபாலின சேர்க்கையாளராகவோ அல்லது ஆண்களுடன் பாலுறவு கொள்ளும் ஓர் ஆணாகவோ அடையாளம் காணப்படும் எவரும் ஹெச்ஐவியால் பாதிக்கப்பட்டிருந்தாலும் அது இல்லாவிட்டாலும் இத்தகவல்கள் மற்றும் கீழ்காணும் வலைத்தளம் அவர்களுக்குப் பொருந்தும். அவர்களுக்குப் பொருந்தக்கூடிய கூடுதல் விவரங்களைப் பெறுவதற்காக www.dosti.ca , www.snehithan.ca மற்றும் www.asaap.ca ஆகிய வலைத்தளங்களுக்கு விஜயம் செய்வதைப் பற்றியும் அவர்கள் சிந்திக்கலாம்.

ஹெச்ஐவி பாதிப்பு இல்லாதவர்களும் ஹெச்ஐவியுடன் வாழ்ந்துவரும் ஓரினச் சேர்க்கையாளர்கள் மீதான மற்றவர்களின் கண்ணோட்டம். நம்பிக்கைகள் மற்றும் நடத்தைகள் ஆகியவை அவர்களுடைய ஆரோக்கியத்தை எவ்விதம் எதிர்மறையாக பாதிக்கக்கூடும் என்பது பற்றியும், மற்றும் ஹெச்ஐவி தொற்றிலிருந்து ஒருவர் தம்மைப் பாதுகாப்பது பற்றியும் அவரது ஆற்றலை அது எவ்விதம் பாதிக்கக்கூடும் என்பது பற்றியும் சிந்தித்துப் பார்த்தல் அவசியம்.

ஹெச்ஐவி / எயிட்ஸ் பற்றிய கேள்விகள் ஏதேனும் உங்களுக்கு இருந்தாலோ அல்லது உங்களுக்கு ஹெச்ஜவி பரிசோதனை சேவைகள், பராமரிப்பு, சிகிச்சை அல்லது உதவி தேவைப்பட்டாலோ கீழ்க்காணும் தொடர்பு கொள்ள

**Alliance for South Asian AIDS Prevention – 20 Carlton Street, Suit 126, Toronto, Ontario.**

**Tel: 416 599 2727**

**Website: www.asaap.ca, www.dosti.ca kw;Wk; www.snehithan.ca**

■ ■ ■


## எலி பூச்சித் தொல்லையா...?

## RUBAN PEST CONTROL



- வீடுகள்
- தொடர்மாடி வீடுகள்
- தொழிற்சாலைகள்
- வியாபார நிலையங்கள்

ஆகிய அனைத்து இடங்களிலும்
எலி, பூச்சித் தொல்லைகளை
அறவே நீக்க அழையுங்கள்!

**KANTHAN**
**416•291•3997**

## ABC Abacus




* சிறுவர்களை புத்தி நுட்பம் மிக்கவர்களாக வளர்க்கும் பயிற்சிமுறை.

* உலகரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வேகமாக உலகெங்கும் பரவிவரும் கற்கைநெறி.

* கனடிய சூழலுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட பாடத்திட்டத்தை உடையது, இதன் சிறப்பம்சம்.

* இக் கல்விமுறை உங்கள் பிள்ளைகளை பேரறிவாளராக்கக் கூடியது.

மேலதிகத் தொடர்புகளுக்கு: Active Brain Center

| Head Office: | Brampton | Newmarket | Scarborough N. |
|---|---|---|---|
| 416-615-2520 | 647-476-2532 | 647-890-2768 | 416-754-1141 |
| 2163 Lawrence Ave. E. (Birchmount & Lawrence) | 230 Sandalwood Parkway E. | 905-775-0395 | 80 Nashbene Rd. (Middlefield) |

Web:- www.activebraincenter.com | E-mail:- mail@activebraincenter.com



# வீடு வாங்க, விற்க அழையுங்கள்...

## Vasanthy Niranjan

*Real Estate Broker*

**416-845-8272**

**Morningside/Ellemere**



**$132,000**
**2 Bedroom , 2 Washroom**

**Lawrence/Brimley**



**$329,000**
**3 Bedroom , 2 Washroom**
Beautiful Brick Bungalow,
Great Location, Close to Ttc,
Park, School, Hospital, Shopping Areas.
Parking for 3 or 4 Cars.
New Furnace 2 Yrs Old.

**Morningside/Old Finch**



**$379,900**
**4+2 Bedroom , 4 Washroom**
Spacious Home Shows Very Well
Walkout Basement, Laminate Fl,
Brdim where laid, All Elfs,
Gb&E, Cac, 2 Fridges, 2Stoves
Washer, (Dryer as is)

**Birchmount/401**



**$279,900**
3+1 Bedroom, 2 Washroom
Excellent Neighbourhood,
Separate Entrance to Basement,
Walkout Basement,
Attached Garage.

**Markham/Lawrence**



**$329,900**
3 Bedroom, 2 Washroom
Ceramic Backsplash, Marble
Counter Bath, Motion Sensor Light,
Large Eat-In Kitchen, All Blinds,
Fridge, Stove, Washer, Newer Kit &
Bath & Bsmt.

**Finch/Kennedy**



**$305,000**
3+2 Bedroom, 4 Washroom
Walk to School, Ttc, Supermarket,
Library, Mall, Hospital.
Drive Way Bsmt Has 2 Rooms
All Windows Covering, 1 Fridge
2 Stove, Dryer, Washer

**Birchmount/Ellesmere**




**$1450.00**
2+1 Bedroom, 2 Washroom
Luxury Condo By Tridel.
Laminate Floors Throughout.
24Hr Conceirge, Indoor,
Pool, Excercise & Aerobics Center
Party Room & More

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife Today Realty Inc.,**
Brokerage*
31 Progress Ave. Suite 210
Toronto, ON M1P 4S6

# Special of this Month

# Condo for Sale

## (Midland & Eglinton)

Seller will paint your color and change Carpet to Laminate.

Most convenience Location in Scarborough.



921 Midland Ave

- Schools & Park
- 24 Hrs TTC at your Door
- One car Parking
- And More...

**416-399-8093**

## One bedroom

## Don't Miss Out.

HOMELIFE
HIGHER STANDARDS

HomeLife/ Future Realty Inc.,Brokerage
262 Markham Road, Scarborough, ON M1J 3C5
Tel: 416.264.0101 Cell: 416.399.8093
Fax: 416.261.1519 nvpiraba@hotmail.com



No need Elevator
Why are you renting, when you can own!

**PIRABAA NALLATHAMBY**
Sales Representative

# ஆயுட் காப்புறுதியும் சேமிப்புத்திட்டங்களும்

## LIFE INSURANCE & RESP



- **வயோதிபர்களுக்கான காப்புறுதி மிகக் குறைந்த செலவில்**
  மருத்துவ பரிசோதனை எதுவும் வேண்டியதில்லை
- **ஆயுட்காப்புறுதி**
  ஆயுட்காலம் வரை ஒரே மாதாந்தக் கட்டணம்
  குறிப்பிட்ட காலத்தின்பின்பு பணம் கட்டவேண்டியதில்லை
  கட்டிய பணத்தை மீளப்பெற முடியும்
- **கொடிய நோய்களுக்கான காப்புறுதி**
  புற்றுநோய், மாரடைப்பு, பாரிசவாதம்**(Stroke)** போன்ற
  24 கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2மில்லியன் வரை காப்புறுதி
- **குழந்தைகளின் உயர் கல்விக்கான சேமிப்புத்திட்டம் - RESP**
  20% - 40% அரச மானியத்துடன் 15% அதிக போனஸ்

digi Media

**100,000 டொலர்களுக்கான காப்புறுதி**
**மாதாந்தம்**
**$ 11.97**
**மட்டுமே.**

புகைப்பிடிக்காத 30வயது ஆண், 10வருடத் தவணைக் காப்புறுதி

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Assumption Life
LILAND INSURANCE INC.

## சிறீதரன் துரைராஜா

MDRT Member of Million Dollar Round Table

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407



**மில்லியன் டொலர் பெறுமதி மிக்க இலவச ஆலோசனை**

# உங்களிடம் உள்ள ஆயுட் காப்புறுதி உங்களுக்கு உகந்ததா?



சிறீதரன் துரைராஜா
- ஆயுட் காப்புறுதி முகவர் -
sritharan@thaiveedu.com

ஆயுட் காப்புறுதி திட்டம் வைத்திருப்பவர்கள் எல்லோரும் தங்களிடம் இருக்கும் ஆயுட் காப்புறுதி திட்டம் அவர்களுக்கு உகந்ததா, அந்தக் காப்புறுதித் திட்டம் அவரின் தற்போதைய தேவையை பூர்த்திசெய்யக்கூடிய திட்டமா என்பதை பரிசீலனை செய்வது அவசியம்.

ஆயுட் காப்புறுதி திட்டம் என்பது ஒரு ஆயுட் காப்புறுதி நிறுவனத்திற்கும் காப்புறுதி பெற்றவருக்கும் இடையிலான ஒரு ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆயுட் காப்புறுதி பெற்றுக்கொண்டவர் மாதாந்தம் அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்-தவணையில் ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தை காப்புறுதி நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு சம்மதிக்கின்றார். இந்தப் பணத்தை மாதாந்தம் அல்லது வருடாந்தக் கட்டணம் (Insurance Premium) என அழைப்பார்கள்.

அதேவேளை காப்புறுதி நிறுவனம் காப்புறுதி பெற்றுக்கொண்டவர் மரணம் அடைந்ததும் காப்புறுதித் தொகையை அவரின் பலன் பெறுபவராக குறிப்பிட்ட நபருக்கு வழங்குவார்கள். காப்புறுதியின் பலன் பெறுபவரை BENEFICIARY என அழைப்பார்கள்.

## ஒரு காப்புறுதித் திட்டத்தில் நான்கு முக்கியமானவர்கள் இடம்பெறுவார்கள்.

- காப்புறுதி நிறுவனம் (Insurer)
- காப்புறுதித் திட்டத்தின் உரிமையாளர் (Policy Owner)
- ஆயுட் காப்புறுதி செய்யப்பட்டவர் (Life Insured)
- பலன் பெறுபவர் (Beneficiary)

காப்புறுதித் திட்டத்தின் உரிமையாளரும் ஆயுட் காப்புறுதி செய்பவரும் ஒரே நபராகவும் இருக்கலாம். அல்லது இரு நபர்களாகவும் இருக்கலாம். ஒரு குடும்பத்தில் கணவன் மனைவி காப்புறுதி செய்யும் போது ஒருவர் காப்புறுதி உரிமையாளராகவும் அடுத்தவர் ஆயுட் காப்புறுதி மட்டும் பெற்றவராகவும் இருக்க முடியும். அந்தச் சந்தர்ப்பத்தில் காப்புறுதி உரிமையாளர் மட்டுமே காப்புறு-தித் திட்டத்தில் மாற்றங்கள் செய்ய முடியும்.

கணவன், மனைவி இருவரும் காப்புறுதித் திட்டம் பெறும் போது கணவன் மட்டும் காப்புறுதி உரிமையாளராக இருந்தால் (Policy Owner) அவர் இறந்த பின் மனைவி உரிமையாளராக வர முடியும். அதற்கு அந்த காப்புறுதித் திட்டத்தில் மனைவியின் பெயர் (CONTINGENT POLICY OWNER) ஆக பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். CON-TINGENT POLICY OWNER என்பது முதலாவது காப்புறுதி உரிமையாளர் இல்லாத இடத்தில் இரண்டாவது நபர் உரிமையா-ளராக வர முடியும்.

கணவன், மனைவி இருவரும் ஒரே இடத்தில் காப்புறுதி செய்யும் போது மூன்று விதமான காப்புறுதி பெற்றுக்கொள்ள முடியும்.

- Individual Policy தனித்தனியான திட்டங்கள்
- Joint First to Die இருவருக்கும் சேர்த்து ஒரு காப்புறுதி திட்டம். முதலில் இறப்பவருக்கு மட்டும் பணம் கிடைக்கும் திட்டம்.
- Joint Last to die இருவருக்கும் சேர்த்து ஒரு காப்புறுதி. ஆனால், இரண்டாவதாக இறப்பவருக்கு மட்டும் பணம் கிடைக்கும் திட்டம்.

### Individual Policy

இந்த மூன்று திட்டங்களும் எல்லா காப்புறுதி நிறுவனங்களிலும் வழங்கப்படுகிறது. இவற்-றில் Individual Policy என அழைக்கப்படும் தனித்துவமான திட்டம் அதிகமாக வழங்கப்படுவது காணப்படுகின்றது. அதாவது கணவன் மனைவி இருவரும் தனித்தனியே ஒரு தொகைப் பணத்திற்கு காப்புறுதி செய்தல். இதில் இருவருக்கும் எவர் இறந்தா-லும் அதில் பலன் பெறுபவருக்கு பணம் கிடைக்கும். அதாவது முதலாவது நபர் இறந்தவுடன் இரண்டாவது நபருக்கு பணம் கிடைக்கும்.

பின்பு இரண்டாவது நபர் தொடர்ந்து அவரின் காப்புறுதிக்கான மாதாந்தக் கட்டணத்தை மட்டும் செலுத்த வேண்டும். இரண்டாவது நபர் இறந்தவுடன் அவரின் பிள்ளைகளுக்கு அந்தக் காப்புறுதிப் பணம் கிடைக்கும்.

எனவே காப்புறுதித் திட்டத்தில் பணம் பெறுபவராக பெயர் நியமிக்கும் போது எவர் முதலாவது பலன் பெறுபவர் (First Benefi-ciary) பின்பு எவர் இரண்டாவது பலன் பெறுபவர் என்பதை நியமிக்க வேண்டும். CONTINGENT (BENEFICIARY)

### Joint First to Die

இந்தக் காப்புறுதித் திட்டம் கணவன் மனைவி இருவருக்கும் சேர்த்து ஒரு திட்டம். இதில் முதலாவது நபர் இறந்தவுடன் காப்புறுதித் தொகை முழுவதும் மற்றைய நபருக்கு வழங்கப்படும். பின்பு இரண்டாவது நபருக்கு காப்புறுதி இல்லை. பின்பு இரண்டாவது நபர் காப்புறுதி செய்ய விரும்பினால் புதிதாக ஒரு திட்டம் பெறப்பட வேண்டும்.

இருவரும் விபத்தில் ஒரே நேரத்தில் அல்லது ஒருவர் இறந்து 30 நாட்களுக்குள் அடுத்த-வரும் இறக்க நேரிட்டால் காப்புறுதிப் பணம் இரட்டிப்பாக வழங்கப்படும்.

இப்படியான Joint First to Die காப்புறுதித் திட்டம் அடமானக் கடன் காப்புறுதிக்கு (MORTGAGE INSURANCE) வழங்கப்படுவது வழக்கம். அதாவது கணவன் மனைவி யாராவது ஒருவர் இறந்தால் அத்துடன்

> “ சொத்துக்கள் பணம் எல்லாவற்றையும் ஒரு குடும்பம் இழக்க நேரிடலாம். ஆனால் அவரின் காப்புறுதித் திட்டமானது அவர் இறந்த பின்பு அந்தக் குடும்பத்தின் பொருளாதாரத்திற்கு பாதுகாப்பு வழங்கும். ”

(MORTGAGE) அடமானக் கடன் கட்ட வேண்டியதில்லை. அல்லது பிள்ளைகள் இல்லாத கணவன் மனைவி இப்படியான திட்டம் பெற்றுக் கொள்ளலாம்.

எனவே காப்புறுதித் திட்டம் ஒன்று பெற்றுக் கொள்வதனாலும் இந்தத் திட்டங்கள் ஒவ்வொருவருக்கும் உகந்ததா என்பதை அறி-வதற்கு 4 முக்கிய விடயங்கள் கவனிக்கப்பட வேண்டியவை.

- மாதாந்தக் கட்டணம்
- காப்புறுதித் திட்டத்தின் அமைப்பு
- அத்திட்டத்தின் பலன்கள்
- காப்புறுதியின் தொகை

### மாதாந்தக் கட்டணம்

ஒரு காப்புறுதித் திட்டத்திற்கான மாதாந்தக் கட்டணம் உங்களால் நீண்டகாலத்திற்கு செலுத்தக் கூடியதாகவும் தற்போதைய பொருளாதார அல்லது உங்கள் மாத வருமானத்திற்கு கட்டுப்பட்டதாகவும் இருக்க வேண்டும். எனவே ஒருவர் எவ்வளவு பணம் காப்புறுதிக்காக மாதாந்தம் செலவு செய்ய முடியும் என்பதை கருத்தில் கொண்டு அதற்கு ஏற்றவாறு காப்புறுதித் திட்டத்தை தெரிவு செய்ய வேண்டும்.

காரணம் சிலர் அதிகமான தொகைக்கு காப்புறுதிப் பெற்றுக்கொண்டு மிகவும் கஷ்டப்-பட்டு சிறிது காலங்கள் கட்டிய பின்பு பணம் செலுத்த முடியாமல் காப்புறுதியை இரத்து செய்தால் இவ்வளவு காலமும் கட்டிய பணம் விரயமாகும். பின்பு வயது கூடினால் காப்பு-றுதி பெறுவதற்கான மாதாந்தக் கட்டுப பணம் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டால் பின்பு காப்புறுதி பெற முடியாத நிலை ஏற்படும். எனவே வயது குறைவாக இருக்கும் போது கூடிய தொகைக்கு குறைந்த மாதாந்தக் கட்டணத்தில் காப்புறுதி பெற முடியும்.

ஒரு காப்புறுதித் திட்டமானது ஒரு குடும்பத்தில் பொருளாதார அல்லது நிதி பாதுகாப்பிற்கு மிகவும் உகந்த பாதுகாப்புத் திட்டம் என்று கூறலாம். காரணம் ஒருவரின் சொத்துக்கள் பணம் எல்லாவற்றையும் ஒரு குடும்பம் இழக்க நேரிடலாம். ஆனால் ஒருவரின் காப்புறுதித் திட்டமானது ஒருவர் இறந்த பின்பு அந்தக் குடும்பத்தின் பொருளா-தாரத்திற்கு பாதுகாப்பு வழங்கும். (Financial Security) அதே சமயத்தில் காப்புறுதித் திட்டம் ஒரு சேமிப்புத் திட்டமாகவும் செயல்படும். காரணம் ஒருவர் பணத்தை வங்கியில் அல்லது வேறு விதமாக சேமித்தால் அதை அவர் இறப்பிற்கு முன்பு செலவு செய்ய நேரிடலாம். ஆனால் காப்புறுதித் திட்டத்திற்கு செலுத்தும் பணம் அவரின் குடும்பத்திற்கு கிடைக்கும் பெரிய சேமிப்புத் திட்டமாகும்.

ஒவ்வொருவரும் சரியான காப்புறுதித் திட்டங்-களை தெரிவு செய்வதன் மூலம் பல நன்மைகள் பெற முடியும்.

## பொதுவாக வழங்கப்படும் அடிப்படையான காப்புறுதித் திட்டங்கள்

- Whole Life Insurance or Permanent life Insurance ஆயுட்காலம் வரை நீடிக்கும் ஆயுட் காப்புறுதி
- Term Life Insurance குறிப்பிட்ட காலப் பகுதிக்கு மட்டும் வழங்கப்படும் ஆயுட் காப்புறுதி.
- Universal Life Insurance சேமிப்புடன் கூடிய நிரந்தர ஆயுட் காப்புறுதி.

இந்த மூன்று திட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டு பலவிதமாக காப்புறுதித் திட்டங்களை உருவாக்க முடியும்.

■ ■ ■

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A
Broker

Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER



# காலத்திற்கு ஏற்ப...

செந்தூரன் புனிதவேல்

- காப்புறுதி முகவர் -

எமது தாய்நாட்டைப்போல் அல்லாது, கனடாவில் காலங்கள் தெளிவாகத் தெரிவன. அதாவது, துளிர் காலம், கோடை காலம், இலையுதிர் காலம், பனிக் காலம் என தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. இவற்









றில் கோடைக்காலம் மிக உஷ்ணமாக இருப்பதால் பெரிதும் விரும்பப்படுவதில்லை. அக்காலத்திற்கு நேரெதிராக பனிக்காலமும் விரும்பப்படுவதில்லை. மிக்க குளிர்! எனவே, எஞ்சியுள்ள இரு காலங்களை எடுத்துக் கொண்டால் துளிர்காலம் பெரிதும் மழை செறிந்ததாய், நிலம் சகதி நிறைந்ததாய் இருப்பதால் சுவையாக இருக்காது. ஆனால், இலையுதிர் காலமோ நிறங்கள் நிறைந்து இருப்பதுடன் நிலமும் உஷ்ணமுடன் இருப் பதால் குளிரின் தாக்கமும் இதமாய்க் காணப்படும். இக்காலம் நீண்ட பொழுது போக்கு நடைக்கு மிக உகந்தகாலம் என்பதை எல்லோருமே ஏற்றுக்கொள்வார் கள். கண்ணுக்கு அழகான வண்ணக் கோலங்களில் மரங்களும், உடம்பிற்கு இதமான குளிரும்... ஆகா எவ்வளவு சுகமாய் இருக்கும்! நாவுக்கரசு சுவாமிகள் கனடா வில் பிறந்திருந்தால் இளவேனிற் காலத்தை அல்ல இலையுதிர் காலத்தைத்தான் போற்றியிருப்பார்! எனவே, நீங்கள் அனைவரும் நாடகத்தை ஒரு நாளைக்கு நிறுத்திவிட்டு இனிமையாக ஒரு நடை நடவுங்களேன்!

அதற்கு முன் செய்யவேண்டியது ஒன்று உளது. வரப்போகும் பனிக்காலத்துக்கு உங்களைத் தயார்படுத்திக்கொள்வது இன்னும் குறிப்பாக சொல்வதானால், உங்கள் வீட்டை தயார்படுத்திக்கொள்வது. நீங்கள் நடைபோடும் வேளைகளில் அணில்கள் பனிக்காலத்துக்குத் தம்மைத் தயார்படுத்த உ ண ை வ ச ் சேகரிப்பதைக் கவனிக்கத் தவறாதீர்கள்.

சரிசரி... விடயத்துக்கு வாரும் தம்பி, என்ன செய்யவேண்டும் என நீங்கள் முணு முணுப்பது கேட்கவே செய்கிறது. எனவே, இதோ சுருக்கமாக அட்டவணைப்படுத்தித் தருகிறேன்:

- வீட்டில் மிக்க கவனமாகக் கவனிக்க வேண்டியது உங்கள் smoke detector. இவை சரியாக வேலைசெய்கிறதா என கவனியுங்கள். அத்துடன் அவை பட்டரியில் செயல்படுவதானால் பட்டரிகளை மாற்றிவிடுங்கள். தீயணைக்கும் படையினர், வருடத்திற்கு இருமுறை நேரங்களை மாற்றும்போது பற்றரிகளை மாற்ற அறிவுறுத்துகிறார்கள்.
- உங்கள் வீட்டு furnace filterகளை மாற்றுவதற்கு இதுவே மிக உகந்த காலமாகும். குளிர்காலத்தில் இது மிக முக்கிய விடயமாகும். மேலும், இத்தருணத்தைப பயன்படுத்தி வீட்டு அடுப்பு, Air conditioner எல்லாவற்றுடைய filter களையும் மாற்றிவிடுவது சிறப்பாகும்.
- உங்கள் வீட்டிலுள்ள air ventகளைத் துப்புரவாக்கிவிடுவதுடன் அவற்றை மறைத்துக்கொண்டு வீட்டுத் தளபாடங்கள் இருப்பின் அவற்றை நகர்த்தி விடுங்கள்.
- வீடுகளில் பூந்தோட்டத்திற்கு தண்ணீர் ஊற்றுவதற்கு உள்ள shut off valve உள்ள faucetsகளைத் திறந்து விடுங்கள். அல்லாவிட்டால் அந்த இடைப்பட்ட பகுதியில் உள்ள நீர் பனிக்கட்டியாகி குழாயினை உடைத்துவிடக்கூடும்.
- யன்னல் கதவுகளை அடைப்பதற்கு இது மிக உகந்த காலம். weather stripping குளிரான காற்று உள்ளே வருவதனைத் தவிர்ப்பதுடன் வீட்டை வெப்பப்படுத்துவதற்கான செலவையும் குறைக்கும்.
- வீட்டிற்கு வெளியே உள்ள air conditioner, பாபிகியூ போன்றவை பனியினால் பழுதுபடாதிருக்க முடிவையுங்கள்.
- உங்கள் கூரையின் நீர் வடிகுழாய்களைத் துப்புரவு செய்வது மிக முக்கியம். இலையுதிர்காலத்தில் விழும் இலைகள், விளையாடும் வேளையில் எறிபட்ட பந்து போன்றவற்றை அகற்றத் தவறினால் நீர் தங்கி உறைந்து உங்கள் கூரை பழுதுபடலாம்.
- உங்கள் குளிர்காலத்துக்கான எறி உப்பு போன்றவற்றுடன் பனியைத் தள்ளுவதற்கான உபகரணங்களையும் சரிசெய்யுங்கள். பனி கொட்டியபின், குளிரில் snow blower இனை இயக்கமுடியாமல் திணறுபவர்கள் பலர்.
- வீட்டிற்கு வெளியே உள்ள பல்ப்புகளைக் கவனிப்பதுடன், நத்தாருக்கு பூட்ட வேண்டிய வயர்களைத் தயார்நிலையில் வையுங்கள். அதற்காக இப்பவே நத்தார் விளக்குகளை ஏற்றுவது என்பதல்ல.
- உங்கள் பூந்தோட்டத்திலுள்ள புல்லை நன்றாக வெட்டிவிட்டு அதற்கு உரம் போடுவதற்கு இதுவே சிறந்த காலம். அத்துடன் ஒரு விடயத்தை மறக்க வேண்டாம். lawn moverஇனை உள்ளே கராச்சில் வைக்கத் தவறவேண்டாம்.
- துளிர்காலத்தில் மலரும் பயிர்களை இத் தருணத்தில்தான் நடுவது சிறப்பு. மேலும் பெருமரங்கள் (apple, cherries) போன்றவற்றை இந்தக்காலத்தில் தான் நட வேண்டும்.
- களைகளை பிடுங்கி எறிந்துவிட்டடால் அடுத்தவருடம் மிகையாக களைகள் வளர்வதைத் தவிர்க்கலாம்.
- தொட்டிகளில் வைக்கும் தாவரங்களை மறக்காமல் உள்ளே கொண்டுவந்து விடுங்கள். முதல் பனி கொட்டும்வரை வைக்கவேண்டாம்.

சரி, இனி சந்தோஷமாக உங்கள் நடையைத் துவங்குங்கள். உங்களைச் சுற்றியுள்ள வண்ண வண்ண காட்சிகள் உங்கள் உள்ளத்தை மகிழ்விப்பதுடன் உடலையும் வலுப்படுத்தும்.

■ ■ ■

**TELEMARKETERS WANTED**

**for the Financial Company at Markham & Ellesmere.**

**Training will be provided**

**Salary & Bonus**

**Call for Details**

**416 548 7454**

வீடு வாங்க விற்க நம்பிக்கையானவர்



Highest Standard Agents.... Highest Results!...

HomeLife/GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Road,
Suite 206, Toronto, ON. M1S 3Y3

Logan Appulingam
Sales Representative
Direct : 416-200-6120

Middlefield & 14th.



$339,900
3+1 Bedrooms, 4 Washrooms
Great Location, Close To Plaza, School, Shops, Transit, And Much More! Lots Of Upgrades With Finished Basement Apartment With Its Own Kitchen & 3Pc Bath, Very Desirable Area, A Must See!!!

Markham & Brimorton



$284,500
3+2 Bedrooms, 2 Washrooms
Excellent Oversized Bungalow Basement Apartment W/Sep Entrance!! Renovated Main Floor!! Triple Glazed Thermal Windows In Lr!! Thermals Throughout!! New Roof 2008!! Unbeatable Value!!

McCowan & Steeles



$329,000
3+1 Bedrooms, 3 Washrooms
Immaculately Kept Upgraded Home Walk To Good Schools, Park, Steps To Ttc- No Need To Pay Double Fare. Strip Hardwood Floor, New Paint, Shingles, New Windows, Too Many Upgrades To List.


Bus.: 416-321-6969 Fax : 416.321-6963 Very few commercial condos available at Markham /Steeles and in the GTA Squire* call Logan for details.

# வீடு வாங்கவும், விற்கவும்...

## Bathurst/Mulock


**$224,900**

3 Bedrooms, 2 Washrooms
Tastefully Decorated & Maintained. Bright & Spacious Rooms. Money Spent In Renovation. New Ceramic In The Entrance & Kitchen

## Morningside/Sheppard


**$229,000**

4+1 Bedrooms, 3 Washrooms
Freehold Townhouse On Child Safe Court, Spacious And Bright, Convenient Location Close To School And Hwy 401

## Manse/Lawrence


**$389,900**

4+2 Bedrooms, 3 Washrooms
Great All Brick Family Home On A Quiet Cul-De-Sac In West Hill,Master Has 4Pc Ensuite With Walk-In Closet

## Brimorton/Orton Park



**$260,000**

3 Bedrooms, 2 Washrooms
Beautiful Design For Split Level Home, Spacious Bedrooms, Seperate Family Room, Walk Out To A Two Teired Deck & Private 130 Ft Lot.

## Mccowan/16th



**$505,000**

4 Bedrooms, 3 Washrooms
One And Half Years Old. Bright Well Kept Detached Home By Rosehaven Development In Markham. Demand Location, Quiet Street,Calm Neighbourhood

## Midland/Lawerence


**$129,900**

2 Bedrooms, 1 Washrooms
Spacious, Bright, Clean, Well Kept Unit, And Well Maintained Building With Indoor Pool, Exercise Room, Party Room, Private Play Ground For Kids

## Islington/Finch


**$157,000**

3 Bedrooms, 2 Washrooms
Unobstructed View, Conveniently Located Close To Ttc, 400, 407, School And Worship Places.

## Finch/Keele


**$259,900**

tunning 3 Bedroom Townhouse W/ Rooftop Terrace & Balconies. Brand New Paint & Carpet. One Of The Largest Townhomes In Development.

## 16th Ave/9th Line


**$539,900**

5 Bedrooms, 4 Washrooms
Gorgeous & Immaculate Exeutive 5 Brs Hm Loaded W/Upgds, Approx.3000 Sqft, Over $80K Upgrades

## Middlefield/Denison


**$359,900**

4+4 Bedrooms, 2 Washrooms
Absolutely Well Maintained Detached House, Recently Renovalid Kitchen & Main Floor. Walk To Schools

## Middlefield / Finch


**$179,900**

2 Bedrooms, 1 Washrooms
Clean, Bright, Beautiful (0-5) Years Low Rise Condo, Close To Woodside Square Mall, Gta Square, Temple, Worship Places. 24 hrs TTC

## Kennedy/Kingston

PICTURE NOT AVAILABLE

**$169,900**

Best Priced Bungalow In The Area
Call for More Info



**RAJ Ariyanayagam Pathmarajah**
Real Estate Broker
Cell: 416-930-4663

**Kirew Kanagasabai**
Real Estate Broker
Cell: 416-903-4663



HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife Today Realty Inc., Brokerage***
Independently Owned And Operated

31 Progress Avenue, Suite 210
Toronto, ON M1P 4S6
Office: 416-298-3200


NEW CREDIT - BAD CREDIT - NO CREDIT
BANKRUPT - NO PROBLEM
On Line - Credit Approvel, All kind of Credit Repairs
உங்கள் வியாபார முதலீடு வீட்டு முதலீடு ஆகியவற்றுக்கான
பணத்தேவைகள் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்
Shan Kanapathipillai
416.890.2300
e-mail: shankana@juno.com
CENTUM
Looking out for your best interest

• Real Estate Law
• Business Law
YASO SINNADURAI
BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC
THE LAW OFFICES OF YASO SINNADURAI
2100 Ellesmere Rd., Suite 202
Scarborough, Ont. M1H3b7
Tel: 416•265•3456
Fax: 416•265•2770

Kantha Property Management Group Inc.
Personal and Business Loans
Investment Properties
Line of Credits
Property Management Services
Business Setup Consultancy
Bad Credit Solutions
1st and 2nd Mortgages
Bankruptcy
Residential and Commercial Leasing
Consumer Proposals
KPM Group Inc.
T: 416-214-6161
F: 416-465-3535

WIN
BUY AND SELL through Pat Pushpakanthan
Brand new Toyota FJ Cruiser
வீடு, வியாபாரம், காணி வாங்க விற்க அழையுங்கள்!
PAT PUSHPAKANTHAN 416 490-7653
Quick Sale!!
commission solution*
1.5%
Also available
Midland/Finch
Lease/ sale
INDUSTRIAL UNIT
$2200/- OR $249000
$344 000
Brampton
Open house
sat+sun 2-4 pm
Warden/St.clair
AUTOMOBILE GARAGE AVAILABLE READY TO DO BUSINESS AT MARKHAM/STEELES
Century 21 Affiliate Realty INC.
YOUR SOLE AGENT







இம்மாதப் புகைப்படக் கலைஞர்
**கருணா கோபாலபிள்ளை**
கனடா Torontoவில் வசிக்கும் வீடு விற்பனை முகவரும் கட்டுரையாளருமான இவர் ஓய்வு நேரங்களில் புகைப்படத்துறையிலும் ஆர்வம்காட்டி வருகின்றார்.

**உங்களிடம் (நீங்கள் எடுத்த) அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**
புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

• சுமார் 10 வருடங்கள் Scotia வங்கியில் மோட்கேஜ் அனுபவம்
• 7 நாட்களும்... 24 மணி நேரமும் நட்பான சேவை
• குறைந்த வட்டி வீதம் • 0% Down Payment
Scotiabank
Ragavan Ramanathan
Mortgage Development Manager
• New • Switch • Refinance
Tel: 416•579•7533
Fax: 416•579•9433
ragavan.ramanathan@scotiabank.com

PROTECT YOURSELF AND YOUR LOVED ONES!
Insurance Ocean
Product we serve:
• Accident Death Insurance • Affordable Life Insurance • Critical Illness Insurance
• Disability Income Insurance • Mortgage Insurance • Permanent Life Insurance
• Pet Insurance • Term Life Insurance • Travel Insurance • No Medical Exam Insurance
We provide free training and prepare you for the certification
Now hiring at Ocean Mortgage Include: Marketing Specialist, Sales Reps.
Call today 416-321-2300
Get the best rate online @
www.insuranceocean.com
digi